# பெரியார் பல்கலைக்கழகம்

NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)

State University - NIRF Rank 56 - State Public University Rank 25

Salem-636011, Tamilnadu, India

## தொலைநிலை மற்றும் இணையவழி கல்வி மையம்

## இளங்கலைத் தமிழ்

இரண்டாமாண்டு – நான்காம் பருவம்

## துறைச்சாரா விருப்பப்பாடம் : 6

# பணிவாய்ப்புத் தமிழ்

**2024 – ஆம் கல்வியாண்டு முதல் பயிலும்**

**மாணவர்களுக்குரிய பாடநூல்**

பாடநூல் உருவாக்கம்

தொலைநிலை மற்றும் இணையவழி கல்வி மையம்,

பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 11.

# பொருளடக்கம்

| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | அலகு 1 – சங்க காலம், சங்க மருவிய காலம் | 4 |
| 2 | அலகு 2 – பக்தி இயக்கம், சமயங்கள் வளர்த்தத் தமிழ் | 52 |
| 3 | அலகு 3 – காப்பியங்கள் புராணங்கள், இலக்கண நூல்கள், நிகண்டுகள், சிற்றிலக்கியங்கள் | 93 |
| 4 | அலகு 4 – மரபு கவிதை, புதுக் கவிதை, ஹைக்கூ, நாடகம், புதினம், சிறுகதை | 149 |
| 5 | அலகு 5 – உரைநடை, பல்துறை வளர்ச்சி | 205 |

# அலகு 1

மூன்று சங்கங்கள் வைத்து முத்தமிழை வளர்த்தனர். பாண்டியர்கள் பரம்பரை பரம்பரையாக சொல்லப்பட்டு வருகிறது இறையனார் களவியலுரை ஆசிரியரி நக்கீரர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் வாய்வழியாக சொல்லப்பட்டு கி.பி.8ம் நூற்றாண்டில் முசிறி நீலகண்டரால் ஏட்டில் எழுதப்பட்டது என்பர்.

**குறுந்தொகை:**

எட்டுத்தொகையுள் உள்ள 5 அகநூல்களுள் ஒன்றான குறுந்தொகை நல்ல குறுந்தொகை என்று சிறப்பித்து உரைக்கப் படுகின்றது. நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்ட 400 பாடல்களைக் கொண்டது. கடவுள் வாழ்த்து ஒன்றும் தனியே இடம் பெற்றுள்ளது. அகவற்பாக்களால் அகப்பொருள் பற்றிக் கூறும் இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார். இதில் 307, 391 ஆகிய இரு பாடல்களும் 9 அடிகளால் அமைந்து காணப்படுகின்றன. இதில் இடம் பெற்றுள்ள 400 பாடல்களை 205 பேர் பாடியுள்ளனர். இதில் 380 பாடல்களுக்குப் பேராசிரியரும், எஞ்சிய 20 பாடல்களுக்கு நச்சினார்க் கினியரும் உரைவகுத்துள்ளனர். ஆனால் இவ்வுரைகள் கிடைக்கவில்லை. பிற்காலத்தில் டாக்டர். உ.வே.சா. அவர்கள் உரை யெழுதியுள்ளார். இதன் உரையின் முன்னுரையில் - குறுந்தொகைப் பாடல்களையே உரையாசிரியர்கள் மிகுதியாக எடுத்துக்காட்டுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதில் முதல், கருப்பொருட்களைவிட உரிப்பொருட்களுக்கே சிறப்பிடம் தரப்பட்டுள்ளது. வருணனை குறைந்தும் உணர்வு மிகுந்தும் காணப்படும் இதில் பொருளுக்கேற்ற பொருத்தமான உவமைகளை காணலாம். கருப்பொருளின் பின்னணியில், மாந்தரின் அகத்தெழும் உணர்ச்சிகளைச் சீரிய முறையில் சித்திரித்துக்காட்டும்.

“கொங்குதேர் வாழ்க்கை“ எனும் இரண்டாம் பாடல் சிறந்த வரலாற்றுச் சான்றாக அமைந்துள்ளது. சோழன் கரிகால் வளவன், குட்டுவன், திண்டேர்ப் பொறையன், பசும்பூண் பாண்டியன், மற்றும் பாரி, ஓரி, நள்ளி நன்னன் போன்று பல பேரரசர், சிற்றரசர் பற்றிய வரலாற்றுக்குறிப்புகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் பல பாடல்களுக்கு ஆசிரியர் யார் என்பது அறியப்படவில்லைல. ஆனால், அப்பாடல்களில் சிறந்து விளங்கும் தொடர்களில் சிறப்பு நோக்கி அத்தொடர் ஆசிரிய பெயராக அமைத்து வழங்கினர். அணிலாடு முன்திலார், செம்புலப் பெயர் நீரார், குப்பைக் கோழியார். காக்கைப் பாடினியார் என்பன இவ்வாறு உவமைச் சிறப்பால் உவமைச் சிறப்புப் பெயர்களாலும் ஆசிரியர் பெயர்களாலும் இங்கனம் உவமைச் சிறப்பால் பெயர் பெற்றவர் பதினெட்டுப் பேர். இந்நூலில் காணப்படுகின்றனர் .உரையாசிரியர்கள் பலரால் மிகுதியான மேற்கோள் காட்டப்பட்ட நூல் இதுவே,

ஆதலின் குறுந்தொகையே முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூலாகக் கருதப்படுகின்றது

“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று நீரினும் ஆரளவின்றே சாரல் கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு பெருந்தேனிழைக்கும் நாடனோடு நட்பே“ எனும் பாடல் தலைவன் தன்மீது வைத்திருக்கும் அன்பின் திறத்தைத் தலைவி தோழிக்கு எடுத்துரைப்பதாக உள்ளது. இது தலைவனின் அன்பின் ஆழத்தையும், தலைவன் மீது தலைவி வைத்திருக்கும் நம்பிக்கையையும் தெரிவிக்கின்றது.

உத்தியோகம் புருஷலட்சணம்“ என்று வழங்கப்படும் கருத்து பண்டைத்தமிழ் வழக்கே என்பதை “வினையே ஆடவர்க்கு உயிரே என்ற பாடல் விளக்கும்.

அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள் எளிமையும், இனிமையும் கலந்த சொற்களால் அனுபவ உணர்வோடு உரைக்கப்பட்டு, நம் உள்ளத்தோடு ஒட்டி உறவாடும் இயல்புடைய பாக்களை இந்நூலில் காணலாம்.

**நற்றிணை**

எட்டுத்தொகை நூல்களைக் குறிப்பிடும் வெண்பாவில் முதலிடம் பெற்றுத் திகழ்வது இதுவே ‘நல்’ என்னும் அடைமொழியும், அகப் பொருள் கூறும் நூல்களுக்கு அமைந்த திணை என்னும் பெயரும் சேர்ந்து இந்நூல் நற்றிணை என்று தமிழ் இலக்கணத்தை இலக்கியமாக இயம்புவது, வெற்று- வளவள விளக்கெண்ணெய் இயல்போ இல் கூறுவது போன்று காப்பியம் 22 வழங்கப்படுகின்றது. இந்நூல் 9 அடி முதல் 12 அடிகள் வரை அமைந்த 100 பாடல்களைக் கொண்டதாகும். 275 புலவர்களால் பாடப்பட்ட இந்நூலைத் தொகுத்தவர் யார் என்பது அறியக் கூடவில்லை. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியாராவர். குறுந்தொகைப் பாடல் புலவர்களைப் போன்று நற்றிணைப் புலவர்களும் கூட பாடல் தொடர்களால் பெயர் பெற்றுள்ளனர். அவர்கள் வண்ணப்புறக் கந்தரத்தனார். மலையனார், தனிமகனார், விழிக்கட் பேதைப் பெருங்கண்ண னார். தும்பிசேர்கீரனார், தேய்புரிக் பழங்கயிற்றினார். மடல் பாடியமாதங்கீரனார் எனும் எழுவராவர்.

நற்றிணைப் பாடல்கள் அக்கால மக்களிடம் பரவிக்கிடந்த பல பழக்க வழக்கங்களை அறியப் பெரிதும் துணை செய்கின்றன. மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு, கொடைத்திறம், மன்னர்களைப் பின்பற்றி மக்கள் வாழ்ந்த அறவாழ்வு ஆகியவற்றையும், புலவர்களின் உவமைத்திறம், உள்ளுறை, இறைச்சிப் பொருட்களின் அமைப்பு ஆகியவற்றையும் இதில் கண்டு தெளியலாம். காதலன் பிரிவால் வருந்தும் தலைவி, தலைவன் வரவைச் சுவல் கோடிட்டு எண்ணும் வழக்கமும், காதலன் வரவைப் பல்லி கூறுவதாகக் கருதும் நம்பிக்கையும், காற்பந்து விளையாடும் வழக்கமும் மகளிர்

வாழ்வில் இருந்ததை அறிய முடிகிறது. பிற்காலத்தில் சிறந்து விளங்கிய சிற்றிலக்கியமான "தூது" எனும் இலக்கியத்திற்கு வழிகாட்டியாகக் குருகு, கிளி, நாரை ஆகியவற்றைத் தூதுவிடும் பண்பையும் இந்நூலில் காணலாம்.

"நீரின்றமையாவுலகு", "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர்", "விருந்தோம்பல்" போன்ற பல குறட்கருத்துக்களையும் இந்நூலில் காணமுடிகிறது.

56 பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர் அறியக் கூடவில்லை. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் 1914 ஆம் ஆண்டில் இதற்கு உரை எழுதிப் பதிப்பித்துள்ளார். இவரை அடுத்து ஔவை, சு. துரைசாமி பிள்ளையவர்கள் விளக்கமான பேருரை ஒன்று எழுதி வெளியிட்டுள்ளார். தலைவியின். ச.விமலானந்தம் தன்விகரற்ற அன்பைக் கற்பனை வளத்துடனும், கவிநயத்துடனும் ஆங்காங்கு கையாளப்பட்டிருப்பதைக் காணலாம்.

"எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உந்தன்னோடு உற்றோமேயாவோம் உமக்கே நாம் ஆட் செய்வோம்" என்ற ஆண்டாளின் குரலை

"சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில் பிறப்புப் பிரிது ஆகுவது ஆயின் மறக்குவேன் கொல்லென் காதலன் எனவே "

என்று அஞ்சும் தலைவியின் நிலையில், கேட்க முடிகின்றது.

நற்றிணையில் சிறந்து விளங்குவதும், எல்லோராலும் எடுத்து மொழியப்படுவதுமான பாடல்-

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி மறந்தனம் துறந்த கான்முளை ஆகைய நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று அன்னை கூறினள் புன்னையது சிறப்பே அம்ம!! நாணுதும் நும்மொடு நகையே!-(172)

இயற்கையையும் உயிருள்ளதாகக் கருதி நாணும் நுட்பமான உணர்வு நிலையை இதுபோன்ற பாடல்கள் விளக்கக் காணலாம்.

**ஐங்குறுநூறு**

திணை ஒன்றுக்கு நூறு பாடல்கள் வீதம் 5 திணைகளுக்கு 500 பாடல்கள் பெற்று விளங்கும். இது மூன்றடி முதல் 6 அடி வரை அமைந்துள்ள பாடல்கள் இதன்கண் உள. மூன்றடிச் சிற்றெல்லை கொண்டு விளங்குவதான ஆசிரியப் பாவாகியது. இதன் கடவுள் வாழ்த்து சிவபெருமானைப் பற்றியது. இதனைப் பாடியவர்

பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார். அடி அவனால் குறைந்தாலும் சொற்சுவையும், பொருட்சுவையும் பெருகிக் காணப்படும் பாடல்களைக் கொண்டது.

மருதம் ஓரம்போகி நெய்தல் அம்முவன் கருதுங் குறிஞ்சி கபிலன் - சுருதிய பாலை ஓதலாத்தை பனிமுல்லை பேயனே நூலை ஒது ஐங்குறு நூறு“ என்று வரும் தனிப்பாடல் மூலம் ஐந்து திணைகளும் தனித்தனியே ஐந்து புலவர்களால் புலனாகின்றது. இப்பாடலை நோக்க, பாடப்பட்டுள்ளமை மருதத்திணையிலமைந்த நூறு பாடல்களை - ஓரம்போகியாரும், நெய்தல் திணையிலமைந்த நூறு பாடல்களை அம்மூவனாரும், குறிஞ்சித்திணையிலமைந்த நூறு பாடல்களை - கபிலரும், பாலைத் திணையிலமைந்த நூறு பாடல்களை ஓதலாந்தையாரும், முல்லைத் திணையிலமைந்த நூறு பாடல்களை பேயனாரும் பாடியுள்ளமை தெரிகின்றது. இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார், தொகுப்பித்தவர் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை“ நூலமைப்பு முறையில் இது சேரர்களின் சிறப்புரைக்கும் பதிற்றுப்பத்தை ஒத்திருப்பதால் சேரநாட்டில் இந்நூல் தொகுக்கப்பட்டிருக்கலாமென்று கருதப்படுகின்றது. பாடல்கள் சிறிதானாலும், சுருத்துக்கள் செறிவாயிருத்தலைக் காணலாம். (இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு அப்பழைய உரையோடு தன் விளக்கத்தினையும் சேர்த்து டாக்டர் உவே.சா அவர்கள் 1903-ல் இந்நூலை முதன்முதலில் வெளியிட்டார். அதன்பின்) இதற்கு ஓவை சு. துரைசாமிப்பிள்ளை உரையெழுதி வெளியிட்டார். இதன் 129, 130 ஆகிய இருபாடல்களும் மறைந்துபோயின.

நூறு பாடல்களின் பகுதிகளாகக் காணப்படும் ஒவ்வொரு பத்தும், பொருளமைப்பினாலோ அன்றி அப்பாக்களில் பயின்று வரும் சொல்லாட்சியினரவோ தனித்தனி பெயர்கள் பெற்றன.

வேட்கைப்பத்து, வேழப்பத்து தெய்யோப் பத்து, களவன் பத்து, போன்றவை சொல்லாட்சியினால் பெயர் பெற்றவை பருவங்கண்டு கிழத்தி உரைத்த பத்து, தோழிவற்புறுத்தப்பத்து, செவிலி கூற்றுப்பத்து முதலியன பொருளமைப்பால் பெயர் பெற்றன தொண்டிப்பத்து அந்தாதி முறையில் அமைந்துள்ளது, பத்து சொல்லாட்சியும், பொருளமைதியும் பொருந்தியது இவற்றின் அடிக்குறிப்புகள் பொருத்த முடையனவாகவும், விளக்கமாகவும், பழமையுடையனவாகவும் விளங்குகின்றன.

இது ஒன்றே மருதத்திணையை முதற்கண் வைத்துக் கூறுகின்றதாகும். தொல்காப்பியம் முதலான நூல்கள் அனைத்தும் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்றே வரிசைப் படுத்தியிருக்கின்றன. குறைந்த அளவினதான பாடல்களில் அகப்பொருளுக்குரித்தான முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றையும் குறைவின்றிக கூறும் சிறப்பினையும் இந்நூலின் கண் காணலாம். கபிலர் பெருமானின் பாடல்களில் குறிஞ்சி நில இயற்கை எழிலைக் காணலாம்.

ஓரம்போகியாரின் மருதத்திணைப் பாடல்களோ உள்ளுறை. இறைச்சி முதலிய நயங்கள் நிறைந்தனவாக விளங்குகின்றன.

இந்நூலில் விலங்கு, பறவைகளைக் கருப்பொருளாகக் கொண்டு குரக்குப்பத்து, கேழற்பத்து, மயிற்பத்து, கிள்ளைப் பத்து எனப் பாக்களுக்குப் பெயரமைத்து, அகப் பொருட் கருத்துக்கள் அழகுற விளக்கியுரைக்கப்பட்டுள்ளது.

தாய் முகம் நோக்கியே ஆமைக் குட்டிகள் வளரும் என்ற உண்மையையும், முதலைகள் தம் குட்டிகளையே கொன்று தின்றுவிடும் என்னும் குலைநடுங்கும் செய்தியையும் விளக்கு வதால் ஆசிரியரின் விலங்கியல் புலமையைத் தெரிந்துக் கொள்ளலாம்.

**பாடல் சிறப்புக்கள்**

அழகான தலைவி இருக்க தலைவன் அவளை விடுத்து பரத்தைவீடு நாடிச் சென்று இன்பம் துய்த்துப் பின் மீண்டும் தலைவியை நாடி வருகின்றான். அவனுக்கு அவன் செயலின் சிறுமையை உணர்த்த விரும்பிய தோழி இயற்கை எழிலை பயன்படுத்தி விளிப்பதன் மூலம் உள்ளுறையாக இலைமறை காயாக, தலைவன் நெஞ்சு நோகாதபடியும் அதே நேரத்தில் அவனது செயலின் இழிவை அவன் உணருமாறும்தோழி கூறுவது தோழியின் சொல்லாற்றலையும், அறிவுக்கூர்மையையும் விளக்குவதாய், ஆசிரியரின் முற்றிய புலமைக்கும் சான்றாக விளங்கக் காணலாம். நனைய காஞ்சிச் சினைய சிறுமீன் யாணர் ஊரன்" என்று வருணிக்கின்றார். அதாவது அழகான அரும்புகள் நிறைந்து காணப்படும் காஞ்சிமரத்தின் கிளைகளில் தாலிப் பாய்ந்து விளையாடி, மறுபடியும் நீரில் விழுகின்ற சிறுமீன்களை மிகுதியாகக் கொண்ட மருத நிலங்களுக்குத் தலைவனே! என்று தோழி, தலைவனை விளிப்பதன் மூலம், "நறுமணம் கொழிக்கும் மலர்கள் செறிந்த கொம்புகளில் புலால் நாறும் மீன்கள் துள்ளித்திரிவதுபோல, காமப்பரத்தையர் கூட்டத்தில் திளைத்த தலைவன், கற்புமணம் கமழும் தலைவியைத் தீண்ட வருகின் நானே!" என்னும் உள்ளுறைப் பொருளை விளக்குகின்றாள்.

பூத்த கரும்பில் காய்த்த நெல்லில் கழனி யூரன்" என்னும் பாடலிலும், பரத்தையின் உறவு புவனுக்கு விருந்தாய் அந்த குறித்த நேரத்திற்கு மாத்திரமே துணையாக அமைவது. ஆனால், தலைவியின் நேயமோ, எக்காலத்திற்கும் ஏற்றதாகத் திகழும் என்னும் ஒப்பற்ற கருத்தை உள்ளுறையாக உரைத்திருப்பதனையும் காணலாம்.

**அகநானூறு**

13 அடி சிற்றெல்லையும் 31 அடி பேரெல்லையும் கொண்ட 100 செய்யுட்களைக் கொண்டது. பழைய இலக்கியங்களும் ஐந்திணை தழுவி விளங்கும் இந்நூல் ஒன்றே "அகம்" எனும் பெயரமைந்து காணப்படுகின்றது. அகத்திணையை (முழுமையான அளவில் விளக்கும் பாடல்களைக் கொண்டமையால் "அகம்" எனவும் அகப்பாட்டு எனவும்' அகம்பற்றிக் கூறும் 400 பாக்களைக் கொண்டதனால் "அகநானூறு" என்றும், அகம்பற்றிய எட்டுத்தொகை நூல்களும் நீண்டு காணப் படுவதால் "நெடுந்தொகை" என்றும் வழங்கப்படுகின்றது. இந்நூலின் பெரும்பான்மையான பாடல்களில் அகப் பொருளின் மூலக்கூறுகளாகிய முதல், கரு, உரிப்பொருள் பற்றிய செய்திகள் அழகுறக் கூறப்பட்டுள்ளன. இவற்றை விரிவாகக் கூறுவதற்கு ஏற்றவகையில் இதன் பாடல்கள் நீண்ட அமைப்புடையதாகப் படைக்கப்பட்டுள்ளன.

இந்நூலைத் தொகுத்தவர் உப்பூரிக்குடிகிழார் மகன் உருத்திர சன்மன், தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. 145 புலவர்கள் இதனைப் பாடியுள்ளனர். இதில் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப்பட்ட கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் காணப்படுகின்றது.

இந்நூலின் பாகுபாடு ஒரு தனிச் சிறப்புடையதாக விளங்குகின்றது. இப்பாகுபாடு பற்றி, "களித்த மும்மதக் களிற்றியானை நிரை மணியொடு மிடைந்த அணிகிளர் பவளம் மேவிய நித்திலக்கோவை என்றாங்கு அத்தகு பண்பின் முத்திறம்" என்று வரும்பாயிரச் செய்யுளின் மூலம் முதல் 120 பாக்களைச் செருக்குற்றுச் செம்மாந்து செல்லும் "களிற்றியானை நிரை" என்றும் அடுத்துவரும் 121 முதல் 300 வரையிலான 180 பாக்களை மணியும் பவளமும் கலந்தாற்போன்று காட்சி தரும் "மணிமிடை பவளம்" என்றும், 301 முதல் 100 வரையிலான இறுதி 100 பாடல்களை நல்முத்தின் ஒளியெனவே பொருட்சிறப்பால் பொலிவுற்றிலங்கும் நித்திலக்கோவை எனவும் முத்திறத்ததாகப் பாகுபடுத்தியுள்ளனர்.

ஐந்திணை கூறும் இந்நூலின் பாடல்களை இதனைத் தொகுத்த உருத்திரசன்மன் ஓர் ஒழுங்கு முறையைப் பின்பற்றித் தொகுத்துள்ளார். அதாவது 1,3,5,7 என ஒற்றை எண்ணாக வரும் பாடல்கள் பாலைத்திணைக்குரியன என்றும், 4,14,24 என நான்கு என்றும், 6,16,36 என ஆறு எனும் எண்ணில் முடிவன மருதத் திணைப்பாடல்கள் என்றும், 2,8 என இரண்டையும் எட்டையும் இறுதியாகக் கொண்ட பாடல்களைக் குறிஞ்சித்திணைப் பாடல் கள் என்றும், பத்தோடு முடிவனவற்றை நெய்தற்றிணைப் பாடல்கள் எனவும் வகுத்தளித்துள்ளார்.

ஒன்று மூன்று ஐந்து ஏழ்ஒன்பான் பாலை' ஓதாது நின்றவற்றின் நான்கு நெறிமுல்லை அன்றியே ஆறாம் மருதம் அணிநெய்தல் ஐயிரண்டு கூறுதலை குறிஞ்சிக் கூற்று எனவரும் வெண்பா இப்பகுப்பு முறையைத் தெளிவாக்குவதாக அமைந்துள்ளது.

இப்பாகுபாட்டின்படி அகநானூற்றில் பாலைத்திணைப் பாடல்களே அதிக எண்ணிக்கையுடையதாக இடம் பெற்றிருப்பது புலனாகும். மொத்தம் 200 பாலைப் பாடல்களும், 80 குறிஞ்சிப் பாடல்களும், முல்லை, மருதம், நெய்தல் திணைக்கட்குத் தனித்தனியே 10 பாடல்களும் அமைந்துள்ளன.

இந்நூலிலும் ஊட்டியார் (அகம் 388), நோய்பாடியார் (அகம்- 671) என சொற்றொடரால் பெயர் பெற்ற புலவர்கள் இடம் பெற்றிருக்கக் காணலாம். இதன் முதல் 90 பாடல்களுக்கு மட்டும் பழைய குறிப்புரை ஒன்று உண்டு. இதன் முதல் பதிப்பாசிரியர் வே.இராசகோபால ஐயங்கார் ஆவார். இவர் முதல் 70 பாடல்களுக்கு உரை எழுதினார். பிற்காலத்தில் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களும், கரந்தைக் கவியரசு ரா.வேங்கடாசலம் பிள்ளையும் நூல் முழுமைக்கும். சிறந்த உரை எழுதியுள்ளனர்.

அகப்பொருள் நூலான இது புறப்பொருள் நூலைப் போல தமிழகத்தின் வரலாற்றுச் செய்திகளையும் அறிவிக்கின்றது. நித்தன், மத்தி, நன்வன், கரிகாற் பெருவளத்தான், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போன்ற பெருநில வேந்தர் பற்றியும், ஆதன் எழினி, ஆட்டனத்தி,அன்னி மிஞிலி,பாணன், பழையன் போன்ற குறுநில மன்னர்களைப் பற்றியும் எண்ணற்ற வரலாற்றுச் செய்திகளைத் தருகின்றது. அலெக்சாண்டரின் படையெடுப்புக் கஞ்சி நந்தர்கள் தமது செல்வங்களையெல்லாம் கங்கையாற்றின் அடியில் புதைத்து வைத்தவரலாற்றுச் செய்தியும் இந்நூலின் 20,25 ஆம் பாடல்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. வரலாற்றுச் செய்திகளோடு பல இதிகாச, புராணச் செய்திகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

நாடாளும் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கக் குடவோலை முறை பழக்கத்திலிருந்ததான அரசியல் செய்தியும்,

“யவனர் தந்த வினைமாண் நன்கலம் பொன்னோடு வந்து கறியொடு பெயரும்“

எனும் வரிகளின் மூலம் யவனர்கள் நம் நாட்டு வாசனைப் பொருளான மிளகைப் பெறுவதற்காகவே, தமிழகத்துடன் வாணிபத்தொடர்பு கொண்டிருந்த வாணிப வளமும் அறியப்படுகின்றது. தமிழரின் திருமண நிகழ்ச்சியினை, 86,136 ஆகிய இரு பாடல்களும் விளக்குகின்றன. இம்மணவிழாவில் மணப்பந்தலில் வெண்மணல் பரப்பி விளக்கேற்றி, மண மகளுக்கு நீராட்டி தூய ஆடை அணிகள் அணிவித்து, இறை வழிபாடு நடத்தி, திங்கள் உரோகிணியைக் கூடிய நல்ல வேளையில் வாகை இலையோடு அருகின் கிழங்கும் சேர்த்துக் கட்டப்பெற்ற வெண்ணூலைத் தலைவிக்குக் காப்பாகச் சூட்டுவர்“. என்று விளக்கப்படுகிறது. இது பற்றித் திரு.பி.டி.சீனிவாச ஐயங்கார் அவர்கள் தனது History of the Tamils என்ற ஆராய்ச்சி நூலில், தமிழர்களின் இத்திருமணத்தில் தீ

வளர்த்தல், மணமக்கள் அத்தீயை வலம் வருதல், மணவிழாவிற்காகத் தட்சணை பெறப் புரோகிதன் ஆகியவை இல்லை என்று குறித்துள்ளார்.

“செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏறத் இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்து என இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென மழலை இன்சொல் பயிற்றும் தாணுடை அரிவை (அகம் 37) யின் அன்புள்ளத்தையும், பூத்தபொங்கர்த் துணையோடு பதிந்த தாதுண் பறவை பேதுறல் அஞ்சி மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன் (4) எனத் தேனருந்தும் வண்டுகள் அஞ்சி ஓடிவிடுமே எனக் கவன்று தன் தேரில் அசைந்தாடும் மணியின் நாவினைக் கட்டிவிட்டு தேரில் விரைந்து வரும் தலைவனின் மன உணர்வையும் நாம் இதில் கண்டுமகிழலாம்.

**கலித்தொகை :**

ஓசை இனிமையும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் சிறப்பான அமைப்புக்களையும் கொண்ட கலிப்பாவினால் அமைந்த 150 பாக்களைக் கொண்டது. கலிப்பாவும், பரிபாடலும் அகப்பொருள் துறைபாட ஏற்ற யாப்புவடிவங்கள் என்பது தொல்காப்பியரின் கருத்து என்பதை,

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கினும் கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும் உரியதாகும் என்மனார் புலவர் (தொல் -999) எனும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். இதிலிருந்து தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே ஐந்திணை அளாவிய அகப்பாடல்களைப் பாடுவதில் கலிப்பாவும், பரிபாடலும் முதன்மை பெற்றிருந்தன என்பது தெரிகின்றது. இவற்றைத் தொல்காப்பியர் “வெண்பாநடைத்து“ என்று கூற உரையாசிரியர் “இசைப்பாட்டு“ என்று இயம்புவர்’ இவ்விரு பாக்களும் உலக வழக்கைத் தழுவியனவாய், உரையாடலுடன் பொருந்தி ஆடலும் இசைத்தன்மையும் மிக்கனவாய் விளங்குகின்றன.

நூற்றைம்பது கலி - எனும் உரையாசிரியர் கூற்றுக்கிணங்க இதில் உள்ள 150 பாடல்களில், சிவபெருமானைப் பற்றிய ஒரு கடவுள் வாழ்த்துப் பாடல் போக எஞ்சிய 149 பாடல்களும் குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் எனும் வரிசையில் ஐந்திணைகளைப் பற்றிக் கூறுகின்றன. முதலிலுள்ள கடவுள் வாழ்த்தையும் இறுதியிலுள்ள நெய்தற் கலியையும் நல்லந்து வனாரே பாடி நூல்முழுவதையும் தொகுத்தார் என்பர் நச்சினார்க்கினியர். இந்நூல் முழுமைக்கும் நச்சினார்க்கினியர் உரை வகுத்துள்ளார். அவ்வுரை முழுவதும் சிதைவின்றி கிடைத்துள்ளது.

பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி மருதனிளநாகன் மருதம் அருஞ்சோழன் நல்லுருத்திரன் முல்லை நல்லந்துவன் நெய்தல் கல்விவலார் கண்டகலி“

என வரும் வெண்பாவினால் இதன் பாலைத்திணையைப் பெருங்கடுங்கோனும், குறிஞ்சிக்கலியைக் கபிலனும், மருதககலியை மருதனிளநாகனும், முல்லைக்கலியை நல்லுருத்திரனும், நெய்தற்கலியை நல்லந்துவனாரும் பாடியுள்ளமை தெரிகின்றது. ஆனால் இவ்வெண்பா கலித்தொகை ஏட்டுப்பிரதிகளில் இடம் பெறாததால் இது பிற்காலத்தில் எவரோ எழுதிச் சேர்த்தது என்றும் நூல் முழுவதுமே "ஒரே ஒரு புலவரால் பாடப்பட்டதே ஆகும் என்றும் வ.மு. சிவராசப்பிள்ளை, S.வையாபுரிப் பிள்ளை போன்றோர் நிலை நாட்டுவர். நூல் முழுவதும் பாடிய புலவர் நல்லந்துவனாராதல் வேண்டும் என்பது சான்றோர் துணிபு. இதனை வலியுறுத்தும் வகையில் 1887-ல் இந்நூலை முதன் முதலில் பதிப்பித்த சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் இதனை, "நல்லந்துவனார் கலித்தொகை" என்றே தலைப்பிட்டுப் பதிப்பித்தார்.

பாலைக்கலியில் 35 பாடல்களும், குறிஞ்சிக்கலியில் 23 பாடல்களும் மருதக்கலியில் 35 பாடல்களும், முல்லைக்கலியில் 17 பாடல்களும், நெய்தற்கலியில் 33 பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

**பாலைக்கலி:**

பாலைநிலத்தின் கொடுமையைக் கூறுவதோடு, தலைமகள் பிரிவைத் தடுப்பதையும், தோழியர், தலைவன் வரவைத் தலைவிக்கு உணர்த்தித் தலைவியை மகிழ்விப்பதையும் முக்கியம் கருந்தாகக்கொண்டதாகும்.

**குறிஞ்சிக்கலி:**

குறிஞ்சி நிலத்தின் இயற்கை எழிலை வருணிப்பதோடு, தலைவியைத் திருமணம் புரிந்து கொள்ளுமாறு தலைவனை வற்புறுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டதாகும். இது நாடகப்பாங்கோடு நகைச்சுவையும் பொருந்த அமைந்திருக்கும்.

**மருதக்கலி:**

பரத்தையிற் பிரிந்த தலைவனிடத்து ஊடல் கொண்ட தலைவியின் ஊடலைத் தீர்த்தலை நோக்கமாகக்கொண்டது.

**முல்லைக்கலி:**

இது ஏறுதழுவுதலைச் சிறப்பித்துக் கூறுகின்றது. இதில் கைக்கிளைப் பாக்கள் மிகுந்து காணப்படுகின்றன.

**நெய்தற்கலி:**

பிரிவாற்றாத தலைவியின் உள்ளக் கொந்தளிப்பைப் புலப்படுத்தும், மடலேறுதல், மாலைப் பொழுதில் புலத்தல் போன்ற துறைகளைப்பற்றிக் கூறும்.

சங்கத்தைப்பற்றிய சிறப்பான செய்தியைப் பாலைக்கலிப் பாடல் ஒன்று கூறுகின்றது. மக்களின் நல்வாழ்விற்கான நெறிகள் ஆங்காங்கே விளக்கப்பட்டுள்ளன. களிற்றையும் அடக்கும் ஆற்றல் இசைச் இருக்கும் உண்மையையும், நீராடலைப் பற்றிய செய்தியையும், இதில் காணலாம். இதிகாச புராண கருத்துக்களும் வரலாற்றுச் செய்திகளும், குறட் கருத்துக்களும் இதில் இடம் பெற்றுள்ளன. ஐந்திணைக்கு உரிய ஒழுகலாறுகளை போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி ஆக்கமளி ஊடல் அணிமருதம்-நோக்கொன்றி இல்லிருத்தல் முல்லை இரங்கிய போக்கேர் நெய்தல் புல்லுங் கலிமுறைகோப்பு“ என்று செவ்வனே எடுத்தியம்பும்.

**சிறப்புகள்:**

பாவகையால் பெயர் பெற்றத் தொகைநூல்களுள் ஒன்று. இலக்கண நூல்களில் கூறும் அகப்பொருள் பகுதிகளுக்கு இது இலக்கியமாகத் திகழ்கிறது. கலிப்பாவகையுட் சிறந்த ஒத்தாழிசை யாலியன்று துள்ளலோசை மிகுந்து வரும் நூல். கலிப்பாவால் அமைந்த ஒரே நூல் எட்டுத்தொகை நூல்களுள் ஒருவரே இயற்றிய ஒரே நூல், பிற அகத்திணைத் தொகை நூல்கள் எடுத்துரைக்காத கைக்கிளை, பெருந்திணை, மடலேறுதல் போன்றவை இதில் மட்டுமே இடம் பெற்றுள்ளன. இதிலுள்ள ஒவ்வொரு பாடலுமே ஒருசிறு நாடகமாக அமைந்துள்ளது. இதில் சேர,சோழ மன்னர் பற்றிய குறிப்பேதுமின்றி பாண்டிய மன்னர், பாண்டி நாட்டுக் கூடல்மாநகர், பாண்டிய நாட்டில் பாயும் வையையாறு போன்ற பாண்டிய நாட்டுச் செய்திகளே கூறப்பட்டுள்ளன. பல்வேறு காரணங்களால் காலத்தால் பிற்பட்ட நூலாகக் கருதப்படுகிறது. பாரதக்கதை நிகழ்ச்சி களான அரக்கு மாளிகையில் தீப்பற்றியெழ, பீமன், அத்தீயிலிருந்து பாண்டவரைக் காத்த செய்தி, துச்சாதனன் திரௌபதியின் கூந்தலைத் தொட்டிழுத்தது. கொதித்தெழுந்த பீமன், துச்சாதனன் நெஞ்சைப் பிளந்து வஞ்சினம் முடித்தது. துரியன் தொடையை வீமன் முறித்தது ஆகியவை இதில் இடம் பெற்றுள்ளன. திருமால், முருகன், கண்ணன், பலராமன், முதலிய கடவுளர் பற்றிய செய்திகளும் பிற தொகை நூல்களில் இடம் பெறாத காமன் வழிபாட்டுச் செய்தியும் திருச்செந்தூர், திருப்பாங்குன்றம் போன்ற முருகனின் படைவீடுகள் பற்றிய குறிப்புகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இத்துணைச் சிறப்புக்களடங்கிய இந்நூல் “கற்றறிந்தார் ஏத்தும் கலி“ என்றும் கல்வி வலார் கண்ட கலி“ என்றும் சிறப்பித்துரைக்கப் படுகின்றது.

பழமொழிப்பாங்கில் ஒரேவரியில் அறக்கருத்துக்களைக் கூறுவதில் இது சிறந்து விளங்கக் காணலாம். நவமணிகள் போன்ற ஒன்பது கருத்துக்கள் இதில் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

“ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தார்க்கு உதவுதல் போற்றுதல்” என்பது புணர்ந்தாரைப் பிரியாமை பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல் அன்பு எனப்படுவது தன்கிளை செறா அமை அறிவு எனப்படுவது பேதையர் சொல்நோன்றல் செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை திறை எனப்படுவது மறைபிறர் அறியாமை முறை எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல் பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் (4.133) சுடர்த்தொடீஇ கேளாய்” எனத்தொடங்கும் -51 ஆம் பாடல் ஓரங்க நாடக அமைப்புடன் அமைந்து இன்பந்தருவதாகும். பிற்காலச் சிறுகதையின் முன்னோடியாகக் கூறப்படுகிறது.

சந்தனம் மலையிற் பிறந்தாலும் மலைக்கு அதனால் பயனில்லை. முத்து கடலில் பிறந்தாலும் கடலுக்கு அதனால் பயனில்லை, இசையாழிற் பிறந்தாலும் யாழுக்கு அதனால் பயனில்லை என்று கூறும் பாடலால் (கலி-3) தலைமகளின் நிலை என்ன என்பது அழகுற எடுத்துக் கூறப்பட்டுள்ளதை அறிந்து மகிழலாம். சந்தூர்,என்றும்

போன்றவல்33- ஆம் பாடலாகும். பின்பு அதனின் நிலையறிந்து

**புறநூல்கள்**

**புறநானூறு**

அகநானூறு போன்று புறப்பொருள் பற்றிய 400 அகவற்பாக்களால் ஆன நூல் . எனவே பொருளாலும், அளவாலும் புறநானூறு என்று பெயர் பெற்றது. இது புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும் பாரதம் பாடிய பெருந்தேவனார் சிவபெருமான் மீது பாடியுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. இந்நூலைத் தொகுத்தவர் பெயரும். தொகுப்பித்தவர் பெயரும் அறியக் கூடவில்லை (பாக்களின் அடிவரையறை தெரியலில்லை) நான்கடி முதல் தெளிவாகத் 40 அடிவரையிலான பாடல்கள் உள்ளன. எனவே இதன் அடியினை நான்கடிச் சிற்றெல்லை 40 அடிபேரெல்லையாகக் கொள்ளலாம். இதனை 158 புலவர்கள் பாடியுள்ளனர். இவர்கள் அனைவரும் ஒரே காலத்தையோ, சமயத்தையோ, நாட்டையோ சார்ந்தவர்கள் அல்லர், அரசன் முதல் எளிய குயமகள் வரை பல்வேறு நிலைகளிலிருந்த ஆடவரும் பெண்டிருமான புலவர்கள் பாடியுள்ளனர்.

இந்நூலில் பாடல்கள் தொகுக்கப்படும்போது, ஒருவகை இயைபு கருதி, முதலில் முடிமன்னர் மூவர், அடுத்து குறுநில மன்னர், வேளிர் ஆகியோரைப்பற்றியும் அடுத்து போர்ப் பாடல், கையறுநிலைப்பாடல், நடுகல், மகளிர் தீப்பாய்தல் என்று பாடப்பட்டுள்ளதாக அறிஞர் ஆராய்ந்துரைத்துள்ளனர். அகப்பாடல்கள் ஐந்திணைக் கருத்துக்களைத் தழுவி அமைந்தன போன்று. இது, வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை

என்ற புறப்பொருட் கருத்துக்களைத் தழுவி அமைந்த செய்யுட்களைக் கொண்டு விளங்குகிறது. ஒவ்வொருபாடலின் இறுதியிலும் திணை, துறை, பாடினோர். பாடப்பட்டோர், பாடப்பட்ட சூழல் போன்ற பல குறிப்புகள் 1000 காணப்படுகின்றன. புரவலனை விட புலவனே போற்றப்பட்ட உண்மையினை அவனை அவர் பாடியது என்று அரசனை அவன் என்றும் புலவரை அவர் என்றும் குறித்திருப்பதிலிருந்து அறியலாம்.

இந்நூலின் முதல் 266 பாடல்களுக்கு ஓர் அரிய பழைய உரை இருந்தது. இந்தப் பழைய உரையுடன் சேர்த்து 1894ல் டாக்டர்.உ.வே.சா. அவர்கள் முதன்முதலில் இதனை வெளியிட்டார். அதன்பின் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் நூல் முழுமைக்கும் உரை எழுதி வெளியிட்டார். இதன் பல பாடல்களில் சில அடிகள் சிதைந்துபோயுள்ளதுடன் 267,268 ஆகிய இருபாடல்களும் முற்றிலும் கிடைக்காமலே போய்விட்டன. இதன் பாடல்களுள் மிகச்சிறந்தனவாகக் கருதப்படுகின்ற 55 பாடல்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுப் “புறப்பாட்டுரை“ என்று வெளியிடப்பட்டுள்ளன. இப்புறப்பாட்டுரையை 1976-ல் முதன்முதலில் பதிப்பித்தவர் இரா.தெய்வசிகாமணிக்கவுண்டர் ஆவார். இதன் 160 பாடல்களுக்கு ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. இந்நூலிலும் தொடித்தலை விழுத்தண்டினார், இரும்பிடர்த் தலையார் என்பன போன்று பாடலில் காணப்படும் சொற்றொடர்களால் பெயர் பெற்ற புலவர்கள் சிலர் காணப்படுகின்றனர். வேறு சில புலவர்கள் ஊர்ப்பெயரோடும், தந்தைப்பெயரோடும், தொழில் பெயரோடும், மரபுப்பெயரோடும் சேர்த்தும் வழங்கப்படுகின்றனர்.

அக்கால மக்களின் அரசியல், சமுதாய நிலை, கல்வி, நாகரிகம் கலை வளர்ச்சி, வீரம், கொடை, ஆடை, அணிகலன், பழக்க வழக்கங்கள், வாணிபம் ஆகிய பலவற்றையும் அறிய உதவும் ஒரு இலக்கியப் பேழையாக இந்நூல் திகழ்கின்றது எம்.ஆர். அடைக்கலசாமி அவர்கள் இப்புறநானூற்றுப் பாடல்கள்- பெண்கள் மங்கல அணி அணிதல், இறந்தவரைத் தாழியில் கவித்தல், நடுகல் நடல், நட்டகல்லைச் சுற்றி மயிற்பீலி அணிவித்து மது வார்த்தல், கணவனை இழந்த பெண்கள் அணிகளைக் களைந்து, கைம்மை நோற்றல், உடன்கட்டை ஏறுதல் போன்ற பழக்க வழக்கங்களையும், பத்துவகை ஆடைகளையும், 28 வகை அணிகலன்களையும், 30 படைக்கலக் கருவிகளையும், 67 வகை உணவுகளையும் எடுத்தியம்புவதாகக் குறிப்பிடுவர்.

வரலாற்றுக் குறிப்புக்களாக பாண்டியன் நெடுஞ்செழியன் முதல் ஆறு பாண்டிய மன்னர்களையும், கரிகால் வளவன் 18 சோழ மன்னர்களையும் (இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் போன்ற) 18 சேரர்களையும் சிறப்பித்துரைக்கின்றது. பண்டைய போர்கள் நடைபெற்ற வெண்ணிப்பறந்தலை, வாகைப்பறந்தலை, கழுமலம், தகடூர், தலையாலங்கானம், கானப்பேர் எயில் போன்ற

பல போர்க்களங்கள் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளன. எனவே இதனை ஒரு வரலாற்று நூல் என்பதோடு தமிழர் வாழ்வின் உயர்வைக்காட்டும் கண்ணாடி என்றும் டாக்டர் ஜி.யு.போப் அவர்கள் தமிழில் ஈடுபாடு கொண்டமைக்குப் புறமும் ஒருகாரணம் எனலாம். இதன் சிறப்புநோக்கி சிலப் பாடல்களை இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் உள்ளார்.

பாரதப் போரில் சேரலாதன் எனும் மன்னர் எதிர்த்துப் போரிட்ட பாண்டவர், கௌரவர் ஆகிய இருதிறத்தார்க்கும் சோறிட்டுப்பெருஞ்சோற்றுதியன் ஆன செய்தி "அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ நிலந்தலைக்கொண்ட பொலம்பூந் தும்பை ஈரைம்பதின்மரும் பொருதுகளத்தொழியப் பெருஞ்சோற்றுமிகுபதம் வரையா துகொடுத்தோய்-(2)" என முரஞ்சியூர் முடிநாகராயர் இரண்டாம் பாடலிலேயே தெரிவித்துள்ளார்.

இப்புறநானூற்றுக்காலம் பால்மணம்மாறா பச்சிளம் பிள்ளைக்கும் வேல்கொடுத்துப் போருக்குச் செலுத்தும் வீரம் நிறைந்த மகளிரும் மக்களும் வாழ்ந்த வீரயுகமாகும்.

பெண்களின் பெருமையையும், நட்பின் சிறப்பையும். கொடையின் மேன்மையையும், அறத்தின் அருமையையும் அழகுறக்கூறும், அறம் உரைப்பதில் திருக்குறளை ஒத்திருப்பதாக கூறப்படுகின்றது. இவ்வாறு நிலைத்த உண்மைகளை உரைப்பதோடு அக்கால சமுதாய நிலையை விளக்கும் காலக்கண்ணாடியாகத் திகழும் இப்புறநானூறு தமிழர்க்கு கிடைத்தகலைச் செல்வமே எனலாம்.

## பதிற்றுப்பத்து

எட்டுத்தொகை நூல்களுள் அகவற்பாவால் புறப்பொருள் பற்றிக்கூறும் மற்றொரு நூல் இது. பத்துச் சேர வேந்தர்கள் பற்றி பத்துப்பத்துப் பாடல்களால் பத்துப் புலவர்கள் பாடிய 10 பாடல்களைக் கொண்டது. இதனைத் தொகுத்தவரும் தொகுப்பித்தவரும் தெரியவில்லை. இதில் ஒவ்வொரு பத்தும் முதல்பத்து, இரண்டாம் பத்து, என எண்ணால் பெயரிட்டுச் கூறப்படுகின்றன. இதில் முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. இதன் நான்காம் பத்து அந்தாதித்தொடையால் அமைந்துள்ளது. பிற்காலத்தில் அந்தாதித் தொடையால் பாடல் இயற்றவந்தவர்களுக்கு, இந்த நான்காம் பத்தும் ஐங்குறுநூற்றின் - 18 ஆம் பத்தான தொண்டிப்பத்தும் வழிகாட்டியாக அமைந்தன எனலாம். இதற்குப் பழைய உரை ஒன்று உண்டு. இவ்வுரையுடன் இதனை டாக்டர் உ.வே.சா அவர்கள் முதலில் பதிப்பித்து வெளியிட அடுத்து ஔவை.சு. துரைசாமிப் பிள்ளையும், ஈழத்து புலவர் அரும்பலனாரும் சீரிய முறையில் உரையெழு வெளியிட்டுள்ளனர்.

**சிறப்புக்கள்:**

நூல் முழுவதும் சேரமன்னர்களின் பெருமையைக் கூறுவது பாடாண்திணையிலேயே அமைந்துள்ளது. எட்டுத் தொகையுள் ஒரு திணைப் பாடல்களைக் கொண்ட ஒரே நூல். பத்து சேரமன்னர்களைப் பற்றிப் பத்து வேறு வேறு புலவர்கள் பாடி இருப்பது இதன் சிறப்பாகும். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் துறை, வண்ணம், தூக்கு (இசை) பாடலின் பெயர் ஆகியவைப்பற்றிய குறிப்பிடப் பெற்றுள்ளது. இதனால் இதன்பாடல்கள் இசையோடு பாடப்பெற்றமை புலனாகும். ஒவ்வொரு பாடலுக்கும் அப்பாடலில் சிறந்துவிளங்கும் தொடரொன்றினால்பெயர் இடப்பட்டுள்ளது. "தசும்புதுளங்கு இருக்கை",சுடர்வீ வேங்கை, ஏறா ஏணி, நோய்தபு நோன்றொடை என்பன போன்று ஒவ்வொரு பாடலுக்கும் பெயர் சூட்டப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு பத்துப் பாடலின் முடிவிலும் பதிகம் ஒன்று காணப்படுகின்றது. அதில் பிற்காலத்துத்தோன்றிச் சிறப்படைந்த அரசர்களின் மெய்கீர்த்தி போன்று. இது அவ்வப்பத்தின் வரலாறு கூறும் சிறப்பினதாக அமைந்துள்ளது. இப்பதிகத்தினால்- பத்து செய்யுட்களின் பெயர்,பாடினார் பெயர், பாடப்பட்ட அரசர் பெயர், அவர் ஆட்சி புரிந்த கால அளவு, பாடிய புலவர் பெற்ற பரிசில் போன்ற செய்திகள் அறியப்படுகின்றன. வழக்கில் இல்லாத பல பழந்தமிழ்ச் சொற்களை இந்நூலில் காணமுடிகின்றது. சேரர்களின் வரலாற்றை அறிய உதவும் ஒரு வரலாற்று நூலாகவே இது திகழ்கின்றது. இதிலுள்ள பத்து பத்துகளையும் பாடிய புலவர் பாடப்பட்ட அரசர், புலவர் பெற்ற பரிசில், அரசன் ஆட்சி புரிந்த காலம் ஆகியவற்றை அட்டவணையில் காண்க பதிற்றுப்பத்து எண், பாடியவர்,பாடப்பட்டோர் ஆண்டகாலம்,

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் (58ஆண்டுகள்)

1.ஆம் பத்து - கிடைக்கவில்லை

2-ஆம் பத்து - குமட்டூர் கண்ணனார்

3-ஆம் பத்து - பாலைக் கௌதமனார்

4ஆம் பத்து - காப்பியாற்றுக் காப்பியனார்

5-ஆம் பத்து - பரணர்

கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் (55 ஆண்டுகள்)பெற்ற பரிசில் உம்பற்காட்டில் ஐந்நூறு ஊர்கள், தென்னாட்டு வருவாயுள் பாதி (சில ஆண்டுகள் வரை) பல்யானைச் செல்கெழுகுட்டுவன் (25ஆண்டுகள்) களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் (25ஆண்டுகள்) அவர் விரும்பியவண்ணம் பத்துப்பெருவேள்விகள் செய்து அவர்தம் மனைவியுடன் விண்ணுலகம் புகச் செய்தான் நாற்பது நூறாயிரம்பொன் ஆளுவதில் பாதி உம்பற்காட்டு வருவாய்- தன்மகன் குட்டுவன் சேரல்

6-ஆம் பத்து காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் (88ஆண்டுகள்)

7-ஆம் பத்து கபிலர் செல்வக்கடுங்கோவாழியாதன் (22 ஆண்டுகள்) அரிசில்கிழார்

8ஆம் பத்து தகடுரெறிந்தபெருஞ்சேரல் இரும்பொறை (17 ஆண்டுகள்) இளஞ்சேரல்இரும்பொறை (16ஆண்டுகள்)

9ஆம் பத்து பெருங்குன்றூர்கிழார் கிடைக்கவில்லை

10-ஆம் பத்து ஒன்பது துலாம்பொன் - நூறாயிரம் பொற்காசுகள்

நூறாயிரம்பொற்காசுகள் நன்றா என்னும் குன்றில் நின்று கண்ணுக்கெட்டிய தூரம்வரை எடுத்துக்கொள்ளச் சொன்னான் ஒன்பது நூறாயிரம்பொன்னும் அரசு கட்டிலும்

32,000 பொற்காசுகள், ஊரும் மனையும் ஏரும் பிறவும் அருங்கலன்கள் பன்னூறாயிரம்

**அகப்புறப்பொருள் நூல் பரிபாடல்:**

தால்வகைபாக்களுக்கு அகளுரித்த கொடுத்த பரிந்து செல்ல பரிபாட்டுத் தொகுப்பாக இது “டல்“ என்று பாடல் தொகைநிலை வளர்பின் பாவென்னும் இயல்நெறி இன்றிப் பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப எனவரும் தொல்காப்பிய நூற்பா பரிபாடல் பற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்களை இயற்றிய புலவர் பெருமக்கள் பதின்மூன்றுபேர் ஆவர். இதன் பாக்களுக்கு நல்லச்சுதனரம் நானா போன்ற பத்து ஆசிரியர்கள் இசை வகுத்துள்ளனர் பரிமேலழகர் தன் உரைச் சிறப்பினால் இப்பாடல்களில் பெருமையை உயர்த்தியுள்ளார்.

அறம், பொருள், இன்பம், வீடு என்று நாகைறுவி பொருட்களுள் இன்பத்தையே பொருளாகக் கொண்டு மலைவிளையாட்டு, புனல் விளையாட்டு முதலியன பற்றி பாடல்கள் இடம்பெறும் என்று பேராசிரியகும்,லையும் ஆறுஊரும் பரிபாடலில் வருணிக்கப்படும் என்று இளம்பூரணரும், தெய்வவாழ்த்து கட்படக்காரும் குறித்து உலகியலைப்பற்றி கரும் என்று நச்சினார்கினிங்கும் இவ்வாறு இச்செய்யுள் வகை பெரும்பாலு வருவதனால் இதனை இசைப்பாட்டு என் கூவர் செய்யுளின் சற்றிலும், அப்பாடலுக்கு இசைவருந்தவர் பெயர் தொகுப்பாகத நூலாகும் இதனை

திருமாற்கு இருநான்கு செவ்வேட்குமுப்பத்து தொருபாட்டு’ காடுகிழாட்கு ஒன்று மருவினிய வையை இருபத்தாறுமாமதுரை நான்கென்ப செய்ய பரிபாடல் திறம்“ எனவரும் பழைய வெண்பாவினால் அறியலாம்.

திருமாலுக்கு 2 × 4=8| செவ்வேளாகிய முருகனுக்கு - 31: காடுகிழாளாகிய காளிக்கு -1, வையைக்கு -26, மதுரைக்கு-4, ஆக 70 பரிபாடல்கள் அமைவது மரபு. ஆனால் இன்று நமக்குத் திருமாலுக்குரியதாக -6ம் முருகனுக்குரியதாக 8ம், வையை யாற்றுக்குரியதாக 8ம், என 22 பாடல்களே கிடைத்துள்ளன. இந்நூலைத்

தொகுத்தாரும், தொகுப்பித்தாரும் யார் யார் என்பது தெரியவில்லை. இதனை முதன் முதலில் உரையுடன் பதிப்பித்தவர் டாக்டர்.உ.வே.சா. ஆவர். பின்னர் பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனாரும் உரை எழுதியுள்ளார்.

எட்டுத்தொகையுள் அகப்பொருளையும், புறப்பொருளையும் சேர்த்துக் கூறும் ஒரே நூல் இதுவே. பாட்டு வகையால் பெயர் பெற்ற நூல்களில் ஒன்று.

**சிறப்புக்கள்:**

இந்நூலில் மதுரை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலை ஆகிய நகர் வருணனையும் வையை ஆறு போன்ற இயற்கை வருணனைகளும் இடம் பெற்றுள்ளன. அக்கால மக்களின் பழக்கவழக்கங்கள், ஆடை அணிகள், உணவுமுறை, வழிபாட்டு வகைகள், விழாக்கள் ஆகிய பல்வேறு வாழ்க்கை முறைகளும் அறியப்படுகின்றன. இதன் பாடல்கள் யாவும் சொற்கவை, பொருட்சுவைகளில் சிறந்து விளங்குவதோடு, பொருள்களின் இயற்கை எழில்களையும் நன்கு தெளிவாக்குகின்றன. இதுவும் தேவாரம் போலவே பண்முறையால் தொகுக்கப்பட்டுள்ளமை தெரிகின்றது. ஓங்கு பரிபாடல் என்று சிறப்பித்து உரைக்கப்பட்டுள்ளது.

கடுவன் இளவெயினனார் முருகனிடம்,

யாஅம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல'நின்பால் அருளும்
அன்பும் அறனும் மூன்றும் உருளிணர்க்கடம்பின் ஒலிதாரோயே!

என்று வேண்டுகின்றார். இது அவரது பக்குவப்பட்ட மனத்தைக் காட்டுகின்றது.

துணுக்குப்பாடல் ஒன்று மதுரை மாநகரைத் தாமரைப் பூவிற்கு ஒப்பிட்டுக் கூறும் அழகு இன்றைய நகர அமைப்போடு ஒப்பிட்டுப் பார்த்துச் சுவைத்து இன்புறுதற்குரியது. இதிலுள்ள வையைபற்றிய பாடல்களை அகமென்றும், ஏனைய சுடவுள் வாழ்த்துக்களைப் புறமென்றும் கூறுவர்.

கூடல் மாநகர வருணனை கூறும் இந்நூல் அகம், புறம், என்னும் இருபொருள்களின் கூடலாகத் திகழக் காணலாம்.

**வினாக்கள்:**

1. எட்டுத்தொகைப் பாடல்களுள் அடி அளவால் சிறிய பாடல் எது? ஐங்குறு நூறு
2. ஐங்குறுநூறு பாடல்களின் அடி அளவு ? (3அடி சிற்றெல்லை,6அடி பேரெல்லை)
3. ஐங்குறுநூறுயாரால் தொகுக்கப்பட்டது? கூடலூர்கிழார்

4.ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவர் யார்? யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

5. ஐங்குறுநூற்றிலுள்ள பாடல்கள் எண்ணிக்கை எத்தனை? 500

6 ஐங்குறுநூற்றைப் பாடிய ஆசிரியர்கள் எத்தனை? 5 பேர்

7. குறுந்தொகைப் பாடல்களின் அடி அளவு எத்தனை? (4-8)45

8. குறுந்தொகைப் பாடல்கள் யாரால் தொகுக்கப்பட்டன? பூரிக்கோ

9. குறுந்தொகை பாடல்களின் எண்ணிக்கை எத்தனை? 401

10. எட்டுத்தொகை நூல்களுள் அகப் பொருளுரைக்கும் நூல்கள் எத்தனை? 5

11. எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் உரைக்கும் நூல்கள் எத்தனை? 2

12. எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் உரைக்கும் நூல்கள் எவை? (பதிற்றுப்பத்து,புறநானூறு)

13. நற்றிணையில் அமைந்துள்ள பாடல்கள் எத்தனை ? (400)

14. நற்றிணையின் அடிவரையறையினைக் கூறுக. (9-12)

15. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்? பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

16. நற்றிணைப் பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை ? (175)

17. கலித்தொகைப் பாடல்கள் எந்தப் பாவினால் அமைந்தவை? (கலிப்பாவினால்)

18. கலித்தொகைப் பாடல்களின் எண்ணிக்கை? (150)

19. கலித்தொகைப் பாடல்களைத் தொகுத்தவர் யார்? (நல்லந்துவனார்)

20. கலித்தொகைப் பாடல்களைப் பாடியோர் எத்தனை பேர்? (5பேர்)

21. பாலைக்கலி பாடியவர் யார்? (பெருங்கடுங்கோன்)

22. பாலைக்கலிப் பாடல்கள் எத்தனை ? (35)

23. குறிஞ்சிக்கலி பாடிய புலவர் யார்? (கபிலர்)

24. குறிஞ்சிக்கலி பாடல்களின் எண்ணிக்கை? (29)

25. மருதக்கலி பாடியவர் யார்? (மருதனிளநாகனார்)

26. மருதக்கலி பாடல்களின் எண்ணிக்கை? (35)

27. முல்லைக்கலியின் ஆசிரியர் யார்? (நல்லுருத்திரன்)

28. முல்லைக்கலி பாடல்களின் எண்ணிக்கை? (17)

29. நெய்தற்கலியின் ஆசிரியர் யார்? (நல்லந்துவனார்)

30. நெய்தற்கலிப் பாடல்களின் எண்ணிக்கை? (33)

31. அகநானூற்றுப் பாடல்களைத் தொகுத்தவர் யார்? உருத்திரசன்மன்

32. அகநானூற்றுப் பாடல்களைத் தொகுப்பித்தவன் ? பாண்டியன் உக்கிரப்பெருவழுதி

33.அகதானூற்றுப் பாடல்கள் எத்தனை பிரிவுகளாகம் பிரிக்கப்பட்டுள்ளன? அவையாவை?

13 பிரிவுகள் 1. களிற்று யானை திரை 2. மணியி பவளம்.3. நித்திலக்கோவை

34. அகநானூற்றில் ஒற்றை எண்ணால் அமைந்தபாடல்கள் எந்த திணைக்குரியன? (பாலைத்திணை) 6,16,36-28, 47

35. அகநானூற்றில் முல்லைத்திணைக்குரிய பாடல்கள் எந்த எண்ணால் அமைந்தவை?

4,14,24

36. நெடுந்தொகை - என்பது எந்த நூலைக் குறிக்கும்? (அகநானூறு)

37. எட்டுத்தொகையுள் சேர அரசர்கள் பற்றிச் சிறப்பித்துக் கூறும் நூல்? (பதிற்றுப்பத்து)

38. பதிற்றுப் பத்தில் அந்தாதித் தொடையால் அமைந்துள்ள பத்து எது? (நான்காம் பத்து)

39. பதிற்றுப்பத்துப் பாடல்கள் எந்தத் திணையில் அமைந்துள்ளன? (பாடாண் திணை)

40. பரிபாடலில் திருமாலுக்குரிய பாக்கள் எத்தனை? (8)

41. பரிபாடலில் இடம்பெற்றுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்கள்? முருகனுக்கும், காளிக்கும், எவ்வளவு முருகனுக்கு-31, காளிக்கு-1

42. பரிபாடலில் மொத்தம் எத்தனை பாக்கள் ? (70) அவற்றுள் நமக்குக் கிடைத்துள்ள பாடல்கள் எவ்வளவு? (22)

43. எட்டுத்தொகை நூல்கள் பற்றிக் கட்டுரை வரைக.

## பத்துப்பாட்டு

பத்துப்பாட்டு என்பது நூறு அல்லது நூற்றின்மிக்க அடிகளால் ஆகிய பத்துத் தனித்தனி நூல்களைக் கொண்ட ஒரு தொகுப்பாகும். இஃது அகவற்பாக்களால் அமைந்த பத்துப் பாடல்களின் கோவையாகும்.

நூறடிச் சிறுமை நூற்றுப்பத்தளவே ஏறிய அடியின் ஈரைம்பாட்டு தொடுப்பது பத்து பாட்டெனப்படுமே அதுவே, அகவலின் வருமென அறைகுவர் புலவர் (பன்னிரு பாட்டியல் 266-7) என்பது இதன் இலக்கணம்.

“முருகுபொருநாறு பாணிரண்டு முல்லை பெருகு வள மதுரைக் காஞ்சி-மருவினிய கோல நெடுநல்வாடை கோல் குறிஞ்சிப்பட்டினப் பாலை கடாத்தொடும் பத்து“

என்ற பழம்பாடல், பத்துப்பாட்டு நூல்கள் எவை என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. பல அடிகள் கொண்ட நீண்ட பாட்டுக்கள் இதில் உள. இந்நூல் பொருட்கிசைந்த கற்பனைகளைக் கொண்டது என்பது,

”பத்துப்பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ எட்டுணையும் பொருட்சிசையும் இலக்கணமில் கற்பனையே”

எனவரும் மனோன்மணிய அடிகளால் தெரிகிறது. பத்துப் பாட்டுக்கள், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என் பலவாம். இவற்றுள் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, அகம் சார்ந்தவை. மதுரைக்காஞ்சி நிலையாமை கூறும் புறப்பாட்டாகும். நெடுநல்வாடை, அகப்பொருட்செய்தி கொண்டதாயினும், பாண்டியனது அடையாளப்பூவாகிய வேம்பைக் கூறினமையால், இதனைப் புறப்பொருள் பற்றிய நூல் என்பர்.

இவ்வரிய தொகுப்பு நூலுக்கு உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். இவ்வுரையினால், இவ்வுரைக்கு முன்பும் மற்றுமோர் உரை இருந்திருக்கவேண்டும் என்பது தெரிகிறது.

இப்பத்துப்பாட்டு நூலில் உள்ள பாடல்கள் பாட்டு எனவும், LAT எனவும் வழங்கப்பெறும். ”சான்றோர் உரைத்த தண்டமிழ்த்தெரியல், ஒருபதுபாட்டும்” என்று நச்சினார்க் கினியர் உரைச் சிறப்புப் பாயிரத்தாலும், பேராசிரியரைப் போன்ற உரையாசிரியர்கள், ”பாட்டினும், தொகையினும் வருமாறு கண்டு கொள்க” என்று குறிப்பிடுமிடத்தில், பத்துப்பாட்டினை முன்வைத்துக் கூறுவதாலும் ”மூத்தோர்கள்

பாடியருள் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும்” என்ற தமிழ்விடு தூது அடிகளாலும் இந்நூலின் சிறப்பை உணரலாம்.

பத்துப்பாட்டில் இயற்கைக்கு முரண்பட்ட கற்பனைகளோ பொருந்தா உவமைகளோ காணப்பெறவில்லை. பண்டைத் தமிழர் வாழ்க்கையை உள்ளபடி காட்டும் காலக் கண்ணாடியாக இந்நூல் விளங்குகின்றது.

**பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள்**

ஆற்றுப்படை “ஆறு“ என்னும் சொல்லுக்கு வழி அல்லது நெறி என்பது பொருளாகும். ஆற்றுப்படுத்தல் என்றால் அறிந்தானொருவன் அறியாதான் ஒருவனை வழிப்படுத்தலாகும்.

பழுமரம் நாடிச் செல்லும் பறவைகள் போல், வள்ளல்களை நாடிப் பரிசில் பெற்று மகிழ்வோடு திரும்பிய பாணரும், கூத்தரும், பொருநரும், விறலியரும், தம்மையொத்த கலைஞர்கள் எதிர்ப்பட்டபோது, அன்னோரும் தாம் பெற்ற இன்பத்தைப் பெறவேண்டுமென்று விழைந்து தமக்குப் பரிசில் நல்கிய வள்ளல்களை அடைவதற்குரிய வழியையும், பாராட்டவேண்டிய முறைகளையும், அவர் பரிசில் நல்கும் பான்மையினையும், பிறச் செய்திகளையும் எடுத்துக் கூறுவது வழக்கம்.

வாழ்க்கையிலிருந்து முகிழ்பதே உண்மையான இலக்கியம் வாழ்க்கையினின் இலக்கியமாகும், என்பதற்கேற்ப அந்நாட் கலைஞர்தம் முகிழ்த்தது இவ்வாற்றுப் படை வாழ்க்கையின் இவ்வியல்பினைக்கற்றுவல்ல புலவர் பெருமக்கள், பாராட்டத்தக்கதோர் உத்தியாகக் கொண்டனர். இவ்வாறு தாம் பாராட்ட விரும்பிய அரசரையும் கலைஞர்தம் வள்ளல்களையும் ஒன்றாக இச்செய்யுள் வகை பிற்காலத்தில் ஒரு சிற்றிலக்கிய வகையாக நூல்களில் இதற்கு இடம் கொடுத்திருப்பதுகொண்டு உணரலாம்.

பதிற்றுப்பத்திலும் பல செய்யுட்கள் ஆசிரிப்பாக்களாக அமைந்துள்ளன. அவை முதல் 31 அடிகட்டுள் அமைந்த பாடல்களேயாகும். பத்துப்பாட்டிலமைந்த ஆற்றுப்படைகளோ, நூற்றுக்கணக்கான அடிகளைக் கொண்டு விளங்குகின்றன. இவற்றுள் மிகப்பெரிதான மலைபடுகடாம் 583 அடிகளைக் கொண்டு விளங்குகின்றது.

**திருமுருகாற்றுப்படை**

இந்நூல் 317 அடிகளால் இயன்ற நேரிசை ஆசிரியப்பாவாகும். பத்துப்பாட்டு நூலுக்குக் கடவுள் வாழ்த்தாக இதனைக் கொள்ளலாம். தொல்காப்பிய இலக்கணத்தின் படி, ஆற்றுப்படை என்பது உலகியல் வாழ்வு பற்றியதாகும். திருமுருகாற்றுப்படையோ ஆன்மிக வாழ்வு பற்றியதாகும். பத்துப்பாட்டின் உரையாசிரியர், நச்சினார்க்கினியர், ”வீடு பெறுவதற்குச் சமைந்தானோர் இரவலனை, வீடு பெற்றானொருவன் முருகனிடத்தே

ஆற்றுப்படுத்தலென்று பொருள் கூறுக" என்று கூறக் காணலாம். ஏனைய ஆற்றுப் படை நூல்கள் மானிடரைத் தலைவராகக் கொண்டிருக்க, திருமுருகாற்றுப்படை முருகனாகிய தெய்வத்தைத் தலைவனாகக் கொண்டுள்ளது. பிற ஆற்றுப்படை நூல்கள், ஆற்றுப்படுத்தப்படுவானோடு சார்த்தி வழங்கப்படும். ஆனால் திருமுருகாற்றுப்படை பாட்டுடைத் தலைவனாம் முருகனோடு சார்த்தி வழங்கப் படுகிறது.

பிறவற்றில் பரிசில் பெற விரும்பும் கலைஞரின் வறிய நிலை பற்றிய வருணனைகள் உண்டு. திருமுருகாற்றுப்படையில் இதனைக் காண இயலாது. பிறவற்றில் ஆற்றுப்படுத்துவோன் தான் கொண்டிருந்த நிலையையும், பரிசில் பெற்றபின் அடைந்த புது வாழ்வையும், பரிசில் பெற்ற முறையையும் விரித்துக் கூறுவதைக் காணலாம். இதில் இந்நிலை இல்லை. இப்பாடலின் ஆசிரியர் நக்கீரராவார். "கீரர" என்பது இயற்பெயரென்றும், "ந" என்பது சிறப்புப் பொருள் குறித்ததோர் இடைச்சொல்லென்றும் அறிஞர் கூறுவர்.

**நூலின் பொருள்**

முருகப் பெருமானின் பெருமை பேசுவதற்காக எழுந்த இந்நூல் ஆறு பகுதிகளாகப் பகுக்கப்படுகின்றது. தன்னை நாடிவரும் அன்பர்கட்கு அருள்செய்யும் திருத்தலங்களாகத் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவேரகம், திருவாவினன் குடி ஆகிய நூல்களில் பாராட்டப்படுகின்றன. ஒவ்வொரு தலம் பற்றிய செய்தியும் ஒவ்வோர் உட்பகுதியாகக் கொள்ளப்படும். முருகன் குறிஞ்சிக் கிழவனாதலின் வளமார்ந்த குன்றுகள் யாவும் முருகன் இருப்பிடமாகக் கொள்ளப்பட்டு அங்கு கான வணங்கும் பண்பு ஐந்தாவது பகுதியில் வருணிக்கப்படுகிறது. குறமகள் குறவர்க்குரிய மரபுகளைப் பின்பற்றி முருகப்பெருமானை ஆற்றுப்படுத்தும் முறையும், கானவர் அவ்வாடுகளம் எதிரொலிக்கும்படி முருகனை வேண்டல், இரவலன் முருகனை வாழ்த்த வேண்டிய முறை, முருகன் அருள் செய்யும் திறம் ஆகியவற்றைப்பாடும் பகுதி ஆறாவது பகுதியாகும். இப்பகுதியில் குமரன் குடியிருக்கும் மலையின் வளம் மிக அழகுறப் புனையப்பட்டுள்ளது.

இறைவனை அடைதற்குரிய நெறிகள் அறிவுநெறி, அன்புநெறி என்ற இரண்டுண்டு என்றும், அவற்றுள் அன்பு நெறியே முருகாற்றுப்படையில் முருகன் ஆற்றுப்படுத்துவதே "அன்புடைய ஒருவனை, கருதுகின்றார். மேலும், முருகனை முருகன் முருகாற்றுப்படை என்கிறார் இவர். அருவே வடிவமான முருகன் தானே நாடிவந்து அருள் செய்யும் தன்மையையே திருமுருகாற்றுப்படை உணர்த்துவது. அன்புடையவனை நாடிவந்து அருள் செய்து அருள் வடிவம் பெறுமாறு அவனை ஆக்கிவிட்டால், அவனும் அருளே வடிவமான நிலையில் முருகன் எனவே வழங்குவதற்கு உரியவன் ஆகிவிடுவான். அன்புடையவர்களுள் ஒருவனாய் எண்ணப்படும். முருகன் அருள் பெற்று முருகனானவன்

அன்பர்களைத் தேடித் திரியும் எல்லா ஆற்றலும் உடைய முருகனை அவ்வன்பர்களிடத்தில் ஆற்றுப் படுத்துவதே திருமுருகாற்றுப்படையாம்" என்கிறார்.

இந்நூலின் சிறப்பறிந்து இதனைச் சைவநூலாகிய திருமுறையில் 11-ஆம் திருமுறையாகச் சேர்த்துள்ளனர். அருணகிரியார், சிவப்பிரகாசர், அந்தகக்கவி வீரராகவ முதலியார் போன்றோர் இந்நூலின் பக்திச் சுவையைப் பாராட்டுகின்றனர்.

**பொருநராற்றுப்படை:**

பொருநர் என்பதற்கு, மற்றொருவர் போல் வேடம் கொள்வோர் என்பது பொருள். இவர்கள் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணிப் பாடுவோர் எனப் பல வகைப்படுவர். இப்பாட்டில் பொருநர் என்பது போர்க்களம் பாடுவோரைக் குறிப்பதாகும். பரிசில் பெறக் கருதிய ஒரு பொருநனைப் பரிசில் பெற்ற ஒரு பொருநன், ஆற்றுப்படுத்துகின்றான். இதன் ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார், இதன் பாட்டுடைத்தலைவன், இரு பெரு வேந்தரும் ஒரு களத்தவிய வெண்ணித்தாக்கிய வெருவரு நோன்றாள் கண்ணார் கண்ணிக்கரிகால்வளவன் ஆவான்.

பொருநராற்றுப்படை வருணனைச் சிறப்புமிக்க ஓர் இலக்கியம். யாழின் ஒவ்வோர் உறுப்பிற்கும் ஒவ்வோர் உவமை கூறி வருணிக்கப்படுகின்றது. விறலியின் உறுப்பு நலன்களை முடிமுதல் அடிவரை உவமை கூறி வருணிக்கும் திறன் பாராட்டற்குரியது.

கரிகால் பெருவளத்தான், பொருநனின் அழுக்காடையை நீக்கிக் கோட்டைக் கரைய பட்டுடை கொடுத்ததையும், அவன் கொடுத்த ஊன் சோற்றுணவையும், எல்லையும் இரவும் ஊன்தின்று பற்கள் மழுங்கியமையையும் முடத்தாமக் கண்ணியார் மிக விரிவாக எடுத்துரைப்பதின் மூலம், அரசனின் விருந்தோம்பும் பண்பு மிகச்சிறப்பாக வெளிப்படுகிறது. கரிகாலன் தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தியதும், சென்னிப்போர் செய்து பாண்டிய சேரரை வென்ற வரலாற்றுச் செய்திகளை உணர்ச்சித்திறத்துடன் பாட்டாகப் படைக்கும் திறம் பெற்று விளங்குகிறார் இதன் ஆசிரியர். இந்நூல் 248 வரிகளை உடையது.

**சிறுபாணாற்றுப்படை:**

பண்பாடுவோர் பாணராவர். இவர்கள் இசைப்பாணர். யாழ்ப்பாணர், பிச்சை ஏற்றுப் பிழைக்கும் மண்டைப்பாணர் என மூவகைப்படுவர். சீறியாழை வாசிப்போரைச் சிறுபாணர் என்றும், பேரியாழை வாசிப்போரைப் பெரும்பாணர் என்றும் பாகுபடுத்துவர். இந்நூல் 269 அடிகளை உடையது. பாணாற்றுப்படை நூல்களுள் அடி அளவால் சிறிதாதலின், சிறுபாணாற்றுப்படை என்றும், சீறியாழைக் கொண்ட பாணனை ஆற்றுப்படுத்தியமையால் இப்பெயர் வழங்கியிருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது. இந்நூலுள் "இன்குரல்

சீறியாழ் இடவயின் தழீஇ” என்றும் பெரும்பாணாற்றுப் படையில் 462 ஆம் வரியில் ”இடனுடைப் பேரியாழ்“ என்றும் வருவதால் யாழால் வந்தவேறுபாடே பெரும்பாணர், சிறுபாணர் என்ற பகுப்புக்குக் காரணமாகும் என்று தெரிகின்றது. ஓய்மா நாட்டு நல்லியக்கோடனை, இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்த னார் பாடிய பாட்டாகும். இதனைச் ”சிறப்புடைத்தான சிறு பாணாற்றுப்படை” என்பர் தக்கயாகப்பரணி உரையாசிரியர்.

இந்நூலில், விறலியின் முடிமுதல் பாதம் வரையில் விவரிக்கும் வர்ணனை மூவேந்தர்களின் தலைநகரங்களின் சிறப்பு, கடையெழு வள்ளல்களின் அருஞ்செயல், பாட்டுடைத் தலைவனில் வீரம், கொடை, நெய்தல் நில இயல்பு, விருந்தோம்பும் பண்பு, யாழ் வர்ணனை, நல்லியக்கோடன், தன்னை அடைந்தார்க்கு ஈந்து அனுப்பும் முறை முதலான செய்திகள் நன்கு எடுத்து இயம்பப்பட்டுள்ளன.

**பெரும்பாணாற்றுப்படை**

இந்நூல் 500 அடிகளை உடையது. காஞ்சி மாநகரத்தில் அரசு செலுத்திய தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. இப்பாட்டைப், ”பாணாறு” எனவும் வழங்குவர்.

இந்நூலில், யாழின் வருணனை, பாலை நிலத்தின் எயினர் குடியிருப்பு, காஞ்சி மாநகரத்தில் பற்பல சமயத்தவரும் கொண்டாடும் விழாக்கள் போன்றவை விரிவாகப் பேசப்பட்டுள்ளன. உருத்திரங்கண்ணனார் இயற்கைக் காட்சிகளில் ஈடுபாடு மிக்கவர்’ தொண்டைமான் நாட்டில் ஆறலைக் கள்வர்களும் தீய விலங்குகளும் இல்லை’ இடியும் துன்புறுத்தாது’ என்றும் கடற்கரைப் பட்டினத்தில் மேற்றிசைக் குதிரைகள் வந்து இறங்கி இருக்கும் புறநாட்டு வணிகச் சிறப்பும் பேசப்படுகின்றது. நானிலங்களின் வருணனை அழகுடன் திகழ்கின்றது. நாய் கொண்டு முயல் வேட்டையாடுதல், பசுக்களைப் பாதுகாத்துப் பால், தயிர் விற்று நெல்லும் புல்லும் பண்டமாற்றமாகப் பெறுதல் போன்ற செய்திகளை இந்நூலில் காணலாம்.

தீயரது நட்பினை விரும்பிப் பலர், மலையிலுள்ள பொருள்களைக் கவர்ந்து கொண்டு கடலை நோக்கி வரும் ஆற்றினைப் போல பலவகைப் பொருட்களைச் சுமந்து கொண்டு வந்து, கங்கையாற்றின் கரையில் மறுகரை அடைவதற்காகத் தோணியின் வரவை எதிர்பார்த்து ஒருவரை, ஒருவர் முந்துவது போல நின்றார்கள்” என்றுகாஞ்சி நகர்க்காவலன் இளந்திரையன் பெருமையை உருத்திரங் கண்ணனார் பாடுகின்றார்.

**மலைபடுகடாம்:**

இந்நூலில், ”மலைபடுகடாம் மாதிரத்து இயம்ப” என்ற தொடர் காணப்படுகிறது. இதன் பொருள், ”மலைகளாகிய யானைக்கு உண்டாகின்ற ஒலி திசைகள் எல்லாம் ஒலிப்ப” என்பது. இந்தப் பொருட் தொடர் இதில் இருத்தலின், இந்நூற்கு இப்பெயரே சூட்டி வழங்கினர். பரிசில் பெறவரும் கூத்தன் ஒருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் ஆற்றுப்படுத்தியதாக இதில் கூறப்பட்டிருத்தலின் இது ”கூத்தராற்றுப்படை” என்றும் வழங்கப்பெறும். இதனைப் பாடியவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்” என்பவர். இப்பாடல் மூலமாக, கூத்தரைச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய்நன்னனிடத்தே ஆற்றுப்படுத்தியுள்ளார். இந்நூல் 583 அடிகளை உடையது. இந்நூலில், யாழ் வர்ணனை, மலைச்சாரல் வளம், வேடர்,குறவர், இடையர் வாழ்க்கை, விருந்தோம்பும் இயல்பு, நன்னன் ஊரின் மாண்பு, அரசனைக் காண வந்தார் கொண்டு வந்த காணிக்கைகள், நன்னன் இரவலர்க்குப் பரிசளிக்கும் பாங்கு, மன்னனைக் காண வழி நடக்கையில் ஏற்படும் இடையூறுகள், இடைவழியில் கிடைக்கும் உணவு வகைகள், சேயாற்றின் பெருமைப் போன்றவை மிக அழகாக விதந்தோதப்படுகின்றன.

புண்ணால் வருந்தும் வருத்தத்தை மாதர் பாடல்பாடித் தணித்தல், கவர்த்த வழிகள் தொடக்கத்தில் புல்லை முடிந்துவைத்தல் போன்ற குறிப்புகள் இந்நூலில் காணப்படுகின்றன.:

**குறிஞ்சிப்பாட்டு:**

ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவிப்பதற்காகக் கபிலர் பெருமானால் பாடப் பெற்றது. தமிழறிவித்தலாவது தமிழருக்கே உரிய அகத்திணைப் பண்பாட்டை உணர்த்து வதாகும். இந்நூல் ஆசிரியப்பாவால் ஆகிய 261 அடிகளை உடையது. தோழி செவிலிக்கு அறத்தோடு நின்றவழிக் கூறும் கூற்றாக அமைந்துள்ளது. அறத்தொடு நிற்றல் என்னும் துறையைச் சார்ந்த இது குறிஞ்சிக்குரிய முதல், கரு, உரிப் பொருள்களைச் கொண்டு விளங்குகிறது. நச்சினார்க்கினியரும், பரிமேலழகரும் இதனைப் பெருங்குறிஞ்சி என்று சிறப்பித்துரைப்பர். நாடகப்பாங்கில் விறுவிறுப்பாக அமைந்துள்ள இந்நூலில் காந்தள் பூ முதல் மலை எருக்கு ஈறாக 99 வகை மலர்கள் அவற்றின் வண்ணமும், வனப்பும் புலப்பட குறிக்கப்பட்டுள்ளன. இதில் 30க்கும் மேற்பட்ட உவமைகள் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியர் கூறியுள்ள “தோழி அறத்தொடு நிற்றல்“ துறை ஏழினுள் ஆறுவகையினைக் கபிலரின் இப்பாட்டு உள்ளடக்கியுள்ளது.

குறிஞ்சியின் ஒழுக்கமாகிய புணர்தலும் புணர்தல் நிமித்தமும் இதன்கண் அழகுற இடம் பெற்றுள்ளன. முதலில் இயற்கைப் புணர்ச்சியும், பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களும் கூறப்பட்டுள்ளன. பருவமடைந்த தலைமகள் உடல்

மெலிவதுகண்டு வருந்திய செவிலித்தாய்க்குத் தோழி அறத்தொடு நின்று உரைத்தல். அதாவது- "மழையால் பெருகிய அருவி நீரில் நாங்கள் ஆடியும் பாடியும் மலர் பறித்துச் சூடியும் விளையாடிக் கொண்டிருந்தோம். அவ்வமயம் ஆங்கு வில்லும் அம்பும் ஏந்தி வேட்டை நாய்கள் சூழ கட்டிளங்காளை ஒருவன் வந்தனன். நாயினைக் கண்டு நடுங்கிய நாங்கள் அங்கிருந்து அகல முயலுகையில் வேடர்களால் துரத்தப்பட்டவேழம் ஒன்று எம்மை நோக்கி விரைந்து வரக்கண்டு அச்சத்தால் நடுங்கிய நாங்கள் நாணமும் துறந்து அக்காளையின் அருகே சென்று நின்றனம் அருளுடைய அவ்விளைஞன் களிறெறிந்து எம்மைக் காத்தனன். பின்னர்த் தலைவியின் நலன் பாராட்டி உன்னை என் இல்லக் கிழத்தியாக ஏற்றுக் கொள்வேன் என்று மலையுறை தெய்வத்தின் முன்னிலையில் உறுதிகூறி, அருவி நீரை அள்ளி அருந்தி ஆணையிட்டான். இதற்குள் மாலைக்காலம் வந்துவிடவே எம்மைப் பாதுகாவலோடு ஊர்ப்புறத்தே சேர்த்துவிட்டு மறைந்தனன். நற்குடிப் பிறந்தவனும், நல்லொழுக்கம் மிக்கவனுமாகிய அந்நல்லோன் நாள்தவறாது நள்ளிரவாயினும் வந்து தலைவியைச் சந்தித்துச் செல்கிறான். எவ்வளவுதான் வீரமுடையவளேனும் அச்சம் தரும் காட்டு வழியில் பெருகிவரும் ஆற்றிணைக்கடந்து இரவுநேரத்தில் வருவது தலைவிக்குத் துன்பம் தருகின்றது. இதுவே இவளது மெலிவிற்குக் காரணம் என்று தோழிசெவிலியிடம் நாகரிகமாகச் சொல்லுகிறாள்.

இந்நிகழ்ச்சிகளின் ஊடே இடம் பெற்றுள்ள மாலைக்கால வருணனையும், தலைவனது மலைவளம் கூறுதலும், தலைவி தோழியருடன் புனலாடி மகிழ்ந்திருந்ததும், பல்வகைப் பூக்களையும் கொய்து களித்ததும் ஆகிய செய்திகள் சிறப்புற வருணிக்கப்பட்டுள்ளன.

**முல்லைப்பாட்டு:**

பத்துப்பாட்டில் மிகக் குறைந்த அடியளவுடைய சிறிய பாடல் இதுவே. 103 அடிகளைக் கொண்டு நேரிசை ஆசிரியப்பாவால் ஆகிய நூல் முல்லைத் திணைக்குரிய இருத்தல் ஒழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றது. அகத்திணைகளுள் ஒன்றான முல்லை, வினைமேல் சென்ற தலைவன் திரும்பி வரும்வரை தலைவி பிரிவுத்துயரை ஆற்றியிருத்தலை உரிப்பொருளாகக் கொண்டது. இதனை நச்சர் என்னும் ஆசிரியர் - "இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரித்து, வருந்துணையும் ஆற்றியிருவென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாது ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை" என்று இயம்புவர். இதன் ஆசிரியர் காவிரிப்பூப் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் ஆவார்.

அடி அளவால் சிறியதாயினும் சுவைச்சிறப்பால் பெருமையுடைய இந்நூல் முல்லைத்திணைக்குரிய பெரும்பொழுதான கார்காலம், சிறுபொழுதான மாலைக்காலம், ஆகிய இரு பொழுதுகளையும் அழகுறக் கூறும் பகுதியுடன் பாடலைத்

தொடங்குகின்றது. முதல் 23 அடிகள் வரையிலும் தலைவியின் பிரிவுத்துயர் உரைக்கப்பட்டுள்ளது. அடுத்த 55 அடிகள் வரையிலும் அரசனின் பாசறை அமைப்பும். பாசறையில் தலைவனிருப்பும் ஓவியக்காட்சி நல்குகின்றன. இதில் மன்னனின் பாசறையில் இருப்பில் வாளும் வளைக்கரத்தில் விளக்கும் ஏந்தி, அவ்விளக்கை அணையாது பாதுகாக்கும் பெண்டிரும், பாசறை வேந்தனுக்குப் பாதுகாவலாய் பெருமுதாளரும், மிலேச்சரும் இருந்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. அடுத்துப் பத்து அடிகளில் தலைவியின் அவலநிலை காட்டப்பட்டுள்ளது. இறுதியில் முல்லை நிலத்தின் இயல்பும் தலைவன் நிலையும், கார்காலத்திற்குப் பிறகு கூதிர்காலத்தில் அவன் திரும்புதலும், திரும்பும்போது தேர்க் குதிரைகளின் கழுத்துமணி ஒலித்தலும் உரைக்கப்பட்டுள்ளன.

தலைவி நெஞ்சை ஆற்றி இருப்பதாலும் "நெஞ்சாற்றுப்படுத்த - என்ற தொடரினாலும் இதனை "நெஞ்சாற்றுப்படை என்றும் கூறுவதுண்டு.

”செறியிலைக் காயா அஞ்சனம் மலர முறியிணர்க்கொன்றை நன்பொன் கால கோடல் குவிமுகை அங்கை அவிழத் தோடார் தோன்றி குருதி பூப்ப” - (9396)

மைபோல் காயாம்பூவும் பொன்போல் கொன்றையும் உள்ளங்கைபோல் வெண்காந்தள் மொட்டுக்கள் விரிய தோன்றிப் பூக்கள் குருதிபோல் மலர மரங்கள் அடர்ந்து காணப்படும் இக்கான் வழியில் மான்கள் தம் பிணையோடு இணைந்து விளையாடக் கார்காலம் தோன்றிற்று என்று கூறும் வருணனைப் பகுதி கழிபேருவகை அளிப்பதாக உள்ளது.

இந்நூலிலிருந்து யவனர் இயற்றிய புலித்தொடர் சங்கிலியும், பாவை விளக்கும். உடம்பின் உரைக்கும் உரையாநாவின் படம்புகு மிலேச்சர்களும், நாழிகை வட்டில் கொண்டு நாழிகை அறியும் பழக்கமும் நாழிகையைக் கணக்கிட்டுரைக்கும் நாழிகைக் கணக்கர் பற்றிய குறிப்புகளும், பெருமுது பெண்டிர் விரிச்சிகேட்கும் பழக்கமும் நெல்லையும் மலரையும் கோயிலுக்குக் கொண்டுசெல்லும் வழக்கமும் யானைகளைப் பழக்கும் விதமும், யானைகளை வடசொற்களால் பழக்கினார் என்பதும், மகளிரும் போர்க்களம் சென்றனர் என்பதும் போன்ற பல அரிய செய்திகள் அறியலாகின்றன. நூலின் இடையே அகத்திணையான முல்லைக்குத் தொடர்பான புறவொழுக்கமாகிய வஞ்சியும் உரைக்கப்பட்டுள்ளது. இதற்கு மறைமலையடிகள் அரிய ஆராய்ச்சியுரை ஒன்றும் இயற்றியுள்ளார்.

**பட்டினப்பாலை :**

பாலைத்திணையையும், காவிரிப்பூம்பட்டினத்தின் வளத்தையும் ஒருங்கே உரைப்பதால் பட்டினப்பாலை என்று பெயர்ப் பெற்றது. பெரும்பாணாற்றுப்படை இயற்றிய

கடியலூர் உருத்திரங்கண்ணனாரே இதன் ஆசிரியர் ஆவார். 301 அடிகளால் ஆன இந்நூலில் 138 அடிகள் ஆசிரியப்பாவினாலும், 163 வரிகள் வஞ்சிப்பாவினாலும் ஆகியமையின் இதனை “வஞ்சி நெடும்பாட்டு“ என்று வழங்குவர். அகப்பொருள் மரபின்படி இதில் தலைவன் பெயர் குறிப்பிடப்படவில்லை. இதற்கு உரை எழுதியுள்ள நச்சினார்க்கினியர் தனது உரையில் “சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது“- என்று குறிப்பிட்டிருப்பதாலும் “பொருநாறு பாலை கரிகால்“ என்று பாடப்பட்டோரின் பட்டியல் தரும் வெண்பா உரைப்பதினாலும் இந்நூலின் பாட்டுடைத்தலைவன் சோழன் கரிகாற் பெருவளத்தான் என்பது பெறப்படுகின்றது. இப்பாடலின் சிறப்பால் சித்தம் களித்த சோழன் புலவர்க்கு அவரின் வறுமைதீரப் பதினாறு நூறாயிரம்பொன் பரிசளித்தான் எனும் செய்தியை, “தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன் பத்தொடு ஆறுநூறாயிரம்பெறப் பண்டு பட்டினப் பாலை கொண்டதும்“ எனவரும் கலிங்கத்துப் பரணியும் சங்கரசோழனுலாவும் போன்ற பிற்காலத்து நூல்களால் அறியலாம். “தலைவியைப் பொருள் வயின் பிரியக் கருதிய தலைவன் செலவழுங்குதல்“ என்னும் துறையைச் சார்ந்தது. குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு என்பதுபோல் இதுவும் பாலைப்பாட்டு என்று திணையால் பெயர்ப் பெற்ற நூலாகும்.

தலைவன், தன் நெஞ்சை நோக்கிக் கூறியதாகவரும், உரைக்கப்பட்டுள்ளது. இதற்கு மறைமலையடிகள் அரிய ஆராய்ச்சியுரை ஒன்றும் இயற்றியுள்ளார்.”முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும் வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய வாரேன் வாழிய நெஞ்சே!” ”அரிமா அன்ன அணங்குடைத்துப்பின் திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய வேலினும் வெய்ய கானம்’ அவன் கோலினும் தண்ணிய தடமென் தோளே !” எனும் ஏழு அடிகளுள் பாலைத் திணைக்குரிய “செலவழுங்குதல் துறை“யை அமைத்துக்கூறியுள்ளார். சோழநாடுசோறுடைத்து என் பதற்கிணங்க, ”சோறு வாக்கிய கொழுங்கஞ்சி யாறுபோலப் பரந்தொழுகி ஏறுபொரச்சேராகி தேரோடத் துகள் கெழுமி வெண்கோயில் மாசூட்டும் -என்றுசோற்றுவளம் கூறப்பட்டுள்ளது. “நேரிழை மகளிர் உணங்குணாக்கவருங் கோழியெறிந்த கொடுங்காற் கனங்குழை பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும் முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்“ எனும் வரிகள் உயர்வு நவிற்சியாகக் காணப்பட்டபோதும் சோழநாட்டின் செல்வச் செழிப்பைப் புலப்படுத்துவனவாக உள்ளன.

மேலும் இதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு வாணிப வளமும், வாணிப நேர்மையும், திருமாவளவனின் வீரமும், பரதவர் வாழ்க்கை முறைகளும், காவிரிப்பூம்பட்டினத்து வளமும் மேன்மையும், பெருமையும் வருணித்திருக்கும் ஆசிரியரின் புலமைத்திறம் போற்றுதற்குரியதே. இத்துணைச் சிறப்புக்கள் இருப்பதினால்தான் இந்நூல், 1000 ஆண்டுகளுக்குமேல் போற்றப்படுகின்றது. இந்நூலுக்கு மறைமளல் திரணம், இரா. இராகவையங்காரும் ஆராய்ச்சி உரை நூல்கள் எழுதியுள்ளனர்.

**புறப்பொருள் நூல்கள்**

**நெடுநல்வாடை:**

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடியது. 188 வரிகளில் நேரிசை ஆசிரியப்பாவில் அமைந்துள்ள இந்நூல் ஒரு அகப்பொருள் பாடலாகவே விளங்கு கின்றது. அரசனைப் பிரிந்து வருந்தும் அரசமாதேவியின் துன்பம் நீங்குமாறு, ”பகைவரை வென்று வேந்தன் விரைவில் வருவானாக” என்று சிலர் கொற்றவையைப் பாடுவதாக இ∴து அமைந்துள்ளது.

நெடுமை ஐ நன்மை ஐ வாடை தலைவன் போர்மேல் செல்லுதற்குரிய கூதிர், வேனில் என்னும் இரண்டு பருவங்களில் கூதிர்ப்பருவத்தில் போர் மேற்சென்று பாசறைக்கண் தங்கி இருந்தானாக அவன் பிரிவினால், தலைவி வருந்துதலாகிய உரிப்பொருள் அமையப் பாடப்பட்டுள்ளது. கூதிர் காலத்து வடதிசைக் காற்றாகிய வாடை, கூதிர்ப்பாசறையில் தங்கி போகத்தில் மனம் செல்லாது, தான் மேற்கொண்ட நாடு காவலாகிய தன் கடமையில் கருத்தூன்றி இருந்து வினைமுடிக்கக் காரணமாய் இருந்ததனால் அரசனுக்கு நல்ல வாடையாகவும், பூ இடைப்படினும் ஆண்டு சுழிந்தது போன்று அவதியுறும் அன்றிலன்ன, தலைவனைப் பிரிந்து தனிமையில் வருந்தும் தலைவிக்கு ஒரு பொழுதும் ஓர் ஊழிபோல நெடியதாகி வருத்தும் இயல்பினதாயின் நெடுவாடையாகவும் இருத்தலின் இது நெடுநல்வாடை எனப் பெயர்ப் பெற்றது. பிரிந்த தலைவிக்குத் துன்பமும், வினைமுடித்த தலைவனுக்கு இன்பமும் நல்கியவாடைக் காலத்தைப் பற்றிக் கூறும் இந்நூலின் பெயர்ப் பொருத்தத்தை ஆராய்ந்த தமிழ்த் தென்றல் திரு.வி.க அவர்கள் வாடை துன்பத்தைக் குறிப்பது ‘நல்ல’ என்பது அன்பை உணர்த்துவது’ ‘நெடு’ என்பது அறியாமையைத் தெரிவிப்பது. எனவே அழியாது நீளும் நல்வாடை“ என்றுவிளக்கம் தருவர்.

பிரித்து வருந்துவது பாலைத்திணைக்குரிய உரிப்பொருள்’ வினைமேற்சென்ற வேந்தன் பகைப்புலத்தில் பாசறை அமைத்து வெற்றிபெறுவது வாகைத்திணைப் பொருளாகும். எனவே, பாலைக்குப்புறன் வாகை எனும் தொல்காப்பியக் கருத்திற்க்கு இயபுடைத்தாய் அமைந்திருப்பது அறியற்பாலது. வணங்காத பகைவரை நாடிச் செல்வதால் வஞ்சித்திணைப் பொருளதாகவும் கொள்ளலாம். அகத்திணைக்குரிய பிரிவுச் செய்திகளே இதில் பெரிதும் இடம் பெற்றிருத்தலின் இது பாலை என்னும் அகத்திணைக்குரியதாகவே கூறப்படுகின்றது. இருப்பினும் “வேம்புதலையாத்த நோன்காழ் எ∴கம்“ என்று பாண்டியனது அடையாள மாலையாகிய வேப்பமாலையைக் குறிப்பிடும் தொடர் வருவதால் இ∴து புறப்பாட்டும் ஆயிற்று. இவ்வாறு நுண்ணிய வேறுபாட்டையும்

நுணுகியறிந்து பிரித்து எண்ணும் உயர்ந்த தூய தமிழிலக்கிய நெறி வியந்து போற்றற்குரியது.

கூதிர்கால வருணனை, முழுவலி மக்களாகிய மிலேச்சர் நகரைச்சுற்றிக் காவல் செய்தல், மாலைக் காலத்தில் மகளிர் வழிபாடு போல்வன இப்பாட்டின் தொடக்கமாகும். இந்நூலில் இடம் பெற்றுள்ள கூதிர்காலவருணனை (45-70) இலக்கிய நயமும், ஓவிய எழிலும் இணைந்தவை. குளிர்காலத்தில் பயன்படாது கிடந்த பொருட்கள், பட்டியலிட்டு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப்பானாள் என்ற தொடரின் மூலம், கூதிர்காலத்தின் கொடுமை குறிக்கப்பட்டுள்ளது. கூதிரின் கொடுமையை இதைவிட வேறு யாராலும் அழகுற, அருமையாகக் கூறமுடியாது எனும் அளவிற்கு நக்கீரர் இதனைப் புனைந்துள்ளார். பித்தியரும்பு மலர்ந்து மணம் வீசத் தொடங்கியதும் மாலை வந்ததென அறிந்து கொண்டனர். இவ்வாறு மலர்களே மணிகாட்டிகளாகப் பயன்பட்ட பாங்கு புலனாகின்றது. “வென்றெழு கொடியொரு வேழம் சென்றுபுகக் குன்றுகுயின்றன்ன வோங்குநிலை வாயில்“ எனும் வரிகள் வேழம் புகுந்து செல்லுமளவிற்கும் குன்றுகள் போன்று உயர்ந்த நிலைகளோடு கூடிய மாடங்களைக் கொண்ட கட்டடங்கள் செப்புகின்றன. கட்டப்பட்டிருந்தசிறப்பை இடைப்பகுதி தலைவனைப் பிரிந்து துயருறும் தலைவியின் நிலையை நவில்கிறது. இதில் அரசி அமர்ந்துள்ள அரண்மனை அமைப்பும், பாண்டிமாதேவியின் பள்ளியறைக் காட்சியும் அரசி துயிலும் கட்டிலின் சிறப்பும், அக்கட்டிலில் புனையா ஓவியம் போல அரசி இருத்தலும், கலைமேம்பாடு மிக்க அந்தப்புரமும், அரசன் பிரிவால் வருந்தும் தலைவியின் நிலையை அவளது பண்டைய நிலையோடு ஒப்பிட்டு வேறுபடுத்தி உரைக்கும் அழகும் சிறந்து விளங்குகின்றன.

இறுதியில் போர்மேற் சென்ற அரசனின் வீரமும், பரிவும் புகழப்பட்டுள்ளது. பாசறையில் உறக்கம் வராது உழன்ற மன்னன், நள்ளிரவில் தீவட்டி ஏந்தி ஏவலர் உடன்வர போரில் புண்பட்ட வீரர்களைக் கண்டு ஆறுதல்பெற இன்மொழி இயம்பும் அருட்பண்பு உள்ளத்தை நெகிழ வைக்கின்றது. இவ்வாறு அரசியின் பள்ளியறைக் காட்சியையும் அரசனின் பாசறைக் காட்சியையும் காட்டுவதன் மூலம் நெடுநல்வாடை யின் முக்கிய நோக்கம் நிறைவேறக்காணலாம்.

இந்நூலிலிருந்து மக்களிடம் நாளும் கோளும் பார்க்கும் வழக்கம் இருந்ததையும், பாண்டியர் பெருமை, நாட்டு வளம், போர் வெற்றி முதலியன கூறப்படுகின்றன. அடுத்து, பாண்டியரின் மதுரை நகர்வளம் கூறப்பட்டுள்ளது. மதுரை மாநகரத்தின் அமைப்பையும், சிறப்பையும், களிறுமாய்க்கும் கதிர்வளமுடைய பாண்டிநாட்டின் நிலவளத்தையும் கூறியுள்ளார். மதுரை நகரின் பெருமை, வைகையாறு, மதில், அகழி ஆகியவற்றின்

தன்மை, நாளங்காடி, அல்லங்காடி ஆகியவற்றின் சிறப்பு ஆகிய அனைத்தும் 354 அடிகளில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

மதுரையில். உள்ளார், மாலை முதல் மறுநாள் காலை வரை பொழுதுபோக்கும் முறை இந்நூலில் விரிவாக உரைக்கப்பட்டுள்ளது. இதுபற்றி டாக்டர் மு.வ. அவர்கள் தான் இயற்றிய தமிழ் இலக்கிய வரலாற்று நூலில் - இவ்வாறு 354 அடிகளில் மதுரை நகரம் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஒருவர் ஒருநாள் காலையில் தொடங்கி மறுநாள் விடியற்காலை வரையில் நகரத்தைச் சுற்றிவந்து கண்டவற்றை முறைப்படக் கூறுவது போல வருணனை அமைந்துள்ளது என்று கூறுகிறார் முடிவில் - மன்னனது கொடையும், அவனைப் புலவர் வாழ்த்துவதும் இடம்பெறுகின்றன.

இந்நூலில் மதுரைக் கோயில்களில் நடைபெறும் விழாக்கள் மாத்திரமின்றி, திருப்பரங்குன்றத்தில் நடைபெறும் விழா, திருவோணநாள் விழா, அந்திவிழா, ஏழுநாட்கள் நடைபெறும் விழா, நன்னன் பிறந்தநாள் விழா போன்ற பலவிழாக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சிற்சில இடங்களில் வானநூற் குறிப்புகளும் வருகின்றன.

இந்நூலாசிரியரான மாங்குடி மருதனாருக்கும் பாட்டுடைத் தலைவனான பாண்டியன் நெடுஞ்செழியனுக்கும் இருந்த நெருக்கத்தை, பாவலனாகிய பாண்டியன் தான் பாடிய புறநானூற்றுப் பாடலில், ‘‘ஓங்கிய சிறப்பின் உயர்ந்தகேள்வி மாங்குடி மருதன் தலைவனாக உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின் புலவர் பாடாது வரைக என் நிலவரை“ -என்று வஞ்சினம் உரைத்திருத்தலினின்று அறியலாம்.

பாண்டியரின் பெருமையோடு தொடங்கி, மதுரைநகரின் மாண்புடன் வளர்ந்து, உலக நிலையாமையை உணர்த்தும் காஞ்சித்திணையுடன் முடியும் இதில் உலக நிலையாமை உணர்த்தப்படுவதில் ஒரு வேறுபாட்டினைக் காணலாம். துறவையோ, காட்டிற்க்குச் சென்று செய்யும் கடுந்தவத்தையோ வற்புறுத்தாது “தேறல் உண்டு“ யவனர் இயற்றிய பாவை விளக்குகள் பயன்படுத்தப் பட்டதும், கூதிரையும் பொருட்படுத்தாத உடல் வளமிக்க மிலேச்சர் நகரைக் காவல் புரிவதும், கொற்றவை வழிபாடு இருந்ததும் போன்ற பல செய்திகள் அறியப்படுகின்றன.

அன்புச் சித்திரமாகத் திகழும் இந்நெடுநல்வாடைக் காட்சிகளைக் கற்றுக்களித்த தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள், ”ஒரு சிறு புல் நுனியில் மருவும் ஒரு பனித துளியினிடை ஒரு பெரிய ஆலமரம் காட்சி தருவது போல, சிறிய நெடுநல் வாடையில் பெரிய உலகம், உயிர், அன்புத் தெய்வம், இவற்றின் திறங்கள் முதலியன காட்சி தருகின்றன என்றும், ”நெடுநல்வாடை ஒரு பெருஞ்சுரங்கம், நக்கீரர் கண்ட சுரங்கம், தமிழ்ச் சுரங்கம்” என்றும் பாராட்டுகின்றார்.

நெடுநல்வாடையின் நலனில் நெஞ்சம் பறிகொடுத்த கு.கோதண்டபாணி பிள்ளை அவர்கள் நெடுநல்வாடையின் சிறப்புக்களைத் திரட்டி நெடுநல்வாடை பாநயன்“ என்னும் ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார். செ.வேங்கடராமச் செட்டியார் அவர்கள், “புனையா ஓவியம்“ என்னும் நூலை இயற்றியுள்ளார்.

**மதுரைக்காஞ்சி**

பத்துப்பாட்டு நூல்களிலேயே பெரிய பாடலான இது 782 அடிகள் கொண்டது. பெருகு வள மதுரைக் காஞ்சி என்று சிறப்பிக்கப்படும் இந்நூல் வஞ்சி அடிகள் விரவி வந்த ஆசிரியப்பாவால் இயன்றது கூடற்றமிழ்“ என்ற ஒரு பெயரும் இதற்கு வழங்கப்படுகின்றது. மதுரைக் காஞ்சி என்பது மதுரையை ஆட்சி புரிந்து வந்த தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு உலக இன்பம்“ பொருட்செல்வம், இளமை, யாக்கை போன்றவை நிலையற்றவை என்றும் காஞ்சித்திணையை விரித்துக் கூறுவது மதுரைக் காஞ்சி, மதுரை நகரின் கண்ணுள்ள மன்னனுக்குக் காஞ்சித்திணையை உணர்த்துவது என்று பொருள்படும். முல்லைப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு என்பன போன்று, இதனையும் திணையால் காஞ்சிப்பாட்டு என்று வழங்கலாம். பத்துப்பாட்டு நூல்களுள் புறத்திணையின் பெயரால் அமைந்த நூல் இது ஒன்றே. இதன் ஆசிரியர் பாண்டிய மன்னனால் பெரிதும் பாராட்டப்பட்ட மாங்குடி மருதனார் ஆவார். காஞ்சி என்பது புறத்திணைகளில் ஒன்று. “காஞ்சிதானே பெருந்திணைப் புறனே“ என்பது தொல்காப்பியம். பாங்கருஞ்சிறப்பின் பல்லாற்றானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே“ என்று தொல்காப்பியர் உரைத்துள்ள இலக்கணத்தின் படியே மாங்குடி மருதனார் இதனைப் பாடியுள்ளார். “வாழ்க“ என்று வாழ்த்துகின்றது “முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசம்பலாவர்“ என்னும் பழமொழிப்படி நிலையாமை உணர்த்தப்படுகின்றது. மதுரை மாநகரின் பெருமையும் காவற்சிறப்பும் மதுரை வரலாறும், நெடுஞ்செழியன் வரலாறும் உரைக்கும் இப்பாட்டு வரலாற்றுக்குப் பயன்படும் ஒரு குறுங்காப்பியம் எனப்படும் பெருமைக்குரியதாகத் திகழ்கின்றது.

சங்ககால நெடும் பாடல்களான இப்பத்துப் பாடல்களும் சங்ககாலத் தமிழர்களின் அக, புற வாழ்வியலை அறிந்து கொள்ளப் பெரிதும் துணைபுரிகின்றன. பழந்தமிழ் நாட்டின் வாணிபம், செல்வம், சமயம், சமுதாயம், விருந்தோம்பல். பழக்கவழக்கங்கள், உணவுமுறை, நாகரிகம், ஓவியம், சிற்பம், கட்டடம் போன்ற கலையறிவு பற்றியும், மதுரை. காவிரிப்பூம் பட்டினம், வஞ்சி முதலிய மூவேந்தர் பெருநகரங்களையும், வேலூர், ஆமூர் போன்ற சிறு நகரங்களையும் வேறு பல சிற்றூர்களையும், நால்வகை நில மக்களின் தொழில்முறை வாழ்க்கை நிலைகளையும், புலவர், பாணர், பொருநர், கூத்தர்

ஆகிய கலைஞர்களைப் புரவலர்கள் போற்றிப் பாராட்டிப்பரிசளித்துப் பெருமைபடுத்தி அதையும் அறிவதற்குப் பெரிதும் உறுதுணையாக நிற்கின்றன.

இவ்வாறு அகம், புறம் எனும் இருதிணைகளுள் முருகக்கடவுள் உள்ளிட்ட ஏழு தலைவர்கள் மீது எட்டு புலவர்களால் பாடப்பட்டுள்ள 10 பாடல்களின் தொகுப்பாகிய இப்பத்துப்பாட்டு நூல்கள் முழுமைக்கும் நச்சினார்க்கினியர் உரை வகுத்துள்ளார். இது முழுமையும் கிடைத்துள்ளது பெரும் சிறப்பாகும். இதனை டாக்டர் உ.வே.சா. அவர்கள் பதிப்பித்துப் பெருமையைச் சேர்த்து பெருந்தொண்டாற்றியுள்ளார்.

## சங்கம் மருவிய காலம் (கி.பி 100-600)

சங்கம் மருவிய காலம் - இருண்ட காலம் - நீதிநூற்காலம், இருண்டகால இலக்கியங்கள் - கீழ்க் கணக்கு நூல்கள் - நீதி இலக்கியங்கள்- திருக்குறள், நாலடியார் - நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, ஆசாரக்கோவை, இன்னா நாற்பது, திரிகடுகம், பழமொழி. சிறுபஞ்சமூலம் - முதுமொழிக்காஞ்சி - ஏலாதி - அகப்பொருள் நூல்கள்- கார் நாற்பது - ஐந்திணை ஐம்பது - திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது- கைந்நிலை - இன்னிலை - புறப்பொருள் இலக்கியம் களவழி நாற்பது., காரைக்கால் அம்மையார், திருமந்திரம் - சிலப்பதிகாரம் - மணிமேகலை - இரட்டைக்காப்பியங்கள்.

முன்னுரை:-

சங்க காலம் என்பது கி.பி இரண்டு, மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலம் ஆகும். கி.பி மூன்றாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி முதல், பல்லவர் ஆட்சி ஏற்பட்ட காலமான கி.பி ஏழாம் நூற்றாண்டின் தொடக்ககாலம் வரையிலான காலகட்டத்தினைச் சங்கம் மருவியகாலம் என்பர்.

சங்ககாலத்தில் முடியுடை மூவேந்தராலும், வேளிர் முதலான சிற்றரசர்களாலும் ஆளப்பட்டுவந்த தமிழகம் கி.பி மூன்றாம் நூற்றாண்டில் அயலவர் ஆட்சிக்குட்பட்டது. இவ்வயலவர் களப்பிரர் என்றும், பல்லவர் என்றும் அறியப்பட்டனர். இவர்கள் வேற்றுமொழியினர். அதாவது களப்பிரர் பாலி மொழியினையும் பல்லவர்கள் பிராகிருத மொழியினையும் ஆதரித்தனர். இவர்கள் வேற்று மொழியோடு வேற்று சமயத்தையும் சார்ந்து விளங்கினர்.

சங்ககாலத்திலேயே புத்த, சமணக் கோட்பாடுகள் ஓரளவு தமிழகத்தில் தலைகாட்டியிருந்தன. சோழ, பாண்டிய நாட்டைக் கைப்பற்றிய களப்பிரர் பௌத்த சமயத்தைத் தென்னகத்தில் பரப்ப முயன்றனர்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டிநாட்டில் கொடும்பஞ்சம் ஏற்பட்டதாக இறையனார் களவியலுரை மூலம் அறியப்படுகிறது. அக்காலப் பகுதியில்தான் பல்லவர் என்ற பிராகிருத மொழியினர், தொண்டை நாட்டையும், நடுநாட்டையும் கைப்பற்றி ஆளத் தலைப்பட்டனர். இவர்கள் சமண சமயத்தையும், வடமொழியையும் பேணினர். ஆனால் பல்லவப் பேரரசு கி.பி. 6ஆம் நூற்றாண்டளவில்தான் நிலைபெறத்தொடங்கியது.

களப்பிரர்க்கும் உள்நாட்டு மன்னர்க்கும் இடையே நிலவிய போரும், பூசலும் தமிழிலக்கியம், கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றில் பெரும்சிதைவையும், இழப்பையும் ஏற்படுத்தின. இந்நிலையில் தேனும் ஊனுமாக, தேறலும் களியாட்டமுமாக இருந்த சங்ககாலத்து இன்ப வாழ்க்கை மாறி, சமண பௌத்தமதச் செல்வாக்கால் பல்வேறு நோன்பு வாழ்க்கை மேற்கொள்ளப்பட்டது. தமிழ்மொழியும் ஆதரிக்கப்படாமல் தாழ்த்தப்பட்டுவளர்ச்சிக் குன்றிப் போற்றுவாரற்று விளங்கியதால் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெருந்தேக்கமும், மாற்றமும் ஏற்பட்டது. எனவே இக்களப்பிரர் ஆட்சிகாலத்தை, கலை இலக்கிய நோக்கிலும், அரசியல் நோக்கிலும் இருண்டகாலம் என்பர். சங்ககாலத்தை அடுத்த காலமாதலின் சங்கம் மருவியகாலம் என்றும் அழைப்பர். நீதி, இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றியமையால் நீதிநூற்காலம் என்றும் அழைக்கப்பட்டது."அடிநிமிர் பில்லாச் செய்யுட்டொகுதி அறம்பொருளின்பம் அடுக்கி யவ்வகைத் திறம்படவுரைப்பது கீழ்க் கணக்காகும் " என்பது பன்னிரு பாட்டியல் சூத்திரமாகும். எனவே குறைந்த செய்யுட்களையுடையதாய் யாப்பினால் இயன்று அறம் - பொருள் - இன்பம் எனும் மூன்று அடிகளையுடைய உறுதிப் பொருள்களையும் கூறுவனவற்றைக் கீழ்க்கணக்கு நூல்கள் என்று வகைப்படுத்தினர். வெண்பா

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாவன-

"நாலடி நான்மணி நானாற்பதைந்திணை முப்பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம் இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே கைந்நிலை கீழ்க்கணக்கு - இப்பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் 11 நூல்கள் நீதி நூல்களாகும். எஞ்சியவற்றுள் அகப்பொருள் நூல்கள் - 6, புறப்பொருள் நூல் - 1.

**1.திருக்குறள்**

நீதி நூல்களில் காலத்தால் முற்பட்டதும், பொருட் சிறப்பால் உயர்ந்ததுமாகத் திகழ்வது திருக்குறளே. இதன் காலம் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன.

இதன் ஆசிரியர் திருவள்ளுவர் ஆவார். வள்ளுவர் என்பது இவரது குடிப்பெயராகும். இவரது வேறு பெயர்கள்- நாயனார் தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார் மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் முதலியன .

திருக்குறளின் அமைப்பும் பகுப்பும்:- 1330 குறள்களைக் கொண்ட இந்நூலில் 133 அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 குறட்பாக்கள் இடம் பெற்றுள்ளன. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் அல்லது இன்பத்துப்பால் என்ற மூன்று பால்களையும், 8 இயல்களையும் கொண்டுள்ளது. அறத்துப்பால் பாயிரம் தவிர, இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்ற மூன்று இயல்களையும் பொருட்பால்- அரசியல், அங்கவியல், குடியியல் என்ற மூன்று இயல்களையும் காமத்துப்பால் களவியல், கற்பியல் என்ற இரண்டு இயல்களையும் பெற்றுள்ளன. அறத்துப்பாலில் 38

அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களும் அமைந்துள்ளன.

சிறப்பும் பெருமையும்:- குறள் வெண்பாவால் இயன்ற முதல்நூல் திருக்குறளே. முதலடியில் 4 சீர்களும், இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் என 7 சீர்களில் சிறந்த, உயர்ந்த பெருகிய பொருளைக் கொடுக்கின்றது.

அக்காலத்தில் வாழ்ந்த ஐம்பத்தேழு புலவர்கள் இவரைப் பாராட்டிக் கூறியுள்ள பாராட்டுரைகளை எல்லாம் தொகுத்துத் “திருவள்ளுவமாலை“ என்று ஒரு நூல் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு தனி நூலாக அமையும் அளவிற்குப் பாராட்டுரைகள் சிறந்து விளங்கும் நூல் இது ஒன்றே, இதற்கு, உத்தரவேதம், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை எனப் பலபெயர்கள் வழங்கப்படுகின்றன. காலத்திற்குப்பின் வந்த புலவர்களில் இவரது குறட்கருத்துக்களைக் கையாளாத புலவர்களே இல்லை. குறள் சாதி, சமய, இன,மத, நாடு, மொழி பேதங்களைக் கடந்த ஒன்று. எம்மதத்தவரும், இனத்தவரும் தத்தமக்குரியது என்று உரிமை பாராட்டும் பெருமைக்கு உரியது. இது ஒரு சிறந்த இலக்கியமாகவும், சமயநூலாகவும், தத்துவ நூலாகவும், அவரவர் நிலைக்கேற்ப அமையும் சிறப்புடையது.

முற்காலத்தே திருக்குறளுக்கு உரை எழுதியோர் பதின்மராவர். மிக அதிகமான உரையாசிரியர்களைப் பெற்ற பெருமை குறளுக்கு உண்டு உரையாசிரியர்கள் பதின்மா் யார் யார் என்பதை ”தருமர் மணக்குடவர் தாமத்தார் நச்சர் பரிதி பரிமேலழகர் - திருமலையர் மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர் நூற்கு எல்லையுரை செய்தார் இவர் ”

எனும் வெண்பா விளக்கும். இவற்றுள் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர் ஆகிய நால்வரின் உரைகளே இன்று கிடைக்கப்பெறுகின்றன. அவற்றுள் பரிமேலழகர் உரையே மிகச்சிறந்தது எனப்போற்றப்படுகின்றது. இதனை “நூலிற் பரித்த உரை

எல்லாம் பரிமேலழகன் தெரித்த உரை யாமோ தெளி“ எனவரும் உரைச்சிறப்புப்பாயிரத்தால் அறியலாம்.

திருக்குறள் உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதோடு ஒரே மொழியில் பல பெயர்ப்புகளும் வெளிவந்துள்ளன. சில மொழிகளில் நூல் முழுதும் மொழிபெயர்க்கப் படாவிட்டாலும், சில பாக்களாவது மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்திய மொழிகளில் தெலுங்கு மலையாளம், இந்தி, வடமொழி ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அயல் மொழிகளுள் இலத்தீன் மொழியில் வீரமாமுனிவர், ஆங்கிலத்தில் டாக்டர். ஜி.யு. போப், வ.வே.சு. ஐயர், தீட்சிதர், இராஜாஜி ஆகியோரும் மொழிபெயர்த்துள்ளனர். இவை தவிர, ஜெர்மன், பிரெஞ்சு முதலிய அயல் மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆல்பர்ட் சுவிட்சர் திருக்குறளின் பெருமையை “உலக இலக்கியங்களில் திருக்குறளைப் போலச் சிறந்த அறம் உரைக்கும் நூல்வேறு இல்லை“- என்று கூறுவர். வள்ளுவரையும், அவர்தம் குறளையும் போற்றாத புலவரே இல்லை எனலாம். “வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து வான்புகழ் கொண்டதமிழ்நாடு“- என்றும், “கம்பனைப்போல், வள்ளுவன் போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்த தில்லை, உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை” என்று பாரதியார் வள்ளுவரையும், “வள்ளுவர் செய் திருக்குறளை மறுவறநன் உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொரு நீதி என்று மனோன்மணிய நாடக நூலாசிரியர் திரு சுந்தரம் பிள்ளையவர்கள் திருக்குறளையும் போற்றிப் பாராட்டியுள்ளனர். “ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி” எனும் பழமொழியும், தமிழிற்குக் “கதியாவது கம்பராமாயணமும், திருக்குறளும் என்பது போன்ற வழக்கும் இதன் பெருமையை உணர்த்தும்.

**2 நாலடியார்**

திருக்குறளுக்கு அடுத்த நிலையில் சிறப்பாக எண்ணப்படும் நூல் இதுவே.

“பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் “ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி“ என வழங்கும் பழமொழிகள் இதன் சிறப்பை விளக்கும். ஈரடிகளால் வள்ளுவர் சுருக்கமாக உரைத்துள்ள கருத்துக்களை நான்கடி வெண்பாக்களால் எடுத்துக்காட்டுடன் விளக்கிக் கூறும் வகையில் இதன் அமைந்துள்ளது. வடிவாலும் கருத்தாலும் பாடல்கள் குறளின் விரிவாக்கமாகத் திகழும் இதனைத் “திருக்குறளின் விளக்கம் - என்றே கொள்ளலாம்.

நான்கடிகளைக் கொண்ட வெண்பாக்களால் இயன்றமைப் பற்றி ‘நாலடி’ என்று அழைக்கப்பட்டுப் பின் “ஆர்“ என்னும் சிறப்பு விகுதியும் சேர்ந்து “நாலடியார்“- என்று வழங்கப்படலாயிற்று. நானூறு வெண்பாக்கள் இடம் பெற்றிருந்தமையால்

எண்ணிக்கையால் பெயர் பெற்றச் சங்க நூல்களான அகநானூறு, புறநானூறு என்பன போன்று இதுவும் “நாலடி நானூறு“ என்று வழங்கப்படுவதாயிற்று. இது வேளாண் வேதம் எனவும் குறிக்கப்படுகின்றது.

நாலடியாரில் கடவுள் வாழ்த்து நீங்கலாக, 40 அதிகாரங்களும் 12 இயல்களும், 400 வெண்பாக்களும் உள்ளன. இதுவும் குறளைப் போலவே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என முப்பாலாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதன் சிறப்பினை உணர்ந்த டாக்டர். ஜி.யு. போப் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

இந்நூல் சமண முனிவர்களால் பாடப்பட்டது ஆகும். இது பற்றிக் கர்ணபரம்பரையாகக் கதையொன்று வழங்கி வருகின்றது. அதாவது, எட்டாயிரம் சமண முனிவர் பஞ்சத்தால் வருந்தி பாண்டிய நாடடைந்து, வாழ்ந்திருந்தனர். சிறிது காலத்தில் பஞ்சம் தீர்ந்திடத் தம் நாடு செல்லக் கருதியபோது சான்றோரைப் பிரிய மனமில்லாதப் பாண்டிய மன்னன் விடைதர மறுத்தான். வேறு வழியறியாத புலவர்கள் ஆளுக்கொரு பாடலியற்றித் தம் படுக்கையில் வைத்துவிட்டுப் பாண்டியன் அறியாதவாறு பிரிந்து சென்றனர். அறிஞரின் இந்த எதிர்பாராத பிரிவினால் சீற்றம் கொண்ட பாண்டியன், அவர்களின் பாடல் ஏடுகளை எல்லாம் வைகையில் எறியச் செய்தான். அவ்வாறு எறியப்பட்ட ஏடுகளுள் 400 பாடல் ஏடுகள் நீர்ப்போக்கை எதிர்த்து வர, அதுகண்ட பாண்டியன் அவற்றைச் சேர்த்துத் தொகுத்தனன். அதுவே “நாலடியார்“ என்பதே அவ்வரலாறு. இக்கதை எந்த அளவிற்கு உண்மையாயினும் இதினின்று இரண்டு உண்மைகள் பெறப்படுகின்றன. 1. இது சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நூல் 2. இது ஒரு தொகுப்பு நூல். நச்சினார்க்கினியர் தனது சிந்தாமணி உரையுள் - சமணமுனிவர் பலரால் எழுதப்பட்ட ”நாலடியார் என்று கூறி இருப்பதாலும், சில தனிப் பாடல்களாலும் இக்கருத்து தெளிவாக உறுதிசெய்யப் படுகின்றது.

இந்நூலில் “பெருமுத்தரையர்“ என்பவர் பற்றி இரண்டு இடங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. இவர்கள் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சிற்றரசர்கள். முதலாம் பரமேச்வரப் பல்லவன் காலத்தில் இம்முத்தரையர் சிறந்து விளங்கிய காரணத்தால் இந்நூலும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பது பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்து பாண்டியருக்கும் முத்தரையர் என்ற பெயருண்டு எனக்கூறி, நாலடியாரின் காலம் கி.பி. 7 ஆம நூற்றாண்டிற்கும் முந்தியது என்பர் சிலர்.

நாலடியாருக்கு அதிகாரம் வகுத்தவர் “பதுமனார்“ அதிகாரங்களை முப்பாலாகப் பகுத்து உரைகண்டவர் “தருமரி“. பதுமனாரும் ஓர் உரை எழுதியுள்ளார். நாலடியாரின் உரைகளை உள்ளடக்கியது “நாலடியார் உரைவளம்“ என்னும் நூல் நாலடியாரால்

அக்காலப் பழக்க வழக்கங்களையும், சமய நம்பிக்கைகளையும் நன்கு அறியலாம் உரையாசிரியர்கள் இதன் செய்யுட்களைப் இடங்களில் எடுத்தாண்டுள்ளனர். எக்கருத்தையும் உள்ளத்தில் பதியுமாறு எடுத்துரைப்பது நாலடியாரின் தனிச்சிறப்பு. கல்வியின் சிறப்பைப் பற்றி நாலடியார் கூறும் திறம் சீரியதாகும்.

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையால் கல்வி அழகே அழகு"- என்றும் "கல்வி கரையில' கற்பவர் நாள் சில ' மெல்ல நினைக்கின் பிணி பல-தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடைய கற்பவே' நீர் ஒழியப் பால் உண் குருகின் தெரிந்து-

**3 நான்மணிக்கடிகை**

இதன் ஆசிரியர் விளம்பிநாகனார். இவர் விளம்பி என்னும் ஊரைச் சேர்ந்தவர். இந்நூலில் காணப்படும் கடவுள் வாழ்த்துப் பாடல்களைக் கொண்டு, இவர் வைணவர் என்று கருதப்படுகின்றார். இவரது காலம் கி.பி. 4ஆம் நூற்றாண்டாக இருத்தல் வேண்டும் என்பது டி.வி. சதாசிவப் பண்டாரத்தார் கருத்து.

நந்நான்கு மணிகள் பதிக்கப்பெற்ற கடிகை எனும் அணிகலன் இது போன்று நந்நான்கு மணி போன்ற அறக்கருத்துக்களைச் கூறும் காரணத்தால் நான்மணிக்கடிகை என்று பெயர் பெற்றது. கடவுள் வாழ்த்து உட்பட 104 வெண்பாக்கள் உள்ளன. தொல்காப்பியர் கூறும் "அம்மை" எனும் வனப்பின்பாற்படும். இதில் சிறந்த உவமைகளும், அறிவுரைகளும் பொருந்திக் காணப்படுகின்றன. இந்நூலின் ஏழாவது பாடலையும், நூறாவது பாடலையும் டாக்டர் போப் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்கள். எக்குடியிலும் நன்மக்கள் பிறத்தல் கூடும் என்பது நாகனார் கருத்து.

"கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும் மான் வயிற்றில் ஒள்ளரிதாரம் பிறக்கும் பெருங்கடலுள் பல்விலைய முததும் பிறக்கும் அறிவார் யார் நல்லாள் பிறக்கும்குடி". ஒரே கருத்துப் பலவிடத்தும் வருமாறு இவர் சிற்சில அறங்களைத் திரும்பத் திரும்ப வற்புறுத்துகின்றார். "அல்லவை செய்வார்க்கு அறங்கூற்றம் (83) வெல்வது வேண்டின் வெகுளிவிடல் (15) தன்னொடு செல்வது வேண்டின் அறஞ்செய்க (15) இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசை நடுக (15)" என்பன இந்நூலில் காணப்படும் சில அரிய தொடர்களாகும். இவர் கொலையை மிகவும் கடிகின்றார். "அந்தணரின் நல்ல பிறப்பில்லை " என்னும் இவர் "எருதுடையான் வேளாளன் ஏலாதான் பார்ப்பான்"- என்றும் கூறுகின்றார்.

**4.இனியவை நாற்பது**

இதன் ஆசிரியர்- மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார். இதன் கடவுள் வாழ்த்தில் மும்மூர்த்திகளும் வணங்கப்பட்டுள்ளனர். இக்கடவுள் வாழ்த்துச் செய்யுள் உட்பட 41 வெண்பாக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலும் இவை இவை இனியவை என்று கூறப்படுகின்ற காரணத்தால் இது இனியவை நாற்பது என்று பெயர் பெற்றது. இதுகி.பி.5ஆம் நூற்றாண்டில் தோன்றியிருத்தல் வேண்டும். இன்னா நாற்பதில் வழங்கியுள்ள பாடல் தொடர்களை அப்படியே கையாண்டு இனிது என்று மாற்றி உரைத்திருப்பதினின்று இது இன்னா நாற்பதற்குப் பின் தோன்றியிருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது.

“அனைத்தின்று ஊனைப்பெருக்குதல் முன் இன்னா“ எனும் இன்னா நாற்பதன் கருத்தை “ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன் இனிதே“ என்றும் “குழவிகள் உற்ற பிணி இன்னா என்பதை. “குழவி பிணி இன்றி வாழ்தல் இனிதே “ என்றும் அப்படியே கையாண்டிருப்பதைக் காணலாம். சிறந்த நீதிகளைப் புகட்டும் இந்நூலில் 4 பாடல்கள் தவிர ஏனைய 36 பாடல்களும் மூன்று இனிய பொருள்களையே கூறுகின்றன. நான்கு பாடல்களில் மாத்திரம் நான்கு இனிய பொருள்கள் கூறப்படுகின்றன. எனவே இந்நூல் பொருளமைப்பில் திரிகடுகத்தை ஒத்துள்ளது எனலாம். “மான மிழந்தபின் வாழாமை முன்னினிதே”, “வருவாயறிந்து வழங்கலினிதே“, “குழவி தளர் நடைகாண்டலினிதே“, “கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே என்பன இந்நூலால் அறியப்படும் சில இனியவைகளாகும்.

**5.இன்னா நாற்பது**

ஆசிரியர் கபிலர். கடவுள் வாழ்த்து உட்பட 41 வெண்பாக்களை உடையது. தொல்காப்பியர் கூறும் அம்மை எனும் வனப்பு அமைந்தது. ஒவ்வொரு பாடலும் இவை இவை இன்னாதவை என வற்புறுத்துவதால் இது இப்பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் தன் கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவன், பலராமன், மாயோன், முருகன் ஆகிய நால்வரையும் குறிப்பிட்டுள்ளமையால் இவரது சமரச நோக்கு அறியப்படுகின்றது. இந்நூலில் கள்ளுண்ணாமை, புலாலுண்ணாமை ஆகியவை வற்புறுத்தப்படுவதால் இவர் மட்டுவாய் ஊன்சோறு உண்ட சங்க காலக் கபிலரினும் வேறுபட்ட காலம் கி.பி. 4.ஆம் நூற்றாண்டு என்பதும் அறியப்படுகின்றது. இன்னிசை வெண்பாவில் அமைந்து இன்பம் பயக்கும் இந்நூலில் 93ல் சில அறக்கருத்துக்கள் மீண்டும் மீண்டும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இந்நூலில் மொத்தம் 166 இன்னாத பொருட்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

“பந்தம் இல்லாத மனைவியின் வனப்பு இன்னா”, “உண்ணாது வைக்கும் பெரும் பொருள் வைப்பு இன்னா”, “ஆற்றல் இல்லாதான் பிடித்த படை இன்னா தீமையுடையார்

அயலிருத்தல் இன்னா“ என்பன போன்ற கருத்துக்கள் சிறந்த அறிவுரைகளாக அமைந்துள்ளன.

**6.திரிகடுகம்**

இதன் ஆசிரியர் - நல்லாதனார். “திரிகடுகம் சுக்கு மிளகு திப்பிலி“ என்பது திவாகரநிகண்டு கூறும் விளக்கம். எனவே இம்மூன்று பொருட்களால், ஆன மருந்து உடல் நோயைப் போக்குவது போல, இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் உள்ள மும்மூன்று கருத்துக்களும் மாந்தரின் மன இருளைப் போக்கி இம்மை, மறுமை இன்பங்களை அளித்து உள்ளத்திற்கு உரமூட்டும் தன்மையதாய் இருப்பதால் இது திரிகடுகம் எனப் பெயர்ப் பெற்றது. இதில் 100 வெண்பாக்கள் இடம்பெற்றுள்ளன. இதன் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இறுதி. இந்நூலில் திருமால் வணக்கம் காணப்படுவதால் இந்நூலாசிரியர் வைணவர் எனப்படுவர். இந்நூலின் முதற்பாட்டு திரிகடுகம் என்ற சொல்லையே குறிப்பிடுவதால் இந்நூலுக்குத் திரிகடுகம் எனப்பெயர் ஏற்பட்டது என்பர்.

நல்விருந்து ஓம்பலின் நட்டாளாம், வைகலும் இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய் தொல்குடியின் மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும் கற்புடையாள் பூண்டகடன்“ என்ற பாடலின் மூலம் ஒரு பென் தன் கணவனுக்கு நண்புடையவளாய், தாயாய், மணைவியாய் விளங்குவாள் என்று விளக்குகின்றது.

ஒவ்வொரு பாடலின் மூன்றாம் அடியின் இறுதியில் இம்மூவர் அல்லது “இம்மூன்றும்“. என்று இடம் பெறுவது குறிப் பிடத்தக்கது. மேலும் ”வருவாயுட் கால் வழங்கி வாழ்தல்“, “நெஞ்சம் அடங்குதல் வீடாகும்“ “வேளாளன் என்பான் லிருந்திருக்க உண்ணாதான்“ “தாளாளன் என்பான் கடன்பட வாழாதான்“ பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுகவேண்டும்“ என்பது போன்ற பல அரிய கருத்துக்களும் இதில் கூறப்பட்டுள்ளன.

**7.ஆசாரக்கோவை**

ஆசிரியர் - பெருவாயின் முள்ளியார். இவர் “கயத்தூர் பெருவாயின் முள்ளியார்“ என்றும் அறியப்படுகின்றார். இவரது காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு. கடவுள் வாழ்த்தில் சிவபெருமானைக் குறிப்பிட்டிருப்பதால் இவர் சைவர் என்பர். இவர் வடமொழிப் பயிற்சி நிறைந்த தமிழ்ப்புலவர் ஆவார். வடமொழியில் இருடிகள் கூறியுள்ள ஆசாரங்களைத் தொகுத்து இத்தமிழ் நூல் இயற்றப்பட்டிருப்பதாக இதன் சிறப்புப் பாயிரச் செய்யுள் செப்புகின்றது எனினும் பண்டைத் தமிழர் கருத்துக்களும் இதில் போற்றப் பட்டுள்ளன.

ஒருவர் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்க முறைகளைத் தொகுத்துக் கூறுவதால் இப்பெயர் பெற்றுள்ளது. ஆசாரம் எனும் வடசொல், ஒழுக்கம் என்று பொருள்படும். இதில் பல்வேறு வெண்பா வகைகளையும் உள்ளிட்ட 101 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இது அறங்கூறும் முறையும் வடநூல் முறையை ஒத்துள்ளது என்பர். இதன் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு ஆகும். இந்நூலின் முதல் வெண்பாவின் ஈற்றடி “ஆசாரவித்து“ எனவும், நூறாவது வெண்பா “ஆசாரம் வீடுபெற்றார்“ - எனவும் முடிவது நூலின் தலைப்பிற்கு அரண் செய்வதாய் உள்ளது.

இதில் உலகியல் பற்றிய உண்மைகளும், நீராடல், உண்ணுதல் முறை, துயிலும் விதம், படிக்கத்தகாத நாள்கள் பற்றியெல்லாம் கூறப்பட்டுள்ளன. இவை போன்று இக்கால மக்கள் ஏற்கமுடியாத நெறிகள் பல இதில் இருந்த போதிலும் அக்கால வடநூலார் வகுத்த நெறிமுறைகளை அறிவதற்கு இந்நூல் பெரிதும் துணைசெய்கிறது. தள்ளத்தக்கவை எவை என்று கூறும் பாடல் தலையொடு, கொட்டாவி, காறிப்பு, தும்மல் இவையும் பெரியார்முன் செய்யாரே செய்யின் அசையாது நிற்கும் பழி”. மேலும், நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல், இன்னாசெய்யாமை, கல்வி, ஒப்புரவு, அறிவு, நட்பு, இவ்வெட்டும் ஆசரமாகிய ஒழக்கத்திற்கு வித்து என்ற இவரது கருத்து சிறப்புடையதாகும்.

நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல்லோடு இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு ஒப்புரவாற்ற அறிதல், அறிவுடைமை நல்லினத்தாரோடு நட்டல் இவை எட்டும் சொல்லிய ஆசார வித்து-

**8 பழமொழி**

ஆசிரியர் முன்றுறை அரையனார். இவரை முன்றுரை என்ற ஊரை ஆண்ட சிற்றரசர் என்பர். சமண சமயத்தவராகக் கருதப்படுகின்ற இவரது காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு என்பர்.

இதன் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழியை வைத்துப்பாடப் பட்டிருப்பதால் இது “பழமொழி“ எனும் பெயர் பெற்றது. இதில் 400 பாக்கள் அடங்கியுள்ளமையால் இது “பழமொழிநானூறு“ என்றும் வழங்கப்படுகிறது.

பழமொழி என்பது பழங்காலந்தொட்டு, வழிவழியாக மக்களால் வாய்மொழியாக வழங்கப்பட்டுப் பழக்கத்திலிருந்து வரும் சில தொடர்களாகும். பழமொழிகளையே நூல் முழுதும் அமைத்து எழுதப்பட்ட நூல்களுள் மிகத் தொன்மை வாய்ந்தது இந்நூலே பாடல்தோறும் ஒரு பழமொழியோடு, ஒரு கதையையோ வரலாற்று நிகழ்ச்சியையோ சுட்டி அறத்தை வலியுறுத்துகின்றது. இவற்றால் பழந்தமிழ் மக்களின் பழக்கவழக்கங்கள் பல அறியப்படுகின்றன. மேலும் புராணக்கதைகள், வரலாற்றுக்கதைகள், அரிய

நிகழ்ச்சிகள் பலவற்றை இந்நூல் எடுத்துக்காட்டாகத் தருகின்றது. பல்யானைச் செல்கெழுகுட்டுவன், கரிகாலன், மனுநீதிகண்ட சோழன், பொற்கைப் பாண்டியன், பாரி, பேகன், தூங்கெயில் எறிந்த சோழன் போன்ற வள்ளல்கள், நீதிமான்கள் போன்ற பலரது வரலாற்றுக் குறிப்புகள் கொண்ட வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழ்கிறது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள், நாலடியார் ஆகிய இரு நூல்களுக்கும் அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்க சிறப்புடையதாகத் திகழ்கிறது. சொற்சுருக்கமும் பொருள் ஆழமுடையதாக காணப்படுகின்றன. சிறப்புக்கள் இந்நூலில் உரை முடிவு காணான், இளமையோன் என்ற நரை முது மக்கள் உவப்ப, நரை முடித்து சொல்லால் முறை செய்தான், சோழன், குலவிச்சை சுல்லாமல் பாகம் படும்

**9.சிறுபஞ்சமூலம்**

இதன் ஆசிரியர் காரியாசான். இவர் மதுரைத் தமிழாசிரியர் மானகாயனாரின் மாணவர் என்பதைச் சிறப்புப் பாயிரம் தெரிவிக்கின்றது. மதுரையில் வாழ்ந்த காரியாசானின் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டாகும். நூலின் பாயிரத்தின் மூலம் இவர் சமணர் என்பது தெரிகின்றது. சமணராயினும் தன் நூலில் சமண சமயக் கருத்துக்களைக் குறைவாகவும், பொதுக் கருத்துக்களை மிகுதியாகவும் பயன்படுத்தியுள்ளார். பெரும் செல்வந்தராகத் திகழ்த்த இவர் கொடைப்பண்பு மிக்கவராய் இருந்ததுடன் திகழ்த்தார். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, தெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்களும் சிறுபஞ்சமூலம் என்று நிகண்டு நூல்கள் குறிப்பிடுகின்றன. சிறுபஞ்சமூலம் என்னும் இவ்வைந்து வேர்களும் உடற்பிணியை நீக்குவது போன்று, இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் வரும், ஐந்து அரிய கருத்துக்கள் வாழ்க்கையின் உயர்விற்குப் பயன்படுவதோடு, உயிருக்கு வரும் அறியாமை என்னும் நோயைப் போக்கி, இம்மை மறுமை இன்பங்களைத் தருவதால் இந்நூல் சிறுபஞ்சமூலம் என்னும் பெயர் பெற்றது. கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்றும் சிறப்புப் பாயிரப்பாடல்கள் இரண்டும் நீங்கலாக இந்நூலில் 102 வெண்பாக்கள் இடம் பெற்றுள்ளன. திரிகடுகம் நான்கடிகளில் மூன்று கருத்துக்களைக் கூற நான்மணிக்கடிகை நான்கடிகளில் நான்கு மணிபோன்ற கருத்துக்களைக்கூற சிறு பஞ்சமூலம் நான்கடிகளில் ஐந்து கருத்துக்களைக் கூறுகின்றது.

சிறந்த கவிஞனுக்குரிய இலக்கணம் இந்நூலிற் கூறப்பட்டுள்ளது. தோற் கன்றைக் காட்டிப் பசுக்களைக் கறக்கும் கொடிய பழக்கத்தை இவ்வாசிரியர் கடிவதிலிருந்து இப்பழக்கத்தின் பழமை புலனாகின்றது. இந்நூற் பாக்களுள் ஒரு சில: "சிலம்பிக்குத் தன்சினை கூற்ற நீள் கோடு விலங்கிற்குக் கூற்றுமயிர்தான் - வலம்படா மாவிற்குக் கூற்றமா ஞெண்டிற்குத்தன் பார்ப்பு நாவிற்கு நன்றல் வசை" "பூத்தாலும்

காயாமரமுள நன்றறியார் மூத்தாலும் மூவார் நூறேற்றாதார் பாத்திப் புதைத்தாலும் நாறாத வித்துள பேதைக் குரைத்தாலுஞ்செல்லா துணர்வு",

**10.முதுமொழிக்காஞ்சி**

ஆசிரியர் -மதுரைக் கூடலூர்க் கிழார். இவர் வச்சிரநந்தியின் தமிழ்ச்சங்க காலத்தைச் சேர்ந்தவராதலால், இவரது காலம் கி.பி 5ஆம் நூற்றாண்டு ஆகும். கிழார் என்னும் சொல்லால். இவர் வேளாண் மரபினர் எனக் கொள்வர். இந்நூல் பத்து அதிகாரங்களையும், அதிகாரத்திற்குப் பத்து குறட்டாழிசைகளாக 100 செய்யுட்களையும் உடையது. அப்பத்து அதிகாரங்களாவன-

1) சிறந்தபத்து

2) அறிவுப்பத்து

3) பழியாப்பத்து

4) செல்லாப்பத்து

5) அல்லபத்து

6) இல்லைபத்து

7) பொய்ப்பத்து

8) எளியபத்து

9) தண்டாப் பத்து.

10) நல்கூர்ந்தபத்து என்பன

முதுமொழிக்காஞ்சி என்பது நிலையாமை பற்றிய காஞ்சித்திணையில் ஒரு துறையாகும். உலக நிலையாமையை எடுத்துக் காட்டிச் சான்றோர் தம் அறிவுடைமையால் கூறும் அனுபவ உரைகளே முதுமொழிக் காஞ்சியாகும். இந்நூலிற் காணும் சில நயங்கள்:- "இளமைப் பருவத்தில் கல்லாமை குற்றம்' வளம் இல்லாத பொழுது வள்ளன்மை செய்வது குற்றம்' சுற்றத்தார் இல்லை என்றால் சினம் கொள்வது குற்றம்" என்கிறார்.

"ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லாம் ஓதலிற் சிறந்தன்று ஒழுக்க முடைமை மேதையின் சிறந்தன்று கற்றது மறவாமை நசையிற் பெரியதோர் நல்குரவில்லை வண்மையிற் சிறந்தன்று வாய்மையுடைமை இளமையிற் சிறந்தன்று மெய்பிணி யின்மை நலனுடைமையிற் நாணுச் சிறந்தன்று குலனுடைமையிற் கற்புச் சிறந்தன்று.

**11.ஏலாதி**

இதன் ஆசிரியர் “கணிமேதாவியார்“, வடமொழிப் பயிற்சி வாய்ந்த இவர் சமண சமயத்தினராவார். இவரும் தமிழாசிரியர் மானகாயனாரின் மாணாக்கராவார். இவரது காலம் 5ஆம் நூற்றாண்டு கணி என்பது கொண்டு இவர் கணிதத்திலும், சோதிடத்திலும் சிறந்த புலமை பெற்றவர் என்பர். இது இவரது சிறப்புப்பெயர். இவரது இயற்பெயர் தெரியவில்லை.

ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம் அல்லது சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறுசரக்குகளால் ஆனமருந்து ஏலாதி எனப்படும். இம்மருந்து மாந்தரின் பிணி நீக்கி உடல்நலம் தருவது போன்று. இதன் ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள ஆறு கருத்துக்கள் மக்களின் உளநோய் தீர்க்கவல்லதாதலின் இது ஏலாதி எனப்பட்டது. கடவுள் வாழ்த்து நீங்கலாக 80 பாடல்கள் உள்ளன. இரண்டு சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் இதில் இடம் பெற்றுள்ளன. முற்பிறவியில் மாணவர்கட்கு உணவு, உடை, எழுத்தாணி, புத்தகம் முதலியவற்றை உதவியவர்கள் இப்பிறவியில் பெரும் புலவர்கள் விரும்பி எழுதுமாறு பெரு வாழ்வுபெற்று வாழ்வர் என்று இவர் கூறுவது சிறப்பாக உள்ளது.

ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம் பேணொடும் எண்ணும் எழுத்திவை-மாணொடு கேட்டெழுதி ஓதிவாழ்வார்க்கீந்தார் இம்மையான் வேட்டெழுத வாழ்வார் விரிந்து”. ”கொலைபுரியான் கொல்லான் புலான் மயங்கான் அலைபுரியான் வஞ்சியான் யாதும் நிலைதிரியான் மண்ணவர்க்கு மன்றி மதுவலி பூங்கோதாய்! விண்ணவர்க்கு மேலாய் விடும்“.

**அகப்பொருள் நூல்கள்**

**12.கார் நாற்பது**

ஆசிரியர் - மதுரைக் கண்ணங்கூத்தனார். இவர் மதுரையைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் கூத்தன். இவர் தனது நூலில் திருமால், பலராமன் ஆகியோரைக் குறிப்பிட்டிருப்பதால் இவரை வைணவர் என்பர். சிவனுக்குரிய கார்த்திகை விளக்கிடுதல் பற்றிக் குறிப்பிடுவதிலிருந்து இவரது சமயப் பொறையை உணரலாம். இவரது காலம் கி.பி.6ஆம் நூற்றாண்டு ஆகும். கார்காலத்தைச் சிறப்பிக்கும் வகைமையால் இந்நூல் கார்தாற்பது“ என்று பெயர்பெந்நது. கலை, இடம், போர் கருதி நிற்பான் எனும் இலக்கண விளக்கப் பாட்டுள்ளமையால் இந்நூல் காலம் பற்றியது அகப்பொருள் கூறும் கீழ்க்கணக்கு நூலில் இதுவே சிறிய நூல். இதில் கார் காலத்தின் அழகிய இயற்கை வருணனைகள் இடம் பெற்றுள்ளன. ஐங்குறுநூறில் உள்ள இளவேனில் பத்து இதனுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது. முல்லைத் திணைக்குரிய அகப்பொருள் இதில்

சித்திரிகப்படுகின்றது. முல்லை நிலத்தின் முதல், கரு, உரிப்பொருட்கள் இதில் அழகாகப் புனையப் பெற்றிருக்கின்றன.

வினைமேற் சென்ற தலைவன், தலைவியிடம் தான் கார் காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிச் செல்கிறான். குறிப்பிட்ட கார்காலத்தில் தலைவன் வாராதது கண்டு வருந்தும் தலைவியைத் தோழி தேற்றுதல்' தலைவனும் தலைவியை நினைத்து தேர்ப் பாகனோடு பேசி விரைந்து மீளுதல் ஆகியன இதில் அழகுறக் கூறப்பட்டுள்ளன. "நலமிரு கார்த்திகை நாட்டவர் இட்ட தலைநாள் விளக்கில் தகையுடையவாகிப் புலமெலாம் பூத்தன தோன்றி சிலமொழி தூதொடு வந்தமழை".

**13 ஐந்திணை ஐம்பது**

இதன் ஆசிரியர் மாறன் பொறையனார். அகத்திணைகளான முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் எனும் ஐந்திற்கும் திணைக்குப் பத்து பாடல்களாக 50 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. சங்க நூல்களுள் ஆசிரியவடிவிலிருந்த அகப்பாடல்கள் பின்னர் இவ்வாறு வெண்பா யாப்பை ஏற்றன. இந்நூல் சிறந்த செய்யுள் நடையையும் பொருள் வளத்தையும் கொண்டதாகும். பொறையுடையவரான இவ்வாசிரியரது 4-ஆம் நூற்றாண்டு எனக் கூறப்படுகின்றது. இந்நூலின் சிறப்பினை உணர்ந்த பாயிரப்பாடல், "ஐந்திணை ஐம்பதும் ஆர்வத்தின் ஓதாதார் செந்தமிழ்சேராதவர்" என்று கூறுகின்றது. மல்லர்க்கடந்தான் நிறம் போன்று இருண்டெழுந்து செல்வக் கடம்பமர்ந்தான் வேல்மின்னி - நல்லாய் இயங்கெயில் எய்தவன் தார்பூப்பஈதோ மயங்கி வலனேருங்கார்" என்பது ஆசிரியரின்சமயப் பொறையை விளக்கும் சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென்று எண்ணிப் பிணைமான் இனிதுண்ண வேண்டிக் கலைமாத்தன் கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பகாதலர் உள்ளம் படர்ந்த நெறி" -எனும் பாடல், தலைவன் செல்லும் நெறி இத்தகைய அன்புக் காட்சிகள் நிறைந்தது என்பதைப் புலப்படுத்தும் காதலுணர்வை நுட்பமாக வெளிப்படுத்தும் இப்பாடல் அறிஞர்களால் அடிக்கடி எடுத்தாளப் படுவதாகும்.

**14.திணைமொழி ஐம்பது**

ஆசிரியர் சாத்தந்தையார் மகனார் கண்ணஞ்சேந்தனார். ஐந்திணை ஐம்பது போல் அகத்திணை ஐந்துக்கும், திணைக்குப் பத்துப் பாடல்கள் வீதம், 50 வெண்பாக்கள் அமைந்த நூலாதலால் திணைமொழி ஐம்பது எனும் பெயர் பெற்றது. இதில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசையில் திணைகள் அமைந்துள்ளன. இதிலுள்ள 50 வெண்பாக்களில் 46 பாடல்கள் இன்னிசை வெண்பாக்களாலும், 4 பாடல்கள் நேரிசை வெண்பாக்களாலும் இயன்றவை. இதில் அமைந்துள்ள உவமைகள் அறிந்து இன்புறத் தக்கவை.

ஒரு பாடலில் மலையருவி விழும் ஓசை யாழ், குழல், முழவு ஆகிய இசைக் கருவிகளின் இன்னோசையை ஒத்திருந்தது எனவரும் பகுதி சிறப்புடையதாகும் யாழும் குழலும் முழவும் இயைந்தென மாழைமான் நோக்கியும் ஆற்றாள்' இரவலரின் ஊர் அறி கெளவைதரும்.

**15.ஐந்திணை எழுபது**

ஆசிரியர் மூவாதியார் - இவரைச் சிலர் சமணர் என்பர். ஆனால் கடவுள் வாழ்த்துப்பாடல் விநாயகர் வணக்கம் கூறுகின்றது. எனவே இது பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இவரது காலம் 5-ஆம் நூற்றாண்டாதல் கூடும்.

ஒவ்வொரு திணைக்கும் 14 பாடல்கள் வீதம் ஐந்து திணைக்குமாக 70 வெண்பாக்கள் அமைந்துள்ளன. இதில் திணைகள் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற முறையில் வைக்கப்பட்டுள்ளன. இது அகப்பொருள் துறைகளை விளக்க எழுந்த சிறந்த நூலாகும். இதில் குறட்கருத்துக்களும் இடம் பெற்றிருக்கக் காணலாம்.

“செங்கதிர்ச் செல்வன் சினங்காத்த போழ்தினாற் பைங்கொடி முல்லை மணங்கமழ வண்டியிர் காரோடலமருங் கார்வானங் காண்டோறும் நீரோ டலம்வருங் கண்“ எனும் பாடல் பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியதாகும்.

**16. திணைமாலை நூற்றைம்பது**

ஆசிரியர் - தமிழாசிரியர் மானகாயனார் மாணாக்கர் கணியன் மேதாவி ஆவார், கணிமேதாவியார் என்றும் அழைக்கப்படுவார். இவரே ஏலாதி எனும் நூலும் இயற்றினார். இவரைச் சமணர் என்றும் கூறுவர். இந்நூலில் காணப்படும். அகச்சான்றினால் இவர் பாண்டிய வேந்தன் ஒருவன் எனத் தெரிகின்றது. காலம் கி.பி.5.ஆம் நூற்றாண்டு ஆகும்.

ஒவ்வொரு திணைக்கும் 30பாடல்கள் வீதம் 150 வெண்பாக்களையுடையது இந்நூல், அகத்திணைக் கருத்துக்கள் அமைந்த இப்பாடல்களில் வடசொற்களும் சில கலந்துவரக் காணலாம். இதில் திணைகள் குறிஞ்சி, நெய்தல், மருதம் என்ற முறையில் அமைந்துள்ளன. கீழ்க்கணக்கிலுள்ள அகப்பொருள் நூல்களில் இதுவே மிகவும் பெரியதாகும். பொருட்செறிவும், பா நயமும் இந்நூலில் சிறந்துள்ளன. இப்பாடல் கருத்துக்கள் சிலவற்றைச் சுந்தரர் தேவாரத்திலும், மணிவாசகப் பெருமானின் திருக்கோவையாரிலும் காண முடிகிறது. “இம்மையால் செய்ததை இம்மையே ஆம்போலும் உம்மையே ஆம் என்பார் ஓரார் காண்“ என்பதன் மூலம் இம்மையில் நாம் செய்த வினைப்பயன்கள் இம்மையிலேயே பயன் தரும் என்பதைக் கூறுகின்றார்.

**17.கைந்நிலை**

ஆசிரியர் புல்லங்காடனார். இதன் காலமும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டே ஆகும். இதில் 12 வெண்பாக்களால் 60 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதில் வடசொற்கள் பல கலந்து வந்துள்ளன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இடம் பெறுவது இன்னிலையா, கைந்நிலையா என்பது பற்றிக் கருத்து வேறுபாடு இருந்துவருகிறது.

இன்னிலை: ஆசிரியர் - பொய்கையார். இதனை மதுரை ஆசிரியர் பூதனார் தொகுத்தார். பாரதம் பாடிய பெருந்தேவனார் எட்டுத்தொகை நூல்களில் பலவற்றிற்குக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இயற்றிச் சேர்த்திருப்பது போல இதிலும் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இயற்றிச் சேர்த்துள்ளார். இந்நூல் அறப்பால், பொருட்பால், இன்பப்பால், வீட்டிலக்கப்பால் என 4 பால்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அறப்பாலில் பத்தும், பொருட்பாலில் ஒன்பதும். இன்பப்பாலில் 126-ம் வீட்டிலக்கப்பாலில் 144ம் ஆக 45 வெண்பாக்கள் இதில் அமைந்துள்ளன. வீட்டிலக்கப்பால் இல்லறவியல், துறவறவியல் என இரண்டு இயல்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நூலில் சிவபெருமானைப் பற்றிய குறிப்பு வருகிறது. இந்நூலில் நடையழகும் நயமும் பொருத்திய பாடல்களும் காணப்படுகின்றன. இது ஒரு நீதி நூல் .

**புறப்பொருள் நூல்**

**களவழி நாற்பது**

ஆசிரியர் “பொய்கையார்’ போர்க்களத்து நிகழ்ச்சிகளைப் பாடும் 40 வெண்பாக்களைக் கொண்டது. கீழ்க்கணக்கு நூல்களுள் புறம் பற்றிக்கூறும் நூல் இது ஒன்றே,

“ஏரோர்க் களவழி அன்றிக் களவழித் தேரோர் தோற்றிய வென்றியும்“ எனும் தொல்காப்பிய நூற்பா. ஏர்க்களம் பற்றியும், போர்க்களம் பற்றியும் பாடப் பெறுவது களவழி என்று தெரிவிக்கிறது. இதன்படி போர்க்களம் பாடியது இக்களவழி. இந்நூல் முழுவதும் யானைப்போர் பற்றியே அழகிய வீரக்கற்பனைகளைத் தருகிறது. இதுவே பிற்காலத்தில் பரணி போன்ற இலக்கியங்கள் உருவாகத் துணை நின்றது. இதில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் “ஆட்டகளத்து என்னும் சொல்லைக் கொண்டு முடிகின்றது. தொல்காப்பியர் கூறும் “அம்மை“ என்னும் வனப்பு அமைந்தது.

சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானுடன் கழுமலம் எனுமிடத்தில் போரிட்டுத் தோற்றபொழுது, சோழன் சேரனைச் சிறையிலிட்டான். அப்பொழுது புலவர் பொய்கையார், இக்களவழியைப்பாடிச் சேரனைச் சிறைமீட்டார். இதில் செங்கணான் போரில் பெற்ற வெற்றிச் சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

சேரனைப் பொய்கையார் சிறைமீட்ட செய்தியை நூலின் இறுதியில் காணப்பெறும் ஒரு குறிப்பும். கலிங்கத்துப் பரணி, மூவருலா, தமிழ்விடுதூது முதலிய நூல்களும் கூறுகின்றன.

இந்நூலில் படிப்பவர் தனக்குறும் வண்ணம் நால்வகைப் படைகளின் போர்த்திறமும், போர்க்கொடுமையும் திறம்ப வருணிக்கப்பட்டுள்ளன. கார்த்திகை விழாவை இவ்வாசிரியர் சிறப்பித்துப் பாடுகிறார். இந்நூலுள் உவமை நலன்களுடன் கூடிய பல பாடல்கள் உள்ளன. காட்டாக ஒன்று. உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்ப் பரிதி சுமந்தெழுந்த யானை - இருவிசும்பிற் செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற செங்கண்மால் புல்லாரை அட்டகளத்து.

**அருஞ்சொற் பொருள்:**

குறிஞ்சி நாடன் - குறிஞ்சி நிலத் தலைவன்

எற்றைக்கும் - எக்கலத்திற்கும்

யவணர் - கிரேக்கர்

கறி - மிளகு

புரவி - குதிரை

பரிசில் - பரிசு பொருள்

குழவி - குழந்தை

விருந்து - புதியது

ஞெண்டு - நண்டு

**தொகுப்புரை**

தமிழ் மொழியின் பழமையான வரலாற்றுக் காலமாக அறியப்படுவது சங்க காலம் ஆகும். சங்க கால மக்களின் வாழ்க்கை முறையை அறிந்துக்கொள்ள, அக்காலகட்ட நூல்களின் தொகுப்பாக அமைந்துள்ள எட்டுத் தொகையும் பத்தும் பாட்டும் உறுதுணைப் புரிகின்றன.

கி.பி. 2ம் நூற்றாண்டிற்கு பிந்தைய, கால புரிதலுக்கு சங்க மருவிய கால இலக்கியங்கள் துணைபுரிகின்றன. திருக்குறள் தவிர்த்த ஏனைய பதினேழு, இலக்கியங்களும் இடைக்காலமான சங்க மருவிய காலகட்டத்தில் தோன்றியவை. அவற்றை பதினெணக் கீழ்க்கணக்கு நூல்கள் என அழைப்பர்.

**பயிற்சி வினாக்கள்:**

1. எட்டுத்தொகைப் பாடல்களுள் அடி அளவால் சிறிய பாடல் எது? ஐங்குறு நூறு

2. ஐங்குறுநூறு பாடல்களின் அடி அளவு ? (3அடி சிற்றெல்லை,6அடி பேரெல்லை)

3. ஐங்குறுநூறுயாரால் தொகுக்கப்பட்டது? கூடலூர்கிழார்

4.ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவர் யார்? யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

5. ஐங்குறுநூற்றிலுள்ள பாடல்கள் எண்ணிக்கை எத்தனை? 500

6 ஐங்குறுநூற்றைப் பாடிய ஆசிரியர்கள் எத்தனை? 5 பேர்

7. குறுந்தொகைப் பாடல்களின் அடி அளவு எத்தனை? (4-8)45

8. குறுந்தொகைப் பாடல்கள் யாரால் தொகுக்கப்பட்டன? பூரிக்கோ

9. குறுந்தொகை பாடல்களின் எண்ணிக்கை எத்தனை? 401

10. எட்டுத்தொகை நூல்களுள் அகப் பொருளுரைக்கும் நூல்கள் எத்தனை? 5

11. எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் உரைக்கும் நூல்கள் எத்தனை? 2

12. எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் உரைக்கும் நூல்கள் எவை? (பதிற்றுப்பத்து,புறநானூறு)

13. நற்றிணையில் அமைந்துள்ள பாடல்கள் எத்தனை ? (400)

14. நற்றிணையின் அடிவரையறையினைக் கூறுக. (9-12)

15. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்? பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

16. நற்றிணைப் பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை ? (175)

17. கலித்தொகைப் பாடல்கள் எந்தப் பாவினால் அமைந்தவை? (கலிப்பாவினால்)

18. கலித்தொகைப் பாடல்களின் எண்ணிக்கை? (150)

19. கலித்தொகைப் பாடல்களைத் தொகுத்தவர் யார்? (நல்லந்துவனார்)

20. கலித்தொகைப் பாடல்களைப் பாடியோர் எத்தனை பேர்? (5பேர்)

21. பாலைக்கலி பாடியவர் யார்? (பெருங்கடுங்கோன்)

22. பாலைக்கலிப் பாடல்கள் எத்தனை ? (35)

23. குறிஞ்சிக்கலி பாடிய புலவர் யார்? (கபிலர்)

24. குறிஞ்சிக்கலி பாடல்களின் எண்ணிக்கை? (29)

25. மருதக்கலி பாடியவர் யார்? (மருதனிளநாகனார்)

26. மருதக்கலி பாடல்களின் எண்ணிக்கை? (35)

27. முல்லைக்கலியின் ஆசிரியர் யார்? (நல்லுருத்திரன்)

28. முல்லைக்கலி பாடல்களின் எண்ணிக்கை? (17)

29. நெய்தற்கலியின் ஆசிரியர் யார்? (நல்லந்துவனார்)

30. நெய்தற்கலிப் பாடல்களின் எண்ணிக்கை? (33)

31. அகநானூற்றுப் பாடல்களைத் தொகுத்தவர் யார்? உருத்திரசன்மன்

32. அகநானூற்றுப் பாடல்களைத் தொகுப்பித்தவன் ? பாண்டியன் உக்கிரப்பெருவழுதி

33.அகதானூற்றுப் பாடல்கள் எத்தனை பிரிவுகளாகம் பிரிக்கப்பட்டுள்ளன? அவையாவை?

13 பிரிவுகள் 1. களிற்று யானை திரை 2. மணியி பவளம்.3. நித்திலக்கோவை

34. அகநானூற்றில் ஒற்றை எண்ணால் அமைந்தபாடல்கள் எந்த திணைக்குரியன? (பாலைத்திணை) 6,16,36-28, 47

35. அகநானூற்றில் முல்லைத்திணைக்குரிய பாடல்கள் எந்த எண்ணால் அமைந்தவை?

4,14,24

36. நெடுந்தொகை - என்பது எந்த நூலைக் குறிக்கும்? (அகநானூறு)

37. எட்டுத்தொகையுள் சேர அரசர்கள் பற்றிச் சிறப்பித்துக் கூறும் நூல்? (பதிற்றுப்பத்து)

38. பதிற்றுப் பத்தில் அந்தாதித் தொடையால் அமைந்துள்ள பத்து எது? (நான்காம் பத்து)

39. பதிற்றுப்பத்துப் பாடல்கள் எந்தத் திணையில் அமைந்துள்ளன? (பாடாண் திணை)

40. பரிபாடலில் திருமாலுக்குரிய பாக்கள் எத்தனை? (8)

41. பரிபாடலில் இடம்பெற்றுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்கள்? முருகனுக்கும், காளிக்கும், எவ்வளவு முருகனுக்கு-31, காளிக்கு-1

42. பரிபாடலில் மொத்தம் எத்தனை பாக்கள்? (70) அவற்றுள் நமக்குக் கிடைத்துள்ள பாடல்கள் எவ்வளவு? (22)

43. எட்டுத்தொகை நூல்கள் பற்றிக் கட்டுரை வரைக.

44. குறிஞ்சிப்பாட்டு யாரால் பாடப்பட்டது? (கபிலர்)

45 குறிஞ்சிப்பாட்டு பாடக் காரணம் என்ன? (ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழறிவிப்பதற்காகப் பாடப்பட்டது)

46 குறிஞ்சிப்பாட்டு எந்தப்பாவால் ஆகியது? இதில் எத்தனை அடிகள் உள்ளன? (ஆசிரியப்பாவால்: 261 அடிகள்)

47. குறிஞ்சிப்பாட்டில் எத்தனை மலர்கள் கூறப்பட்டுள்ளன? (99)

48. பத்துப்பாட்டில் மிகக்குறைந்த அடிகளையுடைய நூல் எது? (முல்லைபாட்டு) அதன் ஆசிரியர் யார்? (நப்பூதனார்)

49 முல்லைப்பாட்டு எந்தப் பாவால் ஆனது? , எத்தனை அடிகள் உள்ளன? (நேரிசை ஆசிரியப்பா, 103 அடிகள்)

50. முல்லைப் பாட்டுக்குரிய மற்றொரு பெயர் என்ன? (நெஞ்சாற்றுப்படை)

51. நெஞ்சாற்றுபடை என்பது எந்த நூலைக் குறிக்கும்? (முல்லைப்பாட்டு)

52. பட்டினப்பாலையின் ஆசிரியர் யார்? பாட்டுடைத் தலைவன் யார்? (கடியலூர் உருத்திரங் கண்ணனார்: சோழன் கரிகால் பெருவளத்தான்)

53. பட்டினப்பாலை ஆசிரியர் பெற்ற பரிசுப் பொருட்கள் என்ன? (பதினாறு நூறாயிரம்பொன்)

54. பட்டினப்பாலை எத்தனை அடிகளால் ஆகிய நூல்? எந்தப் பாவினால் இயற்றப்பட்டுள்ளது? (301 அடிகள் ஆசிரியப்பா)

55. நெடுநல்வாடையின் ஆசிரியர் யார்? பாட்டுடைத் தலைவன் யார்? (நக்கீரனார்: தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்)

56. நெடுநல்வாடை எத்தனை அடிகளால், எந்தப் பாவால் ஆனது? (188வரிகள்: நேரிசை ஆசிரியப்பா)

57. பத்துப்பாட்டில் மிகப்பெரிய நூல் எது? அதில் எத்தனை வரிகள் உள்ளன? (மதுரைக் காஞ்சி : 782 வரிகள்)

58. மதுரைக் காஞ்சி பாடக் காரணம் என்ன? (உலக நிலையாமையாகிய காஞ்சித் திணையை மன்னனுக்கு விரித்துக் கூறல்)

59. மதுரைக்காஞ்சி யாரால், யாருக்குப் பாடப்பட்டது? (மாங்குடி மருதநாரால், பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு)

60. பத்துப் பாட்டு நூல்கள் பற்றிக் கட்டுரை வரைக,

# அலகு 2

**பக்தி இயக்கம் - அறிமுகம்**

**பல்லவர் காலம்-(கி.பி.600-650)**

பக்தி இலக்கிய காலம் சமய மறுமலர்ச்சிக்காலம், சைவ இலக்கியங்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். மாணிக்கவாசகர் வைணவ இலக்கியங்கள் - பொய்கையாழ்வார்- பூகத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் நம்மாழ்வார் - மதுரகவியாழ்வார் - திருமங்கையாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் - பாரத வெண்பா, திருப்பாணாழ்வார், குலசேகர ஆழ்வார் திருக்கயிலாய ஞான உலா.

**முன்னுரை**

சங்கம் மருவிய காலத்தில் களப்பிரர் என்ற அயலவர் தமிழகத்தில் நுழைந்து ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்களது ஆதிக்கத்தில் வேதகால முதல் விளங்கிவந்ததான சைவ வைணவ சமயங்கள் செல்வாக்கிழந்தன. புறசமயத்தினரான செல்வாக்குப் பெற்றனர், இதனால் பௌத்தர்கள் செல்வாக்குப் இலக்கியத்துறையிலும் தேக்கம் ஏற்பட்டது. தமிழ் இருப்பினும் இக்காலத்திலும் சில சிறப்புமிக்க நூல்கள் தோன்றாமலில்லை. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பலநூல்கள் இவ்விருண்ட காலத்துத் தோன்றிய நூல்களே. தவிர காரைக்கால் அம்மையார், திருமூலர் போன்ற சைவப் பெரியார்களும் இக்காலத்தில் வாழ்ந்தவர்களாகக் குறிக்கப்படுகின்றனர். முத்தொள்ளாயிரம், பெருங்கதை போன்ற சிறந்த இலக்கியங்களும் கூட இக்காலத்து நூல்களாகக் கருதப்படுகின்றன.

கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர் தம் அரசியல் செல்வாக்கை இழந்தனர். தெற்கே கூன்பாண்டியன் என்ற பாண்டிய அரசன் களப்பிரரை வென்று ஆட்சியைக் கைப்பற்றினான் வடக்கே பல்லவர் ஆட்சி செல்வாக்குப் பெற்று வளர்ந்தது. இவர்கள் தொண்டைமண்டலம் உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றி நல்லதோர் ஆட்சியை நிறுவினர். இவ்விருவரும் களப்பிரரை வீழ்த்தினரே தவிர சமண சமயத்தை அழிக்கவில்லை. மாறாக சமணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினர் என்றே கூறலாம். கி.பி. ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளில் புத்தசமயம் பொலிவிழந்து போக இங்குமங்குமாகச் சில பௌத்த சங்கங்களே செயல்பட்டன. ஆனால் சமணசமயமோ சங்ககாலத்தில் நுழைந்து, களப்பிரர் காலத்தில் காலூன்றிப் பல்லவர் காலத்தில் ஆட்சிப்பீடத்தை கைப்பற்றிவிட்டது. ஆறாம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரை சமணசமயமே செல்வாக்குப் பெற்றிருந்தது. சமணத்தின் ஆதிக்கத்தால் வடமொழியே உயர்நிலை பெற்றுத் திகழ்ந்தது. ஆட்சிபீடத்திலிருந்த அரசர்களும் சிறந்த

வடமொழிப்புலமை பெற்றுத் திகழ்ந்தனர். முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் 'மத்த விலாசப் பிரகானம்' எனும் நூலை எழுதுமளவிற்கு வடமொழிப் புலமை பெற்றுத் திகழ்ந்தான். ஏழாம் நூற்றாண்டில் மாபெரும் சமயப்புரட்சி தோன்றியது. பிறமொழி பிறசமயங்கள் ஒடுக்கப்பட்டன. இப்பெரும் புரட்சிக்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர்கள் சைவ, வைணவப் பெரியார்களே. இப்பெரியோர்கள் அரியும், அரனும் எழுந்தருளியுள்ள ஆலயங்கள் தோறும் சென்று சமய உணர்வூட்டும் பக்திப்பாடல்களைப் பாடி சமய எழுச்சியோடு தமிழுணர்ச்சியும் ஊட்டினர். சைவம் தழைக்க மூலமாய் நின்றவர்கள் சைவசமயக்குரவர் எனப் போற்றப்படும் அப்பர், சுந்தரர், ஞான சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருமே ஆவர். இவர்கள் பிறந்திலரேல் சைவசமயம் சிதைநது ஒழிந்திருக்கும் என்பதைப் பின்வரும் பாடல் தெளிவுறுத்தும். "சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ் சிற்கோல வாதவூர்த் தேசிகரும் - முற்கோலி வந்திலரேல் நீறெங்கே மாமறை நூலெங்கே எந்தை பிரானஞ் செழுத்தெங்கே". இவ்வடியவர்கள் பாடிய பக்திப் பனுவல்கள் தேவாரம் திருவாசகம், திவ்யப்பிரபந்தம் எனும் திருப்பெயர் பெற்றன. இவை (உலகின் எந்தமொழியிலும் காணப்படாத அளவு உணர்வாலும், அளவாலும் தமிழில் சிறந்து விளங்குகின்றன.

இப்பக்தி இயக்கத்தால் தமிழில் புதுப்பொலிவு ஏற்பட்டது. இயல் தமிழ்ப்பாக்கள், பண்ணோடு இயைந்து இசைத்தமிழ்ப் பாக்களாக மாறின கற்றோர் நாவில் மாத்திரம் நின்ற தமிழ், இசையோடு இணைந்ததால் கல்லார் நெஞ்சிலும் நிறைந்தது. வடமொழிச் சொற்களும் தமிழுடன் இணைந்து புதிய மரபினைத் தோற்றுவித்துத் தமிழை எளிமையாக்கியது, (சொல்வளமும், உணர்ச்சிப்பெருக்கும். இசை இனிமையும் நடை எளிமையும் சேர்ந்து தமிழ் புதுமெருகு பெற்றது. எனவே பல்லவர் ஆட்சிக்காலம் "பக்தி இயக்க இயக்க காலம்" எனப்படுகிறது. இதனைச் 'சமயமறுமலர்ச்சிக் காலம்' என்றும் கூறுவர்.

**சைவப்பெரியார்கள்**

**திருஞான சம்பந்தர்**

இவர் சோழ நாட்டில் சீர்காழியில் பிறந்தார். சிவபாத இருதயர், பகவதியார் என்ற அந்தணகுலப் பெற்றோரின் தவப்புதல்வனாகத் தோன்றிய இவர், பால்மணம்மாறாப் பச்சிளம் பருவத்திலேயே மூன்றாம் ஆண்டிலேயே சீர்காழிக் குளக்கரையில் உமை அளித்த ஞானப் பாலைப்பருகி, இறைதரிசனம் பெற்றுத் தோடுடைய செவியன் எனத்தொடங்கும் திருப்பாடலைப் பாடினார். இவர் 'ஆளுடைய பிள்ளை' என்றும், 'காழிவள்ளல்' என்றும் வழங்கப்பட்டார்.

இவர் பாடிய பதினாறாயிரம் பதிகங்களுள் 384 பதிகங்களே இன்று கிடைத்துள்ளன. இவை 23 பண்ணடைவுகளை உடையன என்பர். இவ்வாறு பண்ணடைவுகளோடு கூடிய பாடல்களைப் மயால் இவர் “நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்“ என்று பாராட்டப்பட்டார்.

சம்பந்தரின் காலத்தில் கூன்பாண்டியன் எனும் மன்னன் சமணத்தைப் பெரிதும் போற்றிவந்தான். இதனால் வருந்திய இவரது மனைவியார் மங்கையர்க்கரசி, அமைச்சர் குலச்சிறையார் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க, சம்பந்தர் பாண்டிநாடு போந்து சமணர்களால் தீர்க்கமுடியாது போன வெப்பு நோயால் வாடிய மன்னனின் துயரை’ “மந்திரமாவது நீறு - எனும் பாடல்பாடி, திருநீறணிவித்துத் தீர்த்தருளினார். அன்று முதல் கூன்பாண்டியன் ‘நின்றசீர் நெடுமாறன்’ என்று அறியப்பட்டான். மேலும் சமணர்களுடன் அனல்வாதம், புனல்வாதம் புரிந்து.

வென்று அவர்களை நாட்டைவிட்டே விரட்டினார். இதனால் சேக்கிழாரும் இவரைத் தன் புராணத்தில் “வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க“ - இவர் தோன்றினார் என்று பாராட்டி உரைப்பர். ஆதிசங்கரரும் தனது சௌந்தரியலகரியில் இவரைத் “திராவிடசிசு“ என்று குறிப்பிடுகின்றார்.

பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க தனது 16ஆம் வயதில் திருநல்லூர் நம்பாண்டர் மகள் சொக்கியாரை மணம் முடிக்கச் சம்மதித்தார். திருப்பெருமணநல்லூரில் திருமணத்திற்கு முன் ஒரு பதிகம் பாடி, திருமணக்கோலத்துடன் சுற்றம் சூழ இறை ஒளியில் கலந்துவிட்டார்.

சேக்கிழாரின் பெரியபுராணத்தில் சம்பந்தரின் வரலாறு மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய நூலின் பாதிப்பகுதிக்கு சம்பந்தர் வரலாறு இடம் பெறுவதால் “பிள்ளைபாதி புராணம்பாதி“ என்ற பழமொழியும் வழக்கில் எழுந்தது. சம்பந்தர் பாடிய பதிகங்களைத் தேவாரம் என்ற திருப்பெயருடன் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுத்துள்ளனர். இப்பொழுது சம்பந்தர் பாடல்களாக ஏறத்தாழ 4181 பாடல்கள் கிடைத்துள்ளன.

சம்பந்தர் ஏறக்குறைய 220 பதிகளுக்குச் சென்று வழிபாடு செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது. சிறு பிள்ளையான இவர் பல தலங்களுக்கும் தந்தையின் தோள் மீது அமர்ந்தும், கால்கடுக்க நடந்தும் சென்றது கண்டுமனம் பொறுக்காத இறைவன் இவருக்கு முத்துப்பல்லக்கும், முத்துப் பந்தரும் தந்தருளியதாகவும்’ பண்ணிசைக்கும் பொழுது கைத்தாள மிடுவதால் கைகள் சிவந்து நோவது கண்டு, நமச்சிவாய எனும் திருமந்திரம் பதித்த பொற்றாளம் நல்கியதாகவும் கூறப்படுகிறது. இவர் முருகனின் அவதாரமாகவே கருதப்படுகின்றார். திருநாவுக்கரசர், திருநீலகண்டயாழ்ப்பாணர், முருக

நாயனார் சிறுத்தொண்டர் முதலிய அடியவர்களோடு அளவளாவி, மகிழ்ந்தவர். இவரது பாடல்களில் இயற்கை வருணனைசிறந்து விளங்கக் காணலாம்.

"தலையவிழ் கமலத் தவிசின் மேல் அன்னம்

தன்னிளம் பெடையொடும் புல்கி

விளைகதிர்க்கவரிவீச வீற்றிருக்கும்

மிழலையான் எனவினை கெடுமே" எனும் பாடலில் இயற்கை அழகினைக் கண்டு களிக்கலாம். சில பாடல்களில் தத்துவக் கருத்துக்களும் இடம் பெறுவதுண்டு.

"வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல

வீணைதடவி மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்

உளமே புகுந்தவதனால் ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்

வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே

ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியாரவர்க்கு மிகவே"

எனவரும் பதிகம், நல்லவர்க்கில்லை நாளும் கோளும் எனும் கருத்தை வலியுறுத்துகின்றது. இப்பதிகத்தை ஓதுவார்க்கும் "கிரக நிலை ஏதும் செய்யாது" என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது. இவரது பாடல்களில், இறைவனாய தலைவனிடத்தில் காதல் கொண்ட தலைவி கிளியைத் தூதனுப்பும் அகத்துறைப் பகுதியையும் காணலாம்-

"சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடு பால்

முறையாலே உண்ணத்தருவன் மொய்பவளத்தொடு தரளம்

துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்

பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே!

சம்பந்தர் சத்புத்ர மார்க்கத்தால் இறைவனை வழிபட்டார்.

**திருநாவுக்கரசர்:**

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில், வேளாளர் மரபில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகனாகப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மருள்

நீக்கியார். இளமையிலேயே பெற்றோரை இழந்து தமக்கை திலகவதியால் வளர்க்கப்பட்டுவந்தார்.

சமணர்களது சூழ்ச்சியால் சமண சமயத்தில் சேர்ந்து, சமண சமய நூல்களை எல்லாம் கற்றுத் தேர்ந்து "தருமசேனர்" என்ற பெயருடன் வாழ்ந்து வந்தார். தன் சகோதரன் வழிதவறிச் செல்வாரைக்கண்டு வருந்திய திலகவதியார் தன் தம்பியை எவ்வாறாயினும் மீண்டும் சைவத்தில் சேர்க்க வேண்டும் எனச் சிவபெருமானிடம் மன்றாடி நோன்பு பூண்டிருந்தாள். அவ்வமயம் சிவபெருமானின் திருவருளால் சூலைநோய் எனும் வயிற்றுவலி உண்டாக, சமணர்களும் தம்மால் இயன்றவரை முயன்னும் அந்நோய் குறையாது, மேலும் வருத்தியது. துன்பம் தாளாத தருமசேனர், தமக்கையைத் தேடி ஓடிவர, திலகவதியாரும் அவரை அன்புடன் அழைத்துச் சென்று திருவதிகைப் பெருமானை வணங்கித் திருநீறு அணிவித்தார். பின் வீரட்டானேசுவரம் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கிப் பதிகம் பாட நோய் தீர்ந்து நலம் பெற்றார் அவ்வமயம் அவர் பாடிய முதற்பதிகம்

"கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமை பல செய்தன நான் அறியேன் ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும் தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட கற்றேன் அடியேன் அதிகைக்கெடில வீரட்டானத்துறை அம்மானே" என்பதாகும்.

தருமசேனர் சைவரானது கேட்டு வெகுண்ட சமணர்கள் மன்னன் மகேந்திர பல்லவனிடத்துச் சொல்ல சீற்றம் கொண்ட மன்னன் அமைச்சரை அனுப்பி நாவுக்கரசரை அழைத்துவரச் சொன்னான். ஆனால் அப்பரோ

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்

நரகத்தில் இடர்ப்போம் நடலை இல்லோம்

ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்

இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

என்று கூறி அமைச்சருடன் வர மறுத்துவிட்டார். பின்பு அரசனால் இழுத்துச் செல்லப்பட்டுச் சுண்ணாம்புக் காளவாயிலிட்டும், கல்லில் கட்டிக் கடலில் விட்டும் பல துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டார். ஆனால் அனைத்துத் துன்பங்களையும் ஐந்தெழுத்து மந்திரத்தின் உதவியால் வென்று நின்றார். ஈசன் எந்தை இணையடி நிழலை நினைந்திருந்ததால் கொதிக்கும் சுண்ணாம்புக் காளவாயும் அவருக்கு "மாசில் வீணையும் மாலை மதியமும் வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசுவண்டறை பொய்கையும் போன்றிருந்ததாம்" இவரது மனஉறுதியையும், சிவநெறி சக்தியையும்

கண்டு மன்னன் மனம்மாறி, மதம் மாறியதாகக் கூறப்படுகின்றது. மனம் மாறிய மன்னன் சைவத்தைத் தழுவி நாடுமுழுவதும் சைவம் தழைக்கப் பாடுபட்டான். அன்று முதல் நாவுக்கரசர் சிவத்தலங்கள் தோறும் சென்று "பாவுற்றலர் செந்தமிழ்ப் பதிகத் தொடை பாடிய பான்மையினால்" இறைவனாலேயே நாவுக்கரசர் என்றழைக்கப்பட்ட சிறப்பினைப் பெற்றார். வயதில் முதிர்ந்து காணப்பட்ட இவரைக் குழந்தையாயிருந்த ஞானசம்பந்தர் கண்டு "அப்பரே" என்று அழைத்தமையால் "அப்பர்" எனும் திருநாமமும் பெற்றார்.

"என்கடன் பணி செய்துகிடப்பதே" எனும் பரந்த நோக்கத்துடன் கையில் உழவாரப்படை ஏந்தி, பாழடைந்த கோயில்களைச் செப்பனிட்டும், துப்புரவு செய்தும் மனம், வாக்கு, காயம் ஆகிய முந்நிலைகளாலும் இறைப்பணி செய்து வந்தார். இவர் திருஞான சம்பந்தர், சிறுத்தொண்டர், அப்பூதியடிகள் ஆகிய நாயன்மார் காலத்தவர். எண்பத்தோராண்டுகள் வாழ்ந்த இவர் 4900 பதிகங்கள் பாடியுள்ளதாகக் கூறுவர். ஆனால் இன்று 313 பதிகங்களே கிடைத்துள்ளன. இவர் பாடிய பாடல்களும் தேவாரம் எனும் திருப்பெயருடன் 4,5,6 ஆம் திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. இவர் 'ஆளுடை அரசு' என்றும், 'வாகீசர்' என்றும் அழைக்கப்பட்டார். தாண்டகம் பாடுவதில் சிறந்து விளங்கிய காரணத்தால் 'தாண்டகவேந்தர்' என்றும் அறியப்பட்டார். வாழ்க்கையில் என்றும் பல துன்பங்கள் பட்டு, அனுபவமுதிர்ச்சி பெற்ற இவர் தவ வாழ்வும், வீரவாழ்வும் வாழ்ந்தார்.

பிறப்பறுக்கும்படி பக்தர்கள் எல்லாம் பரமனைப் பாடித் துதித்திருக்க, அப்பர் பெருமானோ மனிதப் பிறவி வேண்டும் என்று வேண்டி நிற்கிறார். ஆம் இறைவனின் திரு நடனக் கோலத்தைக் காணும் பேறு கிட்டுமாயின் மனிதப் பிறவியும் வேண்டும் என்று மனிதப் பிறவிக்குப் புனிதம் ஏற்றிய பெருமையைக்

"குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற்குமிண் சிரிப்பும்

பனித்த சடையும் பவளம் போல்மேனியிற் பால்வெண்ணீறும்

இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்

மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே"

எனும் பாடலில் காணலாம். சங்ககால அகத்துறைகள் போலக் காதலுணர்வுடன் கூடி உள்ளத்தைத் தொடும் பாடல்களையும் அப்பரது படைப்பில் காணலாம். அகப் பொருள் தழுவி அமைந்துள்ள திருவாரூர்ப் பதிகம் இவரது பாடல்களில் மணிமுடியாய்த் திகழக் காணலாம். தலைமைசான்றதாய், முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள் பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள் பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள் அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் அகன்றாள்

அகவிடத்தார் ஆசாரத்தைத் தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

முச்சங்கம் இருந்ததா இல்லையா என்று ஆய்வு செய்பவர்களுக்கு இவர் தனது திருப்பத்தூர்த் தேவாரத்தில்- "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி தருமிக்கருளினோன் காண்" எனக் குறிப்பிட்டுள்ள அடிகள் சங்கமிருந்ததற்கு ஆதாரமாக இருந்து உதவுகின்றன. இவர் இறைவனை தாசமார்க்கத்தில் வழிபட்டு வந்தார்.

**சுந்தரர்:-**

திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலுரில் அந்தணர் மரபில் பிறந்தார். தந்தையார் சடையனார், தாயார் இசைஞானியார். இவரது இயற் பெயர் "நம்பி ஆரூரர்". இவரது இளமை எழிலில் மயங்கிய அரசன் நரசிங்க முனையரையன். இவரைத்தன் சுவிகாரப் பிள்ளையாக எடுத்து வளர்த்தான்.

கயிலையில் சிவபெருமானின் அணுக்கத் தொண்டராக விளங்கிய ஆலாலசுந்தரரே இந்த நம்பி ஆரூரர் ஆவர். கயிலையில் உமையின் தோழிகளான கமலினி, அனிந்திதை என்பாரைக் கண்டு மனம் மயங்கியதால், பூவுலகில் பிறந்து அவர்களை மணந்து இல்லறம் நடத்தி பின் கயிலை வந்தடையுமாறு இறைவனால் பூவுலகு அனுப்பப்பட்டார். அப்பொழுது, பிறமாதரை மணக்க நேரின் தன்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். இவர் பாடியப் பதிகங்கள் 38000 கிடைப்பன 100 பதிகங்கள். 'தாண்டக வேந்தர்', 'வன்தொண்டர்' என அழைக்கப்படுகின்றார். இவர் இயற்றிய திருத்தொண்டர் தொகையே நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதிக்கும், சேக்கிழார் பெரியபுராணத்திற்கும் மூலமாக திகழ்கின்றது.

"கொடுக்கிலா தானைப் பாரியே என்று

கூறினுங் கொடுப்பார் இல்லை

பொடிக்கொள் மேனிஎம் புண்ணியன்புக

லூரைப் பாடுமின் புலவீர்காள்

அடுக்குமேலமா உலகம் ஆள்வதற்கு

யாதும் ஐயுறவில்லையே" என்று வரும் பாடலில் கருமிகளை பாடிக் காலத்தை வீணாக்குவதிலும். கண்ணுதலானைப் பாடிப்பயன் பெறுங்கள் என்று கூறுவதுடன். இதில் சங்க கால வள்ளல் பாரி பற்றிய குறிப்பும் காணப்படுகின்றது. இவரது பாடல்களில் இயற்கை வனப்பும் இழையோடக் காணலாம்.

“அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில் சூழலியலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே!

மேலும் இவர் பாடல்களில் கோயிற் பண்டாரங்கள். இசை நடனக் கலைகளின் வளர்ச்சி முதலியன பற்றிய குறிப்புகளும் வரலாற்றுச் செய்திகளும், நாடுநகர் பற்றிய குறிப்புகளும் விரவிவரக் காணலாம். இவரது காலம் கி.பி. 7,8ஆம் நூற்றாண்டெனக் கூறப்படுகின்றது. இவர் இறைவனை சகமார்க்கத்தில்-தோழனாகபாவித்து பாடியுள்ளார். இறுதியில் சேரமான் பெருமாள் நாயனாரோடு வெள்ளை யானையில் ஏறிக் கயிலை அடைந்ததாகக் கூறப்படுகின்றது.

**மாணிக்கவாசகர்**:

பாண்டியநாட்டுத் திருவாதவூரில் சைவ அந்தண குலத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவரது ஊர்ப்பெயரால் “திருவாதவூரர்“ என்றே அழைக்கப் பட்டார். இதுவே இவரது இயற்பெயராக வழங்கப்படுகிறது. அறிவாற்றலில் சிறந்து விளங்கிய இவர் அரிமர்த்தனப் பாண்டியனிடம் அமைச்சராக இருந்தார். அவ்வமயம் மன்னனால் தென்னவன் பிரம்மராயன்“ எனும் பட்டமளித்துப் பாராட்டப்பெற்றார். மன்னனுக்காகக் குதிரை வாங்கவேண்டி நிறையப் பொன்னுடன் கீழைக்கரைக்குச் சென்றபோது வழியில் குருந்தமரத்தடியில் உபதேசம் இறைவன் செய்யும் திருப்பெருந்துறையில், வாய்ப்பினைப் பெற்றார். ஞானோபதேசம் பெற்றதும், ஞானசிரியனாய் வெளிப்பட்டு தன் நிலை மறந்து வந்த வேலையை மறந்து, கொண்டுவந்த பொன்னை எல்லாம் இறைப்பணியில் செலவிட்டுவிட்டார். இதனை அறிந்த மன்னன் இவரைச் சிறையிலிட்டுத் துன்புறுத்தார். இறைவன் தன் அடியவனைக் காத்தற் பொருட்டு நரியைப் பரியாக்கியும், வைகையில் வெள்ளப் பெருக்கினை உண்டாக்கிப் பிட்டுக்கு மண்சுமந்தும், பிரம்படிபட்டும் திருவிளையாடல்கள் புரிந்தார். இதனால் மாணிக்கவாசகரின் பெருமையை மன்னனும் மக்களும் உணர்ந்தனர். அதன்பின் மாணிக்கவாசகர் சிறையில் இருந்தும், அமைச்சர் பதவியில் இருந்தும் விடுதலை பெற்றுச் சமயத்தொண்டில் முழுமூச்சாக ஈடுபட்டார். இவர் பாடிய பாடல்களின் தொகுப்பு “திருவாசகம்“ எனும் பெயர் பெற்றது. இதில் ‘சிவபுராணம்’ முதல் ‘அச்சோப்பதிகம்’ ஈறாக 659 பாடல்களாக 51 தலைப்புகளில் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதன் கருத்துக்கள் கற்போரின் ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் சிறப்பு நோக்கி “திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்“ என்னும் பழமொழி வழங்கப்படுவதாயிற்று. திருவாசகத்தின் ஈர்க்கப்பட்ட இராமலிங்க அடிகளார்,

சிறப்பினால் “வான் கலந்தமாணிக்கவாசகநின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித தீஞ்சுவை கலந்து என் ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே என்றும், துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் “வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம் திருவாசகமிங் கொருகாலோதின் கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள் தொடுமணற்கேணியில் சுரந்துநீர்பாய மெய்ம்மயிர் பொடிப்பவிதிர் விதிர்ப்பெய்தி அன்பர் ஆகுநர் அன்றி மன்பதை உலகின் மற்றையர் இலரே என்றும் போற்றியுரைக்கக் காணலாம். அயல் நாட்டிலிருந்து வந்த டாக்டர். ஜி.யு. போப் அவர்களும் திருவாசகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அதனை ஆங்கிலத்தில் பாங்குற மொழிபெயர்த்துள்ளார்.

இவரது பாடல்களில் நாட்டுப் பாடல் சிறப்பினையும் காணலாம். திருச்சதகம். திருப்பள்ளியெழுச்சி, உந்தி. திருத்தெள்ளேனம், திருப்பொற் சுண்ணம் ஆகிய பாடல்கள் மக்களின் உள்ளங்கவர்ந்த சமுதாயப் பாடல்களாகும் போற்றித் திரு அகவல் நல்ல அருச்சனைப் பாட்டாய் அமைந்துள்ளது. திருச்சதகப் பாடல்கள் உள்ளத்தில் தோய்ந்து வெளிப்பட்ட அனுபவ வெளிப்பாடுகள். திருவெம்பாவை, திருவம்மானை, திருக்கோத்தும்பி. திருச்சாழல், திருத்தோள் நோக்கம் போன்றவை மகளிரின் ஆடலுடன்கூடிய பாடல்களாகிய வாய்மொழி இலக்கியத்தை அடிப்படையாகக்கொண்டன.

ஆண்டாள் கண்ணனைக் கணவனாக விளித்துப் பாவை பாடியது போல் மணிவாசகரும் சிவபெருமானைத் தலைவனாகக் கொண்டு 20 பாடல்களைக் கொண்ட திருவெம்பாவை பாடியுள்ளார். இவ்விரு பாவை நூல்களும் தமிழகத்தில் மட்டுமின்றி கடல் கடந்து சயாம் போன்ற நாடுகளிலும் இன்றும் மக்களிடையே வழங்கி வருகின்றன. தமிழறியாதவரும் இதனை மந்திரம்போல் மனப்பாடம் செய்து ஓதி வருகின்றனர்.

திருவெம்பாவையில் மனம் பறிகொடுத்த இறைவன் பாவை பாடிய வாயால் கோவை பாடுக என்று வேண்டியதற்கு இணங்க. கட்டளைக் கலித்துறையாலாகிய 400 பாக்களைக் கொண்ட திருக்கோவையார் பாடினார். இவரது திருவாசகமும். திருக்கோவையாரும் 8ஆம் திருமுறையாகச் சேர்க்கப் பட்டுள்ளன.

சிவபெருமானே மனிதவடிவில் வந்து திருவாசகம் முழுவதையும் எழுதியதாகக் கூறப்படுகின்றது.. இவரது திருக்கோவையார் கோவை நூல்களிலேயே சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இதனைத் ‘திருச்சிற்றம்பலக்கோவையார்“ எனவும் வழங்குவர். அகத்திணைச் சிற்றிலக்கியமாகிய இதுவே, கோவை நூல்களுள் காலத்தால் முற்பட்டது. திருக்கோவையார் செந்தமிழுக்குப் பெருமை சேர்ப்பதில் தொல்காப்பியத்தையும், திருக்குறளையும் ஒத்துவிளங்குகிறது என்பதைப் ”பல்கால் பழகினும் தெரியா உளவேல் தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார் மூன்றிலும்

முழங்கும்” எனவரும் இலக்கணக் கொத்துப் பாடல் விளக்கும். இது அவரவர் மனநிலைக்கும் தகுதிக்கும் ஏற்பத் திகழும் தன்மைத்து என்பதை - அந்தணர் - இதனை ஆரணம் (வேதம்) என்றும், யோகியர் - ”ஆகமத்தின் காரணம் என்றும், காமுகர்“ காமநன்னூல் “என்றும் பாராட்டுவர் எனப்படுவதனால் அறியலாம். இவர் இறைவனை சன்மார்க்க நெறியில் பாடி வழிபட்டுள்ளார்.

**வைணவ இலக்கியங்கள்**

சைவத்தைத் தழைக்கச் செய்தவர்கள் சமயக் குரவர்கள் என்றும், நாயன்மார்கள் என்றும் அழைக்கப்பட்டனர். வைணவத்தைத் தழைக்கச் செய்தவர்கள் ஆழ்வார்கள் என்றும் ஆசாரியர்கள் என்றும் அறியப்பட்டனர். திருமாலின் கல்யாண குணங்களில் ஈடுபட்டு ஆழ்ந்து கிடந்தவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். இவர்களுக்குப் பின் தோன்றி இவர்களது சொல்லையும், செயலையும் பின்பற்றி வைணவத்தை வளர்த்தவர்கள் ஆசார்யர்கள் எனப்பட்டனர்.

ஆழ்வார்கள் மொத்தம் பன்னிருவர் என்று கூறப்படுகின்றனர். இவ்வாழ்வார்கள் பாடிவைத்த பாடல்களைச் சோழர் காலத்தில் நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் என்னும் தொகைநூலாகத் தொகுத்தனர். இப்பணியைச் செய்து முடித்தவர் நாதமுனிகள் ஆவர்.

ஆழ்வார்கள் பன்னிருவருள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் காலத்தால் முற்பட்டமையால் முதலாழ்வார்கள் என்றழைக்கப் படுகின்றனர். இம்மூவரும் சமகாலத்தில் வாழ்ந்தவராவர்.

**பொய்கையாழ்வார்.**

இவர் திருமாலின் திருசங்கான பாஞ்சசன்னியத்தின் அவதாரம் என்பர். காஞ்சிபுரத்தில் பொய்கை ஒன்றில் தாமரை மலரில் அவதரித்ததாகக் கூறுவர். அவர் பொய்கையில் அவதரித்ததால் பொய்கையார் எனப்பட்டார். திருக்கோவிலூரில் ஓர் இல்லத்தின் இடைக்கழியில் மழைக்காக ஒதுங்கிய பொய்கையாருடன், பூதத்தாழ்வாரும், பேயாழ்வாரும் உடன் ஒதுங்கியபொழுது, ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம் என்று கூறியவாறு மூவரும் ஒதுங்கி நின்ற பொழுது இருளில் நான்காவதாக ஒருவர் அவர்களிடையே நெருக்கி நிற்க, பிறகு அவர் திருமாலே என்பதுணர்ந்து ஒவ்வொருவரும் ஒரு அழகிய வெண்பா இயற்றினர். இவர் திருமால் மீது பாடிய பக்திப்பாடல்கள் முதல் திருவந்தாதி எனப்படுகின்றன.

“வையம் தகளியா, வார்கடலே நெய்யாக

வெய்ய கதிரோன் விளக்காகச் செய்ய

சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை

இடராழி நீங்குகவே என்று" என்பதே அப்பாடல் 'சென்றால் குடையாம்' இருந்தால் சிங்காதனமாம்' நின்றால் மரவடியாம்' 'நீள் கடலுள் என்றும் புணையாம்' 'மணிவிளக்காம்' பூம்பட்டாம்' புல்கும் அணையாம் திருமாற்கு அரவு' - எனும் பாடல் திருமாலுக்கும் அரவிற்கும் உள்ள நெருக்கத்தை உணர்த்தும்.

**பூதத்தாழ்வார்:**

மாமல்லபுரம் எனும் கடல் மல்லையில் பிறந்தவர் - பூதம் என்ற சொல் பாடல்களில் வருமாறு பாடிய காரணத்தால் இவருக்கு இப்பெயர் வந்தது என்பர். இயற்கை எழிலைப் பாடுவதில் சிறந்து விளங்கினார். திருக்கோவலூரில் இடைகழியில் மூன்றாழ்வார்களும் சந்தித்த போது, இவர்

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக

இன்புருகு சிந்தை இடுதிரியா-

நன்புருகி ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு

ஞானத் தமிழ்புரிந்த நான்"

எனும் படலை இயற்றினார். இவரது பாடல்கள் - இரண்டாம் திருவந்தாதியாகக் கூறப்படுகின்றன.

**பேயாழ்வார் :**

சென்னையிலுள்ள மயிலாப்பூரில் திருவல்லிக்கேணியில் அவதரித்தவர். பக்திப் பரவசத்தால் நெஞ்சஞ் சோர்ந்து, கண் கழன்று அழுது சிரித்து ஆடிப்பாடி பேய் பிடித்தாற் போல் இறைவனைத் தொழுது மகிழ்ந்ததால் பேயார் என்று அழைக்கப்பட்டார். இவர்பாடிய பக்திப் பனுவல் 3ஆம் திருவந்தாதி ஆகும்.

"திருக்கண்டேன்'பொன்மேனி கண்டேன்' திகழும்

அருக்கன் அணிநிறமும் கண்டேன்

செருக்கிளரும் பொன்னாழிகண்டேன்' புரிசங்கம்

கைக்கண்டேன் என்னாழி வண்ணன்பால் இன்று"-

என்பது திருமாலின் திருக்கோலத்தை கண்டுகளித்த பூரிப்பின் வெளிப்பாடாகும்.

**திருமழிசை ஆழ்வார்:**

தொண்டை நாட்டிலுள்ள திருமழிசை எனும் ஊரில் பிறந்தார். தந்தை பார்க்க முனிவர். பக்திசாரர் என்றும் இவர் அழைக்கப்படுவார். இவரது காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டாகும். திருவல்லிக்கேணியில் நெடுங்காலம் தவத்திலிருந்தார். பிற சமயங்களிலிருந்து இறுதியில் வைணவமே சிறந்தது என்பது உணர்ந்து வைணவரானவர். பிறசமய வாதிகளுடன் வாதிட்டு வென்றவர். மறந்தும் புறந்தொழாத மனத்தினர். தன் பாடல்களிலும் பிறசமயத்தினரை இவர் கண்டிப்பதைக் காணலாம்.

அறியார் சமணர் அயர்த்தார் பௌத்தர் சிறியார் சிவப்பட்டார்கள் செப்பில் வெறியாய் மாயவனை, மாலவனை, மாதவனை ஏத்தாதார் ஈனவரே ஆதலால் இன்று".

இவரது சீடர் கணிகண்ணன். இவர் ஒரு முறை கோயிலில் பணிபுரிந்த மூதாட்டியை இளம் பருவத்தினளாக்க, அது கண்ட மன்னன் தனக்கும் இளமை நல்குமாறு வேண்டினர். கணிகண்ணன் மறுக்கவே சீற்றம் கொண்ட மன்னன் அவரை நாடு கடத்தினான். கணிகண்ணன் திருமழிசையாரிடம் இச்செய்தியைக் தன் ஆசானாகிய கூற மழிசையார் மாணவனுடன் தானும் வருவதாகக் கூறி, கோயிலுக்குச் சென்று இறைவனிடம் கணிகண்ணன் போகின்றான். "காமருபூங்கச்சி மணிவண்ணா நீ கிடக்க வேண்டா - ணிவுடைய செத்தாப்புலவன் யான் சொல்கின்றேன் நீயுமுன்றன் பைந்தாகப் பாய் சுருட்டிக்கொள்" என்று கூற இறைவனும் தன் பாம்புப் படுக்கையைச் சுற்றிக கொண்டு இவர்களுடன் புறப்பட்டதாகவும், அதனால் ஊர் பொலிவிழந்து காணப்பட உண்மை அறிந்த மன்னன் புலவரிடம் மன்னிப்பு கேட்டு மீண்டும் நாட்டிற்கு வரும்படி வேண்ட புலவரும் நாடு திரும்பி திருமாலைப் பைந்நாகப்பாய் விரித்துத் தங்கும்படி கூற, இறைவனும் தங்கியதாகவும். அதனால் நாடு மீண்டும் பொலிவுற்றதாகவும் கதை கூறப்படுகின்றது. காஞ்சிபுரத்துப் பெருமானும், இதனால் சொன்னவண்ணம் செய்த பெருமாள்" என அழைக்கப் படுகின்றார். திருமழிசையார் செய்த நூல்கள் - திருச்சந்தவிருத்தம். நான்முகன் திருவந்தாதி முதலியன. இவரது காலம் கி.பி.8-ஆம் நூற்றாண்டு.

**பெரியாழ்வார்:**

தென்பாண்டி நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் அந்தண மரபில் தோன்றியவர். ஸ்ரீவல்லபன் எனும் பாண்டியன் காலத்தவர் எனக்கொண்டு இவரது காலத்தை 9-ஆம் நூற்றாண்டு என நிறுவுவர். இவரைப் 'பெரிய திருவடி' எனப்படும் கருடாழ்வாரின் அவதாரமாகக்கருதுவர். இவரது இயற்பெயர் 'விஷ்ணு சித்தர் பட்டர்பிரான்' என்றும், புதுவை மன்னன், 'வேயர் தங்குலத்து உதித்த விஷ்ணு சித்தன்' என்றும் குறிக்கப்பெறுவர். வேயர் குலத்துச் சிற்றரசர் என்ற கருத்தும் உண்டு. திருமாலின்

சிறப்பை வாதத்தின் மூலம் நிறுவிப் பொற்கிழி பெற்றவர். ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு நந்தவனம் அமைத்துப் பூமாலைக் கட்டி இறைவனுக்கு அணிவித்து வழிபாடு செய்துவந்தார். பூமாலையோடு பாமாலை கட்டுவதிலும் பெருவிருப்பினராகி, திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி ஆகிய இரு நூல்களைத் தனது தந்தவனத்தில் துளசிச் செடியருகே ஒரு பெண் மகவைக் கண்டெடுத்துக் ‘கோதை’ எனப் பெயர் சூட்டி அன்புடன் வளர்த்து வந்தார். இம்மகளே ஆண்டாள் அடியவராவார்.

கண்ணனைக் குழந்தையாக எண்ணித் தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார். இதுவே பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் என்று பெருவழக்குப் பெற்ற சிறு பிரபந்த வளர்ச்சிக்குத் தோற்றுவாயாக அமைந்தது. எனவே இவரைப் ‘பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடி’ என்பர். கண்ணனது திருமேனி அழகைப் பாதாதி கேசமாகப் பாடியுள்ள அழகு படிப்பவர்க்குப் பரவச மூட்டுவனவாய் உள்ளது. தாலாட்டுப் பாடல்களில் எல்லாம் முதன் முதலாகத் தோன்றியது. இவரது கண்ணன் தாலாட்டுப் பாடல்களே.

”மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி

ஆணிப்பொன்னால் செய்தவண்ணச் சிறு தொட்டில்

பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்

மாணிக் குறளனே தாலேலோ! வையம் அளந்தானே தாலேலோ!!”

அம்புலிப்பருவத்தில் சாம, தான, பேத, தண்டம் என்ற முறையில் பாடி அம்புலியைப் பாட்டுடைத் தலைவனுடன் விளையாட அழைக்கும் மாயை இவரே தொடங்கி வைத்தார் என்பர். குழந்தைக் கண்ணனின் குறும்புச் செயலால் அன்னை யசோதை படும் அல்லல்களை பின்வரும் பாடலால் அறியலாம். “கிடக்கில் தொட்டில்கிழிய உதைத்திடும்’ எடுத்துக்கொள்ளில் மருங்கை இறுத்திடும்’ ஒடுங்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்’ மிடுக்கிலா மையால் நான் மெலிந்தேன்! நங்காய். என்னும் இவரது திருப்பல்லாண்டு இன்னும் வைணவர்களால் தினமும் ஓதப்பெறும் சிறப்புடையதாகத் திகழ்கின்றது.

**ஆண்டாள்:**

பெரியாழ்வாரின் திருநந்தவனத்தில் துளசிச் செடிகளுக்கிடையிலிருந்து பெரியாழ்வாரால் கண்டெடுத்து வளர்க்கப்பட்ட தெய்வக் குழந்தை. ‘கோதை’ என்று அன்புடன் அழைக்கப்பட்ட இவர் திருமாலுக்கு கட்டிவைத்திருந்த மாலையைத் தான் அணிந்து அழகு பார்த்துப் பின்பு இறைவனுக்குக் கொடுதது அனுப்பி வந்தார். ஒரு நாள் மாலையில் கூந்தலிழை ஒன்று இருக்கக் கண்டு உண்மையை அறிந்து மனம்

வருந்திய பெரியாழ்வார் வேறுமாலைகட்டி இறைவனுக்கு அணிவித்த போது இறைவன் கோதை சூடிய மாலையே தனக்கு மகிழ்வளிப்பது என்று கூறினார். இவ்வாறு இறைவனையே ஆண்டுகொண்டதால் “ஆண்டாள்“ என்றும் தான் சூடிய மாலையை இறைவனுக்குக் கொடுத்ததால் ‘சூடிக்கொடுத்த நாச்சியார்’ என்றும் போற்றப்பட்டார்.

கண்ணனையே தன் கணவனாக வரித்த இவள் மலர் வனத்திலுள்ள மலர்களில் எல்லாம் மாயவனைக் கண்டு அம்மலர்களை எல்லாம் கோதை மணாட்டி, முல்லை பிராட்டி என்று செல்லமாக அழைத்து மகிழ்ந்தாள். மாதவனை மணப்பதாகக் கனவுகண்டு இவர் பாடியப் பாடல்கள் மிக்க நயமுடையன. ‘வாரணமாயிரம்’ எனத் தொடங்கும் பாசுரத்தில் “மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தர்கீழ் மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்னைக் கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி நான்” என்று தான் கண்ட கனவைக் கூறி மகிழ்கின்றாள். சூடிக்கொடுத்த இச்சுடர்கொடி பாடிக்கொடுத்த பாசுரங்கள் திருப்பாவையும், நாச்சியார் திருமொழியுமாகும். முப்பது பாசுரங்களைக் கொண்டு விளங்கும் திருப்பாவை நூல் பாவை நூல்களில் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படுகின்றது. திருப்பாவையில் வரும் வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று எனும் அடிகளைக் கொண்டு இவரது காலம் 9 ஆம் நூற்றாண்டு எனக்கணிக்கப்பட்டுள்ளது. “ஊனிடை ஆழி சங்கு உத்தமர்க்கு என்று உன்னித்து எழுந்த என் தட முலைகள் மானிடவர்க்கென்று பேச்சுப்படின் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே” என வரும் இவரது நாச்சியார் திருமொழிப்பாடல் அரங்கனிடம் இவர் கொண்ட அளவற்ற காதலைப் புலப்படுத்தும் இயல்பான அனுபவ உணர்வோடு அகத்துறை மெய்ப்பாடு தோன்ற திருமாலின் கையிலுள்ள வெண் சங்கைப் பார்த்துக் “கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ மருப்பொ சித்தமாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும் விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே!” என்று கேட்பது பேதைப் பெண்ணின் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. இவரது அன்பின் ஆழத்தை அறிந்த அரங்கன் அவளைத் தன்னிடம் சேர்ப்பிக்குமாறு பணிக்கவே, பெரியாழ்வாரும் அவ்வாறே ஆண்டாளைத் திருவரங்கத்தில் சேர்ப்பிக்க அங்கு ஆண்டாள் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

இன்றும் மார்கழி மாதத்தில் இவரது திருப்பாவைப் பாடல்கள் வீடுதோறும், கோயில்தோறும் ஓதப்படுவதைக் காணலாம். சைவ, வைணவப் பாகுபாடின்றி அனைத்துச் சமயத்தாரும் இத்திருப்பாவையை ஓதி மகிழ்கின்றனர். இவரது நாச்சியார் திருமொழிப்பாடல் இன்றி வைணவர் திருமணம் நடைபெறுவது கிடையாது. மணமகளையே ஆண்டாள் போல அலங்கரிக்கும் மரபு இன்றும் வைணவர்களிடையே வழக்கத்திலிருக்கக் காணலாம்.

**நம்மாழ்வார்:**

இவர் ‘ஆழ்வார் திருநகரி’ எனப்படும் ‘திருக்குருகூரில்’ வேளாளர் குலத்தில் பிறந்தார். இவரது தந்தை - மாறன்காரி, தாய் - உடைய தங்கை பிறந்தது முதலே யோகத்தில் இருந்தவர். அசைவைத் தரும் ‘அம்’ எனும் காற்றைத் தன் கரத்தினால் தடுத்து நிறுத்தியதால் ‘சடகோபன்’ என்று பெயரிடப்பட்டார். பெற்றோர் இவரைப் பெருமாள் சந்நிதியில் விட்டபொழுது, இவர் தவழ்ந்து சென்று புளிய மரத்தடியில் பத்மாசனம் இட்டமர்ந்தார். இப்புளிய மரம் ஆதிசேடன் அவதாரம் என்று கூறப்படுகிறது.

நம்மாழ்வாருக்கு நிழல் தந்து காத்த புளியமரத்தை வைணவர்கள் ‘திருப்புளி ஆழ்வார்’ என்று அழைப்பர். இவருக்குக் காரிமாறன், வகுளாபரணன், பராங்குசன், குருகைக்காவலன், காசிமாறன், தமிழ்மாறன் எனும் வேறு பெயர்களும் வழங்கப்படுகின்றன. வட நாட்டிலிருந்து மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரின் பெருமையைக் கேள்விப்பட்டுத் தென்னாட்டிற்கு வந்து நம்மாழ்வாரைத் தரிசித்து, அவரது யோகநிலை கண்டு இவருக்கு மூச்சும், பேச்சும் உளதோ என்று அறிய ஒரு சிறு கல்லை எடுத்து அவர் அருகில் போட ஓசை கேட்டுக் கண் விழித்த ஆழ்வாரிடத்தில், ‘செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்ஙனே கிடக்கும்“ என்று கேட்க நம்மாழ்வாரும், ‘அத்தை தின்று அங்ஙனே கிடக்கும்’ என்று மறுமொழி கூறினார். அது கேட்டு மகிழ்ந்த மதுரகவியார் நம்மாழ்வாரையே தன் குருவாகக் கொண்டு அங்கேயே தங்கிச் சேவை செய்து ஆழ்வார் திருவாய்மொழியை ஓலைச்சுவடியில் எழுதி வைத்தார். பாடிய இவர் பாடிய திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆகிய நான்கு நூல்களும், வைணவர்களால் முறையே இருக்கு, யசுர், சாம, அதர்வண வேத நூல்களாகவே கருதப்படுகின்றன. இவரது திருவாய்மொழியே “திராவிட வேதம்“, ‘திராவிட வேதசாரம்’, ‘செந்தமிழ் வேதம்’, ‘ஆன்ற தமிழ்மறைகள் 1000’ என்றெல்லாம் புகழப்படுகின்றது. இதன் வியாக்கியானங்கள் பகவத் விஷயம் - என்றும் பாராட்டப் படுகின்றது. திருவாய்மொழிக்கே ஆயிரப்படி, மூவாயிரப்படி, ஒன்பதாயிரப்படி, பன்னீராயிரப் படி, இருபத்து நாலாயிரப்படி, முப்பத்தாராயிரப்படி என்னும் வியாக்கியானங்கள் உள்ளன.

இவரது திருவாசிரியம் - 7ஆசிரியங்களையும், பெரியதிருவந்தாதி - 87 வெண்பாக்களையும், திருவிருத்தம் - 100 பாடல்களையும், திருவாய்மொழி - 1000 பாடல்களையும்கொண்டது. இவரது பாடல்களில் திருக்குறள் கருத்துக்களும், பரிபாடல் வரிகளும் எடுத்தாளப்பட்டுள்ளன. இவரது பாடல்கள் அனைத்தும் பண்ணுடன் பாடத் தக்கன. ஆழ்வார்களிலேயே இவர்தான் தலைமையானவராகக் கருதப்படுகின்றார். அதனால் நம்மாழ்வார் ”அவயவி” என்றும் மற்றைய ஆழ்வார்கள் ‘அவயவம்“ என்றும் வழங்கப்படுகின்றனர். சைவத்திற்கு மாணிக்கவாசகர் போன்று, வைணவத்திற்கு

நம்மாழ்வார் ஆவார். ”நம்மாழ்வார் ஒரு நாட்டிற்கோ, ஒரு சமயத்திற்கோ, ஓர் இனத்திற்கோ மட்டும் உரியவரல்லர். அவர் எல்லா நாட்டிற்கும், எல்லாச் சமயத்தார்க்கும். எல்லா இனத்தார்க்கும் உரியவர். எல்லோரும் “நம் ஆழ்வார்“ என்று போற்றும் ஒரு பெரியாரை அளித்த தமிழ்நாட்டை மனத்தால் நினைக்கிறேன்’ வாயால் வாழ்த்துகிறேன்’ கையால் தொழுகிறேன்“ - என்று கூறுவர் தமிழ்ப் பெரியார் திரு.வி.க அவர்கள் திருமாலே கடவுளரில் சிறந்தவன், அவனே தேவர்களின் தலைவன் என்பதை “உயர்வற உயர் நலம் உடையவன் எவன் அவன்’ மயர்வற மதிநலம் அருளினன் எவன் அவன்’ அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன் அவன்’ துயரது சுடரடி தொழுதெழு என் மனனே“ எனும் பாடலின் மூலம் தெளிவாகக் கூறுகின்றார்.

**மதுரகவியாழ்வார்:**

பாண்டி நாட்டுத் திருக்குருகூரில் அந்தண மரபில் அவதரித்தவர். வடக்கே அயோத்தி வரை சென்று பல வைணவத் தலங்களையும் தரிசித்தவர். நம்மாழ்வாரின் அவதாரம் பற்றிக் கேள்வியுற்றுத் தென்னாட டைந்து நம்மாழ்வாரின் சீடராக அமர்ந்து அவர் மொழிந்த வேதமான திருவாய்மொழியை ஓலைச்சுவடியில் எழுதித் தந்தவர். நம்மாழ்வார் இறைவனடி சேர்ந்ததும், அவரது தெய்வத் திருவுருவினைத் திருக்குருகூரில் நிறுவி வழிபட்டார்.

திருமால் அடியவருள் ஒருவராகக் கருதப்பட்ட போதும் இவர் திருமாலைப் பாடாது, நம்மாழ்வாரையே கண்கண்ட கடவுளா கவும், அத்தனாகவும், அன்னையாகவும் கண்டுகளித்துப் பாடியுள்ளார். இவரது பாடல்கள் “கண்ணிநுண் சிறுத்தாம்பு“ என்று அறியப்படுகின்றன. 11 பாசுரங்களைக் கொண்ட இந்நூல் **கண்ணிநுண் சிறுத்தாம்பு** என்று அப்பெயராலேயே அறியப்படுவதாயிற்று. செல்லம் “தேவு மற்றறியேன்’ குருகூர் நம்பிப் பாவின் இன்னிசை பாடித் திரிவனே“ என்ற கொள்கையுடன் வாழ்ந்து நம்மாழ்வாரின் பெருமையை உலகறியச் செய்தார்.

சைவ சமயத்தில் நாவுக்கரசரைத் தெய்வமாகப் போற்றி வணங்கிய அப்பூதியடிகளைப் போல, வைணவத்தில் நம்மாழ்வாரைத் தெய்வமாக போற்றி வணங்கியவர் மதுரகவியாழ்வார். திருமங்கையாழ்வார். சோழமண்டலத்தில், திருவாலி நாட்டில், திருக்குறையலூரில் கள்ளர் மரபில் நீலன் என்பவனின் மகனாகத் தோன்றினார். மாவீரராகத் திகழ்ந்த இவர், திருவாலி நாட்டின் மன்னனாகவும், சோழனுக்குப் படைத்தலைவனாகவும் பணியாற்றினார். இவரது இயற்பெயர் கலியன். இவர் கலிநாடன், மங்கையர்கோன், குறையலாளி, மங்கைவேந்தன், அருள்மாரி, பரகாலன், கலிகன்றி போன்ற பல பெயர்களால் அறியப்பட்டார். பரமவைணவ குலத்தைச் சேர்ந்த குமுதவல்லி எனும் பெண்ணை மணந்து மதமும் மனமும் மாறி, மனைவியின் விருப்பப்படி, நாள்தோறும் 1008 அடியவர்க்கு அமுது படைத்து வந்தார். இதனால்

சோழப் பேரரசனுக்குத் திறை செலுத்தவும் பொருளின்றி வருந்தி, திருமால் அருளால் பொருள் பெற்றுச் சோழனுக்கு அளித்தார். ஆனால் அடியார்க்கு அமுதுபடைக்கப் பொருளின்றி வழிப்பறியில் ஈடுபட்டார்.

ஒருநாள் திருமால் தம் தேவியுடன் மணமக்கள் கோலத்தில் வர, ஆழ்வார் அவர்களிடமே நகைகளைப் பறித்து, மூட்டையாகக் கட்டிக் கொண்டு ஓட முயன்றபோது, அம்மூட்டையை அசைக்கவும் முடியாது திணறி, திருமாலை நோக்கி, "நீர்தான் ஏதோ மந்திரம் செய்துவிட்டீர்" என்று சினம் கொள்ள, அம்மந்திரத்தை உனக்கும் கூறுகிறேன் என்று இவரை அருகழைத்து, நாராயண மந்திரத்தை அவரது திருச்செவியில் சார்த்தி, தன் அடியவராய் ஆட்கொண்டார்.

இவர் பாடிய 'பெரிய திருமொழி', 'திருக்குறுந்தாண்டகம்'. 'திருநெடுந்தாண்டகம்', 'சிறிய திருமடல்', 'பெரிய திருமடல்', 'திருவெழுகூற்றிருக்கை' ஆகிய ஆறுபாடல்களும், நம்மாழ்வார் பாடிய தமிழ் வேதமான திருவாய்மொழியின் 'அங்கங்கள் எனப் பாராட்டப்படுகின்றன. இவர் பாடியுள்ள திருமடல்கள் 'எத்திணை மருங்கினும் மகடூஉ மடலேறல் பொற்புடைநெறிமை அன்று' என்று கூறப்பட்டுள்ள தொல்காப்பியக் கருத்தினின்றும் முற்றிலும் மாறுபட்டுத் திருமால் மீது காதல் கொண்ட பெண் மடலேறுவதாக அமைக்கப்பட்டுள்ளன. இவரது காலம் 9ஆம் நூற்றாண்டு எனப்படுகின்றது. உருக்கமும், பக்தியும், நயமும் நிறைந்த இவரது பாடல்களில் இயற்கையழகும் நிறைந்து விளங்கக் காணலாம். நாகப்பட்டினத்துப் புத்தவிக்கிரகத்தை உடைத்து ஸ்ரீரங்கம் கோயிலின் மூன்றாம் சுற்றுமதிலைக் கட்டியதாகவும் இவரைப் பற்றிக் கூறப்படுகின்றது.

**தொண்டரடிப்பொடியாழ்வார்**

சோழநாட்டில் திருமண்டங்குடியில் அந்தணர் மரபில் தோன்றியவர். 'விப்ரநாராயணர்' என்பது இயற்பெயர். பெரியாழ்வாரைப் போலவே திருவரங்கத்தில் நந்தவனம் அமைத்துத் திருமாலை கட்டிச் சார்த்தி மலர்த் தொண்டாற்றி வந்தார்.

தேவதேவி என்னும் பரத்தையின் மையலுக்கு ஆட்பட்டுப் பின் திருமாலால் ஆட்கொள்ளப்பட்டார் என்பர். திருமாலின் அடியவராய் மாறித் தம் பெயரையும் 'தொண்டரடிப்பொடி' என மாற்றிக் கொண்டார். இவர் அருளிய நூல்கள் 'திருமாலை', 'திருப்பள்ளி எழுச்சி' என்பன. இவர் இயற்றிய திருப்பள்ளி எழுச்சி, மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சி போன்று கவிதை நயமும், இயற்கை எழிலும் நிறைந்ததாகும்.

இறைவனின் பக்திச் சுவையில் ஈடுபட்டு இவர் பாடிய பாடல்களுள் அனைவராலும் அறியப்பட்டபாடல், "பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்

கமலச்செங்கண் அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே' என்றும் இச்சுவை தவிரயான் போய் இந்திரலோக மாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே" என்பது. குலசேராழ்வார் தனது 'பெருமாள் திருமொழியில்' இவரை நினைவுகூர்ந்து இவரது பாத்தூளிபடுதல் கங்கை நீராடுதலினும் குறிப்பிட்டிருப்பது பெருமையைப் புலப்படுத்தும் லேன்காணி இல்லை உறவு மற்றொருவர் இல்லை பாரில் நின் பாதமூலம் பற்றிவேன் பாமமுர்த்தி" கதறுகின்றேன்! ஆருளர்களை கண் அம்மா அரங்கமா நகருளானே! எனும் பாடல் உருக்கம் நிறைந்த ஒன்றாகும்

**திருப்பாணாழ்வார்.**

சோழநாட்டில் உறையூரில் பாணர் குலத்தில் தோன்றியவர். இசையில் வல்லவரான இவர் கையில் யாழ் ஏந்தித் திருமால் புகழைக் கல்லும் கரைந்துருகப் பாடிவந்தார். தாழ்ந்த குலத்தவராதலால் அரங்கத்தினுள் நுழைய அஞ்சிக் காவிரியின் தென்கரையில் இருந்தே அரங்கனை வழிபட்டு வந்தார்.

அரங்கனுக்கு நீர் கொண்டு சென்ற லோகசாரங்கம் எனும் அந்தணர் தலைவர் இவரை விலகிச் செல்லக் கூறியும். விலகாததால், உடன் வந்தவர்கள் இவர் மீது கல்லெறிந்து காயப்படுத்தினர். இதனால் வருந்திய இறைவன் லோக சாரங்கரின் கனவில் தோன்றி. பாணரைத் தோளில் சுமந்து வருமாறு பணித்தார். அரங்கனின் ஆணையை ஏற்ற அந்தணரும், பாணரைத் தோளில் சுமந்து சென்று அரங்கனின் திருமுன்னர்ச் சேர்த்தார். ஆழ்வாரும் அரங்கனின் அழகைக் கண்குளிரக் கண்டு "அமலனாதிப்பிரான்" எனத் தொடங்கும் 10 பாசுரங்களைப் பாடினார். இது உள்ளங்கவர் அழகனான அரங்கத்தம்மான் மீது மங்கை ஒருத்தி காதல் கொண்டதாகப் பாடப்பட்ட பக்திச் சுவை பொருத்திய நூலாகும். இதில் எளிமையையும், ஆழமான உணர்ச்சிப் பெருக்கையும் காணலாம்.

**குலசேகர ஆழ்வார்:**

திருவஞ்சைக் களம் எனும் ஊரில் பிறந்தவர். சேர நாட்டை ஆட்சி புரிந்தவர். திருமாலிடத்துக் கொண்ட பக்தியினால். "கம்பமதயானைக் கழுத்தகத்தின் மீதிருந்து இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன் " என்று தம்மைக் கொல்லி சத்துரத்து அடியவமானவார் இவர் கோழிக்கோன் என்று ஆள்வதால் பாண்டிய தலைவராம் இந்தார் என்பது பெறப்படும். நூற்றாண்டு கருதப்படுகின்ற இருவேறு தமிழில் பெருமாள் திருமொழியும். வடமொழியில் இது பெருமாள் திருமொழி, நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தில் முழுபகுதியான இயற்பாலில் அடங்கும்.

இராமாவதாரக் கதையில் பெரிதும் ஈடுபாடு கொண்டனர். ஒருமுறை இராமாயணக் கதையைப் பௌராணிகர் கூறக்கேட்டுக் பொழுது, கரதூடணர் பதினாயிரம்

சேனைகளுடன் இராம இலக்குவருடன் போருக்குப் புறப்பட்டனர் என்று கூறக்கேட்டு தானே இராமனுக்குத் துணையாகப் படைகளுடன் புறப்பட்டார் எனும் கதைக் குறிப்பு இவரது இராம பக்தியை விளக்கும். இவரது இராகவன் தாலாட்டு சிறப்புடைய ஒன்றாரும்.

“மன்னு புகழ்க் கோசலை தன் மணிவயிறு வாய்த்தவனே! தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர் கனிநன்மா மதிள் புடைசூழ் கணபுரத்தென் கருமணியே! என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ!

என்று தாயன்போடு இராகவனைத் தாலாட்டும் இவர். கிருஷ்ணவதாரக் காட்சிகளையும் அழகுறப் பாடியுள்ளார். தேவணின் தசரதர் புலம்பல்களாக இவர் பாடியுள்ள பாடல்கள் உள்ளம் உருகச் செய்வனவாகும்.

நீ வேங்கடமுடையானது இவர் பாடியுள்ள பாடல்கள் இலக்கியம் பாடல்களில் ஒப்பற்ற உணர்ச்சிப் பிழம்பாகக் கவிதைச் சிறப்பு மிக்கனவாக மிளிர்கின்றன. திருமாலிடம் கண்ட பக்தியினால், அவர் எழுந்தருளியுள்ள திருத்தலத்தில் மீனாய்த்துள்ளவும். பறவையாய்ப் பறக்கவும் பாசமாய் நிற்கவும் விரும்புவதாகக் கூறுகின்றார். “ஆனாத செல்லத்து அரம்பையர்கள் தற்சூழ வானாளும் செல்வரும் மண்ணரசும் யான் வேண்டேன் தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில் மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே” என்கிறார். இன்றும் வேங்கடமலையில், எம்பெருமான் எழுந்தருளி இருக்கும் கருவறைக்கு அண்மையில் இருக்கும்படி, “குலசேகரப் படி’ என்று வழங்கக் காணலாம். வித்துவக்கோட்டு அம்மான் மீது பாடியுள்ள பாடல்கள் அனைத்தும் உவமை நலமும், கவிதைச் சிறப்பும் அமைந்தவை யாகும்.

“தருதுயரம் தடாயேல்உன் சரணல்லால் சரணில்லை. விரை குழுவும் மலர்ப்பொழில் சூழ்வித்துவக் “கோட்டம்மானே! அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவன் தன் அருள் நினைந்தே அழுங்குழவி அதுவே போன்று இருந்தேனே!” எனும் பாடல் நெஞ்சை உருக்கும் தன்மையதாக உள்ளது.

பக்தி இலக்கியங்கள் தவிர, நந்திக் கலம்பகம், திருக்கயிலாய ஞான உலா, பாரத வெண்பா போன்ற பல சிறந்த நூல்களும் இப்பல்லவர் காலத்தில் தோன்றியுள்ளன,

**சமயங்கள் வளர்த்தத் தமிழ்**

**சைவமும் தமிழும்**

பக்தி இலக்கிய மொழி என்று பாராட்டி உரைக்கப்பட்டுள்ளதான தமிழில் தோன்றியுள்ள பல்வேறு இலக்கியங்களும் சமயத்தின் அஸ்திவாரத்திலேயே வளர்ந்து வந்துள்ளன. சமயத்தை நீக்கி விட்டால் மொழி என்னும் மாளிகை பொலிவிழந்து நிற்கக் காணலாம். இச் செந்தமிழ் நாட்டில் செழித்து வளர்ந்த சமயங்கள் பல. சங்க காலத்தில் சைவமும், வைணவமும் செழித்திருந்தன. ஆனால் சங்கம் மருவிய காலமான இருண்ட காலத்தில் புறச்சமயங்களான சமணமும், பௌத்தமும் கால் கொண்டன. மீண்டும் சைவத்தையும், வைணவத்தையும் தழைக்கச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகளுக்குத் திறவுகோலாகத் திகழ்ந்தது மொழியே. சமயம் என்னும் மலரைத் தமிழ்மொழி எனும் மணத்தால் பொலிவுறச் செய்து மக்கள் என்னும் ஈயைக் கவர்ந்தனர். இதனால் சமயமும் செழித்தது. மொழியும் தழைத்தது. இவ்வகையில் ஒவ்வொரு சமயமும் தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டு அளவிடற்பாலது. இவற்றுள் சைவ சமயம் தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டினைக் காணலாம்.

சமணசமயம் பாலிமொழியையும், பௌத்தசமயம் பிராகிருத மொழியையும் சார்ந்து விளங்க சைவமோ தமிழையே சார்ந்து விளங்கியது. இதிலும் வடமொழிச் செல்வாக்கு இருந்தது ஆயினும் தமிழுக்கே முதலிடம் வழங்கப்பட்டது. எனவே சைவமும் தமிழும் இணைந்து வளர்ந்து செழித்தன.

சைவத் திருமுறைகள் பன்னிரெண்டும் தமிழ்க ' கடவுள் முருகனின் பன்னிரு திருக்கண்கள் என்றே கூறப்படுகின்றன. சைவ சமயக் குரவர்கள் நால்வரும் தமது இனிய தேவார திருவாசகங்களின் மூலம் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினர். சிவனடியார்களின் சிறப்புரைக்கும் திருத்தொண்டர் புராணம் பக்திச்சுவையின் ஊற்று. சைவ சித்தாந்த சாத்திர நூல்களோ, தமிழரின் சித்தாந்த அறிவினை உலகுக்கு அறிவிக்கும் பெட்டகங்கள். சைவ சமயக் குரவர்களைப் பின்பற்றிப் பிற்காலத்தில் இலக்கியத் தொண்டு புரிந்த சிவநெறிச் செல்வர் பலராவர். இவர்கள் மக்களுக்கு நல்வழி காட்டும் நீதி நூல்களையும், மன மகிழ்வு தரும் சிற்றிலக்கியங்களையும் பெருமளவில் படைத்துத் தந்துள்ளனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் - குமரகுருபரர், சிவஞான முனிவர், சிவப்பிரகாசர், கச்சியப்ப முனிவர், சைவ எல்லப்ப நாவலர் ஆகியோர் ஆவர்

**சைவமடங்கள் வளர்த்த தமிழ்**

சைவ மடங்கள் சமயப் பணியோடு தமிழிலக்கியப் பணியிணையும் சிறப்புறச் செய்து வந்தன. இம்மடங்களில் தமிழறிவு நிரம்பிய புலவர்கள் பலர் தங்கிருந்து

தமிழ்த்தொண்டுப்புரிந்துள்ளனர். இம்மடங்களின் தலைவர்களும் சிறந்த இலக்கண இலக்கிய அறிவு நிரம்பியவராய் விளங்கியமையால் பழைய நூல்களைப் பாதுகாத்து வந்ததோடு, புதிய புதிய நூல்கள் தோன்றுவதற்கும் காரணமாக விளங்கினர். எனவே தமிழறிந்த சான்றோர்க்கு இம்மடங்களில் சிறப்பான இடம் இருந்தது.

முகம்மதியரின் படையெடுப்பால் சைவமும், தமிழும் மிகவும் பாதிக்கப்பட்டன. அவ்வமயம் இம்மடங்களே தமிழேடுகளும்.. தமிழ்ப் புலவர்களும் அழிந்து விடாமல் பாதுகாத்தன. போற்றவும், பாதுகாக்கவும் ஆளின்றி தவித்த புவலர்களுக்கு இம் மடங்களே புகலிடம் தந்து புத்துயிர் ஊட்டின. தமிழேடுகளைத் தேடி அலைந்த டாக்டர். உ.வே. சாமிநாதய்யர் போன்ற சான்றோர்களுக்கு, அவர்கள் தேடி அலைந்த ஏடுகளைத் தந்து நாடு போற்றும் நல்லோராக உயரச் செய்தவை இம்மடங்களே.”

இம்மடங்களுள் குறிப்பிடத்தக்கவை திருவாவடுதுறை ஆதீன மடம், தருமபுர ஆதீன மடம், மதுரை திருஞானசம்பந்தர் திருமடம், திருப்பனந்தாள் காசிமடம், திருவண்ணாமலை மடம், வீரசைவமடம் ஆகியவை ஆகும். இவற்றுள் காலத்தால் முற்பட்டது மதுரை திருஞான சம்பந்தர் திருமடமே.

**திருவாவடுதுறை ஆதீனமடம்**

இதனை நிறுவியவர் நமச்சிவாயமூர்த்திகள் என்பவராவர். இம்மடம் தோன்றியகாலம் கி.பி.14 என்றும் 16-ஆம் நூற்றாண்டு என்றும் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. நன்னூலுக்கு எளிய இனிய உரை எழுதிப் புகழ்பெற்ற சங்கர நமச்சிவாயப் புலவர், சைவசித்தாந்தச் செம்மலாகிய சிவஞான முனிவர், நமச்சிவாய தேசிகர், அம்பலவாண தேசிகர், இலக்கணக்கொத்தின் ஆசிரியரான ஈசானதேசிகர், வேலப்ப தேசிகர் போன்றோர் இம்மடத்தில் தங்கித் தமிழ்ப்பணி செய்த சான்றோராவர். திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், இம்மடத்தின் தலைவராய் வீற்றிருந்த அம்பலவாண தேசிகரால் ஆதரிக்கப் பட்டார்.

**தருமபுர ஆதீனம்**

இது தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைககு அருகில், காவிரியின் தென் கரையில் அமைந்துள்ளது. திரு குருஞானசம்பந்த தேசிகரால் இம்மடம் நிறுவப்பட்டது. இவர் எட்டு நூல்கள் இயற்றியுள்ளார். சிவபோதசாரம், சொக்க நாதவெண்பா, முத்தி நிச்சயம் ஆகியவை சிறந்த அருள் நூல்களாகும். குமரகுருபரரின் ஞானாசிரியரான ஸ்ரீ மாசிலாமணி தேசிகர், ஸ்ரீ வெள்ளியம் பலவாணர், படிக்காசுப் புலவர் போன்றோர் இம்மடத்தினைச் சார்ந்தவர்களாவர். இவர்கள் இயற்றியுள்ள நூல்கள் பலவாகும்.

இம்மடம் நூல் வெளியீட்டில் ஒரு புரட்சியே செய்து வருகின்றது. சில ஆண்டுகளாகப் பல அரிய நூல்களைச் சிறந்த முறையில் பதிப்பித்துக் குறைந்த விலையிலும், இலவசமாகவும் வெளியிட்டு வருகின்றது. இதுவரை ஏறக்குறைய 800 நூல்கள் வரை வெளிவந்துள்ளதாகத் தெரிகிறது. தேவாரத் திருமுறைகளுக்கு உரை எழுதி வெளியிட்டுள்ளதோடு, “திருக்குறள் உரைவளம்“ எனும் நூலையும் இம்மடம் வெளியிட்டுள்ளது. கடந்த 42 ஆண்டுக் காலமாக “ஞானசம்பந்தம்” என்னும் சமய இலக்கிய இதழும் திங்கள் இதழாக வெளிவருகின்றது. இது ஒரு பார்வை நூலாகச் சிறந்து விளங்குகின்றது.

1946-ஆம் ஆண்டு முதல் சிறந்த தமிழர்களின் உதவியுடன் ‘தமிழ்க்கல்லூரி’ ஒன்று நடத்துவதன் மூலம் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்குத் தொண்டுப் புரிந்து வருகின்றது. சிறந்த நூலகம் ஒன்றும் இதில் இயங்கி வருகின்றது. 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட அரிய நூல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. தேவாரம் பயிற்றுவிக்கப் பாடசாலை ஒன்றும், சித்தாந்தக் கல்லூரி ஒன்றும் இங்கு நடைபெற்று வருகின்றது.

அவ்வப்பொழுது சமய சாத்திர மாநாடுகளையும், திருமுறைப் பெருவிழாக்களையும், சமயச் சொற்பொழிவுகளையும், நிகழ்த்துவதோடு ஆண்டுதோறும் தமிழறிஞர்களுக்குப் பட்டமளித்தும் பணமுடிப்பு வழங்கியும் தமிழையும் தமிழறிஞர்களையும் ஊக்குவித்து வளர்த்து வருகின்றது.

**திருப்பனந்தாள் காசிமடம்**

ஸ்ரீ காசிவாசி தில்லை நாயக சுவாமிகள் கி.பி.1720-இல் இம்மடத்தை நிறுவினார். குமாகுருபரர் காசியில் மடம் நிறுவிய பொழுது இருந்த அனுபவமும், திறமையும் பெற்ற சான்றோர்களே இம்மடத்தையும் ஏற்படுத்தி நடத்தினர். இம்மடம் திருப்பனந்தாள் காசிமடம் என்று அழைக்கப்படுகின்றது. காசி மடத்தை நிறுவிய குமரகுருபரரை அன்புக்காட்டி ஆதரித்தவர் தருமபுர மடத்தலைவரான ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகராவார். தருமபுர மடத்தலைவரின் சீடரால் நிறுவப்பட்ட காசி மடத்தைச் சேர்ந்தவர்கள். இதனை நிறுவிய காரணத்தால் இது “தருமபுரத்தின் சிஷ்யமடம்” என்றும் வழங்கப்படும். எனவே இன்றுவரை இம்மடத்தின் தலைவரை நியமனம் செய்யும் பொறுப்பு தருமபுர ஆதினகர்த்தரிடமே உள்ளது.

திருப்பனந்தாள் மடத்தின் சார்பாகக் கல்வித் தொண்டும், மருத்துவப்பணியும் சிறப்புற நடத்தப்படுகின்றது. கல்விப் பணிக்காகத் திருப்பனந்தாளில் ஒரு “தமிழ்ப்புலவர் கல்லூரி”யும் ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு கலைக்கல்லூரியும், உயர் நிலைப் பள்ளியும், தேவாரப் பாடசாலைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆங்காங்கு மருத்துவ மனைகள் ஏற்படுத்தி உள்ளனர். பல்கலைக் கழக அளவில் முதன்மைப் பெற்றுத் தேர்ச்சி பெறும்

தமிழ் வித்வான்களுக்கும், சிவபோகசாரப் பயிற்சிப் போட்டியில் வெற்றி பெறுபவர்க்கும் பரிசளிக்கும்படி ஏற்பாடுகள் செய்துள்ளனர். இம்மடத்தின் சார்பாகக் "குமர குருபரன்" எனும் திங்கள் இதழ்வெளியிடப்படுகிறது.

இம்மடத்தின் சார்பாகப் பல அரிய நூல்கள் மலிவு விலைப் பதிப்பாகவும், அடக்க விலைப் பதிப்பாகவும் வெளிவந்துள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை சுந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருக்குறள் உரைக்கொத்து, தேவாரம், திருவாசகம், பன்னிருதிருமுறை வரலாறு ஆகியவையாகும்.

**மதுரை மடம்**

மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ளது. இன்றுள்ள சைவமடங்களில் காலத்தால் முற்பட்டதாகும். மதுரைக்குத் திருஞான சம்பந்தர் வந்தபோது இங்கு வந்து தங்கியதாகக் கூறப்படுவதாலும், தற்பொழுது இம்மடத்தின் தலைவராக விளங்குபவர் 295 ஆவது குருமகா சன்னிதானம் என்று உரைக்கப்படுவதாலும் இதன் பழமையை உணரலாம். ஞானசம்பந்தர் தங்கியதால் இம்மடம் "திரு ஞானசம்பந்தர் திருமடம்" என்று அழைக்கப்படுகின்றது. இம்மடம் ஒரு புதுமையான தொண்டினைச் செய்து வருகின்றது. அதாவது பிற சமயத்தில் சார்ந்துவிட்டவர்களை மீண்டும் சிவதீட்சை அளித்து சைவ சமயத்தில் சேர்த்துக் கொள்ளும் பணியினைச் செய்து வருகின்றது.

**வீரசைவ மடங்கள்**

வீரசைவ சமயத்தைச் சார்ந்தவரும் 17ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய புலவர்களுள் ஒருவருமாகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் நாட்டின் பல பகுதிகளிலும் இவ்வீர சைவமடங்கள் நிறுவப்பட்டன. வீரசைவர்கள் என்போர் மார்பில் இலிங்கம் கட்டிக்கொள்ளும் வழக்கமுடையோராவர். வீரசைவ மடங்களுள் ஸ்ரீ மயிலம் மடம் - ஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரில் தமிழ் வித்துவான்கள் கல்லூரி ஒன்றினை நிறுவி சிறப்புற நடத்தி வருகின்றது. சைவத்தையும், தமிழையும் ஒருங்கே வளர்த்து வரும் இம்மடம் சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்களையும், பிரபுலிங்கலீலை உரையினையும் வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ சிதம்பரசுவாமிகளால் தோற்றுவிக்கப்பட்ட திருப் போரூர்மடம் பாலூர் கண்ணப்ப முதலியாரின் உரையுடன் கூடியசேக்கிழார் பிள்ளைத்தமிழினை வெளியிட்டுள்ளது. இவ்வறாக இம்மடங்கள் எல்லாம் தமிழ்க் கல்லூரிகளை நிறுவித் தமிழும் சைவமும் தழைக்கத் தொண்டாற்றியுள்ளன. இம்மடங்களின் முயற்சியினால் பல இலக்கிய இலக்கணங்கள் மக்களிடையே பரவி பெரும் புகழ் பெற்றுள்ளன.

**சமணத் தமிழ்த்தொண்டு**

பல்வேறு சமயத்தவரும் தத்தம் சமயக் கருத்துக்களைத் தமிழகத்தில் நிலைநாட்ட முயன்றனர். அம்முயற்சியில் வெற்றிகாண வேண்டுமானால் தமிழைச் சிறப்புறக் கற்க வேண்டும் என்பதை உணர்ந்து தமிழைத் தெளிவுறக் கற்றதோடு, தமிழில் பல நூல்களை படைத்துத் தமிழ்த் தாய்க்குத் தொண்டாற்றியுள்ளனர். இவ்வகையில் வேற்று சமயத்தவரான சமணர்கள் செய்துள்ள தமிழ்த் தொண்டினைக் காணலாம்.

சமணம் எனும் சமயத்தைச் சார்ந்தோர் மௌரியப் பேரரசர் காலத்திலேயே தமிழகத்தில் செல்வாக்குப் பெற்று விளங்கியதைக் கன்னடநாட்டுச் ‘சிரவண பெல்கோலாக் கல்வெட்டு’ உறுதி செய்கிறது. சிலப்பதிகார காலத்தில் தமிழகத்தில் சமணம் பெற்றிருந்த செல்வாக்கைச் சிலம்பு செப்பும் கி.பி. 3 முதல் கி.பி. 8-ஆம் நூற்றாண்டுவரையிலான ஐநூறு ஆண்டு காலம் சமணம் தமிழகத்தில் வேரூன்றி நின்றதை வரலாறு விளக்குகின்றது.

கி.பி 5 ஆம் நூற்றாண்டில் ‘வச்சிரநந்தி’ என்பவர், மதுரையில் ‘திரமிள சங்கம்’ எனும் சங்கத்தை நிறுவி இருந்ததையும், அது சிறப்புற்று விளங்கியதையும் அறியமுடிகின்றது. பல்லவர் காலத்தில் சமணம் உச்ச நிலையில் இருந்தது. அப்பர் பெருமயனை தன் கருத்துக்களாலும், இலக்கியங்களாலும் கவர்ந்திழுத்தது சமணமே. பல்லவர் கொள்கைகளர் சமணத்தில் ஈடுபாடு கொண்ட அப்பர் பெருமானை ‘தருமசேனர்’ எனும் பட்டமளித்துப் பெருமைபடுத்தியது சமண சமயமே. மகேந்திரபல்லவன், கூன் பாண்டியன் எல்லாம் ஏழாம் நூற்றாண்டில் சமணத்தைத் தழுவி இருந்தனர். ஆனால் இடைக்காலத்தில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தால், சமணம் தனது செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. சைவ சமய குரவர்களான அப்பரும், சம்பந்தரும் இதன் செல்வாக்கைச் குறைத்த பெருமைக்கு உரியவராவர். சம்பந்தரின் அனல் வாதமும் புனல் வாதமும் சமணத்தை நாட்டை விட்டே மறையச் செய்தன.

சமணர்கள் இன்பத்தை வெறுத்தனர். எனவே இன்பத்தை அளிக்கவல்ல இசை நாடகக் கலைகள் புறக்கணிக்கப்பட்ட போதும், தமிழோடு வடமொழியும் போற்றப்பட்டுச் செல்வாக்குப் பெற்றது. இதன் விளைவாகத் தமிழும் வடமொழியும் செல்வாக்குப் பெற்றது. இதனால் மணிப்பிரவாள நடை உருவாக்கப்பட்டது. இச்சமணர்கள் காப்பியங்கள், நீதிநூல்கள், உரைநடைகள், இலக்கணம், நிகண்டுகள் ஆகிய பல்வேறு துறைகளிலும் சிறந்த பணி செய்துள்ளனர்.

சங்க இலக்கியங்களிலேயே சமணர்களின் பணியைக் காணமுடிகிறது. “உலோச்சனார், நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார்” ஆகியோர் சமணப்

புலவர்களாவர். “கணியன்“ என்ற சொல்லும் சமணரைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் நான்மணிக்கடிகை நாலடியார், சிறுபஞ்சமூலம், பழமொழி, ஏலாதி ஆகிய நீதி நூல்கள் சமணர் கொடையே ஆகும். தமிழிலக்கியப் போக்கில் பெரும் புரட்சியைச் செய்தவர் சமணரே. தொகை நூல்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த ஆசிரியப்பாவின் பயன்பாட்டில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தினர். ஆசிரியப்பாவினால் குறும்பாடல்களும், நெடும்பாடல்களும் அன்றி ஒரு பெருங்காப்பியமே படைக்க முடியும் என்று நிறுவினர். ஆசிரியப்பாவில் முதலில் தோன்றிய காப்பியம் சமணராகிய இளங்கோவடிகள் படைத்து நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமே. ஆசிரியப்பாவிலன்றி, பாவினமாகிய விருத்தத்தினாலும் ஒரு பெருங்காப்பியத்தைப் படைக்க முடியும் என்று செய்து காட்டியவர் திருத்தக்க தேவர்.

தேவரின் சீவகசிந்தாமணியே காப்பியப் பண்புகள் அனைத்தும் ஒருங்கே பெற்றது. பிற்காலத்துத் தோன்றிய காப்பியங்களுல் வழிகாட்டியாய் அமைந்தது எனலாம். சமணக் காப்பியமாயினும் சைவரான நச்சினார்க்கினியரையும், கவிச்சக்ரவர்த்தி கம்பநாடனையும் மெய்ம்மறக்கச் செய்த மாட்சிமையுடையதாகும். ஐம்பெருங்காப்பி யங்களுள் ஒன்றான வளையாபதி உட்பட மூன்று பெருங்காப்பியங்களையும், குளாமணி, நீலகேசி, உதயணகுமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம் ஆகிய ஐஞ்சிறு காப்பியங்களையும், கொங்குவேளிர் மாக்கதை எனப்படும் பெருங்கதையினையும் படைத்த பெருமை சமணர்க்கே உரியது.

வாமன முனிவர் மேரு மந்தரபுராணம், ஸ்ரீபுராணம், முல்லி நாதர் புராணம், சாந்தி புராணம், மாபுராணம் ஆகிய புராணங்களையும், உத்தர புராணம், கந்திய சிந்தாமணி போன்ற உரைநடை புராணங்களையும், கிளி விருத்தம், நரி விருத்தம், எலி விருத்தம் முதலான பாட்டு வடிவிலான நீதிக் கதைகளையும் - இயற்றியுள்ளனர். “அருங்கலச் செப்பு“ - என்பது முற்றிலும் சமணம் சார்ந்த நீதிநூலாகும்.

ஆதிதேவர் பிள்ளைத்தமிழ், அப்பாண்டைநாதர் உலா, இருபத்து நான்கு தீர்த்தங்கரருள் ஒருவரான நேமிநாதரைத் துதிக்கும் திருநூற்றந்தாதி, உதீசித்தேவரின் திருக்கலம்பகம், -தீபங்குடிப் பத்து போன்ற சிற்றிலக்கிய நூல்களையும், ஆண்டாள், மணிவாசகரின் பாவை பாடல்களை ஒத்த சிறப்புடன் அவிரோதியாரால் இயற்றப்பட்டுள்ள திருவெம்பாவை, அருங்கலக்செப்பு, எனும் நூலைத் தழுவி எழுதப்பெற்ற தான “அறநெறிச்சாரம், ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளனர்.

14-ஆம் நூற்றாண்டில், தேவேந்திர மாமுனிவர் சிவசம்போதனை என்னும் சமண சித்தாந்த நூல் ஒன்றினை பல் வகைப்பாவும், உரைநடையும் கலந்துவர இயற்றியுள்ளார். சைன இராமாயணம் ஒன்றும் இருப்பதாகத் தெரிகிறது.

### இலக்கண நூல்கள்

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் என்பதற்கேற்ப இலக்கியங்கள் பல படைத்த சமணர்கள் இலக்கண நூல்களையும் படைத்துள்ளனர். பவணந்தியார் - நன்னூலும், நாற்கவிராச நம்பி - நம்பியகப்பொருளும், அமிதசாகரர் - யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி ஆகிய யாப்பிலக்கண நூல்களையும், குண வீரபண்டிதர் - நேமிநாதம், வச்சணந்திமாலை என்னும் நூல்களையும் எழுதியுள்ளனர். நன்னூலுக்குச் சிறந்ததொரு உரை வகுத்துள்ள மயிலைநாதரும் சமணரே. தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர், சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார், மற்றும் குணசாகரர், வாமன முனிவர், கலிங்கர் போன்ற உரையாசிரியர்களும் சமணரே ஆவர்.

### நிகண்டுகள்

தமிழ்க்கவி செழித்தோங்கக் காரணமாய் இருந்த நிகண்டுகள் சமணர்களால் சிறப்படைந்தன. குணபத்திர முனிவரில் மாணவரான மண்டல புருடரால் இயற்றப்பட்ட சூடாமணி நிகண்டு, சேந்தன் என்னும் மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க திவாகர முனிவரால் இயற்றப்பட்ட சேந்தன் திவாகரம், நிகண்டு ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

### பிறநூல்கள்

ஜினேந்திரமாலை என்னும் சோதிட நூலும், நெல் இலக்க வாய்ப்பாடு, சிறுகுறிவாய்பாடு போன்ற எண்சுவடிகளும், கணித வாய்பாடு, நூல்களும், வானசாத்திர நூல்களும் எழுதியுள்ளனர். இவ்வாறு பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கிய சமணர்கள் நிகண்டு முதல், காப்பியம் ஈறாகப் பலவகைப்பட்ட நூல்களையும் படைத்துத் தமிழ்த ் தெண்டாற்றி உள்ளனர்.

### பௌத்தர் தமிழ்த்தொண்டு

அசோக மன்னர் ஆண்ட கி.மு. 275 முதல் 232 வரையிலான காலத்திலேயே பௌத்த மதம் தென்னகத்தில் புகுந்து வேரூன்றத் தொடங்கியது. அசோக மன்னன் மூவேந்தரையும் தன் நண்பனாகக் குறிப்பிடுகின்றான். பூதமங்கலம், போதிமங்கை பூம்புகார், உறையூர், பொன்பற்றி, மதுரை, நாகை முதலிய இடங்களில் பௌத்தர்கள் பள்ளிகள் அமைத்துத் தங்கி தம் மதத்தைப் பரப்பி வந்தனர். அசோகர் காலத்திலேயே பௌத்தர்கள் பலர் தமிழகம் வந்து, தமிழர்களையும் தம் மதத்திற்கு மாற்றி, தமிழகம் எங்கும் பௌத்த விகாரங்களையும் பள்ளிகளையும், ஆசிரமங்களையும் எழுப்பினர். இவர்களுக்குச் சமயப் பொறை மிகுந்த இராசராசன் போன்ற பேரரசர்கள் பௌத்த விகாரங்களைக் கட்டித் தந்ததாக வரலாறு உரைக்கின்றது.

சங்க இலக்கியமான நற்றிணையின் 72 - ஆம் பாடலைப் பாடியவர், இளம் போதியார் எனும் பௌத்தரே ஆவர். மதுரைக் காஞ்சியிலும் புத்த சமண மதப் பள்ளிகள் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன. அறவண அடிகள், கோவலன் மகள் மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார், சங்கமித்திரா, தருமபாலன், புத்தமித்திரர், திண்ணாகர், நாககுத்தனார், புத்த தேவர் போன்றோர் சிறந்த பௌத்த சமயத் தமிழ்ச் சான்றோராவர். கலை மிகுந்த காஞ்சியில் பயின்ற திண்ணாகரும், தருமபாலரும் புகழ் பெற்ற நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் தலைமையேற்றிருந்த பெருமைபடத் தக்கப் பேராசிரியர்களாவர். பள்ளிக்கூடம் என்னும் சொல்லே புத்தமதம் நமக்கு அளித்த சொல்லாகும். இன்றைய தமிழ் எழுத்திற்கு ஓரளவு உருவம் கொடுத்த பெருமை இவர்களைச் சாரும்.

பௌத்த மதத்தின் செல்வாக்கினால் பண்டைப் பெருமை மிக்க இந்து சமயத்திலும் சிலபல பழக்கவழக்கங்களும், மரபுகளும் புகுந்தன. சான்றாக வேள்வியில் உயிர்ப்பலி கொடுத்தலும், அரசமர வழிபாடும் பௌத்த மதத்தின் செல்வாக்கினால் வந்த பழக்கங்கள் என்று கூறப்படுகின்றன.

**பௌத்தர்களின் இலக்கியப்பணி**

மணிமேகலை, குண்டலகேசி ஆகிய இரு பெருங் காப்பியங்களைப் படைத்தளித்தனர். இரண்டு காப்பியங்களுமே பிற சமயத்தைச் சேர்ந்த பெண்டிர் துன்பம் காரணமாகத் தம் மதத்தைத் துறந்து நிலையான இன்பம் பெற பௌத்தத்தைத் தழுவியதாகத் தெரிவிக்கின்றன. குண்டலகேசியில் புத்தமதச் சார்பான விவாதங்களைக் காணலாம். இதன் ஆசிரியரான நாதகுத்தனார் சமண சமயக் கொள்கைகளை மறுப்பதற்காகவே இந்நூலை எழுதியதாகத் தெரிகிறது. மணிமேகலை ஆசிரியரான சாத்தனார், நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு போன்ற சங்கத்தொகை நூல்களிலும் சில பாடல்களை இயற்றியுள்ளார்.

**விம்பிசாரன் கதை**

இது மகத நாட்டு மன்னனான விம்பிசாரன் புத்த பகவானின் நல்லுரைகளையும், அறிவுரைகளையும் கேட்டு பௌத்தனான வரலாற்றைக் கூறுகிறது. இந்நூல் ஆசிரியப்பாவால் ஆனது. நூல் முழுவதும் கிடைக்கவில்லை. இதன் ஆசிரியரும் யார் எனத் தெரியவில்லை.

**சித்தாந்தத்தொகை**

பௌத்த சமய கொள்கைகளை விளக்கிக் கூறும் சமய விளக்க நூலாகத் திகழ்கின்றது. இதில் சில பாடல்களே கிடைத்துள்ளன இதன் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை.

**திருப்பதிகம்**

புத்த பெருமானை வாழ்த்து முகமாக அவரது. ஏத்தும் முகமாக 10 பாடல்களால் இயற்றப்பட்டுள்ள தோத்திர நூலாகும். இதிலும் ஓரிருப் பாடல்களே கிடைத்துள்ளன. இது ஒரு சிறந்த நூலென ஞானப்பிரகாசரால் பாராட்டப்பட்டுள்ளது.

**ஆசியஜோதி**

சைவ சமயத்தவரான கவிமணி தேசிக விநயகம்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. இது புத்தரின் வாழ்க்கை வரலாற்றினைச் சிறப்பாக மொழிகின்றது. எட்வின் அர்னால்டு அவர்களின் Light of Asia என்னும் ஆங்கில கவிதையின் தழுவல் ஆன போதிலும், மூலநூல் போன்று சிறந்த முறையில் புத்தமத உண்மைகளை எளிய நடையில் எடுத்தியம்புகின்றது.

**இலக்கண நூல்**

**வீரசோழியம்**

புத்தமித்திரரால் இயற்றப்பட்டது. இது எழுத்து, சொல் பொருள், யாப்பு, அலங்காரம் என்னும் 5 பிரிவுகளையுடையது புத்தமித்திரரின் மாணவரான பெருந்தேவனார் இதற்கு உரை எழுதியுள்ளார்.

**முகமதியத் தமிழ்த் தொண்டு**

சங்ககால முதலே அராபியரின் தொடர்பு தமிழகத்தில் நிலவி வந்துள்ளது. அரபு நாடுகளும், தமிழகமும் வாணிபத்தால் இணைந்திருந்தன. அரபு நாட்டில் கி.பி.7 - ஆம் நூற்றாண்டில் நபிகள் நாயகம் தோன்றி இசுலாம் மதத்தைத் தோற்றுவித்தார். அரபு நாட்டவர் தமிழகம் வந்து இசுலாத்தைப் பரப்பினர். இசுலாம் தமிழக மக்களையும் ஈர்த்தது. மதம் மாறினாலும் மொழி மாறாது தமிழுக்குத் தொண்டு செய்து வந்தனர். அரபியரின் செல்வாக்கினால் இவர்களின் சொல்வாக்கிலும் பல அராபிய உருதுச் சொற்கள் கலத்து இணைந்து விட்டன. சபாஷ், சலாம் போன்ற சொற்களை அருணகிரிநாதர், குமரகுருபரர். போன்றோரின் பாடல்களில் காணலாம். இவை தவிர, வக்கீல், ஜில்லா, முன்சீப் போன்ற 400 க்கும் மேற்பட்ட பிற மொழிச் சொற்கள் தமிழில் கலந்து தமிழாகவே மாறிப் ோய்விட்டன.

கி.பி.13.ஆம் நூற்றாண்டு முதலே முகமதியர் தமிழ்நாட்டு அரசியிலில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்த்தனர் வீரபாண்டிய படைத்தளபதியாக விளங்கியவர் முகமதியரே. கி.பி.13ஆம் நூற்றாண்டில் பாண்டியர் வலிமை இழந்த போது முகமதியர் தமிழகத்தில் புகுந்து பாண்டியரின் தலைநகரான மதுரையைக் கைப்பற்றினர். இவ்வரசியல் மாற்றம் முகமதியப் புலவர்களுக்குச் சாதகமாக இருந்தது. இசுலாமியப் புலவர்கள் பலர் தோன்றினர். இசுலாமிய நூல்களையும் தமிழாக்கினர். பதினேழாம் நூற்றாண்டு முதல் இசுலாமிய இலக்கியம் தழைத்து ஓங்கி வளர்ந்துள்ளது.

முகமதியர்களும் பிற சமயத்தவரைப் போலவே புராணங்களும், சிற்றிலக்கியங்களும், படைத்துள்ளதோடு தாயுமானவர். போன்று தத்துவ நூல்களும் (பாமர இலக்கியங்களும், புதிய இலக்கியங்களும்) படைத்து அளித்துள்ளனர். இவ்வாறு நூல் படைத்த புலவர்களைப் போற்றிப் பாதுகாத்த புரவலர் சீதக்காதி வள்ளலாவார்.

**உமறுப்புலவர்**

கி.பி.17-ஆம் நூற்றாண்டில் பிறந்த உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணம் ‘நெஞ்சையள்ளும் சீறா’ என்று போற்றப் படுகின்றது. இவர் எட்டயபுரம் அரசவைக் கவிஞரான “கடிகை முத்துப் புலவரிடம் பாடம் கேட்டவர். தனது 16ஆம் வயதிலேயே வாலைவாரிதி எனும் செருக்குமிக்க வடநாட்டுப் புலவனுடன்,“ வாதிட்டுவென்று, தன் ஆசிரியருக்குப் பின் எட்டயபுர சமஸ்தான புலவரானார். இரகுநாத சேதுபதியிடம் அமைச்சராய் விளங்கிய வள்ளல் சீதக்காதியால் ஆதரிக்கப்பட்டார். சீதக்காதியின் வேண்டுகோளுக்கு இணங்கவே ‘வாழ்க்கை வரலாறு’ எனும் பொருள்படும் சீறாப்புராணத்தைப் பாடியருளினார். முகமது நபியின் வாழ்க்கை வரலாறு உரைக்கும் இந்நூல் இஜ்ரத்து காண்டம், விலாதத்து காண்டம், நுபுவத்து காண்டம் எனும் 3 காண்டங்களையும் 5026 செய்யுட்களையும் கொண்டது. நாட்டுப்படலம், நகரப்படலம் எனும் சிறந்த படலங்களை அமைத்து கற்பனைத் திறனும் வரணனை அழகும் பொருந்த கம்பர் திருத்தக்கதேவரின் கருத்துக்கள், சொற்களைக் கையாண்டு கற்போர்க்கு இதயம் களிக்கும் வண்ணம் இதனைப் படைத்துள்ளார். இது 1.சீதக்காதி வள்ளலின் மறைவிற்குப் பின், அவரது நண்பர் அப்துல் மரைக்காயர் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது.

**வண்ணக் களஞ்சியப் புலவர்**

நாகூரைச் சேர்ந்த ஹமீது இப்ரகீம் எனும் இயற்பெயர் கொண்ட வண்ணக் களஞ்சியப் புலவரால் முகைதீன் புராணம் இயற்றப்பட்டது. சந்தப்பாக்களும் வண்ணப்பாக்களும் பாடுவதில் வல்லமை பெற்றுத் திகழ்ந்ததால் வண்ணக்களஞ்சியப் புலவர் என வழங்கப்பட்டார். நாகூர் தர்க்காவில் வாழ்ந்த சாது ஒருவரின் அருமை

பெருமைகளை விளக்கி, முகையதீன் புராணம் என்னும் இந்நூலை எழுதி, நாகூரில் அரங்கேற்றினார். இந்நூலின் இனிமையில் மகிழ்ந்த அன்பர் இவர் விரும்பிய தன் மகளை இவரைத்தேடிப்பிடித்து மண முடித்து வைத்தார்.

சுலைமான் ரபியின் கதையைக் கூறும் “இராசநாயகம்“ என்னும் 2240 பாக்கள் கொண்ட காவியச் சுவை ததும்பும் நூலையும் “தீன் விளக்கம்“ என்னும் புராணமும் இயற்றியுள்ளார்.

**சேகனாப்புலவர்**

செய்கப்துல் காதிர் நெயினார் லெப்பை என்ற பெயரே சுருக்கமாக சேகனாலெப்பை என்றும் சேகனாப் புலவர் என்றும் வழங்கப்பட்டது. காயல்பட்டினத்து இரத்தின வியாபாரியின் மகனான இவர் இளமையில் அறிவுக் குறைவுடையவராக இருந்ததாகவும் ஒருநாள் கருநாகம் ஒன்று இவரது நாவைத் தீண்டியது என்றும் அது முதல் கவிபுனையும் ஆற்றல் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. புகழ் பெற்ற ஞானியான குணங்குடி மஸ்தான் சாகிபு இவரது பள்ளித் தோழராவார். இவர் தனது பரம்பரைத் தொழிலையும் விடாது பாடல் இயற்றிப் பெரும் சிறப்புப் பெற்றார். இவர் இயற்றிய நூல்கள் 2565 பாடல்களால் ஷாகுல் ஹமீது ஆண்டகையின் வரலாறு 1340 பாடல்களால் முகிய்யித்தீன் வரலாறு உரைக்கும் “குத்புநாயகம்“ எனும் புராணம், 2044 பாடல்களால் நபி இபுரதீம் அவர்களின் புனித வரலாறு ஆகியவை. நபி இபுரஹீமின் புனித வரலாற்றைத் திருமணிமாலை என்று பெயர் சூட்டி வெளியிட்டார்.

**காசிம்புலவர்**

திருவடிக்கவிராயர் எனும் சான்றோரிடம் கல்வி கற்றார். கற்ற நூல்களுள் அருணகிரிநாதரின் திருப்புகழில் மிகவும் ஈடுபாடு கொண்டு தானும் அதுபோல ஒரு நூல் இயற்ற விரும்பி இறைவனை அருள் புரியும்படி வேண்டினார். அன்பரின் வேண்டு கோளினைக் கேட்டுக் களித்த நபிநாயகம், புலவரின் கனவில் தோன்றி “பக்ரும்“ என்று அடியெடுத்துக் கொடுக்க, உடனே புலவரும் “பசுரு முருவிலி அருவிலி வெருவிலி“ என்று தொடங்கித் திருநபிகள் நாயகத்தின் மீது ஒரு “திருப்புகழ்“ நூலினைப் பாடினார். அதனைக் கற்றவரும் கேட்டவரும் அவை அருணகிரியாரின் திருப்புகழே என்று கூறுமளவிற்கு திருப்புகழ் சந்தத்தோடு பாடியுள்ளார். சவ்வாதுப் புலவரால் ‘மதுரகவி’ என்று பாராட்டப்பட்ட பெருமையுடையவர். இதனால் இவரே தன்னை “மதுரகவிராசன்“- என்று கூறிக்கொள்கின்றார்.

**சவ்வாதுப்புலவர்**

தமிழ்ப் புலவர் ஒருவரால் “வண்டமிழின் எண்ணோ, எழுத்தோ, இசையோ, இயல்புலவர் கண்ணோ,“ “சவாதுக் கவி” என்று பாராட்டப்பட்ட சிறப்புக்குரியவர். வசைபாடுவதில் காளமேகப் புலவரை ஒத்து விளங்கினார். “வண்டமிழ் சவாது வாயெல்லாம் நஞ்சே“- என்று கூறக் கூடிய அளவிற்கு “நச்சுப்பல் கொண்டவர். ஒருமுறை இவருக்குப் பண உதவி செய்ய மறுத்த சேஷையங்கார் என்பவரைச் சினத்துடன்,

“வீசம் பணம்கொடுக்காதசேசா

வீரியம் பாம்புகடித்துச் சாசா“

என்று சபிக்க அன்றே அவர் விரியன் பாம்பு கடித்து இறந்ததாகக் கூறப்படுகின்றது. இவர் சர்க்கரைப் புலவரின் மைத்துனர் ஆவார். எமனீச்சுரம் என்னும் ஊரினர்.

**பாடியுள்ள நூல்கள்**

நாகைக் கலம்பகம், மதீனத்தர்தாதி, முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் - போன்ற சிற்றிலக்கியங்களைப் பாடியுள்ளார்.

**சையது முகைதீன் கவிராசர்**

நறுமணப் பொருட்களை விற்பனைச் செய்யும் கோட்டாற்று முஸ்லீம் குடும்பம் ஒன்றில் தோன்றியவர். சேரநாட்டு மன்னன் அவையில் பெரும் புலவராகத் திகழ்ந்தார். சேரனோடு ஏற்பட்டப்பட்ட பிணக்கால் பாண்டிய நாடு சென்றடைந்தார். அரசனுக்குத் தன் பெருமைகளை எடுத்துக் கூறி மன்னனின் மதிப்பிற்குள்ளாகிப் பரிசுகள் பல பெற்றுச் சென்றார். பின்னர் மேலப்பாளையத்தில் தங்கி, முகைதீன் ஆண்டவர் திருப்புகழ், முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ், நூல்களைப் பாடி டுனைெய் பரிசுகள் பல பெற்றுச் சென்றார்.“ பிள்ளைத்தமிழ், மாணிக்கமாலை ஆகிய நூல்களைப் பாடி அருளினார். இவரும் திருப்புகழ் சந்தத்தில் பாக்கள் புனைந்துள்ளார்.

**குணங்குடி மஸ்தான் சாகிபு**

“கல்தான் அப்துல் காதிறு“ - என்னும் இயற்பெயர் கொண்ட இவர் ஒரு அத்தர் வியாபாரி ஆவார். 1788-1835 வரை 47 ஆண்டுகளே இம்மணுலகில் வாழ்ந்தவர். திருமணத்தன்றே மனைவியாக வர இருந்த பெண்ணை விடுத்துச் துறவறம் மேற்கொண்டார். சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைகளிலும், காடுகளிலும் தனித்து வாழ்ந்து முற்றிய மோனத்தில் ஞானம் பெற்றவர்.

நாகூர், காரைக்கால், சென்னை ஆகிய இடங்களில் தங்கிப் பல அற்புதங்களை நிகழ்த்தி தன் பாடல்களையும், கீர்த்தனைகளையும் சென்னை நகரத் தெருக்களில் இசையோடு வாய்விட்டுப் பாடிக்கொண்டு திரிந்தார். குருநிலை, தவநிலை, துறவுநிலை, நியமநிலை, காட்சிநிலை, தியான நிலை, சமாதி நிலை முதலியவை குறித்துச் சிறந்த பாடல்கள் புனைந்துள்ளார். தாயுமானவர், பட்டினத்தார் போன்றோரது பாடல்களில் ஈடுபாடு கொண்டு அவர்களின் அடிச்சுவட்டில் சந்தமும், கருத்தும் அமையப் பராபரக்கண்ணி, எக்காலக்கண்ணி, மனோன்மணிக்கண்ணி, நந்தீஸ்வரக்கண்ணி, சதகம், ஆனந்தக் களிப்பு போன்றவற்றை இயற்றியுள்ளார். இவை பண்டாரங்கள் போன்ற ஏழை எளிய மக்களால் பெரிதும் விரும்பிப் பயிலப்பட்டன. இவரது பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டுக் குணங்குடி மஸ்தான் சாகிபு திருப்பாடல்கள் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளன. திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் இவர் மீது "நான்மணிமாலை" ஒன்று பாடியுள்ளார். இதில் "கடல் சூழ் புவியில் உள்ளத்து இருளைக் கருணை ஒளியினாற் களைந்து, விடல் சூழ்பவரில் குணங்குடியான் மிக்கோன்" - என்று பாராட்டியுள்ளார். ஐயாசாமி முதலியார் என்பவர் "குணங்குடி நாதர் பதிற்றுப் பத்தந்தாதி" என்றொரு நூலை இவர் மீது பாடியுள்ளார்.

**செய்குத்தம்பிப் பாவலர்**

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புலவரான இவர் ஒரு சதாவதானி ஆவார். ஒரே நேரத்தில் நூறு செயல்களுக்கான நினைவு ஆற்றலுடையவர் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த இலங்கடை என்னும் ஊரைச் சேர்த்தவர். சங்கரநாராயணன் என்னும் சான்றோரிடம் கல்வி கற்றுத் தேர்ந்தவர். யாழ்ப் பாணத்துக் கதிரைவேற்பிள்ளை, ஆறுமுகநாவலர் ஆகியோர் வள்ளலாரின் தெய்வத் தமிழ்ப் பாக்களான "அருட்பாவை" மதியை மயக்கும் "மருட்பா" என்று பிரச்சாரம் செய்து வந்தனர். இக்கருத்தை மறுத்து ஏற்பட்ட அருட்பா மருட்பா பூசலில் மருட்பா கட்சியினர் வெளியிட்ட "மருட்பா மறுப்பு" என்னும் நூலின் பெயரையே அடிப்படையாகக் கொண்டு வாதிட்டு, மருட்பாவை மறுத்தால் அது அருட்பா என்று கூறி வள்ளலாரின் பெருமையையும், அவரின் திருவருட்பாவின் சிறப்பையும் உலகறியச் செய்தவர்.

இவர் 1907 - ஆம் ஆண்டு சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் பெரும் புலவர்கள் பல்லோரின் முன்னிலையில் தனது சதாவதானத் திறமையை நிரூபித்துக் காட்டிப் பாராட்டு பெற்றார். 1950 - ஆம் ஆண்டு தனது 74 - வது வயதில் இறைவனடி சேர்ந்தார். இவர் மறைவு குறித்துக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் இரங்கற்பா ஒன்று பாடியுள்ளார். இவருக்குபின் தசாவதானம் செய்யும் சான்றோர் தோன்றி உள்ளனரேயன்றி சதாவதானிகள் எவரும் இன்று வரைத் தோன்றியதாகத் தெரியவில்லை.

**இயற்றியுள்ள நூல்கள்**

திருநாகூர்த் திரிபந்தாதி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்து, நாயகமான்மிய மஞ்சரி, நீதி வெண்பா, அழகப்பக் கோவை, ஷம்சுந்தாசீம் கோவை ஆகிய நூல்களைப் பாடியுள்ளார்.

**சர்க்கரைப்புலவர்**

கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் நகைச்சுவைப் புலவராகத் திகழ்ந்தவர். அரேபியாவிலுள்ள முகமதியப் புண்ணியத் தலமான மதினா நகரைச் சிறப்பித்து “மதினா அந்தாதி“ எனும் சிற்றிலக்கியம் படைத்துள்ளார்.

**குலாம்காதிறு நாவலர்:**

நூற்றாண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து இலக்கிய நயமும் நகைச்சுவையும் பொருந்திய புலவர் ஆற்றுப்படை எனும் நூலை இயற்றியுள்ளார். இலக்கியகளைத் நூற்றுக்கணக்கான முகம்மதியப் புலவர்கள் தோன்றிய வண்ணம் உள்ளனர். மத சம்பந்தமான நூல்களையும் மதத் தலைவர்கள் வாழ்க்கை வரலாற்று நூல்களையும் பலர் இயற்றியுள்ளனர். ஒருசில உரைநடை நூல்களும் இயற்றி யுள்ளனர். இப்ராஹிம் புலவரின் திருமதீனத் தந்தாதியும், தற்கலை பீர் முகம்மது சாகிபின் ஞான மணிமாலை, ஞானக்குறம், ஞானரத்தினது குறவஞ்சி, ஞானப்பாட்டு ஆகியவையும் குறிப்பிடத் தக்கவை. திருக்கச்சூர் நொண்டி நாடகம், திருக்காரணச் சிங்காரக் கும்மி போன்றவை முகமதியரின் சிறந்த படைப்புகள். இவ்வாறு முகமதியச் சான்றோர்கள் பலர் முத்தமிழுக்கும். முழுமூச்சுடன் முனைப்போடு தொண்டு செய்து வரக் காணலாம்.

**கிறிஸ்தவத் தமிழ்த்தொண்டு**

தமிழகம் சங்ககாலத்திற்கும் முற்பட்ட காலத்திலிருந்தே யவனர் எனும் ஐரோப்பிய நாட்டவருடன் வாணிக- உறவு கொண்டு விளங்கியதைச் சங்க இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. யவனரைத் தொடர்ந்து இசுலாமியர் அரபு நாடுகளிலிருந்து வந்து வாணிபம் செய்து பெரும்செல்வம் குவித்தனர். இதுகண்டு போர்ச்சுக்கல், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரான்சு போன்ற பிற ஐரோப்பிய நாட்டவரும் தமிழகத்தோடு தொடர்பு கொள்ள விழைந்தனர். இவர்கள் வெறும் வணிகத் தொடர்போடு நில்லாமல் தம் சமயத்தையும் பரப்ப முற்பட்டனர். சமயப்பிரசாரத்திற்காகக் கிறிஸ்தவமதப் பாதிரிமார்களையும் உடன் அழைத்து வந்தனர். பாதிரிமார்கள் கிறிஸ்தவத்தைப் பரப்பும்தொண்டினைச் செய்தனர்.

சங்ககாலத்தில் சிறந்திருந்த சைவ, வைணவ சமயங்கள், சங்கம் மருவிய காலத்தில் களப்பிரர் வருகையால் சிறப்புக்குன்றிப்போக சமண பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்றன. மீண்டும் பக்தி இயக்கத்தினால் பல்லவர்கால முதல் நாயக்கர் காலம் வரை சைவ வைணவ சமயங்களின் செல்வாக்கு மிகுந்திருந்தது. இசுலாமியர் ஆட்சியால் இசுலாம் சமயமும் பரவியது. அடுத்து ஐரோப்பியர் வருகையால் கிறிஸ்தவம் பரவி வேரூன்றியது. வாணிகத்திற்காக வந்தவர்கள் நாட்டை ஆளவும் தலைப்பட்டனர். அதிலும் ஆங்கிலேயர் சாதுரியமாக இந்தியாவையே தன் அடிமைப்படுத்தி ஆளத்தலைப்பட்டனர். தம் ஆளுகைக்கு உட்பட்ட இந்தியாவில் தம் சமயத்தைப் பரப்ப முயன்றனர். சிறப்பாகத் தமிழகத்தில் தம் பணியைச் செய்தனர். இப்பணியில் மொழியின் முக்கியத்து வத்தை உணர்ந்து முதலில் தமிழைப் பயின்றனர். பயிலப்பயில் பைந்தமிழின் இனிமையில் தம்மை மறந்து மனத்தைப் பறிகொடுத்து தமிழ்த் தொண்டு செய்யத் தலைப்பட்டனர். ஐரோப்பியர் வருகையால் தமிழ் பெற்ற நலன்கள் இவ்வைரோப்பியர் தம்மை மறந்த நிலையில் தமிழுக்குத் தொண்டு பல செய்கிறோம் என்பதை அறியாமல் தமிழுக்குத் தொண்டு செய்தனர். ஆனால் ஐரோப்பியப் பாதிரிமார்களால் மதமாற்றம் செய்யப் பெற்ற தமிழ்க் கிறிஸ்தவர்கள் அறிந்தே தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று உணர்ந்தே தொண்டு செய்தலர். இவ்வாறாகக் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தமிழ்த் லாண்டு செய்து அழியாப் புகழ்பெற்றனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் - ராபர்ட் டி-நொபிலி (சுழடிநசவ-னந ழேடிடை) வீரமாமுனிவர் ’ சீகன் பால்குஐயர், எல்லீஸ் துரை, கால்டுவெல் போன்ற அயல்நாட்டவர்களும், ர்.யு. கிருட்டினப்பிள்ளை, வேதநாயகம் பிள்ளை, வேதநாயக சாஸ்திரி, சாமுவேல் பிள்ளை போன்றஉள்நாட்டுக் கிறிஸ்தவர்களும் ஆவர்.

**தத்துவபோதகர்:(1577-1656)**

(Robert-de-Nobili): இத்தாலி நாட்டைச் சேர்ந்த இவர் 1606-ல் தமிழகம் வந்தார். இயேசுசபைக் குருவான இவரது இயற்பெயர் இராபர்ட்டி-நொபிலி (Robert-de-Nobili) ஆகும். உயர்குல இந்துக்களைக் கிறிஸ்தவராக்கும் நோக்கத்தோடு வந்ததால் தனது உடை பாவனைகளிலும் மாற்றம் தேவை என்பதை நடை உடை உணர்ந்து, அந்தணர்களைப் போன்று தானும் உடையுடுத்துப் பூணூல் அணிந்து வாழத்தொடங்கினார். மதுரையில் சபை நிறுவி 45 ஆண்டுகள் சமயப்பணி புரிந்தார். தத்துவ போதகர் என்று தம் பெயரையே மாற்றிக் கொண்டு“ தமிழ்நாட்டுத் துறவிபோல் வாழ்ந்து வந்தார். மதச் சார்புடைய வடமொழி கலந்த பல தமிழ் உரைநடை நூல்கள் இயற்றியுள்ளார். மதுரையில் வாழ்ந்த இவர் 1656-ல் மைலாப்பூரில் காலமானார். தமிழ் உரைநடையைச் செப்பம்செய்தசிறப்புக்குரியவர்.

**இயற்றிய நூல்கள்:**

யேசுநாதர் சரித்திரம், மந்திரமாலை, தத்துவக் கண்ணாடி. புனர்ஜென்ம ஆட்சேபம், ஞானதீபிகை, நீதிச்சொல், ஞானோபதேச காண்டம் போன்ற பத்துக்கும் மேற்பட்ட உரைநடை நூல்கள் எழுதியுள்ளார். ஆனால் இவற்றுள் பல அச்சேறாத காரணத்தால் அழிந்துபட்டன. தமிழ்- போர்ச்சுக்கீசிய அகராதி ஒன்றும் தொகுத்துள்ளார். இவர் ஒருமுறை துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுடன் சமயவாதம் செய்ததாகவும் தெரிகிறது.

**வீரமாமுனிவர்(1680-1746)**

இவரும் இத்தாலி நாட்டவரே. இவரது இயற்பெயர் கன்ஸ்டண்டின் ஜோசப் பெஸ்கி (Constantine Joseph Beschi). இவர் கி.பி. 1700-இல் தமிழகம் வந்து மதுரையில் தங்கி அங்கு சுப்ரதீபக் கவிராயரிடம் தமிழ் பயின்றார். தமிழோடு தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளையும் பயின்றார். தனது முப்பதாவது வயதில் தமிழ்நாடு வந்து ஏறக்குறைய 37 ஆண்டுக்காலம் தமிழகத்தில் தங்கி, மதப்பணிபுரிந்த ஏசுசபைக் குரு ஆவார். இத்தாலி நாட்டவரான இவர் தனது தாய் மொழியான இத்தாலி மொழியோடு, ஏனைய கிரேக்கம், இலத்தீன்' எபிரேயம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார். சந்தா சாகிப் அவர்களால் பெரிதும் பெருமைப் படுத்தப்பட்டவரான இச்சான்றோர் தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டுகள் அநேகமாகும்.

**எழுத்துச்சீர்திருத்தம்:**

"எ" கர "ஒ" கரக் குற்றெழுத்துக்கள் மேலே புள்ளியிட்டும் நெட்டெழுத்துக்கள் புள்ளி இடாமலும் எழுதப்பட்டு வந்தன. இதனால்வந்த தடுமாற்றத்தை மாற்ற இவரே "எ"கர ஓகரங்களுக்குக் கீழே கோடிட்டும், சுழித்தும் "ஏ" ஓ" நெட்டெழுத்துக்களை உருவாக்கித்தந்தார். ஒற்றைக்கொம்பு என வழங்கப்படுகின்ற "ெ" எழுத்து ஒன்றே முதலில் பழக்கத்தில் இருந்தது. இக்கொம்பெழுத்துக்களின் மீது கெ். செ், டெ் என்று புள்ளி வைத்து எழுதினால் குற்றெழுத்துக்களாகவும், புள்ளி பெறாமல், கெ, செ, டெ என்று எழுதப்படின் நெட்டெழுத்துக்களாகவும் கொள்ளப்பட்டன. இதனால் ஏற்பட்ட குழப்பத்தையும் இவரே நீக்கினார். குற்றெழுத்துக்களுக்குக் கொம்பிடும் போது புள்ளி இடாமலும், கொம்பின் மேலே சுழித்து "ே" என்று எழுதுவதன் மூலம் நெடிலையும் வேறுபடுத்திக் காட்டினார். இம்முறையே இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றது என்பது இவரின் தமிழ்த் தொண்டிற்குச் சிறந்தசான்றாகும்.

**இலக்கண நூல் :**

ஐந்திலக்கண நூலான “தொன்னூல் விளக்கம்“ என்னும் இலக்கண நூலை யாத்தளித்தார். இதன் சிறப்பு நோக்கி இதனைக் குட்டித் தொல்காப்பியம்“ என்று அனைவரும் பாராட்டிக் கூறினர். உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் காணப்படும் தமிழ்மொழி இலக்கணத்தை முறையே கொடுந்தமிழ் இலக்கணம்“ “செந்தமிழ் இலக்கணம்“ என்று எழுதி அதனை இலத்தீன் மொழியிலும், ஆங்கில மொழியிலும் மொழி பெயர்த்தளித் துள்ளார். இவரது இவ்வாராய்ச்சித்திறம் பு.ரு. போப் அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. டாக்டர். கால்டு வெல் அவர்களின் ஒப்பிலக்கண ஆராய்ச்சிக்கு இவரது இம் முயற்சி பெரிதும் துணைபுரிந்துள்ளது.மொழி பெயர்ப்பு நூல்

திருக்குறளின் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் பெயர்த்துள்ளார். இது உலகப் புகழ்பெற்ற மொழிபெயர்ப்பாகவிளங்குகின்றது.

**அகராதி நூல்கள் :**

சதுரகராதி எனும் அகராதி நூலை வெளியிட்டுப் பிற்கால அகராதி நூல்களுக்கெல்லாம் வழிகாட்டினார். இதில் பெயர், பொருள். தொகை, தொடை எனும் நான்கு அதிகாரங்களை அமைத்து சதுரகராதி என்று பெயரிட்டு அழைத்தார்.

**தமிழ் இலத்தீன் அகராதி:**

இதில் 900 தமிழ்ச் சொற்களுக்கு இலத்தீன் மொழியில் பொருள் விளக்கம் தந்துள்ளார். போர்த்துக்கீசியம்-தமிழ்-இலத்தீன் அகராதி ஒன்றும் எழுதியுள்ளார். இவரது இவ்வகராதிகள் போர்த்துக்கீசியர். இத்தாலியரும் தமிழைக் கற்கப் பேருதவி புரிந்தன.

**உரைநடைநூல் :**

**பரமார்த்தகுருகதை:**

நயமும், நகைச்சுவையும் நிரம்பிய இந்நூல் சிறந்த கதை நூலாகும். தமிழில் முதன் முதலாகத் தோன்றிய தலைசிறந்தஏளன (Satire) இலக்கியமாக இது திகழ்கின்றது. கற்றோரும், மற்றோரும் ஒருசோப் போற்றும் பெருமைக்குரியது. இந்நூல் தெலுங்கு, சன்னடம் ஆகிய இந்திய மொழிகளிலும், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய அயல் மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளமை இதன் பெருமையைப் புலப்படுத்தும். மேலும் வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், பேதகம் மறுத்தல், லூத்தர் இனத்தியல்பு போன்ற பல உரைநடை நூல்கள் எழுதி உரைநடைத் தமிழைவளர்த்தார்.

**செய்யுள் நூல்கள்:**

**தேம்பாவணி:**

தேவரின் சிந்தாமணி போன்று கிறிஸ்துவமதச் சார்புடைய காப்பியம் ஒன்று செய்ய விழைந்தார். இதன் விளைவே இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரின் வர வாற்றைக் கூறும் “தேம்பாவணி“ ஆகும். கம்பரது கவிநலம் செறிந்த இந்நூலைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றினார். அவ்வமயம் இந்நூலின் சிறப்பும் பெருமையும் கண்டு மகிழ்ந்த சான்றோர் இவருக்கு “வீரமாமுனிவர்“- என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தனர்.

தேம்பாவணி நூல் 3 காண்டங்களையும், 3615 விருத்தப் பாக்களையும், 6 படலங்களையும் கொண்ட காவியமாகும். இக்காப்பியத்தின் கவிச்சுவையிலும், கருத்துச் சுவையிலும் மனம் பறி கொடுத்த சான்றோர் பலர் இதனைப் பலபடப் பாராட்டியுள்ளனர். கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் “சாரமாம் தேம்பாவணியினைத் தொடினும், தமிழ் மனம் கமழும் என் கரமே“- என்று பாராட்டியுள்ளார்.

திரு. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் இது சீவக சிந்தாமணிக்கு இணையான காவியமாகும் போற்றுகின்றார். என்று பிஷப் கால்டுவெல் அவர்கள் தமிழ் இலக்கியத்தில் தலைசிறந்த நான்கு காவியங்களுள் தேம்பாவணியும் ஒன்று என்று கூறுகின்றார்.

திருக்காவலூர்க் கலம்பகம்: திருக்காவலூரில் எழுந்தருளி யுள்ள தேவமாதாவின் மீது பாடப்பட்ட சந்த இன்பம் செறிந்த நூலாகும். இதில் 101 பாக்கள் அடங்கியுள்ளன.

**கித்தேரி அம்மாள் அம்மானை:**

போர்த்துக்கீசிய நாட்டு வேதசாட்சியான சித்தேரி அம்மாள் மீது பாடப்பட்டுள்ள இந்நூல், இனிய எளியநடையில் பாமரரும் படித்தின் புறக் கூடிய தன்மையதாக அமைந்துள்ளது.

**அடைக்கல நாய்கி வெண்பா:**

தஞ்சையை ஆட்சிபுரிந்து வந்த மராட்டிய மன்னனால் துரத்தப்பட்ட கிறித்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துக் காத்த திருக்காவலூர் தேவமாதாவின் மேல் பாடப்பட்டதாகும்.

**தமிழ்ச்செய்யுள் தொகை:**

இது தமிழிலுள்ள நயமான நீதி நூல்களின் தொகுப்பு ஆகும்

**அருஞ்சொற் பொருள்:**

வேய் - மூங்கில்

கண்டம் -கழுத்து

வையம் - உலகம்

கதிரவன் - ஞாயிறு

ஆழி - கடல்

**தொகுப்புரை**:

தமிழ் மொழி வரலாற்றில் பக்தி இயக்க காலமாக அறியப்படுவது பல்லவரின் ஆட்சி காலம் ஆகும். சமண, பௌத்த சமயத் தாக்கம் மிகுதியாக இருந்து சைவ, வைணவ சமயங்கள் மறுபலர்ச்சி உற்றன. சைவ அடியார்களும் வைணவ ஆழ்வார்களும் தோன்றி சமய மலர்ச்சியுற செய்ததோடு தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் வித்திட்டனர்.

சைவ மடங்கள் தோன்றி தமிழ்ப்பணி ஆற்றின. சமண, பௌத்த சமயத்தினர் பல தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படைத்தனர்.

**பயிற்சி வினாக்கள் :**

1.திருவாவடுதுறை ஆதீனமடத்தை நிறுவியவர் யார்? நமச்சிவாயமூர்த்திகள்

2 தருமபுர ஆதீன மடம் யாரால் நிறுவப்பட்டது? குருஞான சம்பந்த தேசிகரால்

3 குருஞான சம்பந்தர் எழுதியுள்ள நூல்கள் எத்தனை ? 8

4 திருக்குறள் உரைவளம் எனும் நூல் எந்த மடத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது? "தருமபுர ஆதீன மடம்"

5. தருமபுர ஆதீன மடத்தின் சார்பாக வெளிவரும் இலக்கிய இதழ் எது? ஞான சம்பந்தம்

6 ஞான சம்பந்தம் எனும் இலக்கிய இதழ் எத்தனை ஆண்டுக் காலமாக வெளி வருகின்றது? 42 ஆண்டுகள்

7 திருப்பனந்தாள் காசிமடம் யாரால் எந்த ஆண்டு நிறுவப்பட்டது தில்லை நாயக சுவாமிகளால் - 1720-ஆம் ஆண்டு

8 தருமபுரத்தின் சிஷ்ய மடம் எது ? திருப்பனந்தாள் காசிமடம்

9. திருப்பனந்தாள் காசிமடத்தின் சார்பாக வெளிவரும் திங்களிதழ் எது? குமரகுருபரன்

10. இன்றுள்ள சைவ மடங்களுள் காலத்தால் முற்பட்ட மடம் எது? மதுரை மடம்

11. திருஞான சம்பந்தர் திருமடம் என்று வழங்கப்படுவது எந்த மடம் ? மதுரை மடம்

12. வீரசைவ மடங்களை நிறுவியவர் யார்? துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

13. சேக்கிழார் பிள்ளைத் தமிழை வெளியிட்ட மடம் எது? திருப்போரூர் மடம்

14. திருப்போரூர் மடம் யாரால் தோற்றுவிக்கப்பட்டது? ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகளால்

15. கி.பி.5-ஆம் நூற்றாண்டில் மதுரையில் தோற்றுவிக்கப் பட்ட சங்கம் எது? இதனைத்தோற்றுவித்தவர் யார்? திரமிள சங்கம், வச்சிர நந்தி

16 கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் சமணத்தைத் தழுவி இருந்த பல்லவ, பாண்டிய அரசர்கள் யார்? மகேந்திர பல்லவன், கூன் பாண்டியன்

17. சைவசமயக் குரவர்களுள் சமணத்தின் செல்வாக்கைக் குறைத்த பெருமைக்கு உரியவர் யாவர்? அப்பர், சம்பந்தர்

18. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுல் சமணர் எழுதிய நீதி நூல்கள் எவை? நான்மணிக்கடிகை, பழமொழி, ஏலாதி நாலடியார். சிறுபஞ்சமூலம்,

19. கம்பரையும், நச்சினார்க்கினியரையும் மெய்மறக்கச் செய்த சமணக் காப்பியம் எது? சீவக சிந்தாமணி

20. நன்னூலின் ஆசிரியர் யார்? பவணந்தியார்

21. நம்பியகப்பொருளின் ஆசிரியர் யார்? நாற்கவிராச நம்பி

22. அமிதசாகரர் இயற்றிய இலக்கண நூல்கள் எவை? யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கல விருத்தி

23. குணவீரப் பண்டிதர் இயற்றிய இலக்கண நூல்கள் எவை? நேமிநாதம், வச்சணந்திமாலை

24. நன்னூலுக்கு உரைவகுத்தவர் யார்? மயிலைநாதர்

25. சூடாமணி நிகண்டின் ஆசிரியர் யார்? மண்டல புருடர்

26. சேந்தன் மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க இயற்றப் பட்ட நிகண்டு நூல் எது? சேந்தன் திவாகரம்

27. சேந்தன் திவாகரம் யாரால் இயற்றப்பட்டது ? திசாகர முனிவரால்

28 பிங்கல நிகண்டின் ஆசிரியர் யார் ? பிங்கல முனிவர்

29. நற்றிணையில் 72 - ஆம் பாடலைப் பாடியவர் யார்? இளம் போதியார்

30. அரசமர வழிபாடு எந்த மத தொடர்பால் இந்துச் சமயத்தில் புகுந்ததாகக் கருதப்படுகிறது? பௌத்தசமயம்

31 பெருங்காப்பியங்களுல் பௌத்த சமயச் சார்புடையவை எவை ? மணிமேகலை, குண்டலகேசி

32. ஆசிய ஜோதி எனும் நூலின் ஆசிரியர் யார்? கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

33. ஆசிய ஜோதிக்கு மூல நூல் எது? அதன் ஆசிரியர் யார்? Light of Asia எனும் கவிதை நூல்' ஆசிரியர் - எட்வின் ஆர்னால்டு

34. வீரசோழியம்யாரால் இயற்றப்பட்ட இலக்கண நூல்? புத்தமித்திரரால்

35. வீரசோழியத்திற்கு உரை எழுதியவர் யார்? புத்தமித்திரரின் மாணவரான பெருந்தேவனார்

36. சீறாப்புராணத்தின் ஆசிரியர் யார்? உமறுப்புலவர்

37. எட்டயபுரம் அரசவைக் கவிஞர் யார்? கடிகை முத்துப் புலவர்

38. உமறுப்புலவருடன் வாதிட்ட வடநாட்டுப் புலவர் யார்? வாலைவாரிதி

39. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் யார்? சீதக்காதி

40. சீறாப்புராணம் எனும் சொல்லின் பொருள் யாது? வாழ்க்கை வரலாறு

41. சீறாப்புராணம் எத்தனை காண்டளைக் கொண்டது அவை யாவை?

3 காண்டங்கள். 1. இஜ்ரத்து காண்டம், 2. விலாதத்து காண்டம், 3. நுபுவத்துக் காண்டம்

42 சீறாப்புராணம் யார் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது ? அப்துல்மரைக் காயர்

43. வண்ணக்களஞ்சியப் புலவரின் இயற்பெயர் என்ன? "ஹமீது இப்ரகீம்"

44. சேகனாப் புலவரின் பள்ளித்தோழர் யார்? குணங்குடி மஸ்தான் சாகிபு

45. காசிம் புலவர் யாரிடம் கல்வி கற்றார்? திருவடிக் கவிராயரிடம்

46. காசிம் புலவருக்கு நபிகள் நாயகம் எடுத்துக் கொடுத்தசொல் எது?

பகரும்

47. சவ்வாதுப் புலவர், காசிம் புலவரை எவ்வாறு பாராட்டியுள்ளார்? "மதுரகவி"

48. வசைபாடுவதில் காளமேகப் புலவரை ஒத்து விளங்கிய முகமதியப் புலவர் யார்? சவ்வாதுப் புலவர்

49. சவ்வாதுப் புலவர் எந்த ஊரைச் சேர்ந்தவர்? எமனீச்சுரம்

50. சவ்வாதுப் புலவர் பாடியுள்ள நூல்கள் எவை?

1. நாகைக் கலம்பகம், ஆண்டவர் பிள்ளைத்தமிழ்

2. மதீனத்தந்தாதி. 3. முகைதீன்

51. குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களின் இயற்பெயர் யாது? சுல்தான் அப்துல்காதிறு

52. குணங்குடி மஸ்தான் சாகிபு எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்? 47

53. குணங்குடியார் பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன? குணங்குடி மஸ்தான் சாகிபு திருப்பாடல்கள்

54. குணங்குடியார் மீது பாடப்பட்டுள்ள அந்தாதி எது? இதன் ஆசிரியர் யார்? குணங்குடி நாதர் பதிற்றுப் பத்தந்தாதி' ஐயாசாமி முதலியார்

55. சதாவதானி என்றால் என்ன? ஒரே நேரத்தில் 100 செயல்களுக்கான நினைவாற்றல் உடையவர்

56. செய்குத்தம்பி பாவலர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? நாஞ்சில் நாட்டு இலங்கடை எனும் ஊர்

57. செய்குத்தம்பிப் பாவலர் யாரிடம் கல்வி கற்றார்? சங்கரநாராயணன்

# அலகு - 3

**காப்பியங்கள்**

**சோழர் காலம் (850-1200)**

காப்பிய இலக்கணம் - வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி - ஐஞ்சிறு காப்பியங்கள் - உதயணகுமார காவியம், நாககுமார காவியம் - யசோதர காவியம் - சூளாமணி – நீலகேசி, பிறகாப்பியங்கள் - பிம்பசாரக்கதை, மேருமந்திர புராணம் - கம்பராமாயணம் - பெரிய புராணம் - கந்தபுராணம் - ஒட்டக்கூத்தர் - செயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி - இலக்கண நூல்கள் - நம்பியகப்பொருள் - யாப்பருங்கலக்காரிகை- நேமிநாதம் - வச்சணந்திமாலை - நன்னூல் - வீரசோழியம் - தண்டியலங்காரம்

**முன்னுரை:-**

கி.பி. 9 ஆம் நூற்றாண்டு முதல் ஏறக்குறைய 400 ஆண்டுக் காலம் சோழப் பேரரசு தமிழகத்தில் சிறந்து விளங்கியது. இச்சோழராட்சிக் காலம் தமிழக வரலாற்றில் கலைத்துறையிலும், இலக்கியத் துறையிலும், தமிழ்ப் பண்பாட்டிலும் ஒரு பொற்காலமாகவே கருதப்படுகின்றது. அரசியல் சூழ்நிலை சிறந்து விளங்கியகாரணத்தால் மக்களின் சமுதாய வாழ்விலும், பொருளாதார நிலையிலும் உன்னதமான வளர்ச்சியும், உயர்வும் ஏற்பட்டன. கலையிலும் இலக்கியத்திலும் மக்கள் பேரார்வம் காட்டினர். இக்கால கட்டத்தில்தான் அதிசயிக்கத்தக்க தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில் போன்ற சிற்பக்கலை நுணுக்கமைந்த கோயில்கள் எழுந்தன. கற்கோயில்களுடன் போட்டியிட்டவாறு சொற்கோயில்களும் தோன்றின.

சமணர்களும், பௌத்தர்களும் போற்றப்பட்ட காரணத்தால் இவர்களும் தமிழ்த்தாய்க்குப் பல காப்பியங்களைப் படைத்தளித்தனர். புராணங்கள் புறப்பட்டன. கிளைகள் மரமாவது போல கிளைக்கதைகள் தனி நூல்களாக உறுப்பேற்று உயர்ந்தன. சிற்றிலக்கியங்களும் பல இலக்கண நூல்களும் இக்காலத்தில் தோன்றின. இவ்வாறு தோன்றிய இலக்கியங்கள் நன்முறையில் ஆதரிக்கப்பட்டு எங்கும் பரவின.

பல்லவர் காலத்தில் தோன்றி, எங்கும் பரவிக்கிடந்த பக்தி இலக்கியங்களான தேவார, திருவாசகங்கள் மற்றும் பிறநூல்களும் தொகுக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டது சோழர் காலத்தில்தான். சைவசமயக் குரவர்கள் முதலான சைவ அடியார்கள் பாடிய பாக்களையும் நம்பியாண்டார் நம்பி அவர்கள் தொகுத்துத்தர அவை பன்னிரு திருமுறைகள் ளென்று பெயரிட்டு அழைக்கப்பட்டன.

திருமால் அடியார்களான ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் நாதமுனிகள் அவர்களால் தொகுக்கப்பட்டு நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்களாகத் தொகுக்கப்பட்டன ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை தவிர ஏனைய நூல்களான சீவகசிந்தாமணி, வளையாபதி. குண்டலகேசி ஆகிய மூன்றும் இக்காலத்தில் தோன்றியனவே. ஐஞ்சிறு காப்பியங்களுங்கூட சோழர்கால இலக்கியங்களே. எனவே சோழர்காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் காலம் 'காப்பிய காலம்' என்று குறிப்பிடப் படுகின்றது. காப்பியங்கள் மாத்திரமின்றி கம்பராமாயணம், பெரியபுராணம், கந்தபுர நாளவெண்பா போன்ற புராணங்களும் மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப்பரணி போன்ற சிற்றிலக்கியஙகளும், நம்பியகப்பொருள், யாப்பருங்கலம், தண்டியலங்காரம், நன்னூல், வீரசோழியம், வச்சணந்தி மாலை போன்ற இலக்கண நூல்களும் கூடத் தோன்றின.

இவ்வாறு சைவ, வைணவ சமயங்களும் சமண பௌத்த மதங்களும் தமிழன்னைக்குப் பற்பல காப்பிய, புராண, சிற்றிலக்கிய, இலக்கணங்களைச் செய்து பெருமைச் சேர்த்த சோழர் காலமானது தமிழிலக்கிய வரலாற்றின் பொற்காலமாகவே கருதப்படுகின்றது.

**காப்பியம்**

பொருளால் தொடர்ந்து வரும் செய்யுள் இலக்கியம் காப்பிம் எனப்படும். இது பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என கூறாகப்பகுத்தும் அறியப்பட்டது.

**காப்பிய இலக்கணம் :**

தன்னேரில்லாத் தலைவனை உடைத்தாய், கடவுள் வாழ்த்து, மலைகடல், நாடு, நகர், பருவங்கள், சூரியோதயம், சந்திரோதயம் பற்றிய வருணனைகள், திருமணம், முடிபுனைதல், பொழில் விளையாட்டு, புனல் விளையாட்டு, புதல்வர்ப்பேறு, புலவி, கல்வி, மந்திராலோசனை, தூதுவிடுத்த போர் செய்தல், வாகை சூடுதல் முதலிய உறுப்புக்களைப் பெற்று அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினை வற்புறுத்துவதாக, சருக்கம், இலம்பகம் ஆகிய பிரிவுகளை உடையதாய், எண்வகைச் சுவையும், பாவமும் விளங்கச் செய்திகளைக் கூறுவதாய் அமைவது பெருங்காப்பியம் எனப்படும். இவற்றுள் ஒன்றிரண்டு குறைந்து வருவது சிறு காப்பியம் எனப்பட்டது. காப்பியங்கள் ஒரு மொழியின் வளப்பந்தைப் புலப்படுத்துவதைக் காணலாம்.

காப்பியம் என்பதே காவியம் என்னும் வடசொல்லின் திரிபு என்று கூறப்படும் கருத்து ஆராயப்பட வேண்டிய ஒன்று. ஏனெனில் காப்பியம் என்னும் சொல் தமிழுக்குப் புதியதன்று. காப்பியம், காப்பியாறு, காப்பியக்குடி என்று முறையே ஊர், ஆறு குடிப்பெயர்களைக் குறித்த சொற்கள் பழங்கால முதலே தமிழில் வழங்கி வந்துள்ளன.

மேலும் காப்பியாற்றுக் காப்பியனார். பல்காப்பியனார் போன்ற பெயர்களும் காணப்படுகின்றன ”வீரசோழிய உரைச் செய்தி, காப்பியம் என்ற சொல்லிற்கு இலக்கணம்“ என்ற பொருளைக் கொள்வதற்குச் சான்றாக அமைகின்றது எனவும் முன்பு காப்பியம் என்ற மொழி மரபுகளைக் காத்தற்குரிய இலக்கண நூலைக் குறித்த தெனவும்” டாக்டர்.இரா. காசிராசன் கருதுவர். இவை அனைத்தும் காப்பியம் என்றசொல்லின் பழமையை உணர்த்தும். மணிமேகலைக் காப்பியத்தில், ‘நாடகக் காப்பிய நன்னூல்’ (0780) எனவரும் தொடரை நோக்க, காப்பியம் எனும் தொடர் முதலில் இலக்கணத்தைக் குறித்துப் பின்பு மொழி மரபுகளை விரிவாகப் பேணிக் காக்கும் பெருநூல்களைக் குறித்தது எனவும் தெரிகிறது. தொடர் நிலைச் செய்யுள் எனவும் காப்பியத்தை அழைப்பர். ஐப்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம் என்பது பிற்காலத்தில் ஏற்பட்ட வழக்கே. இப்பெயர் பாகுபாட்டிற்கான விளக்கம் தெளிவாக இல்லை என்பது திரு. கி.வா.ஜகன்நாதன் போன்றோர் கருத்து வடமொழியில் நைடதம், இரகுவம்சம், குமார சம்பவம், கிராதார் ஜுனீயம், சிசுபாலவதம் எனும் ஐந்து நால்களும் ஐம்பெருங்காப்பியங்கள் எனப்படுகின்றன. இவ்வழக்கையொட்டி தமிழிலும் ஐம்பெருங்காப்பியம் என்னும். வழக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று அறிஞர்கள் எண்ணுகின்றனர். தமிழில் சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி சீவகசிந்தாமணி ஆகிய ஐந்து நூல்களும் பெருங்காப்பியங்கள் என்று குறிக்கப்படுகின்றன. இவற்றுள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும், சங்கம் மருவிய காலத்து நூல்கள். வளையாபதியும், குண்டலகேசியும் முழுமையாகக் கிடைக்கவில்லை.

**வளையாபதி:**

தமிழன்னையின் வளையலாகத் திகழும் இக்காப்பியம் முழுவதும் கிடைக்கவில்லை. இது ஒரு சமண நூலாகும். இதன் ஆசிரியர் யார் என்று அறியகூடவில்லை. இதன் கதை வைசிய புராணத்தால் அறியப்படுகின்றது. இது தவிர அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களின் உரைகளிலும் சிலப்பதிகாரம், யாப்பருங்கல விருத்தி ஆகிய நூல்களிலும் இதன் பாடல்கள் மேற்கொள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன. இவ்வாறு ஆங்காங்கு எடுத்தாளப்பட்டுள்ள பாடல்களாக மொத்தம் 72 பாடல்களே கிடைத்துள்ளன. விருத்தப்பாவின் முன்னைய வளர்ச்சி நிலையினை இதில் காணலாம். நாலடியாகவும், ஆறடியாகவும் இரண்டடி வேறு எதுகை பெற்றனவாகவும் வருவதான் வரிப்பாடல் போலவும், கலித்துறை போலவுமிருந்து வளர்ந்து யாப்புத் தன்மையை இதில் காணமுடிகிறது. ‘ஒட்டக்கூத்தர் கவியழகு வேண்டி வளையாபதியை நினைத்தார’ - என்று ஒட்டக்கூத்தரின் தக்கயாகப்பரணியின் உரையாசிரியர் குறிப்பிடுவர். இதனை நோக்கும் பொழுது ஒட்டக்கூத்தரே நினைக்கும் அளவுக்குக் கவிதைச் சிறப்பு மிக்கதாகவும் சமணக் காப்பியமாயினும் சைவர்களும் போற்றும் அளவுக்குச் சிறந்து

விளங்கியது என்பதும் தெளிவாகின்றது. இதன் பா அமைப்பை நோக்க, இது சீவகசிந்தாமணிக்குக் காலத்தால் முற்பட்டது என்பது டாக்டர் தெ.பொ.மீ. அவர்களின் கருத்து

“செந்நெல் அங்கரும்பினோடு இகலும் தீஞ்சுவைக்
கன்னலங் கரும்புதன் கமுகைக் காய்ந்தெழும்
இன்னவை காண்கிலன் என்று பூகமும்
முன்னிய முகில்களால் முகம்புதைக்குமே”

எனும் பாடல் புலவரின் கற்பனை வளத்திற்கோர் எடுத்துக் காட்டு. குறட்கருத்துக்கள் பலவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. களவால் வரும் பொருளைக் கைப்பற்றாமை, கொலையோடு கூடிய அறங்களை மேற்கொள்ளாமை, பொருளில்லவரை இகழாமை, ஆராயாது நட்பு கொள்ளாமை, பிறன்மனை நாடாமை போன்ற அறங்களை வற்புறுத்தும், நீதி நூலாகவே இது விளங்குகின்றது.

கள்ளன்மின் களவு ஆயின யாவையும்
கொள்ளன்மின் கொலை கூடிவரும் அறம்
என்னன்மின் இலர் என்று எண்ணியாரையும்
நள்ளன்மின்: பிறர் பெண்ணோடு நண்ணன்மின்“

என்பதே அப்பாடல். மக்கட் பேற்றைச் சிறப்பிக்கும் பாடல்

“பொறையிலா அறிவுபோகப் புணர்விலா இளமைமேவத்
துறையிலா வனசவாளித் துகிலிலாக் கோலத்தூய்மை
குறையிலா மாலை கல்வி நலமிலாச் செல்வமன்றே
சிறையிலா நகரம்போலும் சேயிலாச் செல்வமன்றே”

**குண்டலகேசி :**

மறைந்து போன தமிழ் நூல்களுள் இதுவும் ஒன்று. குண்டலகேசி என்பதற்குச் “சுருண்ட கூந்தலையுடையவள்“ என்பது பொருள். தமிழ் அன்னையின் குண்டலமாகத் திகழும் இது பௌத்த காப்பியமாகும். இதன் ஆசிரியர் நாதகுத்தனார். விருத்தப்பாவால்

இயன்ற இக்காப்பியம் குண்டலகேசி விருத்தம் என்றும் குறிக்கப்படுகின்றது. இந்நூலின் வரலாறு, பௌத்த கதையாகிய தேரிகாதையின் 46 ஆம் காதையாய் அமைந்துள்ளது.

வசிகபுராணத்தின் 34 - ஆம் அத்தியாயம், கதைத்தலைவியின் வரலாற்றைக் கூறுகிறது. குண்டலகேசியின் வரலாற்றை நீலகேசி நூலின் உரை உரைக்கின்றது. அதாவது (பத்திரை என்ற வணிகமகள், காளன் என்ற கள்வனை விரும்புகிறாள். அரசனால் காவலில் வைக்கப்பட்டிருந்த அவனைத் தன் தந்தையின் உதவியால் மீட்டு மணந்து கொள்கிறாள். ஒரு நாள் பத்திரை சினத்தால் கணவனைக் கள்வன் என்று கடிந்து கூறிட அதனால் சீற்றம் கொண்ட கணவன் அவளைக் கொல்லக் கருதி வஞ்சகமாக மலை உச்சிக்கு அழைத்துச் செல்கின்றான். கணவனின் வஞ்சனையை உணர்ந்து கொண்ட பத்திரை, தற்கொல்லியை முற்கொல்வன் என்று நினைத்துச் சாகுமுன் கணவனை மும்முறை வலம்வர விரும்புவதாகக் கூறி, இறுதியில் கணவனைப் பின்னிருந்து மலை உச்சியிலிருந்து தள்ளித் கொன்று விடுகிறாள். பிறகு வாழ்வை வெறுத்து, துறவு பூண்டு புத்த சமயத்தில் சேர்ந்து முக்தி பெறுகிறாள்.)

இது ஒரு தருக்க நூலாகத் திழ்வதோடு பிற சமயக் கருத்துக்களையும் தாக்குகின்றது. உரையாசிரியர்களால் எடுத்தாளப்படும் சிறப்பு இந்நூலுக்கு உண்டு, புறத்திரட்டில் இடம பெறும் பாடல்களாகப் பத்தொன்பது பாடல்கள் காணப்படுகின்றன. வாழ்க்கையின் நிலையாமையை

"பாளையாம் தன்மைசெத்தும் பாலனாம் தன்மை செத்தும

காளையம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்

மீளும் இவ்வியல்பும் இன்னே மேல்வரும் மூப்புமாகி

நாளும் நாள் சாகின்றாமால்' நமக்கு நாம் அழுவதென்னோ!"

எனவரும் பாடல் அழகுறக் காட்டுகின்றது.

**சீவகசிந்தாமணி:**

தமிழன்னையின் மார்புப் பதக்கமாகத் திகழும் இப் பெருங்காப்பியம் ஐம்பெருங்காப்பியங்களுள் தலையாயதாகக் கருதப்படுகின்றது. சமண சமயத் துறவியும் அறிஞரும் சோழ மரபினருமான திருத்தக்க தேவரால் இயற்றப்பட்ட இக்காப்பியம் கி.பி.9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதி என்றும் கூறப்படுகின்றது. இதன் கதை வடமொழியில் உள்ள சத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி ஸ்ரீபுராணம் போன்ற நூல்களைத் தழுவியது என்பர். சைன மாபுராணத்தின் பிற்பகுதியில் இக்கதை உள்ளது.

இக்காப்பியம் பற்றிக் கூறவந்த மேனாட்டறிஞரான ஜி.யு. போப் அவர்கள் "இச்சிந்தாமணி கிரேக்க காப்பியங்களான ஒடிசி இலியட்டுக்கு ஒப்பானது" என்றும், ஆசிரியரான திருத்தக்க தேவரைத் "தமிழ்க்கவிஞருள் அரசர்" என்றும் கூறுவார். இவர் தீபங்குடியைச் சேர்ந்த திரமிள சங்கத்தைச் சேர்ந்தவராவர்.

விருத்தப்பாவாலான முதற்காப்பியம் இதுவே. இதற்கு முன்னர் எழுந்த காப்பியங்கள் எல்லாம் அகவற்பாவாலும், வெண்பாவாலுமே இயற்றப்பட்டன. சிலப்பதிகாரத்தின் கானல்வரிப் பாடல்களில் விருத்தப் பாக்களுக்கான தோற்றுவாய் காணப்படுகின்றது. அடுத்து வந்த பக்தி இலக்கியங்கள் ஒருபொருள்மேல் பத்தடுக்கி விருத்தப் பாவினைப் பயன்படுத்தின. இவற்றைப் பின்பற்றிக் கதை தழுவிய ஒரு பெருங்காப்பியத்தை அமைத்த பெருமை திருத்தக்க தேவருக்கே உரியது ஆகும். இவரைப் பின்பற்றிக் கம்பர், சேக்கிழார், கச்சியப்பர் போன்ற சான்றோர் இவ்வகை யாப்பினைக் கையாண்டு வெற்றி கண்டுள்ளனர்.

இந்நூல் - 13 இலம்பகங்களையும் 3000 மேற்பட்ட செய்யுள் களையும் உடையது. நாமகளிலம்பகம் முதல் முக்தி இலம்பகம் ஏறாகப் பதின்மூன்று இலம்பகங்களும் சீவகனின் மணவினை பற்றிக் கூறுகின்றன. இவற்றுள் நாமகள் இலம்பகம், சீவகன் கல்வி கற்றது பற்றியும், மண்மகள் இலம்பகம், சீவகன் கட்டியங்காரனை வென்று நாட்டை அடைந்தது பற்றியும் பூமகள் இலம்பகம். சீவகன் ஆட்சி எய்திய சிறப்புபற்றியும் முக்தி இலம்பகம், வீடுபேறுறக் காதலித்தது பற்றியும் கூறுகின்றது. ஏனைய ஒன்பது இலம்பகங்களுள் எட்டு இலம்பகங்கள் சீவகன். எட்டு மகளிரை மணந்த சிறப்பையும், கோவிந்தையார் இலம்பகம் நண்பன் பதுமுகனுக்குக் கோவிந்தையை மணமுடித்த செய்தியையும் கூறுகின்றன. இவ்வாறு சீவகனின் செயல்கள் அனைத்தையும் மணமாக உருவகித்துக் கூறுவதால் இது 'மணநூல்' என்றும் வழங்கப்படுகின்றது.

சமணத்துறவி ஒருவர், இவ்வாறு தொட்ட இடமெல்லாம் இன்பச்சுவை செறிந்து காணப்படும் ஒரு நூலை இயற்றியது கண்டு, இவரும் காமச்சுவை அனுபவித்தவராக இருக்கக்கூடும் என்று ஐயுற்றவர்களின் அறிவுத் தெளிவிற்காக தனது துறவின் தூய்மையை நிலைநாட்ட விரும்பி "துறவொழுக்கத்தில் தவறு இருப்பின் இவ்விரும்பு என்னைச் சுடுவதாக" எனக் கூறியவாறு பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கையிலேந்தி தனது துறவின் தூய்மையை நிரூபித்தார்

திருத்தகுமகா முனிவர், திருத்தக்க மகா முனிகள், தேவர் என்றெல்லாம் அறியப்படும் இவர் புலமை சான்ற ஆசிரியரிடம் மாணவராயிருந்து கற்பனயாவும் கற்றுத் தேர்ந்தார். சமணத் துறவியால் இன்பச் சுவை மிகுந்த நூலை இயற்ற முடியாது என்று கூறப்பட்ட குறையினை மறுப்பதற்காகவே இன்பச் சுவை மிகுந்த சீவகசிந்தாமணி

இயற்றப்பட்டது. இக்காப்பியம் இயற்ற ஆசிரியரிடம் அனுமதி கோரிய போது ஆசிரியர் இவரது திறமையினையும் மன நிலையினையும் அறியும் பொருட்டு அவ்வழியே சென்ற நரியைக் காட்டி "நரியைப் பொருளாகக் கொண்டு ஒரு காப்பியம் இயற்றுக" - என்று பணிக்கவும், இளமை, செல்வம், யாக்கை ஆகியவற்றின் நிலையாமையை விளக்கும் "நரிவிருத்தம்" எனும் நூலை இயற்றித் தனது திறமையை வெளிப்படுத்தினார். அது கண்டு மகிழ்ந்த ஆசிரியர் அனுமதி அளிக்கவே இன்பச் சுவைமிக்க காப்பியத்தை எட்டே நாளில் பாடி முடித்தார்.

இச்சிந்தாமணிக்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரை முழுமையாகக் கிடைத்துள்ளது. கம்பர், சிந்தாமணியிலும் ஓர் அகப்பை முகந்து கொண்டேன்" என்று கூறியதாகச் செவிவழிச் செய்தி ஒன்றும் உண்டு.

**கதைச்சுருக்கம்:**

ஏமாங்கத நாட்டில் இராசமாபுரத்தைத் தலைநகராகக் கொண்டு சச்சந்தன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். இவன் தன் மனைவி விசையை மீது கழி பெருங்காதல் கொண்டு, அரசாட்சியை அமைச்சன் கட்டியங்காரனிடம் ஒப்படைத்துத் தன் சுடமைகளை மறந்திருக்கிறான். காலம் பார்த்திருந்த கட்டியங்காரன் அரசனைப் புறஞ்சூழ்ந்து போரிட்டுக் கொன்று விட முயல்கையில், சூழ்ச்சி உணர்ந்த சச்சந்தன் கருவுற்றிருந்த மனைவி விசையை மயிற்பொறி ஒன்றில் ஏற்றி அனுப்பிவிட்டுச் சச்சந்தனோடு போரிட்டு மடிந்து விடுகிறான். மயிற்பொறியில் ஏறிச் சென்ற விசையை இடுகாட்டில் இறங்கி சீவகனைப் பெற்றுவிட்டுத் தவமியற்றச் சென்று விடுகின்றாள். இறந்த தன் மகனைப் புதைக்க வந்த கந்துக்கடன் எனும் வணிகன் தனித்துக் கிடந்த குழந்தையை எடுத்து வளர்க்கிறான். அச்சணந்தி என்ற ஆசிரியரிடம் கல்வியும் பிற கலைகளும் கற்றுத் தேர்ந்த சீவகன் தனது பல்வேறு ஆற்றல் காரணமாகக் காந்தருவதத்தை குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எண்மரை மணந்து கட்டியங்காரனைப் போரில் வென்று தனக்குரிய நாட்டைப் பெற்று மனைவியருடன் நல்லாட்சி செய்து வாழ்ந்து புதல்வரைப் பெற்று மகிழ்கிறான். சில ஆண்டுகளில் வாழ்க்கையின் நிலையாமையை அறிந்து, ஞானம் பெற்றுத் துறவு பூண்டு, முத்தியடைகின்றான்.

மண நூலாக விளங் இந்நூலில் கற்பனை வளமும், உவமைச் சிறப்பும் மிகுந்து காணப்படுகின்றன. இயற்கை வருணமையும் நாட்டு வளமும் சிறந்து விளங்குகின்றன.

"சொல்லரும் சூற்பசும்பாசிறந்து தோற்றம்போல்

மெல்லவே கரு இருந்துஈன்று மேவலார்

செல்வமே போல்தலை நிறுவித்தேர்ந்தநூற்

கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே“

இப்பாடல் உவமைச் சிறப்புடன் இயற்கைவளம் கூறும் தேவரின் புலமையைப் புலப்படுத்தும்.

“கைப்பொருள் கொடுத்துங் கற்றல் கற்றபின் கண்ணு மாகும்

மெய்ப்பொருள் விளைக்கும் நெஞ்சின் மெலிவிற்கோர் துணையு மாகும்

பொய்ப் பொருள் பிறகள் பொன்னாம் புகழுமாம் துணைவி யாக்கும்

இப்பொருள் எய்தி நின்றீர் இரங்குவ தென்னை என்றான்“

எனவரும் பாடல் கல்வியின் சிறப்பை எடுத்துக்கூறும். ஆசிரியர் ஏமாங்கதநாட்டின் வளத்தைக் கூறும் பாடல் படித்து இன்புறத்தக்க ஒன்றாகும்.

“காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகினெற்றிப்

பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து

தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்

ஏமாங்கதமென்றிசை யாற்றிசைபோய துண்டே“

அலங்கார அரண்மனையில் அருமையாகப் பிறக்க வேண்டிய குழந்தை ஆதரவின்றி அனாதைபோல் இடுகாட்டில் பிறந்தது கண்டு தாய் புலம்புவதாக வரும் பாடல் அவலச் சுவைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

“வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக

ஒவ்வாச் சுடுகாட்டுயாரங்கின் நிழல்போல் நுடங்கிப் பேயாட

எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட

இவ்வாறாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க்கியல் வேந்தே“

இவ்வாறு சிந்தாமணிக் காப்பியமானது பல்சுவையுடன் பொருந்திய தெய்வத்தன்மை மிக்க காப்பியமாக, சிந்திப்போர்க்குச் சிந்தித்ததைத் தரும் மணியாகத் திகழ்கின்றது.

**ஐஞ்சிறுகாப்பியங்கள்:**

ஐம்பெருங்காப்பியம் எனும் வழக்கை ஒட்டி ஐஞ்சிறு காப்பியம் எனும் வழக்கும் தமிழில் ஏற்பட்டது. ஐஞ்சிறு காப்பியம் எனக்கூறும் வழக்கு சமணரிடையே வழங்கிய தாகலாம் என்பர். திரு. தெ.பொ.மீ. அவர்கள் உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி எனும் ஐந்து நூல்களும் ஐஞ்சிறு காப்பியங்கள் வழங்கப்படுகின்றன.

**உதயணகுமார காவியம் :**

இது உதயணன் கதை என்றும் வழங்கப்படுகிறது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. வத்ச தேசத்து அரசன் உதயணன் கதையைக் கூறும் இந்நூல் பெருங்கதையினின்றும் வேறு பட்டதும், காலத்தால் மிகவும் பிற்பட்டதுமாகும். விருத்தப்பாவால் அமைக்கப்பட்டுள்ள இது உஞ்சைக் காண்டம். இலாவண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாகன காண்டம், துறவுக்காண்டம் என 6 காண்டங்களையும் 367 செய்யுட்களையும் கொண்டுள்ளது. காப்பியம் என்று அழைக்கப்பட்ட போதும் காப்பிய அமைதி இதில் ஒரு சிறிதும் இல்லை. இது சமண சமயக் காப்பியம்.

**நாககுமார காவியம்:**

இது ஒரு சமணசமயக் காப்பியம் என்பது தவிர ஆசிரியர் உள்ளிட்ட எந்தக் குறிப்பும் இந்நூல் பற்றிக் கிடைக்கவில்லை.

**யசோதர காவியம்:**

சமண சமயக் காப்பியம். ஆசிரியர் "வெண்ணாவலுடையார்" என்பது தவிர வேறு எந்தக் குறிப்பும் ஆசிரியர் பற்றிக் கிடைக்கவில்லை. இதில் 5 சருக்கங்களும் 320 பாடல்களும் உள்ளன. தூய எளிய நடையில் விருத்தப் பாக்களால் இயற்றப்பட்டுள்ளது.

உயிர்க்கொலை தீதென்று நிலைநாட்டவும், கருமத்தின் பயனை வற்புறுத்தவும். நீதியைப் புகட்டவும் எழுந்தது. இது வடமொழிக் கதையைக் கருத்தையும். வலியுறுத்துகின்றது. இது வடமொழிக் கதையைத் தழுவி எழுதப்பட்ட நூலாகும். இந்நூல் கூறும் ஓதயநாட்டு மன்னல் மாரிதத்தன் வரலாறு வேறு எந்த நூலிலும் காணப்படவில்லை.

**சூளாமணி:**

ஐஞ்சிறு காப்பியங்களில் சுவையான நூல் இதுவே. சமண சமயத்தைச் சேர்ந்த தோலாமொழித்தேவரே இதன் ஆசிரியரான கிபி 10 - ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ள யாப்பருங்கல விருத்தியுரையில் சூளாமணிப் பாடல்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. எனவே இதன் காலம் பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென்பது தெளிவு. இது 12 காண்டங்களையும் 2330 செய்யுட்களையும் உடையது. இதன் கதை ஸ்ரீபுராணம் எனப்படும். ஆருகத மகாபுராணத்தைத் தழுவியது. இந்நூல் விருத்தப்பாவால் ஆனது. “விருத்தப் பாவைக் கையாள்வதில் இவர் சீவக சிந்தாமணி ஆசிரியரைப் பின்பற்றிய போதிலும் சில இடங்களில் அவரையும் மிஞ்சி விட்டார் என்று கூறலாம்“ என்பார் டாக்டர்.மு.வ. அவர்கள். கதைக் கூறும் போக்கில் சூளாமணி பாகவதத்தை ஒத்துக் காணப்படுகின்றது. பாகவதத்தில் வரும் கண்ணன் பலராமன் போன்று திவிட்டன், விசயன், எனும் இரு வடநாட்டு வேந்தர்களின் வரலாறு இதில் கூறப்பட்டுள்ளது. இவர்களின் பகைவனும் கம்சனைப் போன்றவனே. திவிட்டன் விண்ணுலக மங்கையான சுயம்பிரபையை மணந்து கொள்கிறான். தமிழினிமை பொருந்திய இக்காப்பியம் படைத்த தோலாமொழித் தேவரை விசயன் என்பான் ஆதரித்தான். தோலாமொழித் தேவர், திருத்தக்க தேவர் ஆகிய இருவரைப் பற்றியும் மைசூர் மாநிலத்திலுள்ள சிரவணபெலகோலாக கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இந்நூலின் சிறப்பை அறிய ஓரிரு பாடல்களைக் காணலாம்.

“வானினம் கருவிய வரையும் முல்லை வாய்த்

தேனிலம் கருவிய தினையும் தேறல்சேர்”

எனும் பாடல் உலக வாழ்வின் இயல்பை உண்ர்த்துகின்றது.

**நீலகேசி :**

இது ‘நீலகேசி தெருட்டு’ என்றும் வழங்கப்படும். பௌத்த சமயக் காப்பியமாகிய குண்டலகேசிக்கு எதிராக எழுந்த சமணக் காப்பியம். இதன் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. இது ஒரு சமயத் தருக்க நூல். யாப்பருங்கல விருத்தியுரை இதனை “நீலம்“ எனச் சுருக்கிக கூறுகின்றது. சமய திவாகர வாமன முனிவர் எழுதிய சமய திவாகர விருத்தி எனும் சிறந்த உரை ஒன்று இந்நூலுக்கு உள்ளது. இந்நூல் 10 சருக்கங்களையும் 895 செய்யுட்களையும் கொண்டுள்ளது.

குண்டலகேசி சுருண்ட கூந்தலையுடையவள் என்று பொருள்படுவது போன்று நீலகேசி என்பது கருத்த கூந்தலை உடையவள் என்று பொருள்படும். குண்டலகேசி

காப்பியத்தை மறுப்பதற்கே நீலகேசி காப்பியம் எழுந்தது. இதில் குண்டலகேசி வாதச் சருக்கம் என்ற பகுதி காணப்படுகின்றது.

“குருவுடையன கொடிமிடைவொருகுலைவிரிவன கோடல்

தருசுடரன தனவயலின தகைமலரன தோன்றி

அருகுடையன அணியுருவின அயவன அலர் காயா’

முருகுடையன முகைவிரிவன முறியலர்வன முல்லை”

எனும் பாடல் கோடல், தோன்றி, காயா, முல்லை ஆகிய மலர்கள் மலரும் காட்சியினைச் சந்த இனிமையுடன் வெளிப்படுத்தக் காணலாம்.

**கதைச்சுருக்கம்:**

நீலகேசி கதை வேறு எந்த நூலிலும் காணப்படாதது நீலகேசி ஆசிரியர் ஒருநாள் தன் கனவில் கண்ட அப்படியே நூலாக்கியதாகக் கூறப்படுகின்றது.

பாஞ்சால நாட்டில் புண்டவர்த்தனம் எனும் நகரருகே உள்ள சுடுகாட்டில் இடப்படும் உயிர்க் கொலையை, முனிச்சந்திரர் சினம் கொண்ட தம் தவ வலிமையால் தடுத்தார். அதனால் சுடுகாட்டுக் காளி, பழையனூர் நீலகேசி எனும் பேயரசியை முனிவரின் தவத்தைக் கலைக்க ஏவியது. ஆனால் முயற்சியில் தோற்ற நீலகேசி முனிவரின் மாணவியால், சமண சமயக் கருத்துக்களைத் தெளிவாக உணர்ந்து தருக்க வாதத் திறமையும் கைவரப் பெற்றவளாகின்றாள். பிற சமய வாதிகளோடு வாதிட்டு சமண சமயத்தின் பெருமையை நிலை நாட்டுகின்றாள். பௌத்த சமயத்தைச் சார்ந்த குண்டலகேசி யுடனும் வாதிட்டு வென்று சமண சமயத் தலைவியான வரலாறே நீலகேசிக் காப்பியம் கூறும் கதை.

**பிறகாப்பியங்கள்.**

**பிம்பசாரக்கதை :**

பௌத்த காப்பியமான இது பிம்பசாரன் என்ற மகத மன்னனது வரலாற்றைக் கூறும் காப்பியமாகும்.

**மேருமந்திரபுராணம்:**

மேரு மந்திர என்ற இரு உடன் பிறந்தாரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் காப்பியம். சமணக் காப்பியமான இதன் ஆசிரியர் “வாமனசாரியார்“. இது 12 சருக்கங்களையும் 1200 க்கு மேற்பட்ட செய்யுட்களையும் கொண்டுள்ளது.

**கம்பராமாயணம்**

மேலைநாட்டுக் காவியங்களான இலியது (Iliad) ஓடிசி (odyssey) ஆகியவற்றிற்கு இணையாகத் தமிழ்க் காவிய உலகில் சிறந்து விளங்குவது கம்பரின் இராமாயணம். தமிழ்க காலிய உலகில் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்றுத் திகழும் இந்நூல் உலக மகா காவியங்களின் முன் வரிசையில் நிற்கும் புகழினைப் பெற்றுள்ளது.

வட மொழியில் வான்மீகி முனிவர் இயற்றிய இராமாயணம் இந்திய மொழிகள் பலவற்றிலும் தழுவலாகவும் மொழி பெயர்க்கப்பட்டும் எழுதப்பட்டுள்ளது. இவ்வகையில் தமிழில் கம்பர் இதனை இராமகாதை எனும் பெயரில் எழுதினார். வால்மீகி இராமாயணக் கதையைத் தழுவி தமிழ் மரபிற்கேற்ப மாற்றங்களும், ஏற்றங்களும் செய்து கம்பர் தனது நூலைப் படைத்துள்ளார். இது பாத்திரப்படைப்பிலும், நாடக, உரையாடல் அமைப்பிலும் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்று மூல நூலைக் காட்டிலும் சிறந்து நிற்கின்றது. இதன் நாடக நயம் நோக்கிக் கம்ப நாடகம் என்றும் இது வழங்கப்படுகின்றது. கம்பரின் கதைப் போக்கிலும், நடைச் சிறப்பிலும் ஈடுபட்ட மக்கள் தமது உபன்யாசங்கள் மூலம் இக் கதையைப் பாமரரும் அறியும்படிச் செய்தனர். இராமாயண உபன்யாசத்தையே வாழ்வின் ஜீவாதாரமாகக் கொண்டு வாழ்ந்தவர்களும், வாழ்ந்து வருபவர்களும் பலராவர். இன்றும் கம்பன் கழகம் என்றொரு நிறுவனம் கம்பராமாயணப் பட்டிமன்றங்கள், சொற்பொழிவுகள் மூலம் கம்பனின் பெருமையையும் இராமாயணத்தின் சிறப்பையும் உலகறியச் செய்து காத்து வருகின்றது. கம்பன் அடிப்பொடி என்றே தம்மைக் கூறிக் கொள்வதில் பெருமை உறுவோரும் காணப்படுகின்றனர். கம்பரால் இராமாயணம் ஏற்றம் பெற்றதும், இராமாயணத்தால் கம்பர் ஏற்றம் பெற்றதும் கம்பராமாயணத்தால் தமிழ் ஏற்றம் பெற்றதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இன்று இராமாயணம் என்றால் அது கம்பராமாயணத்தையே குறிப்பதோடு கம்பராமாயணத்தின் ஆசிரியர் கம்பர் என்று கூறும் அளவிற்குக் கம்பரின் பெயரோடு இராமாயணம் இணைந்து இருக்கக் காணலாம்.

**கம்பர்:**

சோழ நாட்டில் திருவழுந்தூரில் பிறந்தவர். தந்தையார் ஆதித்தன். உவச்சர் குலத்தில் பிறந்த இவர் காளி கோயிலில் பூசை செய்து வந்த மரபில் வந்தவராவர். இவர் காளியின் அருளால் கவிபாடும் திறம் பெற்றார். கம்பர் எனும் பெயர் இவருக்கு ஏற்பட்டது குறித்துப் பல பல காரணங்கள் கூறப்படுகின்றன. அதாவது கம்பங் கொல்லையைக் காத்ததாலும், கம்பம் ஒன்றின் கீழ் கண்டெடுக்கப்பட்டமையாலும், கம்பம் போன்று அறிவற்று இருந்தமையாலும் கம்பன் என்று பெயர் பெற்றதாகப் பல கருத்துக்கள் கூறப்படுகின்றன.

காவிரி ஆற்று வெள்ளத்தைத் தன் பாடல் திறத்தால் அடக்கியமையால் ஒட்டக்கூத்தருடன் குலோத்துங்கனின் நன்மதிப்பிற்குப் சோழன் திருவெண்ணெய்நல்லூர் புலவராக அமர்த்தப்பட்டார். அவையை அலங்கரித்தார். சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பட்டார். தன்னை ஆதரித்த வள்ளலின் கொடைச் சிறப்பையும் குணச் சிறப்பையும் தன் நூலில் 1000 பாடலுக்கு ஒரு முறை குறிப்பிட்டுத் தன் நன்றியை வள்ளலுக்குத் தெரிவித்துள்ளார். இவருக்கு அம்பிகாபதி என்றொரு மகனும் காவேரி என்று ஒரு மகளும் இருந்ததாகத் தெரிகிறது. அம்பிகாபதி சோழ அரச குமாரியான அமராவதியைக் காதலித்த குற்றத்திற்காகக் கொலை செய்யப்பட்டான். கல்வியிற் சிறந்து விளங்கிய அம்பிகாபதி "அம்பிகாபதிக் கோவை" என்னும் நூல் ஒன்றும் எழுதியுள்ளான். குலோத்துங்கனிடம் மனக் கசப்புற்ற கம்பர் ஓரங்கல் நாட்டுப் பிரதாபருத்திரனை அடைந்து வாழ்ந் திருந்தார். மகன் அம்பிகாபதியின் மறைவுக்குப் பிறகு பாண்டிய நாடடைந்து, நாட்டரசன் கோட்டையில் தங்கி அங்கேயே உயிர் துறந்தார். அங்கு சும்பருக்குச் சமாதி எழுப்பப்பட்டுள்ளது. கம்பர் மூன்றாம் குலோத்துங்கனின் அவையை அலங்கரித்ததாகக் கூறப்படுவதால் இவரது காலம் கி. பி.12-ஆம் நூற்றாண்டு என்று கூறப்படுகின்றது. வேறு சிலர் இவரது காலம் 9-ஆம் நூற்றாண்டு என்றும் கூறுவர்.

**கம்பரின் சிறப்பு:**

தமிழிலக்கிய உலகின் ஒளி விளக்காகத் திகழ்ந்த கம்பரின் சிறப்பினை - "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" "கல்வியிற் பெரியன் கம்பன்" கம்ப நாடன் கவிதையிற் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே" எனவரும் பழமொழிகளும் தொடர்களும் தெள்ளிதின் புலப்படுத்தும். செந்தமிழ்நாட்டின் சிறப்புரைக்கும் பாரதியும், "கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்று கூறுவர். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர்போல் இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை' என்றும் "கம்பனோடு கவிதை போயிற்று" என்றும் கம்பனின் சிறப்புரைப்பர். பாரசீகக்கவியின் உமர்கயாமை மொழி பெயர்த்த கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களும், 'வெய்யிற்கேற்ற நிழலுண்டு வீசுந்தென்றற் காற்றுண்டு கையில் கம்பன் கவியுண்டு கலசம் நிறைய மதுவுண்டு' என்று கூறுவர். வால்மீகி படைத்த சாதாரண மானுடனான இராமனை, இராமபிரான் எனும் தெய்வமாகப் படைத்து உயர்த்திய கம்பனும் சாதாரணக் கவிஞனாக இல்லாது மாகக் கவிஞனாக் கவிச்சக்ரவர்த்தியாக தெய்வப் புலவனாக உயர்ந்து நிற்கிறான். 'விருத்தமெனும் வெண்பாவிற்குயர் கம்பன்' என்று போற்றும் அளவிற்கு விருத்தப்பாவை வண்ணமுறக் கையாண்டு வெற்றி பெற்று, பிற்கால இலக்கியங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். 'விழுந்த ஞாயிறு எழுவதன் முன் மறை வேதியருடன் ஆராய்ந்து எழுந்த ஞாயிறு விழுவதன் முன்கவி பாடினது எழுநூறே'

- எனவரும் பாடல், கம்பர் இரவில் வான்மீகி இராமாயணக் கதையினைக் கேட்டறிந்து பகலின் பொழுது சாய்வதற்குள் 700 கவிதைகள் பாடினார் என்று கூறும். இவர் இராமாயணம் முழுவதையும் 15 நாட்களில் பாடி முடித்ததாகக் கூறப்படுகின்றது. பொன்னுக்குப் பாடிய கம்பர், கலைவாணியின் அருளைப் பூரணமாகப் பெற்றுத் திகழ்ந்தார். கம்பர் தனது நூலுக்கு இராமாவதாரம் என்று பெயரிட்டு திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்தார். கம்பர் இராமகாதை தவிர, ஏரெழுபது, சரசுவதி அந்தாதி, சடகோப அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகிய நுல்களும் எழுதியுள்ளார்.

**இராமாயணம்:**

இந்நூலில் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்ற ஆறு காண்டங்களும் 113 படலங்களும், 10,500 பாடல்களும் உள்ளன. ஏழாவது காண்டமான உத்தர காண்டம் ஓட்டக் கூத்தரால் இயற்றப்பட்டது. இந்நூலில் முந்தைய சங்க நூல்களின் சாயலையும், சிந்தாமணித் தொடர்களையும், திருக்குறட் கருத்துக்களையும் காணலாம்."

கதை அமைப்பிலும், கவிதை நயத்திலும், கற்பனை வளத்திலும், நாடகக் கட்டுக்கோப்பிலும், காவியப் பாங்கிலும் சிறந்து விளங்கும் இதனைக் 'கம்பசித்திரம்', என்றும் 'கம்பநாடகம்' என்றும் வழங்குவர். இக்காப்பியம் மனித உணர்வுகளின் சித்திரம். உயர்ந்த எண்ணங்களின் ஓவியம். நிகரற்ற வாழ்க்கை அனுபவக் கருவூலம், இதன் சிறப்பினை உணர்ந்த திருமணம் செல்வக் கேசவராய முதலியார் அவர்கள், தமிழிற்குக கதியாவார் இருவர். இவற்றுள் "சகரத்தைக் கம்பராகவும். திகரத்தைத் திருவள்ளுவராகவும் கொள்க"- என்று குறிப்பிட்டுள்ளார்.

இது ஒரு தழுவல் நூலான போதும் மூல நூலை அப்படியே மொழி பெயர்க்காது, வடநாட்டுக கதையைத் தமிழ் மரபிற்கேற்ப ஆங்காங்கு மாற்றி அமைத்துள்ளார். இம்மாற்றத்தைப் பால காண்டத்திலேயே தொடங்கிவிடுகின்றார். களவு, கற்பு எனும் பண்டைய தமிழ் மரபையொட்டி மிதிலைக்கு வந்த இராமனையும், சீதையையும் சந்திக்க வைத்து, மாறிப்புக்கு இதயம் எய்த வைத்தார். இக்காட்சி வான்மீகத்தில் இடம் பெறாத ஒன்று. "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள், அவ்வளலில். பருகிய நோக்குஎனும் பாசத்தால் பிணித்து ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தலால் வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும் இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்" மேலும் அங்கதன் அடைக்கலம், மாயாசனகப்படலம். தாரையின் விதவைக் கோலம், இராவணன் சீதையைத் தீண்டாமல் பர்ணசாலையுடன் பெயர்த்துச் சென்றமை போன்ற பல நிகழ்ச்சிகளைக் கம்பர், மூலக் காப்பியத்தினின்றும் வேறுபட்டுக் கதைச் சுவைக்காகவும், தமிழர் பண்பாட்டுக் சிறப்புக்காகவும் புகுத்தியுள்ளதைக் காணலாம். ஒரு சிறந்த கவிதை எவ்வாறு இருக்க வேண்டும், ஒரு உயர்ந்த குறிக்கோளுடைய மன்னன்

ஆளும் நாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் கூடத் தெளிவாக சிறந்த உவமையின் மூலம் விளக்குகின்றார்.

"புவியினுக் கணியாய் ஆன்றபொருள் தந்து புலத்திற்றாகி

அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவிச்

சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர்

கவியெனக் கிடந்தகோதா வரியினை வீரர் கண்டார்" என்று கோதாவரி ஆற்றிற்கு உவமையாகக் கவிதையின் அமைப்பைக் குறிப்பிடுகின்றார்.

"வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்

திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்

உண்மை இல்லை பொய் உரை இலாமையால்

ஒண்மை இல்லை பல் கேள்வி ஓங்கலால்"

எனும் பாடல் ஒரு நல்ல நாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளைக் கற்பனை நயத்துடன் கோசல நாட்டு வருணனையாகக் கூறக் காணலாம். ஒரு பாடலின் சிறப்பிற்குக் காரணமாக இருப்பது அதன் சந்த நயங்களே, ஓசை அமைப்பைக் கொண்டே பாத்திரத்தின் உணர்ச்சிக் கொந்தளிப்பை உணர வைப்பன கம்பனின் பாடல்கள்

"ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ

வேழநெடும் படை கண்டு விலங்கிடும் வில்லாளோ

தோழமையென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ

ஏழமை வேடன் இறந்திலனென் றெனை ஏசாரோ"

எனவரும் பாடல் பரதனைக் கண்ட குகனின் கோபத்தைப் படம் பிடித்துக் காட்டும் கோபத்தை மாத்திரமல்ல குழைவையும் கூட இவரது சந்தம் செப்பக் காணலாம். பஞ்சவடிவில் சூர்ப்பனகை இராமனைக் காண வரும் அழகை

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்

செஞ்செவியக் கஞ்சநிமிர் சீறடியளாகி

அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்

வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்“

எனும் பாடல் செப்பும். இராமன், தம்பி இலக்குவனையும் மனையாள் மைதிலியையும் அழைத்துக்கொண்டு ஏறுபோல் பீடுநடையிட்டுச் செல்லும் காட்சியினைக் கூறும் பாடல், மெய்ப்பாட்டுடன் கூடிய ஓசைநயம் இழைந்தோடும் ஒரு கவிமலராகும்.

“வெய்யோன் ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறைய

பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்

மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ

ஐயோ இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்”.

இராமாவதாரத்தின் சிறந்த நோக்கங்களாவன. 1. பிதுர் வாக்கிய பரிபாலனம், 2. ஏகபத்தினி விரதம், 3. சகோதர பாசம் ஆகியனவாகும்.

“குகனொடும் ஐவரானோம் முன்புபின், குன்று சூழ்வான்

மகனொடும் அறுவரானோம் எம்முழை அன்பின் வந்த

அகமைர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம்

புகலரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை”

எனும் பாடல் இராமனின் சகோதர பாசத்தை உணர்த்தும். உயர்ந்த கற்பனை வளம் கொண்ட கலைப் பெட்டகமான இக்காப்பியம்

“கலைமகள் வாழ்க்கை முகத்ததெனினும் மலரவன் வண்டமிழர்க்கு ஒவ்வான் - மலரவன் செய் வெற்றுடம்பு மாய்வனபோல் மாயாபுகழ்கொண்டு மற்றிவர் செய்யும் உடம்பு”

எனும் நீதிநெறி விளக்கத்திற்குத் தக்கதொரு சான்றாக அழியாப்புகழ் கொண்டு வாழ்ந்து வருகிறது.

**பெரியபுராணம்:**

சேக்கிழார் பெருமானால் கி.பி.12 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட இப்புராணம் சிவனடியார்களான 63 நாயன் மார்களின் வரலாற்றைக் கூறுகின்றது. சைவக் காப்பியமான இது தமிழ் நாட்டின் சொந்தக் காப்பியம் தமிழகத்தின் வரலாற்றை அறிய உதவும் ஒரு வரலாற்றுக் காப்பியம். பிற மொழிச் சார்பின்றி தமிழ் மொழிக்கே உரிய காப்பியமாகத் தோன்றிய இந்நூல் சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையினையும்,

நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியினையும் ஆதாரமாகக் கொண்டு தோன்றிய வழி நூலாகும். இதன் காலம் - 12 ஆம் நூற்றாண்டு ஆகும். தொகை, வகை, விரி எனும் அமைப்பில் குன்றுமணி அளவான சிவனடியார் புகழைக் குன்றளவாக உயர்த்தியவர் இக்குன்றத்தூர் கவிக்கோமான். இதில் 2 காண்டங்களும் 13 சருக்கங்களும் 4287 பாடல்களும் உள்ளன. இந்நூலுள் 66 தனியார்கள் பற்றியும் 9 தொகையடியார்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இந்நாயன்மார்கள் கி.பி.3ஆம் நூற்றாண்டு முதல் 9 - ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்தவராவர். இதன் சிறப்பு நோக்கி இதனைப் பன்னிரு திருமுறைகளுள் ஒன்றாகப் பன்னிரெண்டாம் திருமுறையாகச் சேர்த்துள்ளனர்.

பெரியபுராணம் பெருங்காப்பியம் என்று கூறுமளவிற்குக் காப்பிய இலக்கணங்களைப் பெற்றுத் திகழக் காணலாம். அதாவது இதனைச் சுந்தரர் வரலாறு கூறும் நூலாகக் கொண்டு நோக்க வேண்டும். அதன்படி சுந்தரர் காப்பியத்தின் தன்னிக ரில்லாத் தலைவராக விளங்க - இவரது முந்தைய வரலாற்றைத் 'திருமலைச் சருக்கம்' எடுத்துக் கூறுகின்றது. அதன் பின் 'நாட்டுச் சிறப்பும், திருவாரூர் நகரச் சிறப்பும' இடம் பெறுகின்றது. மேலும் மலைவளம், நீர்வளம் போன்ற இயற்கை வருணனைகளும் கொண்டதாக விளங்குவதால் இது ஒரு பெருங் காப்பியமாகவே கொள்ளப்படுகின்றது. திரு. சி.கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள், தனது 'சேக்கிழார்' எனும் நூலில் "பெரியபுராணமானது தொடர்நிலைச் செய்யுளாய் ஒரு பழஞ்சரிதையைக் கூறுவதாய் ஒரு பெரிய உள்ளீடாகிய கற்பனையை எடுத்துக் காட்டுவதாயுள்ள ஒரு பெருங்காவியமே ஆகும் என்று கூறுகிறார்.

பக்தியை உயிராகவும் பிறவற்றை உடலாகவும் கொண்ட காவியமாகிய இது இடைக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறை பழக்க வழக்கங்கள், தொழில், பொழுதுபோக்கு போன்ற பல செய்திகளையும் அறிவிக்கின்ற ஒரு வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கின்றது. இறைவனிடம் பக்தி செலுத்த சாதி சமய வேறுபாடோ ஆண், பெண் பாகுபாடோ, அரசன் ஆண்டி என்ற உயர்வு தாழ்வோ கிடையாது அனைவரும் பக்தி செலுத்திப் பயன்பெற முடியும் என்ற பேருண்மையைத் தெளிவாகக் கூறுகின்றது.

பெரியபுராணம், தோன்றியதால் தமிழகத்தில் புறச்சமயச் செல்வாக்கு குறைந்ததுடன், சிதறிக் கிடந்த சைவ சமய நம்பிக்கை சீர்படுத்தப்பட்டு செம்மை உற்றது. தேவாரப் பாடல்கள் கூறும் சைவ சமயக் கருத்துக்களை எல்லாம், கல்லாரும் அறியும்படி மிக எமையாக எடுத்தியம்புகின்றது. இனிமையும், எளிமையும் கொண்ட இப் பக்திப் பனுவல் திருத்தொண்டர்புராணம் எனும் திருப்பெயருடன் தோன்றி. பெருமை மிக்க அடியவர்களின் சிறப்புரைக்கும் சீர்மையால் பெரியபுராணம் என்று போற்றப்படுவதாயிற்று.

**சேக்கிழார்**

தொண்டை நாட்டிலுள்ள புலியூர்க் கோட்டத்தில் ஆன்றத்தூரில், வேளாளர் மரபில், சேக்கிழார் குடியில் தோன்றியவர். இவருக்குப் பெற்றோரிட்ட பெயர் அருண் மொழித்தேவர். இவரது தம்பியின் பெயர் பாலறாவாயர் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் 'அநபாயன்' எனும் சிறப்புப்பெயருடன் சோழநாட்டை ஆண்ட இரண்டாம் குலோத்துங்கனின் முதலமைச்சராய்த் திகழ்ந்தவர். அப்போது சோழனால், உத்தம சோழப் பல்லவராயன் எனும் பட்டமளித்துப் பாராட்டப்பட்டார். அவ்வமயம், அரசன் சிறந்த சமணக் காப்பியமான சீவக சிந்தாமணியில் மனம் பறிகொடுத்து இருப்பதுகண்டு மன்னனின் மயக்கத்தை நீக்கி, சைவத்தின் சிறப்பை உணரச் செய்வதற்காக திருத்தொண்டத்தொகை கூறும் சிவனடியார்கள் வரலாற்றை விரித்துரைத்ததாகச் செவிவழிச்செய்தி கூறப்படுகின்றது. இது பொருந்தாது என்பது திரு.வி.க போன்ற சான்றோர்களின் கருத்து.

தனது அமைச்சர் எனும் செல்வாக்கைப் பயன்படுத்தி ஊர்கள் தோறும் நேரில் சென்று, ஆங்காங்கு பரவிக்கிடந்த உண்மைகளையும், கல்வெட்டுச் செய்திகளையும், பக்திப் பாடல்களையும் திரட்டி முடித்தபின் பொன்னம்பலம் சென்று பரமனை வேண்ட அம்பலத்தாடும் தம்பிரான் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுக்க, தன் காப்பியத்தைத் தொடர்த்துபாடி முடித்துத் திருத்தொண்டர் புராணம் எனும் இதனைத் தில்லையில், திருஞானசம்பந்தம் அவதரித்த திருவாதிரைத் திருநாளில் தொடங்கி ஓராண்டுக் காலம் ஓதி அரங்கேற்றி முடித்தார்.

பெரியபுராணத்தைக் கேட்டு மகிழ்ந்த மன்னன் அலங்கரித்த யாணையின் மீது சேக்கிழாரையும், அவர் இயற்றிய நூலையும் ஏற்றி வைத்து, தானும் அருகிலிருந்து கவரிவீசி நகர்வலம் வந்து மகிழ்ந்ததுடன், சேக்கிழாருக்கும் 'தொண்டர்சீர் பரபுவார்' என்னும் பட்டமளித்துப் பாராட்டினான். அதன் பின் சேக்கிழார் அரசுப்பணியை முற்றிலும் துறந்து தில்லையிலேயே வாழ்ந்து முக்தி அடைந்தார்.

இவரது பரந்த நூலறிவையும், நீதிநூற் புலமையையும் பெரியபுராணத்தின் பல பகுதிகளால் அறியலாம். குறிப்பாகத் தடுத்தாட் கொண்டபுராணம் இவரது சட்ட அறிவை தெளிவாக விளக்குகின்றது. ஆனாய நாயனார் புராணம் இவரின் இசைப் புலமைக்கோர் எடுத்துக்காட்டு.

சேக்கிழாரின் மறைவுக்கு இருநூறு ஆண்டுகள் பின்பு தோன்றிய உமாபதி சிவாசாரியார் - சேக்கிழார் பெருமானைச் சிறப்பித்துச் "சேக்கிழார் புராணம்" இயற்றியுள்ளார். 700 ஆண்டுகள் பின்னால் தோன்றிய பெரும் புலவரான மகாவித்துவான்

மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடி சேக்கிழாருக்குப் புகழ் அஞ்சலி செலுத்தினார். இதில் சேக்கிழாரை, பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப்பாடிய கவிவலவ" - என்று குறிப்பிட்டிருப்பது சேக்கிழாரின் பக்திப் பெருக்கினைப் புலப்படுத்தும் சான்றிதழாகத் திகழ்கின்றது இக்கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது. அப்பரடிகளின் தோற்றப் பொலிவைச் சமயக் கண்ணோட்டத்துடன் குறிப்பிடும் போதும் வெளிப்படுகின்ற பக்திச்சுவை.

"தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்

நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்

பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்

மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே!"

இயற்கை வருணனையிலும், பிற புனைவுகளிலும்கூடப் பக்திச் சுவையை வெளிப்படுத்தும் பாங்கு பெரியபுராணத்தில் உண்டு. நாயன்மார்கள் பாடிய பாடல்களுக்கான சூழ்நிலைகளை அப் பாடலடிகளுடன் வைத்துப் பின்னிக்கூறும் பாங்கும், கொலை' முதலிய தீய சொற்களை வழுவியும் வாயால் கூறாமல் கதைக் கூறும் திறமும் நினைந்து போற்றற்குரியன.

**கந்தபுராணம்:**

இதன் ஆசிரியர் கச்சியப்ப சிவாச்சாரியார். இவர் காஞ்சியில், ஆதி சைவ மரபில் தோன்றியவர். இந்நூல் சோழர் காலம் ஏற்றமுற்றிருந்த போது சைவ சமயம் தைழைத்தோங்கிய காலத்தில், அச்சமய உண்மைகள் பல துலங்குமாறு எழுதப்பட்டது. இதன் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என்பர் ஆய்வாளர்.

வடமொழியிலுள்ள "சிவசங்கர சங்கிதை" யில் கூறப்படும் கந்தனின் வரலாற்றை இது தமிழில் தருகிறது. இந்நூல் ஆறு காண்டங்களையும் 10346 செய்யுட்களையும் கொண்டுள்ளது. இதில் முருகனின் பிறப்பு. கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டது. இளமைக்காலத் திருவிளையாடல்கள் சூரபதுமனுடன் போரிட்டு வென்று அவனை அழிக்காது, தன் அருள் திறத்தால் இரு கூறுபடுத்திச் சேவலும் மயிலுமாக்கி ஆட்கொண்டது. தேவர்களை விடுவித்து, அவர்களின் துயர் களைந்தது. வள்ளி தெய்வானைத் திருமணம் ஆகிய செய்திகள் நயம்பட உரைக்கப்பட்டுள்ளன.

நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு, வருணனைகள், காவிய நயங்கள், ஆழ்ந்த கருத்துக்கள், கற்பனை வளம், உவமை அழகு ஆகிய பல சிறப்பு அம்சங்களைக் கொண்டு விளங்குகின்றது. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பலவும் பரவி, காவியச்

சுவையுடன் மிளிர்கின்றது. தமிழகத்தில் மட்டுமின்றி யாழ்ப்பாணம், மலேசியா போன்று தமிழர்கள் வாழும் பகுதிகளிலுள்ள அனைவராலும் இந் நூல்விரும்பிக் கற்கப்படுகின்றது.

**இலக்கண நூல்கள்**

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் என்பதற்கேற்ப இலக்கியங்கள் பல படைத்த சமணர்கள் இலக்கண நூல்களையும் படைத்துள்ளனர். பவணந்தியார் - நன்னூலும், நாற்கவிராச நம்பி - நம்பியகப்பொருளும், அமிதசாகரர் - யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி ஆகிய யாப்பிலக்கண நூல்களையும், குண வீரபண்டிதர் - நேமிநாதம், வச்சணந்திமாலை என்னும் நூல்களையும் எழுதியுள்ளனர். நன்னூலுக்குச் சிறந்ததொரு உரை வகுத்துள்ள மயிலைநாதரும் சமணரே. தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர், சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார், மற்றும் குணசாகரர், வாமன முனிவர், கலிங்கர் போன்ற உரையாசிரியர்களும் சமணரே ஆவர்.

**நம்பியகப் பொருள்:**

நாற்கவிராசநம்பி என்கவரால் இயற்றப்பட்டது. இவர் சமண் சமயத்தவர் ஆவார். தொண்டைநாட்டுப் புளியங்குடியில் பிறந்தவர். இவரது இயற்பெயர் “நம்பிநாயனார்“. இவரது காலம் கி.பி 12-ஆம் நூற்றாண்டு தொல்காப்பியத்தில் காணப்படும் அகப்பொருட் கருத்துக்களைக் காலத்திற்குப் பொருந்திய வகையில் எளிய இனிய முறையில் இந்நூல் விளக்குகிறது. அகப்பொருள் விளக்கம் என்று அறியப்படும் இந்நூல் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் எனும் 5 இயல்களைக் கொண்டது. பொய்யாமொழிப் புலவர் பாடிய தஞ்சைவாணன் கோவையிலுள்ள 400 பாடல்களும் இந்நூலுக்கு உதாரணச் செய்யுள்களாக அமைந்துள்ளன.

**யாப்பிலக்கண நூல்கள்:**

பிற்காலததில் எழுந்த சிற்றிலக்கண நூல்களுள் யாப்பிலக்கண நூல்களே மிகுதியாகச் காணப்படுகின்றன. காக்கைப் பாடினியம், சிறுகாக்கைட் பாடினியம், என்பன அவிநயம் போன்று நாம் கேள்விப் பட்டனவும், கேள்விப் படாதனவுமான யாப்பிலக்கண நூல்கள் பலவாகும்.

**யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை:**

இவ்விரு நூல்களையும், அமிதசாகரர் என்பவர் இயற்றினார். இவரும் சமண சமயத்தவரே. தீபங்குடியைச் சேர்ந்த இவர் 11ஆம் நூற்றாண்டினராவர். யாப்பருங்கலத்திற்குச் சிறந்த விருத்தியுரை ஒன்று எழுதப்பட்டுள்ளது. குணசாகரர் என்ற சமணப்பெரியார் காரிகைக்குச் சிறந்ததொரு உரை எழுதியுள்ளார். காரிகையே பெரிதும்

பயிலப்பட்டு வருகின்றது. காரிகை கற்றுக்கவி பாடுவதிலும், பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று என்ற பழமொழி ஒன்றும் காரிகை பற்றி வழங்கி வருகின்றது.

**தேமிதாதம்:**

தொண்டைநாட்டுக் களத்தாரைச் சேர்ந்த குணவீர பண்டிதர் இதன் ஆசிரியர். இவர் சமண சமயத்தினர் ஆவார். 96 நூற்பாக்களில் எழுத்து, சொல் எனும் இரண்டு இலக்கணங்களையும் விளக்குகின்றது. நேமிநாத அடிகள் என்ற தன் ஆசிரியர் பெயரையே தன் நூலுக்கு இட்டுள்ளார். இது சின்னூல் என்றும் வழங்கப்படுகிறது.

**வச்சணந்திமாலை:**

இதன் ஆசிரியரும் குணவீரப் பண்டிதரே. இந்த நூலுக்கும் வச்சணந்தி என்னும் ஆசிரியர் பெயரையே சூட்டியுள்ளார். இது வெண்பாப் பாட்டியல் என்றும் வழங்கப்படும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் எழுந்ததாகக் கருதப்படும் இந்நூல் இந்திர காளியத்தைப் பின்பற்றியது.

**நன்னூல்:**

ஆசிரியர் - பவணந்தி முனிவர் சமண சமயத்தவர். நன்மையால் பெயர் பெற்ற நூலுக்கு இந்நூலே எடுத்துக்காட்டாகத் தரப்படுகின்றது. சங்ககாலத்தில் தொல்காப்பியம் பெற்ற சிறப்பினை, இடைக்காலத்தில் நன்னூல் பெற்றிருந்தது.

“பழையன கழிதலும், புதியன புகுதலும்

வழுவல கால வகையினானே”

என்ற கருத்தினை ஒட்டி தொல்காப்பியர் காலத்திற்குப் பிறகு, வழக்கிழந்து போன இலக்கணங்களை விடுத்து, இடைக்காலத் தமிழின் இயல்பிற்கு ஏற்ப இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

“முன்னூ லொழியப் பின்னூள் பலவினுள்

நன்னூலாருக்கெந்நூ லாரும்

இணையோ வென்னுந் துணிபே மன்னுக”

என வரும் பாடல் நன்னூலின் சிறப்பைச் செப்பும். இந்நூலின் சிறப்புப் பாயிரத் தொடர் கொண்டு மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவனான மைசூர்க் கோலார்ப் பகுதியை ஆண்ட சீயகங்கன் என்னும் மன்னனே இந்நூல் தோன்றக் காரணமாயிருந்தான் என்பது பெறப்படும்.இந்நூலின் காலம் 13 நூற்றாண்டாகும்.

இன்று தமிழ் மாணவர்களால் மிகுதியாகப் பயிலப்பட்டு வரும் நூல் இதுவே. இந் நூலுக்கு மயிலைநாதர் உரை எழுதியுள்ளார். சங்கரநமச்சிவாயர், சிவஞான முனிவர் ஆகியோரின் விருத்தயுரையும், ஆறுமுக நாவலரின் காண்டிகை உரையும் கூட இதற்கு உண்டு, மேலும் விசாகப்பெருமாளையர், வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் போன்றோரும் உரை எழுதியுள்ளனர்.

**வீரசோழியம் :**

ஆசிரியர் புத்தமித்திரர். இவர் பௌத்த சமயத்தவராவர். நூற் பாயிரத்தின் மூலம் இவர் புத்த பெருமானிடம் பக்தி கொண்டவர் என்பதும், பொன் விளைந்த களத்தூரினர் என்பதும் தெரிய வருகின்றது. எழுத்து. சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திற்கும் இலக்கணம் கூறும் முதல் நூல் இதுவே. வடநூல் மரபைப் பெரிதும் ஒட்டி அமைந்துள்ளது. தன்னை ஆதரித்த முதலாம் இராசேந்திரன் மகனான வீரராசேந்திரன் பெயரையே இந்நூலுக்கு இட்டதன் மூலம் தன் நன்றியைத் தெரிவித்துள்ளார். தமிழ் மரபைப் போற்றாது புறக்கணித்தமையால் இந்நூலும் போற்று வாரற்றுப் போயிற்று. இதற்குப் பெருந்தேவனர் உரை என்ற பழைய உரை ஒன்று உள்ளது.

**தண்டியலங்காரம் :**

தமிழில் எழுந்த அணி நூல்கள் எல்லாம் வடமொழியை மிகுதியாகப் பின்பற்றியுள்ளன அல்லது வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அலங்காரம் என வடநூலார் வழங்கும் அணிகளைப் பற்றி இந்நூல் இயம்புகின்றது. இது வடமொழி ஆசிரியரான தண்டி என்பார் எழுதிய “காவியாதர்சம்“ எனும் வடநூலின் மொழிபெயர்ப்பாகும். இந்நூலாசிரியர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவர் என்றும் இந்நூலின் உதாரணச் செய்யுட்களையும் இவரே எழுதினார் என்றும் கூறுவர். இது பொதுவியல். பொருளணியியல், சொல்லணியியல் என்ற மூன்று இயல்களையும் 125 நூற்பாக்களையும் உடையது. அநபாயச் சோழனைச் சுட்டும் எடுத்துக்காட்டுப் பாடல்கள் இருப்பதனால் இதன் காலம் 12ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது.

**முத்தொள்ளாயிரம் :**

இது தமிழகத்தை ஆண்ட சேர சோழ, பாண்டியர் என்னும் முடியுடை வேந்தர் மூவரைப் பற்றியும் போற்றி எழுதப்பட்டுள்ள நூலாகும். இது மூன்று வேந்தர்களையும் பற்றிப் பாடப்பட்டுள்ள தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்ட நூல் என்றும், ஒவ்வொரு மன்னருக்கும் தொள்ளாயிரம் பாடல்கள் வீதம் 2700 பாடல்களைக் கொண்ட நூல் என்றும் இரு வேறு விதமாகக் கூறப்பட்ட போதும் இன்று இந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. இதிலிருந்து “புறத்திரட்டு“ என்னும் நூலின் ஆசிரியரின் முயற்சியால் கடவுள் வாழ்த்து - 1’ சேர மன்னன் மீது - 22’ சோழன் மீது - 29’ பாண்டியன் மீது -

56 ஆக 108 பாடல்களே முழுமையாகக் கிடைத்துள்ளன. வெண்பாயாப்பில் அமைந்துள்ள இப்பாடல்கள் கற்பனை வளமும், இலக்கியச் சுவையும் கொண்டன ஆகும்.

மூவேந்தரின் நாடு, நகர், வளம், புகழ், வீரம், யானை, குதிரைப் போர்படைச் சிறப்பு, வெற்றி, கொடை போன்ற புறத் திணைகளோடு அகப்பொருள் சுவை குறைந்த பாடல்களையும் இதில் காணலாம். மூவேந்தர்களைப் பாடும் இந்நூல் எந்த மன்னனையும் பெயரிட்டுக் குறிப்பிடாது வானவன், கோதை, கோக்கோதை, பூழியன் என சேரனும், உறந்தையார்கோ, பொன்னிவளநாடான், புனல் நாடன், கிள்ளி, செம்பியன் எனச் சோழனும், தென்னன், மாறன், வழுதி எனப் பாண்டியனும் பொதுப் பெயர்களாலேயே குறிக்கப்படுகின்றனர்.

சுவை மிகுந்த பாடல்களைக் கொண்ட இந்நூலாசிரியர் யார் ? என்பது தெரியவில்லை. இதன் காலமும் தெளிவாகத் தெரியவில்லை. சங்க காலத்திற்குப் பிற்பட்ட இருண்ட காலம் எனப்படும் கால கட்டத்தில் எழுந்ததாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. பழமொழி நானூற்றுத் தொடர்கள் இதில் இடம் பெற்றிருப்பதாலும், பக்தி இலக்கியங்களில் இந்நூல் கருத்துக்கள் காணப்படுவதாலும் இதன் காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகும், 8-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

“உருவத்தார்த் தென்னவ னோங்கெழில் வேழத்  
திருகோடுச் செய்தொழில் எண்ணில் - ஒரு கோடு  
வேற்றா ரகல் முழுமே யோருகோடு  
மாற்றார் மகில் கிறக்கு மால்”

எனும் பாடலில் பாண்டியன் களிற்றின் சிறப்பைக் கூறுகின்றார்.

“உடைதலையும் மூளையும் ஊன்தடியும் என்பும்  
குடருங் கொழுங்குருதி யீர்ப்ப-மிடைபேய்  
பெருநடஞ் செய் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி  
கருநடரைச் சீறுமு களம்“

என்று கலிங்கத்துப் பரணியில் சோழனது போர்க்களச் சிறப்பைக் கூறியுள்ளார்.

“அள்ளற் பழனத்து அரக்காம்பல் வாயவிழ

வெள்ளர் தீப்பட்டது எனவெரீகிப் புள்ளினந்தல்

கைச்சிறகால் பார்ப்போருக்குங் கவ்வை உடைத்தரோ

ரச்சிலைவேல் கோக்கோதை நாடு.

என்று சோழநாட்டு வளம் உரைக்கப்பட்டுள்ளது.

**நிகண்டுகள்**

தமிழ்க்கவி செழித்தோங்கக் காரணமாய் இருந்த நிகண்டுகள் சமணர்களால் சிறப்படைந்தன. குணபத்திர முனிவரில் மாணவரான மண்டல புருடரால் இயற்றப்பட்ட சூடாமணி நிகண்டு, சேந்தன் என்னும் மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க திவாகர முனிவரால் இயற்றப்பட்ட சேந்தன் திவாகரம், நிகண்டு ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

**சிற்றிலக்கியங்கள்**

**நாயக்கர் காலம்:(கி.பி. 1350-1750)**

நாயக்கர் காலம் - சிற்றிலக்கியகாலம்- தூது தமிழ்விடு தூது- பிள்ளைத்தமிழ் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் - சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - கலம்பகம் - நந்திக் கலம்பகம் - திருவரங்கக் கலம்பகம் - குறவஞ்சி -திருக்குற்றாலக் குறவஞ்சி - பள்ளு முக்கூடற் பள்ளு நளவெண்பா புகழேந்தியார் நைடதம் அதிவீரராம பாண்டியன் - திருவிளையாடற்புராணம் - பரஞ்சோதியார் - வில்லிபாரதம் - வில்லிபுத்தூரார் - அருணகிரியார் - திருப்புகழ் - குமரகுருபரர்- தாயுமானவர் - காளமேகப்புலவர் - இரட்டையர் - அந்தகக்கவி வீரராகவ முதலியார் - சிவப்பிரகாசர் - - பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் - படிக்காசுப்புலவர் - பட்டினத்தடிகள் - பதினெண் சித்தர்கள் - உரையாசிரியர்கள் - இளம் பூரணர் பேராசிரியர் நச்சினார்க்கினியர் - சேனாவரையர் - கல்லாடர் - தெய்வச்சிலை யார் - அடியார்க்கு நல்லார் - பரிமேலழகர் - வைணவ உரைகள் - சைவசமயச்சாத்திர உரைகள் - சிவஞான முனிவர்

**முன்னுரை:-**

தமிழகத்தின் வளர்ச்சியையும் வரலாற்றையும் அறிய உதவுவன அவ்வக்கால இலக்கியங்களே. சங்ககாலம் சிறந்த சான்றோர்களையும், வள்ளல்களையும் கொண்டிருந்தமையை அக்காலத்தியத் தொகைப் பாடல்கள் விளக்குகின்றன. சங்கம் மருவிய காலம் சமண, பௌத்த சமயங்களின் ஆதிக்கம் மேலோங்கி இருந்ததை

அக்கால கட்டத்தில் தோன்றிய காப்பியங்களும், பிறநீதி நூல்களும் விளக்கின. களப்பிரர் ஆதிக்கம் பெற்றிருந்த காலம் தமிழிலக்கிய வரலாற்றில் இருண்டகாலம் எனக் குறிப்பிடப்படுகின்றது. சமண, பௌத்த சமயங்களின் ஆதிக்கத்தை வீழ்த்தி மீண்டும் இந்துமத வளர்ச்சிக்கு உதவியது ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்தாம் நூற்றாண்டுவரை ஆண்ட பல்லவர் ஆட்சிக் காலமே. இப்பல்லவர் காலம் பக்தி இலக்கிய காலம் என்றும் கூறப்படுகின்றது. பல்லவர்களை அடுத்து ஆட்சிக்கு வந்த சோழர் காலத்தில் தமிழ் வளர்ச்சி உச்ச கட்டத்தை அடைந்தது. எனவேதான் சோழராட்சிக் காலத்தைத் தமிழிலக்கிய வரலாற்றின் பொற்காலம் என்று கூறுகின்றனர்.

ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை ஆண்ட இச்சோழராட்சி 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே வீழ்ச்சியடையத் தொடங்கியது. 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோழராட்சி முற்றிலும் சிலும் அழிந்து பாண்டியராட்சி தொடங்கியது. ஆனால் பாண்டியரிடம் ஏற்பட்ட ஒற்றுமைஇன்மை காரணமாக முகமதியர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. ஏற்பட்டது. ஆனால் இம்முகமதியர்கள் இந்துக் உணர்விற்கு ஊறுசெய்த காரணத்தினால் இந்துக்கள் முகமதியராட்சியை ஒழிக்கக கருதினர். இம்முயற்சியின் பயனாக அரிகரர், புக்கர் என்ற சகோதரர்களால் துங்கபத்திரா நதிதீரத்தில் விஜயநகரப் பேரரசு தோற்றுவிக்கப் பட்டது. அதே நேரத்தில் கி.பி. 1538-ல் குமாரகம்பண்ணன் என்பவர் முகமதியர்களை வென்று மதுரையில் நாயக்கர் அரசுக்கு அடிகோலினார். அது முதல் 400 ஆண்டுகள் நாயக்கர் ஆட்சி மதுரையில் நிலைத் திருந்தது.

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் சோழராட்சிக் காலம் போன்று காப்பியங்களும் புராணங்களும் தோன்றவில்லை, ஆயினும் பள்ளு, உலா, தூது, கலம்பகம் முதலிய சிறுபிரபந்தங்களும், கோயில்களைப்பற்றிய சிறுசிறு தலபுராணங்களும் தோன்றின. பிரபந்தம் என்பது வடமொழிச் சொல். சிறு பிரபந்தங்கள் எனப்படுகின்ற வடமொழிச் சொல் தமிழில் சிற்றிலக்கியங்கள் என்று வழங்கப்படுகின்றது. செய்யுள், யாப்பு எனும் சொற்களைப் போன்றே பிரபந்தம் என்ற சொல்லும் நன்கு கட்டப்பட்டது என்ற பொருளுடையதாகும். பிரபந்தங்கள் 96 என்பது வழக்கு. இதனை ஒட்டி வீரமாமுனிவர் தமது சதுரகராதியில் “பிரபந்தம் 96 வகை“ என்று குறிப்பிடுவர். இப்பிரபந்தங்களின் இலக்கணம் பற்றிப் பிற்காலத்தில் தோன்றிய பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை என வழங்கும் வெண்பாப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கணவிளக்கப் பாட்டியல் போன்ற பாட்டியல் நூல்கள் விரித்துரைக்கின்றன. ஆனால் இவற்றுள் கூறப்படாத சிற்றிலக்கியங்கள் சிலவற்றை இலக்கணநூல்கள் குறிப் பிடுகின்றன.

96 வகைப் பிரபந்தம் எனும்பொழுது தமிழிலுள்ள காப்பியம் புராணம் சிறுநூல்கள் அனைத்தையும் உட் கொண்டே கூறப்பட்டு வந்தது என்பதைப் பாட்டியல் நூல்களைக் கொண்டு தெளியலாம். சிற்றிலக்கிய நூல்கள் நெடும்பாட்டுபோல்வன. ஒரு சில துறைகளைப் பற்றிய செய்திகளையே உள்ளடக்கியன. சுருங்கிய அளவினதாகவும், எளிதில் படித்து முடிக்கக் கூடியனவாகவும் அமைவன. இச்சிற்றிலக்கியங்கள் பொதுவாக ஆண்டவன், அரசன், வள்ளல், குரு ஆகியோரின் சிறப்புக்களை எடுத்துரைப்பதையே தமது நோக்கமாகக்கொண்டு விளங்கின.

சிற்றிலக்கியம் என்ற சொல்வழக்கு பிற்காலத்ததாயினும் சங்ககாலம் முதலே இவ்வகைமைகள் தமிழில் இடம் பெற்றிருந்து காலந்தோறும் வளர்ச்சி பெற்று வந்திருக்கின்றன. டுயுபுரு சிற்றிலக்கிய வகைமைகளுக்கான வித்துக்களை நாம் சங்க இலக்கியத்துள் காணலாம். அன்று முதல் இன்று வரை பல சிற்றிலக்கியவகைகள் சிறந்து வளர்ந்துள்ள போதும் சிற்றிலக்கிய வகை மேலோங்கிய காலம் என்பது கி.பி.12 ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. பல்லவர் காலத்தைப் “பக்தி இலக்கிய காலம்“ என்றும் இடைக்காலச் சோழர் காலத்தைக் “காப்பிய காலம்“ என்றும் அவ்வக்கால கட்டத்தில் தோன்றிய இலக்கியங்களின் மேலோங்கிய தன்மையால் சிறப்பித்துக் கூறுவதுபோல கி.பி.1350 முதல் ஆட்சி புரிந்த நாயக்கர் காலத்தைச் “சிற்றிலக்கிய காலம்“ என்றுகூறலாம்.

சிற்றிலக்கியங்கள் அகம் பற்றியன, புறம் பற்றியன, பக்தி பற்றியன எனப் பல பிரிவுகளாகப் பகுத்து நோக்கத்தக்கன. இவற்றுள் தலைமை வாய்ந்தவையாய்சு காணப்படுவன அந்தாதி, பிள்ளைத்தமிழ், பரணி, கலம்பகம், கோவை, உலா, மாலை, தூது, பள்ளு, குறவஞ்சி என்பனவாம். இச்சிற்றிலக்கியங்கள் எல்லாம் தொல்காப்பியம் கூறும் “விருந்து“ எனும் வனப்பினுள் அடங்கும்.

**ஒட்டக்கூத்தர்**

“மலரிவருங் கூத்தன்“. எனவரும் தண்டியலங்கார மேற்கோள் செய்யுளைக் கொண்டு, இவர் - மலரி எனும் ஊரினர் என்று கருதப்படுகின்றது. இவர் கைக்கோளர் என்று கூறப்படுகின்ற செங்குந்த மரபினராவார். இவரது இயற்பெயர் கூத்தர் என்பது, இவரது பெயரே இவரது சிவபத்தியைத் தெளிவாக்கும் “கூத்த முதலியார் என்னும் இவரை வழங்குவர். முதல் குலோத்துங்கனின் மகளான விக்கிரமசோழனின் அவைக்களப் புலவராக விளங்கிய இவர் அக்காலக் கவிகளுல் செய்யுளியற்றும் ஆற்றலில் தலைசிறந்து விளங்கியமையால், “கவிராஷசன்“ என்றும் “கவிச்சக்ரவர்த்தி” என்றும் இரு மொழிகளிலும் புலைமைப் பெற்றுச் சிறந்து விளங்கிய இவருக்கு அரசு ‘காளம்’ என்னும் விருதளித்துப் பாராட்டியதால் ‘காளக்கவி’ என்று அழைக்கப்பட்டார். இருமொழி நூல்களுள் இன்றியமையாதனவற்றைச் செவ்வனே அறிந்து அவற்றை நன்கு

செய்யுள் இயற்றும் திறம் பெற்று விளங்கியமையால் “சருவஞ்ஞ கவி“ என்றும் வழங்கப்பட்டார். தம்போன்ற புலவர்களைப் போற்றும் பரந்த மனம் படைத்தவர். கலிங்கத்துப் பரணி பாடிய செயங்கொண்டாரைத் தான் பாடிய குலோத்துங்கள் பிள்ளைத் தமிழில் “பாடற் பெரும்பரணி, தேடற்கருங்கவி, கவிச்சக்கரவர்த்தி” என்று போற்றியுள்ளதுடன், அவரது நூலையும் “தென்றமிழ் தெய்வப்பரணி” என்று போற்றி உரைத்துள்ளார். குணம் கண்டு போற்றும் இவர் குறைகாணின் பொறுக்கலாகா மனம் படைத்தவர் என்பதை “இரண்டொன்றா முடிந்து தலையிரங்கப்போட்டு வெட்டுதற்கோ கவி ஒட்டக்கூத்தனில்லை” எனவரும் பாடல் வரிகள் வலியுறுத்தும். பாடல்வரிகள் கோவை உலா, அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன் என்று பாராட்டப்படும் இவர் முதற்குலோத்துங்கசோழன் அவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன், அவன் மகன் இராசராசன் காலத்தும் இருந்தவர் கம்பர். செயங்கொண்டார் போன்ற பெரும் புலவர்களின் சமகாலத்துப் புலவர்.

**இவர் இயற்றிய நூல்கள்:**

மூவருலா, தக்கயாகப்பரணி, ஈட்டி எழுபது, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், அரும்பைத்தொள்ளாயிரம், காங்கேயன் நாலாயிரக்கோவை முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார். இராமாயண உத்தரகாண்டத்தையும் இவர் எழுதியதாகக் கூறுவர். உலா - எனும் இலக்கியத்திற்குத் தொல்காப்பியத்திலேயே தோற்றுவாய் உள்ளது என்பர்.

“ஊரோடு தோற்றமும் உரித்தென மொழிய

வழக்கொடு சிவணிய வகைமையான்”

என்பது தொல்காப்பிய நூற்பா உலாவின் இலக்கணம் பற்றிப் உரைக்கின்றன. பாட்டியல் நூல்கள்

“திறந்தெரிந்த பேதை முதலெழுவர் செய்கை

மறந்தயர வந்தான் மறுகென்று அறைந்தகலி

விளக்கமாக வெண்பா வுலாவாம்“

என்று வெண்பாப்பாட்டியலும்,

“பாட்டுடைத் தலைவன் உலாப்புற இயற்கையும்

ஒத்தகாமத் தினையாள் வேட்கையும்

கலியொலி தழுவிய வெள்ளடி யியலால்

திரிபின்றி நடப்பது கலிவெண்பாட்டே“

என்று பன்னிரு பாட்டியலும் கூறுவதினின்று, உலா இலக்கியம் கலிவெண்பாவால் இயற்றப்படுவது என்பது தெளிவாகின்றது. பாட்டுடைத் தலைவனாக, இறைவன், அரசன், ஞானகுரு ஆகியோர் இடம் பெறுவர். இவர்களுள் ஒருவர் யானை. குதிரை, தேர் போன்றவற்றுள் உலாவர, அதுகண்ட பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் ஆகிய 7 பருவ மகளிரும் அவரவர் பருவ, உள வளர்ச்சிக்கு ஏற்பக் காதல் கொண்டு வருந்துவதாகக் கற்பனை வளத்துடன் சுவை பெருகப் பாடப்படும் பிரபந்தம் “உலா” எனும் பெயர் பெற்றது.

இவ்வுலா இலக்கியங்கள் புறப்பொருள் துறையில் பாடாண் திணையைச் சார்ந்தவை ஆகும். இதன் அமைப்பைப் பாட்டியல் நூல்கள் முன்னெழுநிலை, பின்னெழுநிலை என இரு கூறாகப் பிரித்துக் கூறும். முன்னெழுநிலையில் தலைவன் சிறப்பு. பெருமை, நீராடல், அணிபுனைதல், உடன் வருவோர் கூற்று, ஊர்தியில் அமர்தல் ஆகியன அடங்கும். ஏழு பருவ மகளிர் வருணனை, விளையாட்டு, தலைவனைக் கண்டு காதல் கொள்ளுதல், காதல்நோய்த் துன்பம் ஆகியன பின்னெழுநிலை எனப்படும்.

பாட்டுடைத் தலைவனோடு தொடர்புடைய ஊரின் பெயராலும், பாட்டுடைத் தலைவனது இயற்பெயரோடு தொடர்புடைய பெயராலும், பாட்டுடைத் தலைவனது ஊர்ப்பெயர். இயற்பெயர் ஆகிய இரண்டொடும் சேர்த்திய பெயராலும் உலாக்கள் பெயர் பெறும்.

**மூவருலா**

விக்கிரம் சோழன் உலா. குலோத்துங்க சோழன் உலா, இராசராசசோழன் உலா ஆகிய மூன்று உலா நூல்களும் சேர்த்து மூவருலா என்று அழைக்கப்படுகின்றது. இதன் மூலம் பல வரலாற்றுச் செய்திகள் அறியப்படுகின்றன. எனவே இது ஒரு வரலாற்று இலக்கியமாகக் கருதப்படுகிறது. பாட்டுடைத் தலைவர்கள் இவரது உலாவினைக் கேட்டு தக்க பரிசளித்துப் பெருமைப்படுத்தினர். இராசராசசோழன் உலாவை அரங்கேற்றிய போது ஒவ்வொரு கண்ணிக்கும் ஆயிரம் பொன் பரிசளிக்கப்பட்டது. மற்றொரு உலாவிற்குப் பரிசாக அரிசிலாற்றங்கரையில் இருந்த ஓர் ஊர் பரிசளிக்கப்பட்டது. அவ்வூர் இன்றும் கூத்தனூர் என்று இவர் பெயரால் வழங்கி வருகின்றது.

**தக்கயாகப்பரணி**

தக்கன் செய்த வேள்வியை அழித்த போது அப்போர்க்கள நிலையைச் சிவபெருமானே உமை அம்மைக்குக் காட்டுவதாகப் பாடப்பட்டது. வீரபத்திரதேவர், தன்

தலைவனான சிவபெரு மானது ஆணைப்படி, சிவபெருமானை அவமதித்த தக்கனை யும், உடன் இருந்த திருமால், பிரம்மன், இந்திரன் முதலிய தேவர்களையும் எதிர்த்துப் போரிட்டுப் பெற்ற வெற்றியைக் கூறுகின்றது. இந்நூல் பரணி இலக்கியப்படி தோல்வியுற்ற தக்களின் பெயரால் தக்கயாகப்பரணி என்று பெயர் பெற்றது. இது புராணத்தொடர்புடையதாகத் திகழ்கின்றது. இதன் காலம் 12-ஆம் நூற்றாண்டு ஆகும்.

**குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ்**

தமிழ் இலக்கியத் துறையில் பிள்ளைத்தமிழ் எனும் துறையை வகுந்த பெருமை ஒட்டக்கூத்தரையே சாரும். இவருக்கு முன்பே பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாக பாவித்துப் பல பாடல்கள் பாடியுள்ள போதும் “பிள்ளைத்தமிழ்“ என்ற பெயரில் ஒரு தனி நூலினைச் செய்த முதல் ஆசிரியர் ஓட்டக்கூத்தரே.

**செயங்கொண்டார்**

தீபங்குடி எனும் ஊரைச் சேர்ந்தவர் இவர் பாடிய கலிங்கத்துப் பரணியின் சிறப்பால், “பரணிக்கோர் செயங்கொண்டான்“ என்று போற்றப்படும் சிறப்படைந்தவர். முதல் குலோத்துங்க சோழனின் காலத்து வாழ்ந்தவராதலால் இவரது காலம் 11-நூற்றாண்டாகும். இவர் சைவ சமயத்தவர் என்றும், சமணர் என்றும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. மிகுந்த சமயப் பொறுமை உடையவரான இவர் தன் கவிச்சிறப்பால் “கவிச்சக்ரவர்த்தி“ என்ற பட்டமும் பெற்றார். கவிராஷசரான ஓட்டக்கூத்தராலேயே போற்றி உரைக்கப்பட்ட பெருமை இவருக்கும், இவரது கலிங்கத்துப் பரணிக்கும் உண்டு.

**பரணி**

போர்க்கள வெற்றியைப் புகழ்ந்து பாடுவதே பரணியாகும்.

“ஆனை ஆயிரம் அமரிடை வென்ற

மானவனுக்கு வகுப்பது பரணி“

என்பது இலக்கண விளக்கப் பாட்டியல் கூறும் விளக்கமாகும். இவ்வாறே பிற பாட்டியல் நூல்களும் போரில் 700க்கும் மேற்பட்ட யானைகளைக் கொன்றவனுக்குப் பரணி பாடப்படும் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறுகின்றன.

பரணி நட்சத்திரத்தில் பிறந்தவளான காளியைச் சிறப்பித்துப் பாடுவதால் பரணி எனப்படுகிறது எனும் பொருத்தமுடையதாகத் தெரிகின்றது. பரணி கருத்தும் நாளில் வெற்றி நல்கும் காடுகெழு செல்வியான கொற்றவைக்குக் கூழ்சமைத்துப் படைத்து,

கூத்தியற்றி வழிபாடு நிகழ்த்துவதால் “பரணி“ எனப்பெயர் ஏற்பட்டது என்பது அறிஞர் கருத்து.

தினைப்புனம் காப்போர் புனத்தில் பரணமைத்து, அதன் மீதிருந்து பறவைகளைத் துரத்துவது போன்று, போர்க்களத்தில் வீரன் ஒருவன் யானை மீதமர்ந்து எதிரிகளைத் துரத்தலால், பரணி எனப்பட்டது என்றும், அரசனின் படைக்கருவிகளான வில், வாள், வேல் ஆகிய படைக்கருவிகளால் அமைக்கப்பட்ட போர்ப்பரண் மீதிருந்து போர்க் காட்சியை நேரில் கண்டு புலவர் பாடுவதால் “பரணி“ எனப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

ஒரு காலத்தில் ஏர்க்களம் பாடும் பொருநரே அன்றிப் போர்க்களம் பாடும் பொருநர்களும் இருந்தனர். அவர்களின் வாய்மொழிப் பாடலின் வழி வந்ததே பரணி இலக்கியம். புறத்திணையில் இடம்பெற்றுள்ள களவேள்வி, கள வாழ்த்து, முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை போன்றவையே பரணி இலக்கியம் தோன்ற அடிப்படைகளாகும்.

**கலிங்கத்துப்பரணி**

சோழமன்னன் முதலாம் குலோத்துங்கனுக்கும், கலிங்க மன்னன் அனந்தவர்ம கோடகங்கனுக்கும் கலிங்கநாட்டில் போர் நடைபெற்றது. சோழனது சார்பில் படைத்தலைவன் கருணாகரத் தொண்டைமான் படை நடத்திச் சென்று கலிங்கத்தை வென்று வாகைச் சூடிய நிகழ்ச்சியைச் சுவைபடக் கூறுகின்றது. குலோத்துங்கனையும், கருணாகரனையும் சிறப்பிக்க எழுந்த இந்நூல் பரணி இலக்கணப்படி தோற்றோடிய கலிங்க வேந்தன் பெயரால் “கலிங்கத்துப்பரணி“ என்று அழைக்கப்படுவதாயிற்று. இதுவே பரணி இலக்கியங்களிலேயே தலைச் சிறந்து விளங்குகின்றது.

பரணி இலக்கியத்தில் தாழிசை என்ற யாப்பு வடிவத்திற்கு மிகச்சிறந்த இடம் தந்து பலகோணங்களில் அதை வளர்த்தப் பெருமை சயங்கொண்டாருக்கு உண்டு. ஒருெ பாருள் மேல் மூன்றடுக்கி வரும் தாழிசைகள் நாட்டுப்பாடல் மரபினவாம். இந்நூலில் சந்த வேறுபாட்டால் உணர்ச்சி, பொருள் வேறுபாடுகளை உணர்த்தும் தாழிசைகள், விருத்தம் எனும் ஒண்பாவுடன் போட்டியிடக் காணலாம். இதில் சுருங்கச்சொல்லல் முதலிய பத்து அழகுகளும், ஒன்பான் சுவைகளும், சந்த இன்பமும், ஓசை நயமும், எளிமையும் ஒரு சேரப் பொருந்தி இருக்கக் காணலாம்.

**நூல் அமைப்பு:**

போர்க்கள வெற்றித் தெய்வமான கொற்றவையை வழிபடும் விழாவே பரணி. இது அத்தெய்வத்திற்குரிய பரணி நட்சத்திரத்தில் கொண்டாடப்படும். கூளிகள் எனப்படும்

பேய்கள் போர் நடை பெறாமையால் வாடி. காளியிடம் முறையிட, காளியும், "விரைவில் போர் வர இருக்கிறது' வயிறார உண்ணலாம்" என்று கூறுவதாகத் தொடங்கி போர் நிகழ்ச்சிகளைக் கூறுவதே இந்நூலாகும்.

கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடுபாடியது. கோயில் பாடியது. தேவியைப் பாடியது, இந்திரசாலம், மன்னன் மரபுரைத்தல், பேய்முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர்பாடியது, களம்பாடியது முதலான 13 உறுப்புக்கள் பரணி இலக்கியத்தில் இடம்பெறும்.

சோழராட்சிக் காலத்தில் தலைசிறந்த இலக்கியங்கள் மாத்திரமின்றி, எளிய மக்களும் விரைவில் புரிந்து கொள்ளுமளவிற்குப் பல இலக்கண நூல்களும் இயற்றப்பட்டன.

**ஔவையார்:**

சோழ நாட்டில் உறையூரில் பாணர் குடியில் ஆதி - பகவான் என்பார்க்குப் பிறந்தார் என்பர். இவருடன் பிறந்தோர் எழுவர் என்றும் பெற்றோர் இவருக்குத் திருமணம் செய்யக் கருதியபோது விநாயகப் பெருமானை வேண்டி முதுமை கைவரப் பெற்றார் என்றும் கூறப்படுகிறது. இவரது காலம் இது என்று கணித்தறியக் கூடவில்லை. ஏனெனில் "ஔவையார்" எழுதியனவாகக் கூறப்படுகின்ற இலக்கியங்கள் சங்ககாலம் முதலாக இடைக்காலம் வரை பலவாகக் காணப்படுகின்றது. எனவே "ஔவையார்" என்ற பெயரில் பல்வேறு காலங்களில் பலர் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்றும் அனைவருமே அறிவிற் சிறந்து விளங்கினர் என்பதும் தெளிவாகின்றது. இவரைப் பற்றி தமிழ் நாவலர் சரிதை பல சுவையான கருத்துக்களைக் கூறுகின்றது.

பெண்பாற் புலவர்களுள் சிறந்து விளங்கியவரும் சங்ககாலத்தில் வாழ்ந்தவருமான ஔவையார் பாடியனவாகப் புறநானூற்றில் 50 பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றுள் 26 பாடல்கள் அகப்பொருள் பற்றியதாகவும், 33 பாடல்கள் புறப்பொருள் பற்றியதாகவும் விளங்குகின்றன. கடையேழு வள்ளல்களான அதியமான் நெடுமான் அஞ்சி. பாரி, ஆகியோருடன் நெருங்கிய நட்பு பூண்டு வாழ்ந்தவர். அதியமானால் கிடைத்தற்கறிய நெல்லிக்கனி தரப்பெற்று உண்டவர். அதியமானின் சார்பாகத் தொண்டைமானிடம் தூது சென்ற பெண் தூதுவர். கபிலரைப் போலவே இவரும் குறிஞ்சிக் காட்சிகளை மிகுதியும் பாடியுள்ளார்.

சங்ககாலத்திற்குப் பிறகு சோழராட்சியிலும் ஔவையார் ஒருவர் வாழ்ந்தார். இவரது காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு என்பர். அறிஞர் மு. அருணாசலம் அவர்கள் சிறுவர்களுக்கு நல்வழி காட்டி விரும்பிய இம் மூதாட்டி எளிய இனிய சொற்றொடர்களைக் கொண்ட பல நூல்களை இயற்றியுள்ளார். ஆத்திச்சூடி, கொன்றை

வேந்தன், மூதுரை அல்லது வாக்குண்டாம், நல்வழி ஆகிய நான்கு நூல்கள் இவர் இயற்றியவை ஆகும்.

**ஆத்திச்சூடி:**

இந்நூலில் 109 பாக்கள் இடம் பெற்றுள்ளன. இதன் கடவுள் வாழ்த்துப் பாடல் "ஆத்திச் சூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே" - என்பதாகும். இதன் முதல் சொல்லைக் கொண்டே அழைக்கப்படுகின்றது. சிறுவர்கட்குத் இந்நூல் தமிழ் எழுத்துக்களைக் கற்பிக்கும் வகையில் (உயிர் மற்றும் உயிர்மெய்) எழுத்துக்களை முதலெழுத்துக்களாகக் கொண்ட எளிய சொற்றொடர்களைக் கொண்ட பாக்களை உடையது இந்நூல். சிறந்த நூலிற்குரிய பத்துவித அழகுகளுள் ஒன்றான சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலுக்கு எடுத்துக்காட்டாக இதனைக் கூறலாம். எனவே இதன் சிறப்பினைக் கூற வந்த அறிஞர் மு. அருணாசலம் அவர்கள் "மிகச் சுருங்கிய சொற்களால் உலகத்துக்குப் பொதுவான நீதிகளை இவ்வளவு அதிகமாகச் சொன்ன நூல் வேறு இல்லை" - என்று பாராட்டியுள்ளார். குறட்கருத்துக்களை இரண்டு சீர்களில் உள்ளடக்கிச் செறிவுடன் கூறியுள்ள திறம் கற்று மகிழ்வதற்கு உரியது.

**கொன்றைவேந்தன்:**

"கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே" எனும் கடவுள் வாழ்த்துப் பாடலின் முதல் சொல்லால் பெயர்பெற்ற நூல், மொழிமுதலாகும் அகரவரிசையில் எதுகை மோனை நயங்கள் பொருந்த ஆத்திச்சூடி யினும் சிறிது நீண்ட சொற்றொடர்களால் ஆக்கப்பட்டுள்ள இந்நூல் படிப்போர்க்குப் பயன்தரக்கூடிய அறிவுரைகளைப் பசுமரத்தாணிபோல் படியவைத் தக்க கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றது.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று

இல்லறம் அல்லது நல்லறம் அன்று

ஏவா மக்கள் மூவா மருந்து

காவல் தானே பாவையர்க் கழகு

கிட்டா தாயின் வெட்டென மற

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

சூதும் வாதும் வேதனை செய்யும்

தோழனோடும் ஏழைமை பேசேல்"

இவ்வாறு வாழ்க்கைக்கு பயன்படக் கூடிய அரிய கருத்துக்களை எளிய முறையில் கூறியுள்ளார்.

**மூதுரை:**

கடவுள் வாழ்த்துப் பாடலுடன் 31 பாடல்கள் அடங்கிய எளிய சிறிய நூல்.

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்

நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு

துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்

தப்பாமல் சார்வார் தமக்கு" - எனக் கடவுள் வாழ்த்து

பாடல் "வாக்குண்டாம்" என்று தொடங்குவதால் இந்நூல் "வாக்குண்டாம்" என்றும் அழைக்கப்படுகின்றது. பழைய இலக்கியங்களில் காணப்படும் அறிய கருத்துக்களையும், நீதிகளையும் உள்ளடக்கிய இதன் 30 பாடல்களும் இனிய நயமுடைய பாடல்களாகும்.

"நீரளவே ஆகுமாம் நீராம்பல், தான்கற்ற

நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு மேலைத்

தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்

குலத்தளவே ஆகும் குணம்" - எனும் மூதுரைப் பாடல்

'வெள்ளத்தனைய மலர் நீட்டம்', 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' போன்ற பல குறள் கருத்துக்களை உள்ளடக்கியதாக விளங்கக் காணலாம்.

**நல்வழி:**

கடவுள் வாழ்த்து உட்பட மொத்தம் 41 செய்யுட்களைக் கொண்ட இந்நூல் மக்கள் பின்பற்ற வேண்டிய நல்ல வழிகளை விளக்கிக் கூறுவதால் காரணப் பெயராக "நல்வழி" என்றே வழங்கப்படுகின்றது.

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை

நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்

துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்

சங்கத்தமிழ் மூன்றும் தா" - எனவரும் வினாயகர் துதியே இதன் கடவுள் வாழ்த்துச் செய்தியாக விளங்குகிறது.

"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை

தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்

கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்

பசிவந்திடபோம் பறந்து" - என்ற பாடலில்

தெளிவுர விளக்கியுள்ளார். இப்பாடலின் கருத்து மக்களிடையே பழமொழி கருத்துப்போல் "பசிவந்திட பத்தும் பறந்துபோம்" என்ற சிறு மாற்றத்துடன் வழங்கிவரக் காணலாம்.

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்

மாண்டார் வருவரோ" - எனும் பாடல் உயிர்களின் நிலையாமையை விளக்கக் காணலாம்.

**தூது**

தொல்காப்பியர் காலத்திலும் இலக்கியப் பிரிவாக விளங்கிய ஒன்று தூது எனும் சிற்றிலக்கியம். தன் கருத்தைப் பிறிதொருவருக்குத் தெரிவிக்குமாறு இடையில் ஒருவரைத் தன் சார்பாக அனுப்புவதே "தூது" எனப்படும். இத் தூது அகத்தூது, புறத்தூது என இருவகைப்படும். புறத்தூதிற்குச் சிறந்த சான்றாகத் திகழ்வது புறநானூற்றில் அதியமான் சார்பாகத் தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையாரின் தூதாகும். அகத்தூதாவது - காமம் மிக்க கழிபடர் கிளவியால் தலைவி தலைவனிடம் தூது அனுப்புவதாகும். பேசும் ஆற்றலும், கேட்கும் ஆற்றலும் அற்ற பொருட்களையும் தூதாக அனுப்புதல் வழக்கமாகும். இதனை இலக்கண அறிஞரும் ஏற்றுக்கொண்டனர்.

"சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச் செய்யா மரபில்தொழில்படுத்தடக்கியும்"

என்று தொல்காப்பியமும் கேட்குந்போலவும் கிளக்குந போலவும்

இயக்குந போலவும் இயற்றுந போலவும்

அ∴றிணை மருங்கினும் அறையப் படுமே"

என்று நன்னூலும்

“பயில்தருங் கலிவெண் பாவினாலே உயர் திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும் சந்தியில் விடுத்தல் முந்துறு தூது” -என்று இலக்கண விளக்கமும் கூறும்.

**அகத்தூது**

தலைவன்மேல் காதல் கொண்ட தலைவி, தனது காதல் துன்பத்தைத் தலைவனுக்கு உரைத்துவா என்றோ, தூது உரைத்து மாலை வாங்கி வா என்றோ உயர்திணை அல்லது அஃறிணைப் பொருளைத் தூதாக அனுப்புவது அகத்தூது இலக்கணமாகும். அது பெரும்பாலும் தலைவி தலைவனிடம் தூது அனுப்புவதாகவே அமைந்திருக்கும். மிக அரிதாகத் தலைவன் தலைவியிடத்துத் தூது அனுப்புவதும் அமைந்திருக்கும். “விறலிவிடு தூது“ என்றதூது தலைவன் தன் மனைவியிடத்து அனுப்பும் தூதாகும்.

முன்பு “அன்னம், மயில், கிளி, மேகம், பூவை, தோழி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு“ எனும் பத்துமே தூதுவிடும் தகுதியுடைய பொருள்களாகக் கருதப்பட்டன. காலப்போக்கில் பணம், தமிழ், புகையிலை, நாரை, நெல், மான், செருப்பு என்பனவும் தூதுப் பொருள்களாக இடம் பெறத் தொடங்கின. ஆனால் இதுவரைத் தோழி அல்லது பாங்கி விடு தூது நூல் எதுவும் கிடைக்கவில்லை. இலக்கியத்தில் தூதுபெறும் இடம் சிற்றிலக்கிய வகையாகச் சிறந்து வளர்ந்துள்ள தூது புராண, காப்பியங்களிலும் ஒரு பகுதியாக இடம் பெற்றுள்ளது. நளவெண்பா அன்னத்தின் தூதினைச் சிறப்பாகக் கூறுகின்றது. இது அசுத்தூது, இராமாயணத்தில் அனுமன் தூதும், அங்கதன் தூதும் இடம் பெற்றுள்ளன. பாரதத்தில் கண்ணன் தூதும், கந்த புராணத்தில் “வீரவாகுத்தேவர் தூதும் புறத்தூதிற்குச் சிறந்த சான்றுகளாகும். கலம்பகம், அந்தாதி ஆகிய சிற்றிலக்கியங்களிலும் ஓர் உறுப்பாகத் தூது இடம் பெற்றுள்ளது. பக்தி இலக்கியமும் தூதினைக் கையாண்டிருப் பதைத் திருஞான சம்பந்தர், மணிவாசகர் ஆகியவர்களின் பாடல் களில் காணலாம். வைணவப் பெரியாரான சடகோபரும் தனது திருவாய்மொழிப் பாசுரங்களில் தலைமகள் தூதுவிடும் துறையமைந்த பாசுரங்களில் - பூவை, குயில், அன்னம், நாரை ஆகிய பொருட்களைத் தூது அனுப்புவது சிறந்து விளங்கக் காணலாம்.

**சிறந்து விளங்கும் சிலதூது நூல்கள்**

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் பாடிய - நெஞ்சுவிடுதூது“ பலபட்டடைச் சொக்கநாதப் புலவரின் அழகர் கிள்ளை கிள்ளை விடு தூது சுப்ரதீபக்கவிராயரின் “கூளப்பநாயக்கன் விறலிவிடு தூது கச்சியப்ப முனிவர் இயற்றிய வண்டுவிடுதூது. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமிர்தம் பிள்ளை

என்பவரால் எழுதப்பட்ட “தமிழ்விடுதூது“ முதலியன.“. இவை தவிர ஆசிரியர் பெயர் தெரியாத நிலையில் “தமிழ்விடுதூது ஒன்று வழக்கிலிருந்து வருகின்றது.

**தமிழ்விடுதூது**

இதன் ஆசிரியர் யார் என்பதும், இவரது காலம் எது என்பதும் தெரியவில்லை. ஆனால் நூலின் கருத்தினைக் கொண்டு நோக்கும் பொழுது இதன் ஆசிரியரின் தமிழ்ப்பற்றும், பக்தியும், புலனாவதோடு, சைவத்தையும், தமிழையும் தனது இரு கண்களாகக் கொண்டிருந்த உண்மையும் புலனாகின்றது. தமிழ் வளர்த்த மதுரையில் குடிகொண்டிருக்கும் சொக்க நாதர்மீது காதல் கொண்ட தலைவி, தன் காதலைச் சொக்கருக்கு எடுத்துரைக்கத் தமிழைத்தவிர வேறெதனைத் தேர்ந்தெடுக்க முடியும்? இவ்வாறு தமிழ் வளர்த்த மதுரைவாழ் தலைவனிடத்துத் தமிழைத் தூதாக அனுப்புவதே தமிழ்விடுதூது.தலைவி தமிழின் பெருமையையும் சிறப்பையும் விளக்கிக் கூறும், இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்“- என்பது போன்ற பகுதிகளே பிற்காலத் தமிழறிஞர்களின் பாடல்களுக்கெல்லாம் அடிப்படையாய் அமைந்தது எனலாம். தமிழின் பெருமையைக் கூறுமுகமாகத் தமிழின் வரலாற்றையே இதில்வடித்துக்கொடுத்துள்ளார்.

**பிள்ளைத்தமிழ்**

“குழவி மருங்கினும் கிழவதாகும்“ - என்னும் தொல்காப்பிய நூற்பா, பிள்ளைத் தமிழ் இலக்கியத் தோற்றத்திற்குச் சான்றாக விளங்குகின்றது. ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப் எனும் தொல்காப்பிய நூற்பா, தொல்காப்பியனார் காலத் திலேயே பிள்ளைத்தமிழ் நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பதை உணர்த்தும். இவ்வாறு தொல்காப்பியர் காலத்திலேயே சிற்றிலக்கிய விதை விதைக்கப்பட்டு விட்ட போதிலும், அதனைச் சிறப்பாகத் தழைத்து வளரச் செய்த பெருமை பக்தி இலக்கியங்களுக்கே உரியதாகும். பிற்காலத்தில் பெருவழக்குப் பெற்றுச் சிறந்த இச்சிற்றிலக்கிய வகையினைத் தோற்றுவித்தவர். பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான பெரியாழ்வாரே ஆவார். இவர் கண்ணனைக் குழந்தையாக எண்ணித் தாலாட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். இப்பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் கழி நெடிலாசிரியச் சந்தவிருத்தங்களால் ஆனவையாகும்.

**பிள்ளைத்தமிழ் இலக்கணம்**

புலவர்கள் தாம் விரும்பும் தெய்வத்தையோ, அரசனையோ, வள்ளலையோ, சான்றோரையோ குழந்தையாகப் பாவித்துப் பாடப்படுவது பிள்ளைத்தமிழ் எனப்படும்.

இதனைப் பிள்ளைக்கவி என வெண்பாப்பாட்டியலும், பிள்ளைப்பாட்டு எனப் பன்னிருபாட்டியலும் கூறுகின்றன. இது குழந்தையின் மூன்றாம் திங்கள் முதல் இருபத்தோராம் திங்கள் வரை ஒரு பருவத்திற்கு இரண்டு திங்கள் எனவகுத்துக் கொண்டு, பத்துப் பருவங்களில் வைத்துப் பாடப்படுவது. இதனைப்

“பிள்ளைப்பாட்டே தெள்ளிதின் கிளப்பின் மூன்று முதலாமூவேழ்

அளவும் ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே“

-என்று பன்னிரு பாட்டியல் கூறும். இதில் ஒரு பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் 100 பாடல்கள் பாடப்படும். இவ்விலக்கியம் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும்.

“சாற்றரியகாப்புதால் செங்கீரை சப்பாணி மாற்றரிய முத்தமே வாரானை-போற்றரிய அம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே பம்புசிறுதேரொடும் பத்து“ - என்னும் (வெண்பாப்பாட்டியல் செய்யுளியல்-7) பாடலின் மூலம் காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிறறில், சிறுதேர் எனப்பத்து பிரிவுகள் அடங்கியது என்பது புலனாகும். இப்பத்துப் பருவங்களும் அடங்கியது ஆண்பாற் பிள்ளைத்தமிழ் ஆகும். இப்பத்துப் பருவங்களுள் முதல் ஏழுபருவங்கள் பெண்பாற் பிள்ளைத் தமிழிற்கும் பொதுவாகும். கடைசி மூன்று பருவங்களான சிறுபறை சிற்றில், சிறுதேர் என்பனவற்றிற்குப் பதிலாகக் கழங்கு, அம்மானை, ஊசல் என்னும் மூன்று பருவங்களைச் சேர்த்துக் கூறுவதுமரபு. இதனைப் ““பின்னைய மூன்றும் பேதையர்க காக ஆடும் கழங்கம் மானை ஊசல் பாடுங் கவியால் வகுத்து வகுப்புடன் அகவல் விருத்தத்தாற் கினையனவாம்“ -என்னும் இலக்கணவிளக்கப் பாட்டியல் மூலம் அறியலாம்.

**பிள்ளைத்தமிழ் அமைப்பு**

முதற் பருவமான காப்புப் பருவத்தில் - பாட்டுடைத் தலைவனைக் காத்தருளுமாறு இறைவனை வேண்டுவர். பெரும்பாலும் திருமாலைக் காப்புக் கடவுளாகக் கூறுவது மரபு. இதுகுழந்தையின் 3-ஆம்மாதத்திற்கு உரியது.

**தாலப்பருவம்**

தால்-நாக்கு குழந்தையின் 5-ஆம் மாதத்திற்குரியதான இப்பருவத்தில் குழந்தையை நாவசைத்து ஒலி எழுப்புமாறு வேண்டுவர்.

**செங்கீரை**

செங்கீரை - ஒரு காலை மடித்து ஒரு காலை நீட்டி இரு கைகளையும் ஊன்றிக் கீரை அசைவது போல் ஆடுதல். 7-ஆம் மாதத்திற்குரியதான இ∴து குழந்தையைச் செங்கீரை ஆடுமாறு வேண்டுவது.

**சப்பாணி**

இது 9-ஆம் மாதத்திற்குரியது. இது குழந்தையை இரு கைகளையும் கொட்டுமாறு வேண்டுவது. முத்தம் இப்பருவம் 11-ஆம் மாதத்திற்குரியது. இது குழந்தையை முத்தம் கொடுக்கும் படியாகத் தாயும் பிறரும் வேண்டுவது.

**வருகை அல்லது வாரானை**

குழந்தையின் 13-ஆம் மாதத்தின் நிகழ்ச்சியைக் கூறும் இப்பருவத்தில் குழந்தையைத் தளர்நடையிட்டு வருக என அழைப்பது.

**அம்புலி**

15-ஆம் மாதத்திற்குரிய இப்பருவத்தில் நிலவைப் பாட்டுடைத் தலைவனுடன் விளையாட வரும்படி அழைப்பர். இப்பருவத்தைச் சாம, பேத, தான, தண்டம் எனும் நான்கு வழிகளால் பாடுவர். இப்பருவம் பாடுதற்குக் கடினமான பருவம் என்பர். இதனால் “புலவர்கட்கு அம்புலி புலியாம்“-எனும் வாக்கு எழுந்துள்ளது. இவ்வேழு பருவங்களும் இருபாற் பிள்ளைத் தமிழிற்கும் பொதுவாம்.

**சிற்றில்**

17-ஆம் மாதத்திற்குரியதான இப்பருவத்தில் பெண் குழந்தை கள் கட்டி விளையாடும் சிற்றிலை ஆண்குழந்தை சென்று சிதைப் பதாகக்கூறப்படும்.

**சிறுபறை**

19-ஆம் மாதத்திற்குரிய இப்பருவம் குழந்தை சிறுபறை முழக்கி விளையாடுதலைக் குறிக்கும்.

**சிறுதேர்**

21-ஆம் மாதத்திற்குரிய இதில் குழந்தை சிறுதேர் உருட்டி விளையாடுதல் குறிப்பிடப்படும். இம்மூன்று பருவங்களும் ஆண்பாற்பிள்ளைத் தமிழுக்கே உரியன.

**நீராடல்**

குழந்தையை நீரில் குளிக்கும்படி வேண்டுதல்

**அம்மானை கழங்கு**

கழங்கினை மேலேவீசி ஆடும்படி வேண்டுதல்.

**ஊசல்**

ஊஞ்சலில் ஆடும்படிக் குழந்தையை வேண்டுதல்

**பிள்ளைத் தமிழ் நூல்கள்**

கி.பி.12-ஆம் நூற்றாண்டில் ஒட்டக் கூத்தரால் இரண்டாம் குலோத்துங்க சோழன்மீது பாடப்பட்டுள்ள "குலோத்துங்கன் பிள்ளைத் தமிழே"" முதல் பிள்ளைத்தமிழ் நூலாகக் கிடைத்துள்ளது. இது சோழர்களின் வரலாற்றினைக் கூறும் சிறந்த இலக்கியமாகும்.

கி.பி.17-ஆம் நூற்றாண்டில் குமரகுருபரர் பாடிய மீனாட்சி யம்மை பிள்ளைத்தமிழ், முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ் ஆகிய இரண்டும் பக்தி வரலாற்றில் பெரும்புகழ் படைத் தவையாகும்.

கி.பி.18-ஆம் நூற்றாண்டில் பகழிக்கூத்தர் எழுதிய திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் "பிள்ளைத் தமிழாயினும் பெரிய தமிழ்" - என்று பாராட்டப்படும் பெருமையுடையது. "சுத்தும் தரங்கம் எடுத்தெறிய" எனும் பாடலில் "செந்தில் குமரனின் முத்தர் தனக்கு விலையில்லை" என்று போற்றிப் பாடும் திறம் கற்போர் நெஞ்சை நெகிழ வைப்பதாகும். சொற்சுவை, பொருட்சுவை, கற்பனை, அலங்காரம் முதலிய சுவைகள் ஒருசேர அமையப்பெற்ற அரிய நூல் இது.

19.ஆம் நூற்றாண்டில் அழகிய சொக்கநாதர் பாடிய காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய "சேக்கிழார் பிள்ளைத்தமிழ்" முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் ஆகியவை சிறப்பானவை.

செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ், திருநாவுக்கரசர் பிள்ளைத்தமிழ், சுந்தரமூர்த்தி பிள்ளைத்தமிழ், மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ் போன்ற பிள்ளைத்தமிழ்நூல்களும் பிற்காலத்தில் தோன்றியுள்ளன.

தற்காலத்தில் பாரதிதாசன் பிள்ளைத்தமிழ், மறைமலை யடிகள் பிள்ளைத்தமிழ், காமராசர் பிள்ளைத்தமிழ், எனப் பிள்ளைத்தமிழ்நூல்கள் தோன்றிய வண்ணம் உள்ளன

**மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்**

ஐந்தாண்டுக்காலம் ஊமையாயிருந்து பின் திருச்செந்தூர் முருகன் திருவருளால் பேசும் நிறம் பெற்ற தெய்வக் கவியான குமரகுருபரர் மதுரை மீனாட்சியம்மன் மீது பிள்ளைத் தமிழ் பாடியருளினார். இதனைத் திருமலைநாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றினார். அவ்வமயம் மீனாட்சி அம்மையே அர்ச்சகர் மகள் வடிவில் சிறு குழந்தையாக வந்து மன்னன் மடியில் விற்றிருந்து இந்நூலைக் கேட்டு தன் கழுத்திலிருந்த முத்துமாலையை எடுத்துப் புலவருக்குப் பரிசாக அளித்ததாகக் கூறுவர். அம்மையின் இச்செயலுக்குக் காரணமாக விளங்கியது. வாரானைப் பருவத்தில் காணப்படுகின்ற தொடுக்கும் கடவுட் பழப்பாடல்-எனத்தொடங்கும் பாடலே என்பர்.

**முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்**

இந்நூலும் குமரகுருபரர் பாடியருளியதே ஆகும். தன் ஆசிரியரான மாசிலாமணி தேசிகரின் விருப்பப்படி சிதம்பரம் செல்லப் புறப்பட்ட குருபரர், வழியில் வைதீஸ்வரன் கோயிலில் எழுந்தருளியுள்ள முத்துக் குமரனைக் கண்டு மனம் பறிகொடுத்து அவர் மீது "முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்"- பாடினார். இதில் முத்துக்குமரன் தந்தை சிவபெருமானுடன் விளையாடும் மோது செய்யும் குறும்புகளாக ஆசிரியர் கூறுவது

"களிப்பூட்டுவதாக உள்ளது. மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்துகில்

மடித்தலம் நனைப்ப அம்மைமணிவயிறுகுளிரத் தவழ்ந்தேறி எம்பிரான்

மார்பினில் குரவையாடி

முழவுமுதிர் துடியினில் சிறுபறை முழக்கியனல் மோலிநீர் பெய்தவித்து

முனைமதியை நெளியாவின் வாய்மடுத்து இளமானின் முதுபசிக்கு அறுகருத்தி

விழவுமுதிர் செம்மேனி லெ செம்மேனி வெண்ணிறு மிகப்புழுதியாட்டயர்ந்து துகந்தெழ

விரிசடைக் காட்டினின் திருவிழிகள் சேப்பமுழு

வெள்ளநீர்த் துளையம் ஆடிக் குழவு முதிர் செவ்விப் பெருங்கனி வரச்சிறு

குறும்பு செய் தவன் வருகவே குரவுகமழ் தருகந்த புரியில் அருள்

குடிகொண்ட குமரகுருபரன் வருகவே."

**காந்திமதியம்மைப்பிள்ளைத் தமிழ்**

இதன் ஆசிரியர் திருநெல்வேலியைச் சார்ந்த தச்சன் நல்லூ ரில் வாழ்ந்த அழகிய சொக்கநாதர். 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இதுவே, குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழுக்கு அடுத்த நிலையில் சிறந்து விளங்கும் பெண்பாற் பிள்ளைத்தமிழ் சிறுமி காந்திமதியம்மையைக் கவிஞர் “வாராதிருந்தால் இனி நான் உன் வடிவேல் விழிக்குமை எழுதேன்“என்று தொடங்கித் தாரார் இமவான் தடமார்பில் தவழும் குழந்தையாய் வருகவே! சாலிப் பதிவாழ்காந்திமதித் தாயே! வருகவே!

என்று அழைக்கும் வருகைப் பருவப் பாடலை அரங்கேற்றம் செய்யும் பொழுது. அரங்கேற்றத்திற்கு வருகை தந்திருந்த இராசவல்லிபுரத்தைச் சேர்ந்த வள்ளல் முத்துசாமி அவர்கள், உணர்ச்சி மீதூறப் பெற்றவராக தாம் அணிந்திருந்த விலை மதிப்பற்ற வைரக்கடுக்கனைக் கவிஞர் காதுகளில் அணிவித்துப் பாராட்டி மகிழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

**சேக்கிழார் பிள்ளைத் தமிழ்**

மகாமகோபாத்தியாய டாக்டர். உ.வே. சாமிநாத ஐயர் போன்ற சிறந்த தமிழ்ச் சான்றோர்களை உருவாக்கிய நல்லாசிரியரான மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் அம்பிகையின்மேல் ஏழு பிள்ளைத் தமிழ் நூல்களும், முருகன் மேல் ஒரு பிள்ளைத் தமிழும், பாடியுள்ள தோடு இறையடியாரது வரலாற்றினை உரைத்த தொண்டர்தம் தொண்டரான சேக்கிழார் பெருமான் மீது ஒரு பிள்ளைத் தமிழ் பாடி பிள்ளைத் தமிழ் வரலாற்றில் ஒன்பது பிள்ளைத் தமிழ் நூல்கள் பாடியசிறப்பிடத்தைப் பெற்றார். பெருங்காப்பியம் கண்ட சேக்கிழார் பெருமானின் புலமைச் சிறப்பிலும் பக்திச் செழிப்பிலும் மனம் பறி கொடுத்த பிள்ளையவர்கள் பெருஞ்சுவைபயக்கும் சேக்கிழார் பிள்ளைத் தமிழை இயற்றியருளினார். இதில் சேக்கிழார் பெரியபுராணம் பாடிய நோக்கம், அப்புராணத்தைக் கேட்டு மகிழ்ந்த அநபாய சோழன் அவருக்குச் செய்த மரியாதை, சேக்கிழார் பிறந்த குன்றத்தூரின் வளம் ஆகிய அனைத்தும் அழகுற விளக்கப்பட்டுள்ளன. பிறப்பு இறப்பற்றவராதலின் சிவபெருமானுக்குப் பிள்ளைத் தமிழ் பாடப்படுவதில்லை.

**கலம்பகம்**

பல்வகை வண்ணமும், மணமும் கொண்ட மலர்களால் கட்டப்பட்டக் கதம்பம் போன்று பல்வகை உறுப்புக்களைக் கொண்டு அகம், புறமாகிய பொருட்கூறுகள் கலந்து வர, பல்வகைச் சுவைகள் பொருந்தி வருவதால் “கலம்பகம் - எனப்பெயர் பெற்றது என்பர். இது தெய்வங்களையோ, மக்களுள் சிறந்துவிளங்குபவரையோ பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பல்வகை உறுப்புக்களைப் பெற்றுவருவதாகும்.

இதனைக் கலம் ¸ பகம் எனப்பிரித்து - கலம் என்றால் 12 என்றும், பகம் என்றால் அதில்பாதி அதாவது 6 என்றும் கொண்டு கலம் (12) ¸ பகம் (6) கலம்பகம் ஸ்ரீ 18 எனக்கொண்டு, 18 உறுப்புக்களையுடையது கலம்பகம் என்பது ஒரு சாரார் கூற்று. கலம்பகத்தின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் தெளிவாகக் கூறும், இதன் உறுப்புக்கள் புயவகுப்பு, தவம், வண்டு, அம்மானை, வாண், மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, ஊர், மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், கார், தூது, குறம், பிச்சியார், கொற்றியார் முதலியன. ஆனால் இவ்வுறுப்புக்கள் நூல்தோறும் மிக்கும் குறைந்தும் வருகின்றன. அந்தாதித் தொடையால் 100 பாடல்கள் வரை பாடப்படும் இந்நூலில் ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாக்களும், தாழிசை, துறை, விடுத்தங்களும், மடக்கும் ஆகிய பல்வகை யாப்புகள் விரவி வரும்.

எண்ணிக்கை: கலம்பகத்தின் செய்யுள் தொகை கடவுளர்க்கு 100, முனிவர்க்கு-95, அரசர்க்கு-90, அமைச்சர்க்கு- 70, வணிகர்க்கு- 50, வேளாளர்க்கு - 30 எனும் அளவில் அமைய வேண்டும் என்பது விதி. இந்த அளவினை மீறி- திருக்கலம்பகம் - 110 செய்யுட்களைக் கொண்டு விளங்குகின்றது. ஆளுடைப் பிள்ளைக் கலம்பகம் - 49 செய்யுட்களையே பெற்றுவிளங்குகிறது.

கலம்பகங்கள் அகம், புறம் ஆகிய துறைகள் கலந்துவா அமையப் பெற்ற போதிலும் அவற்றுள் அகத்திணைச் செய்திகள் பெரும்பான்மையினதாகவும் புறத்திணைச் செய்திகள் சிறு பான்மையினதாகவும் இடம் பெறுதல் இயல்பு.கலம்பக நூல்கள்:-கலம்பகம் எனும் இலக்கியத்தின் தோற்றமே கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தான் ஏற்பட்டது என்பர். கலம்பக இலக்கியங்களிலேயே காலத்தால் முற்பட்டது நந்திக் கலம்பகமாகும். இதனைத் தொடர்ந்து பல கலம்பக நூல்கள் தோன்றியுள்ளன. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் என்பது சம்பந்தர் மீது நம்பியாண்டார் நம்பிகள் பாடியதாகும். இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாடியது திருவரங்கக் கலம்பகம்’ கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர் என்று சிறப்பிக்கப் படுகின்ற இரட்டையர் பாடியவை திருவாமாத்தூர்க் கலம்பகமும், தில்லைக் கலம்பகமும், மதுரை சோமசுந்தரக் கடவுள்மீது குமரகுருபரர் பாடியது மதுரைக் கலம்பகம், வீரமாமுனிவர் பாடியது - திருக்காவலூர்க் கலம்பகம், மேலும் திருவெங்கைக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், அழகர் கலம்பகம், திருக் கலம்பகம் என்று பல்வேறு கலம்பக நூல்களும் தோன்றியுள்ளன.

**நந்திக் கலம்பகம்**:-

தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்தி வர்மனைப் பாராட்டிப் போற்றுவதே நந்திக் கலம்பகமாகும். இதுவே கலம்பக நூல்களில் காலத்தால் முற்பட்டு விளங்குவ தாகும்.

இந் நந்திவர்மனின் காலம் கி.பி. 825-850 எனப்படுவதால் நந்திக் கலம்பகத்தின் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டே ஆகும்.

இதன் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. சிறந்த சொற் சுவை பொருட்சுவையோடு கற்பனைவளமும் செறிந்த இனிய நூல். நந்திவர்மனின் மாற்றாந்தாய் மக்கள்" இவனைக் கொல்வதற்காக முயன்றபோது என்ன செய்வது என்று யோசித்ததில், அறம் வைத்துப் பாட முடிவு செய்தனர். அறம் வைத்துப் பாடப்பெற்ற நூலின் பாடலைத் தற்செயலாகக் கேட்ட நந்திவர்மன் அப்பாடலின் சிறப்பில் மனம் பறி கொடுத்து நூல் முழுவதையும் கேட்க விரும்பினான். நூல் முழுவதையும் கேட்டால் மன்னன் உடல் எரிந்து இறப்பான் என்பதை அறிந்தும் தமிழின் மீதுள்ள தணியாத காதலால் உயிரையும் பொருட்படுத்தாது, எரியும் பந்தலின் கீழிருந்து கேட்டு உயிர் துறந்தான் என்று கூறப்படுகிறது. நந்தி, கலம்பகத்தால் மாண்டகதை நாடறியும்". என்னும் சோமேசர் முதுமொழி வெண்பா வரிகளும், "கள்ளாரும் செஞ்சொல் கலம்பகமே கொண்டு காயம் விட்ட தெள்ளாறை நந்தி என்னும் தொண்டை மண்டலச் சதகப்பாடல் வரிகளும், இக்கருத்தை வலியுறுத்துவனவாக உள்ளன. இதற்கேற்ப நூலிலும் பல வசைக்குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.இந்நூலில் 144 பாடல்கள் காணப்படுகின்றன. ஆனால் அரசர்மீது பாடப்பெறும் கலம்பகம் 100 பாடல்களுடையதாக இருத்தல் வேண்டும் என்பது நியதி. எனவே இதில் உள்ள அதிகப்படியான 44 பாடல்களும் பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப் பட்டதாக இருத்தல் வேண்டும் என்றுகருதப்படுகிறது.

இதில் நந்திவர்மனின் தெள்ளாறு வெற்றியைப் பற்றி மட்டும் 16 பாடல்களில் சிறப்பித்துக் கூறுகிறார். பல்வேறு போர்க்களங்கள் பற்றிக் கூறும் சிறந்த வரலாற்று நூலாகவும் இது விளங்குகின்றது. இதில் நகைச் சுவையும் கலந்து காணப்படுவதைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

ஈட்டு புகழ் நந்திபாண நீ எங்கையர் தம் வீட்டிருந்து பாடவிடிவளவும் - கேட்டிருந்தோம் பேயென்றாள் அன்னை பிறர் நரியென்றார் தோழி நாயென்றாள் நீ என்றேன் நான்".

இது பரத்தை வீட்டுக்குச் சென்று திரும்பிய தலைவன், பாணன் ஒருவனைத் தூதுவனாகத் தலைவியிடம் அனுப்பிய போது பாணனின் தூதுரை கேட்டுச் சினம் கொண்ட தலைவி அவனை இழித்துரைப்பதாக அமைந்துள்ளது.

தமிழுக்காகத் தன்னுயிரீந்த நந்தியின் பிரிவினைத் தாளாது கையறு நிலையாகப் பாடப்பட்டுள்ள பாடல் புலவரின் புலமைக்குச் சான்றாகத் திகழ்வதோடு நந்தியின் சிறப்பையும் செப்புவதைக் காணலாம்.

"வானுறு மதியை அடைந்ததுன் வதனம் மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி

கானுறு புலியை அடைந்ததுன் வீரம் கற்பகம் அடைந்ததுன் கரங்கள்

தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள் செந்தழல் அடைந்ததுன் தேகம்

நானும் என் கலியும் எவ்விடம் புகுவோம் நந்தியே நந்தயா பரனே!"

**திருவரங்கக் கலம்பகம்:** வைணவ சமயத்தைச் சார்ந்த கலம்பக நூல்களில் இது சிறந்து விளங்குவதாகும். இதன் ஆசிரியர், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஆவார். இந்நூலின் காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு ஆகும். இவர் கலம்பகம், அந்தாதி, ஊசல், போன்ற எட்டு நூல்களை எழுதியுள்ளார். இவ்வெட்டினையும் தொகுத்து அஷ்டப் பிரபந்தம்" என்று இயம்புகின்றனர். அஷ்டப்பிரபந்தம் சுற்றவன் அரைப்பண்டிதன்என்னும் வழக்கு இதன் பெருமையை விளக்கும். அஷ்டப் பிரபந்த நூல்களுள் ஒன்றே இத்திருவரங்கக் கலம்பகமாகும். இக்கலம்பகத்தின் பாடல்கள் திருமாலிடம் ஆசிரியர் கொண்டிருந்த மாறாக் காதலை, விளக்குவனவாகும்.

**குறவஞ்சி** :

மலையும் மலைச்சார்ந்த இடமுமான குறிஞ்சி நிலவாழ் மக்கள் குறவர் எனப்பட்டனர். குறிஞ்சிநிலப் பெண்க குறத்தியர் எனப்பட்டனர். குறத்தியின் செயல் தலைமை பெற்றுத் திகழ்வதால் இந்நூல் குறவஞ்சி என்னும் பெயர் பெற்றது. குறம் வஞ்சி ஸ்ரீ குறவஞ்சி ஆயிற்று. குறக்குலத்துப் பெண் என்பது இதன் பொருள்.

**குறவஞ்சி இலக்கணம்**:

"இறப்பு நிகழ் வெதிர் வென்னுமுக்காலமும் திறம்படவுரைப்பது குறத்திப்பாட்டே". என்பது குறவஞ்சிக்குப் பன்னிரு பாட்டியல் கூறும் இலக்கணம். இக்குறவஞ்சி இலக்கியம் பின்னாளில் குறத்திப் பாட்டு"- என்றும் வழங்குவதாயிற்று. இது ஆசிரியப்பா. வெண்பா, தரவு கொச்சகம் முதலியவற்றுடன் சிந்து, கண்ணி ஆகிய பாவினங்களும் கலந்துவருமாறு பாடப்பெறும்.

**நூல் அமைப்பு**

அரசனையோ, தெய்வத்தையோ, தலைவனாகக் கொண்டு இது பாடப்படும். தலைவன் உலா வரல், தலைவி பந்தடித்து விளையாடுதல், உலாவரும் தலைவனைக் கண்டுகாதல் கொள்ளுதல், காதல் மேலீட்டால் வருந்தும் தலைவி திங்கள் தென்றல் முதலியவற்றைப் பழித்தல், குறத்தி வருதல், குறத்தி தனது மலைவளம் கூறல், தலைவியின் கையைப்பார்த்து நீ விரும்பிய கணவனை அடைவாய் என்று குறி கூறுதல், குறி கேட்டு மகிழ்ந்த தலைவி, குறத்திக்குப் பரிசளித்தல், குறவன் குறத்தியைத்

தேடிவருதல், குறத்தியின் அணிகலன்களைக் கண்டு ஐயுறல், குறத்தி ஐயம் தெளிவித்தல், ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாகக் குறவஞ்சி நூல் அமையும்.

சேரி மொழியும், செந்தமிழ் வழக்கும் கலந்து வர, நாடகப் பாங்குடன் அமைந்துள்ள இசை, நாடகத் தமிழ்க் காப்பியமான இதற்குக் காப்பியத் தலைவன்.˙.தலைவி பெயரை ஒட்டியும். தலைவனது ஊரை ஒட்டியும் பெயரிடுவது மரபு. சரபேந்திர பூபாலக் குறவஞ்சி தலைவனின் பெயராலும், திருக்குற்றாலக் குறவஞ்சி, திருவாரூர்க்குறவஞ்சி, பெத்லகேம் குறவஞ்சி முதலியன தலைவனின் ஊர்ப்பெயராலும் பெயர் பெற்றன. இவைதவிர கும்பேசர் குறவஞ்சி அர்த்த நாரீசுவரக் குறவஞ்சி,மீனாட்சியம்மை குறம் போன்ற பல குறவஞ்சி நூல்கள் தோன்றியுள்ளன. குறவஞ்சி நூலின் தோற்றம் பற்றிக் குமர குருபரரின் மீனாட்சியம்மை குறத்திலே காணலாம்.

**திருக் குற்றாலக் குறவஞ்சி**:

குற்றாலத்திற்கருகிலுள்ள மேலகரம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த திரிகூடராசப்பக்கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. இவரது காலம் - மதுரையை ஆண்ட முத்து விசயரங்க சொக்கலிங்க நாயக்கரின் காலமான 18-ஆம் நூற்றாண்டாகும். குற்றாலக் குறவஞ்சி அரங்கேற்றம் செய்யப்பட்ட போது “குறவஞ்சி மேடு“ எனும் நிலப்பகுதியை இனாமாக அளித்ததுடன், மிகுதியான பொருளும் பரிசளித்துப் பாராட்டினார். இதன் ஆசிரியர் இதனைக் குறவஞ்சித் தமிழ், குறவஞ்சி நாடகம் எனும் பெயர்களால் வழங்குவர். இதுவே குறவஞ்சி நூல்களுள் தலைசிறந்த நூலாகக் கருதப்படுகின்றது. இந்நூலாசிரியர் குற்றாலத் தலபுராணம், குற்றாலமாலைபோன்ற வேறு நூல்களும் இயற்றியுள்ளார்.

இந்நூலில் எளிய இனிய சொற்களையும், எதுகை மோனை எழிலையும், கற்பனை வளத்தையும், கவிதைச் சுவையையும் சுவைத்து மகிழலாம். இதன் கதைத் தலைவனாக திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கும் குற்றாலநாதர் விளங்க “வசந்தவல்லி“ எனும் வஞ்சிக் கொடியாள் தலைவியாக வருகிறாள். இதில் குற்றால நாதரின் சிறப்பு, குற்றாலமலையின் வளமும், எழிலும், வசந்தவல்லி பந்தடித்தல், குறத்தி மலைவளங்கூறல், குறத்தி குறிகூறல், குறவன் குறத்தி உரையாடல் ஆகிய பகுதிகளும் இன்பம் தருவனவாக அமைந்துள்ளன. இதன் ஆசிரியர் எண்களை வைத்துச் சொற்சிலம்பம் செய்திருப்பதைக்காணலாம். முருகனைப் பற்றிப் பாடும் பொழுது பன்னிரண்டில் தொடங்கி. ஒன்றுமுடிய எண்கள் இடம் பெறுமாறு பாடி இருப்பதும்,

“அஞ்சு தலைக்குள் ஆறுதலைவைத்தார்-எனது மனதில் அஞ்சு தலைக்கோர் ஆறு தலை வையார்” - என்று வரும் பகுதியும் எண்களை வைத்து சொல்லின்பம் படைத்துள்ள பகுதிகளாகும்.

“வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்“ - என்பது பள்ளிப் பருவப் பிள்ளைகள் முதல் பாடிக்களிக்கும் திருக்குற்றால மலையின் வளமுரைக்கும் பாடலாகும்.கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்: காவிரி நதியின் வடபகுதியிலுள்ள கும்பகோணத்திற் கருகிலுள்ள தேவாரம் பெற்ற திருத்தலமாகத் திகழ்வது கொட்டையூர். இவ்வூரில் சிவநெறிச் செல்வரான தண்டபாணி தேசிகரின் மகனாகப் பிறந்தார். சிவக்கொழுந்து தேசிகர் இன்றைக்கு 160 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இவர் வைத்தியநாத தேசிகரின் மரபினரிடம் முறையாகக் கல்வி பயின்றார்.

தஞ்சை சரபோஜி மன்னரின் அரசவைப் புலவராகத் திகழ்ந்தார். அவ்வமயம், “சரபேந்திரர் வைத்திய முறைகள், சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகள், சரபேந்திரர் வைத்தியம்“ ஆகிய மருத்துவ நூல்களைப் புதிதாகச் செய்யுள் வடிவில் இயற்றினார்.90 வயது வரை வாழ்ந்த இவருக்கு இரு மனைவியரும், 2 ஆண்மக்களும், 5 பெண் மக்களும் இருந்தனர்.

**இவர் இயற்றிய நூல்கள்.**

1. கொட்டையூர் உலா. 2. திருவிடை மருதூர் புராணம் 3. திருமண நல்லூர் புராணம் 4. கோடீச்சுர்க் கோவை.

**சரபேந்திர பூபாலக் குறவஞ்சி**:

தஞ்சையைச் சிறப்புற ஆண்ட சரபோஜி மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரால் இயற்றப்பட்டது. மன்னனின் சிறப்புக்களைப் பாடியவாறு பந்தடித்து ஆடிக் கொண்டிருக்கிறாள். மங்கை மதனவல்லி மன்மதனின் கணையால் தாக்கப்பட்ட மதியையும் தென்றலையும் பழிக்கின்றாள். அவ்வயமயம் அங்கு வந்த தன் தோழியைச் சரபோஜி மன்னன் பால் தூது சென்று தன் நிலையுரைக்க வேண்டுகின்றாள். தூதுச் செய்தியுடன் சென்ற தோழியின் வருகைக்காக மதனவல்லி காத்து நிற்கும் வேளையில் குறத்தி வருகிறாள். குறத்தியை “நீயார்“ என்று கேட்ட மதனவல்லிக்குக் குறத்தி தன் சாதி வளம், மலைவளம், நதி வளம், தேச வளம், சோழ நாட்டு வளம் போன்ற அனைத்தையும் கூறித் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கின்றாள்.

மதனவல்லி தனக்குக் குறி சொல்லுமாறு வேண்டுகிறாள். குறத்தி அவளது கைரேகை பார்த்து விரைவில் அவள் விரும்பிய தலைவனை சேர்வாள் என்று

கூறுகின்றாள். அது கேட்டு மகிழ்ந்த தலைவி குறத்திக்கு அணிமணிகள் வழங்குகிறாள். அவ்வயமயம் குறத்தியைத் தேடி, குறச்சிங்கன் வருகின்றான். குறத்தியின் அணி மணி ஆடை அலங்காரம் கண்டு அதற்கான காரணம் கேட்டறிந்து இறுதியில் சரபேந்தரருக்கு மங்கலம் பாடிச் செல்கின்றான். இத்தகு கதையமைப்புக் கொண்ட குறவஞ்சி நூல்.

அக்கால நாடக அமைப்பான கணபதி வருகை, கட்டியக்காரன் வருகை, மோகினி வருகை போன்ற பகுதிகளுடன் விளங்குவது குற்றாலக் குறவஞ்சி போன்று "குறவஞ்சி நாடகம்" என்று வழங்கப்படுகின்றது.

குறத்தியின் இயல்பு, குறி கூறுதல், குறவன் அவளைக் காணாமல் வருந்துதல், பின்னர் அவளைக் கண்டு அளவளாவுதல் முதலிய குறத்தியைப் பற்றிய செய்திகள் அதிகம் இடம் பெறுவதால் இந்நூல் குறவஞ்சி என்றும் அழைக்கப்படுகின்றது.

இதில் இலக்கியச் சொற்களுடன் உலக வழக்குச் சொற்களும் மரூஉ மொழிச் சொற்களும் இடை இடையே இடம் பெற்றுள்ளன. உருது, தெலுங்கு, மராட்டி, கன்னடம் ஆங்கிலம், ஹிந்தி ஆகிய பிற மொழிச் சொற்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

தஞ்சைப் பெரிய கோயிலில் "இராஜராஜ நாடகம்" நடத்தப் பட்டு வந்தது போன்று தஞ்சைக் கோயில் "அஷ்டக் கொடி விழாவில்" இந் நாடகம் ஆடப்பபட்டது. எனவே இதனை "அஷ்டக் கொடி குறவஞ்சி" என்றும் அமைத்தனர். குறவஞ்சி இலக்கியக் கட்டமைப்புக்கு உட்பட்ட நிலையில் பல புதுமைகளைப் புகுத்தியுள்ளார். இந்நூலில் இவர் கையாண்டுள்ள அழகிய உவமைகளே இவரது புலமைக்கு போதிய சான்றாகத் திகழ்கின்றன. குறவர்களின் பழக்க வழக்கங்களையும் பல புராணச் செய்திகளையும் கவைபடர் கூறியுள்ளார்.

நால்வகைப் படை புடை சூழ சரபோஜி பவனி வர மன்மதனை ஒத்த அம்மன்னனைக் கண்டு காதல் கொள்கிறாள். குறக்குலப் பெண், தெலுங்கு, மராட்டிய, இஸ்லாமிய, ஆங்கிலப் பெண்களுக்கு குறிபார்க்கச் செல்கின்றாள். அப் பெண்கள் ஒவ்வொரு வரும் தங்கள் தங்கள் மொழியிலேயே என் கையைப் பார்த்துக் குறி கூறு என்று கூறுவதாக இயற்றப் பெற்றுள்ளது நகைச் சுவையுடன் விளங்குகிறது.

தெலுங்குப் பெண்: - "நாசெய் சூடு"

மராட்டியப் பெண்: - "மஜ ஹாத் பஹ ஆக"

கன்னடப் பெண்:-நன் கையின நோடே

இஸ்லாமியப் பெண்:மை ஹாத் தேக்கர் போலாஸ்

ஆங்கிலப் பெண்:லுக் மை ஹேண்ட்

குளுவன் என்பவன் சிங்கனிடம் கூறுவதாக அமைந்த ஒரு படல் பேச்சு நடையில் அமைந்துள்ளது.

“கா வென்றும் கீ யென்றும் குக் கூலென்றும்
சுக லென்றும் கிகி யென்றும் சுக்கோ லென்றும்
கூவிக் கொண்டிருந்த எல்லாம் சும்மா இங்கே
குந்தியிரு நாங்கள் போய் வருவோ மென்று
போவது பாருனை நாட்டிக் காட்டி நீ இப்
பேது பக்கிப் பிடித்த தீனிப்போது உன்றன்
ஆவியென்ன சிங்கிதனைத் தேடு சிங்கா
அண்ணல் சரபோஜி தஞ்சம் அணுகித்தானே”

இப்பாடலைப் போன்றே இக் குறவஞ்சியில் இயல்பான பேச்சு தடையே செய்யுள் நடையாக அமைந்திருப்பது உவகை கொள்ள வைக்கிறது.

**பள்ளு**

குறவர் வாழ்வைச் சிந்தரிப்பது “குறம்“ ஆனதுபோல, வாழ்வைச் சித்தரிப்பது “ “பள்ளு“ இலக்கியமாயிற்று. இரு மருத்தில் நூலாகக்கருதப்படும்.

“சேரிமொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல்வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப் புலனுணர்ந்தோரே“

எனும் தொல்காப்பிய சூத்திரத்தின் மூலம் பள்ளு இலக்கியம் தொல்காப்பியர் காலத்திலேயே அறியலாம். சுருக் கொண்டுள்ளதை

“புரவலர் கூறியவன் வாழிய வென்று
அகவயல் தொழிலை யொருமை யுணர்ந்தனன்
எனவரும் ஈரைந்து உழத்திப் பாட்டே“

என வரும் பன்னிருபாட்டியல் நூற்பா, உழத்திப் பாட்டு வேறு, பள்ளுப் பாட்டு வேறு என்பதை விளக்கிய போதும், உழத்திப்பாட்டே பள்ளு இலக்கியத்தின் வளர்ச்சிக்கு

ஆதாரமாக இருந்தது என்பதை அறியலாம். பள்ளு இலக்கியங்கள் சிந்தும், விருத்தமும் விரவிவரப் பாடப்படும்.

**பள்ளு அமைப்பு:**

பள்ளன் ஒருவன் இரு மனைவியரை மணந்து கொள்ள, இவ்விரு மனைவியரிடையே ஏற்படும் பூசல், பள்ளியர் ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்ளல், அதனால் பள்ளனக்கு ஏற்படும் துன்பங்கள், பள்ளனின் துன்பங்கண்டு வருந்திய பள்ளிகள் பண்ணையாரிடம் கூறி அவனைத் தொழுவிலிருந்து விடுவித்து பூசலொழித்து இணைந்து இருத்தல் எனும் கதைப் பகுதியை உள்ளடக்கிய இதில் இயற்கை வளம், உழவு முறை ஆகியவை சிறப்பிடம் பெறும். எளிய நடையில், சேரி மொழி விரவிவர, நகைச்சுவையும் நயமும் பொருந்தியதாகவும், நாடகப் பாங்குடனும் அமைந்துகாணப்படும்.

இதில் பள்ளியரின் ஆட்சி பெரும்பங்கு வகிப்பதால் ‘உழத்திப்பாட்டு’ என்றும், பள்ளியரின் ஏசல் சிறப்பிடம் பெற்று விளங்குவதால் பள்ளேசல்“ என்றும் இது வழங்கப்படும்.

**பள்ளு நூல்கள்:**

சிற்றிலக்கிய நூல்களிலேயே பள்ளு இலக்கியமே மிகப்பெரும் எண்ணிக்கையில் இடம் பெற்றிருக் கின்றது. “நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது என்பது நெல்லை மாவட்டப் பழமொழி. இதில் வரும் பள்ளு என்பது பள்ளர்களின் சாதியைப் பற்றிய தெனினும், பள்ளுநூல்களின் வகையை எண்ணமுடியாது என்று பொருள் கொள்ளும் அளவிற்குப் பள்ளு நூல்கள் எண்ணிக்கையில் பெருகிக் காணப்படுகின்றன. முக்கூடற்பள்ளு, திருமலை முருகன் பள்ளு, சீர்காழிப் பள்ளு திருவாரூர்ப்பள்ளு, திருச்செந்தூர்ப்பள்ளு, கதிரைமலைப்பள்ளு என எண்ணற்ற பள்ளு நூல்கள் உள்ளன. இவை அனைத்திலும் சிறந்து விளங்குவது “முக்கூடற்பள்ளு நூலே, முக்கூடற்பள்ளு பன்ளு நூல்களிலேயே தலைசிறந்து விளங்குவதும் முதன் முதலில் தோன்றியதும் முக்கூடற்பள்ளே. இதன் ஆசிரியர் என்பது தெரியவில்லை. இது 18-ஆம் நூற்றாண்டில் தோன்றியது

தாமிரவருணி ஆற்றோடுச் சிற்றாறும் கயத்தாறும் கூடும் இடம் முக்கடல் எனப்படும் தற்போது சீவலப்பேரி என வழங்கப்படும் இவ்வூரில் எழுந்தருளியுள்ள அழகரின் பெருமை இந்நூலில் விரித்துரைக்கப்பட்டுள்ளது. இதில் நெல் வித்தின் வகைகள், மாட்டின் வகைகள், பயிர்க் தொழில் கருவி வகைகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. இதில் ஆசிரியரின் வருணனைத் திறனும், சொல்லாட்சித் திறனும் சிறப்பிடம் பெற்றுத்திகழ்கின்றன.

"ஆற்றுவெள்ளம் நாளை வரத்தோற்றுதேகுறி -மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே
நேற்றுமின்றும் கொம்புகற்றிக் காற்றடிக்குதே-கேணி
நீர்ப்படுசொறித்தவளை கூப்பிடுகுதே !
சேற்றுநண்டுசேற்றைக் குழைந் தேற்றடைக்குதே மழை
தேடிபொருகோடி வானம் பாடியாடுதே
போற்றி திருமாலழகர்க்கேற்ற மாம் பண்ணைச் சேரிப்
புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித்துள்ளிக் கொள்வோமே"

எனும் பாடல் இன்றும் மக்களிடையே வழங்கிவரும் இயற்கை எழில் போற்றும் பாடலாகும்.

இதில் ஆற்றுவளம், தாட்டு வளம், பள்ளர் வாழ்வு வளம் ஆகிய மூவகை வளங்களையும் விளக்குவதாலும் மூத்தபள்ளி, இளையபன்னி, பள்ளன் ஆகிய மூவரை முக்கிய பாத்திரமாகக் கொண்டு விளங்குவதாலும், சொல், பொருள்,சுவைப்பெருக்குகன் நிறைந்து காணப்படுவதாலும் இதனை "முக்கூடல்" பள்ளு எனல் பொருத்தமே.

**அருஞ்சொற் பொருள்:**

மஞ்ஞை - மயில்

வஞ்சி-பெண்

முகில் - மேகம்

**தொகுப்புரை**

காலந்தேறும் தமிழ் இலக்கியங்கள் பல்வேறு வளர்ச்சி நிலகளை அடைந்தது. காப்பிய காலத்தில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் ஆகிய வகைகள் தோன்றின. கம்பராமாயணம்,பெரியபுராணம், பெருங்கதை போன்றன தோன்றி மொழிவளர்ச்சி அடையச் செய்தன.

கோவை, உலா, சதகம், பரணி, பிள்ளைத்தமிழ் உள்ளிட்ட 96 வகையான சிற்றிலக்கி-யங்கள் தோன்றின. அவ்வவ் சிற்றிலக்கியங்களின் அமைப்பினைப் பெற்று விளங்குவதை அறிந்து கொள்ள முடிகிறது.

**பயிற்சி வினாக்கள் :**

1. தமிழன்னையின் வளையலாகத் திகழும் நூல் எது?

2. வளையாபதி. வளையாபதி எச்சமயத்தைச் சேர்ந்த காப்பியம்? சமண சமயம்

3 வளையாபதி கதை எந்த நூலால் அறியப்படுகின்றது? வைசிய புராணத்தால்

4. குண்டலகேசி என்றதொடரின் பொருள் என்ன? கருண்ட கூந்தலையுடையவள்

5 குண்டலகேசி எந்த சமயத்தைச் சேர்ந்த காப்பியம் ? பௌத்தசமயம்

6. குண்டலகேசிக் காப்பியத்தின் ஆசிரியர் யார்? நாககுத்தனார்

7. சீவக சிந்தாமணியின் ஆசிரியர் யார்? திருத்தக்கதேவர்

8 விருத்தப் பாவாலான முதற் காப்பியம் எது? சீவக சிந்தாமணி

9. சிந்தாமணிக காப்பியத் தலைவன் யார்? சீவகன்

10 சீவகனின் பெற்றோர் யார்? சச்தந்தன். விசயை

11. சீவகன் எத்தனை பெண்களை மணந்தான்? எட்டு பேர்

12. சீவகசிந்தாமணி எந்த சமயச் சார்புடைய காப்பியம்? சமணசமயம்

13, திருத்தக்க தேவர் எந்த சமயத்தைச் சேர்ந்தவர்? சமண சமயம்

14. சிந்தாமணிக்கு வழங்கப்படும் மற்றொரு பெயர் யாது? மணநூல்

15. ஐஞ்சிறுகாப்பியங்களும் எந்த சமயச் சார்புடையவை? சமணசமயம்

16. யசோதர காவியத்தின் ஆசிரியர் யார்? வெண்ணாவலுடையார்

17. சூளாமணி காப்பியத்தின் ஆசிரியர் யார்? தோலாமொழித் தேவர்

18. குண்டலகேசிக்கு எதிராக எழுந்த சமணக் காப்பியம் எது? நீலகேசி

19. நீலகேசி என்ற தொடரின் பொருள் என்ன? கருத்த கூந்தலை உடையவள்

20. கம்பர் பிறந்த ஊர் எது? திருவழுந்தூர்

21. கம்பா எந்த குலத்தவர்? உவச்சர் குலம்

22.கம்பர் எந்த அரசனின் அவைக் களப் புலவராகத் திகழ்ந்தார்? மூன்றாம் குலோத்துங்கன்

23. கம்பரது சமகாலப் புலவர் யார்? ஒட்டக்கூத்தர்

24. சும்பரின் மக்கள் யார்?அ ம்பிகாபதி-மகன்: காவேரி-மகள்

25. கம்பர் உயிர் துறந்த இடம் எது? கம்பரின் சமாதி எங்கு உள்ளது? நாட்டரசன் கோட்டை

26. கம்பரை ஆதரித்த வள்ளல் யார்? சடையப்ப வள்ளல்

27. கம்பர் தனது நூலுக்கு இட்டபெயர் யாது ? இராமாவதாரம்

38. இராமாயணம் எங்கு அரங்கேற்றப்பட்டது? திருவரங்கத்தில்

29 கம்பரது இராமாயணத்தின் மூல நூல் எது? வால்மீகி இராமாயணம்

30. கம்பரது இராமாயணத்தில் எத்தனை காண்டங்கள் உள்ளன? 6

31. விருத்தமெனும் ஒண்பாவில் சிறந்து விளங்கியவர் யார்? கம்பர்

32 பெரியபுராணத்தின் ஆசிரியர் யார்? சேக்கிழார்

33. பெரியபுராணத்தில் இடம் தனி அடியார்களின் எண்ணிக்கை என்ன? 63

34. பெரியபுராணம் எத்தனையாவது திருமுறையாகச் சேர்க்கப்பட்டுள்ளது? 12வது திருமுறை

35. பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? நம்பியாண்டார் நம்பிகள்

36. பன்னிரு திருமுறைகள் எந்த அரசனின் ஆட்சிக் காலத்தில் தொகுக்கப்பட்டன? முதலாம் இராசராச சோழமன்னன்

37. வைணவ இலக்கியங்களின் தொகுப்பிறகு என்ன பெயர்? நாலாயிரத் திவ்வியபிரபந்தம்

38. நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்? நாதமுனிகள்

39. சேக்கிழார் பிறந்தநாடு எது? சேக்கிழார் பிறந்த ஊர் எது? தொண்டை நாடு: குன்றத்தூர் சேக்கிழார் பிறந்தமரபு எது? சேக்கிழார் பிறந்தகுடி எது? வேளாளர் மரபு : சேக்கிழார் குடி

40. சேக்கிழாரின் இயற்பெயர் யாது? அருண்மொழித்தேவர்

42. பெரியபுராணத்திற்கு மூலமாக விளங்கிய நூல்கள் எவை? திருத்தொண்டர் தொகையும், திருவந்தாதியும்

42. சேக்கிழார் தனது நூலுக்கு இட்ட பெயர் என்ன? திருந்தொண்டர்புராணம்

43. பெரியபுராணம் அரக்கேற்றப்பட்ட இடம் எது? தில்லை

44. பெரியபுராணம் பாடியமையால் சேக்கிழாருக்கு அளிக்கப்பட்ட பட்டப்பெயர் என்ன? தொண்டர்சீர் பரவுவார்

45. சேக்கிழார் புராணம் பாடியவர் யார்? உமாபதி சிவாசாரியார்

46. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் யாரால் பாடப்பட்டது? மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையால்.

47. கந்தபுராணத்தின் ஆசிரியர் யார்? கச்சியப்ப சிவாசாரியார்

48 கந்தபுராணத்தில் எத்தனை காண்டங்கள் உள்ளன? 6

49.ஒட்டக்கூத்தர் எந்த ஊரைச் சேர்ந்தவர்? எந்த மரபைச் சேர்ந்தவர்? கைக்கோளர், செங்குந்தர்

50. ஒட்டக்கூத்தர் இயற்றிய உலா நூல் எது? மூவருலா ஒட்டக்கூத்தர் இயற்றிய பாணி நூல் எது? தக்கயாகப்பரணி ஒட்டக்கூத்தர் இயற்றிய பிள்ளைத்தமிழ் நூல் எது? குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்

51. செயங்கொண்டார் பாடிய நூல் எது? கலிங்கத்துப்பரணி

52. செயங்கொண்டார் பிறந்த ஊர் எது? தீபங்குடி

53. ஔவையார் இயற்றிய நூல்கள் யாவை? ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி

54. ஆத்திச்சூடியில் உள்ள பாக்கள் எத்தனை? 109.

55 கொன்றை வேந்தன் யாரால் இயற்றப்பட்டது? ஔவையார்.

56 மூதுரை எனும் நூலில் உள்ள பாடல்கள் எத்தனை? 31.

57 மூதுரை எனும் நூலுக்கு வேறு பெயர் என்ன? வாக்குண்டாம்.

58 நல்வழி எனும் நூல் எத்தனை பாடல்கள் கொண்டது? 41.

53. ஐந்திலக்கணத்திற்கும் விளக்கம் கூறிய முதல் இலக்கண நூல் எது? வீரசோழியம்

60 வீரசோழியத்தின் ஆசிரியர் யார்? புத்தமித்திரர்

61 நன்னூலின் ஆசிரியர் யார்? பவணந்தி முனிவர்

62 சோழர் காலம் காப்பிய காலம் என்பதை நிறுவுக.

63 சோழர் காலம் தமிழிலக்கிய வரலாற்றின் பொற்காலம் என்பதை நிறுவுக.

(முதல் இரு வினாக்களுக்கும் முன்னுரையை விளக்கமாக எழுதி, நூல்கள் பற்றியும் குறிப்புகள் தரவேண்டும்)

64 சீவக சிந்தாமணியின் சிறப்பினைக் கூறுக.

65 ஐஞ்சிறுகாப்பியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

66 உலக மகா காப்பியங்களில் சிறந்து கம்பராமாயணம் -எனும் கூற்றை நிறுவுக. விளங்குவது

67 சிவனடியார்களின் பெருமையைப் புகழ்வது பெரியபுராணம் என்பதை நிறுவுக.

68 சைவ சமயத்தின் பெருமையைக் கூறுவது பெரியபுராணம் எனும் கருத்தை நிறுவுக.

**69** செயங்கொண்டாரின் பெருமையைக் கலிங்கத்துப்பரணி கொண்டு விளக்குக.

**70** பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடி யார்? பெரியாழ்வார்,

**71** பிள்ளைத்தமிழ் நூல்கள் எந்த சந்தத்தால் ∴ பாவகையால் ஆனவை? கழிநெடிலாசிரியச் சந்த விருத்தத்தால்.

**72** பிள்ளைத்தமிழ் எத்தனை பருவங்கள் உள்ளன?10260

**73** பிள்ளைத்தமிழ் எத்தனை வகைப்படும்?2

74 பிள்ளைத்தமிழ்வகைகளைக் குறிப்பிடுக. ஆண்பால்பிள்ளைத்தமிழ் பெண் பால் பிள்ளைத்தமிழ்.

75 6 அம்புலிப்பருவம் எவ்வெவ் வகைகளால் பாடப்படும்? (சாம, தான, பேத, தண்டம் எனும் 4 வகைகளில்

76 கலம்பகத்தில் மொத்தம் எத்தனை அமைந்துள்ளன? 18 உறுப்புகள்

77 நந்திக் கலம்பகம் - எந்த அரசன் மீது பாடப்பட்டுள்ளது? (தெள்ளாறெறிந்த- மூன்றாம் நந்திவர்மன்)

78 குற்றாலக்குறவஞ்சியின் ஆசிரியர் யார்? திரிகூட ராசப்பக் கவிராயர்.

79 “பள்ளு“- எந்த நிலமக்களுக்குரிய நூல்? மருதநில மக்கள்.

80 நளவெண்பாவின் ஆசிரியர் யார்? புகழேந்திப் புலவர்.

81 நளவெண்பாவிற்கு மூலமாக அமைந்த நூல் எது மகாபாரதம்.

82 மகாபாரதத்தில் நளன்சரிதம் கூறும் பகுதி எது? "நளோபாக்கியானம்" எனும் கிளைக்கதை

83 நளவெண்பாவில் எத்தனை காண்டங்கள் உள்ளன? 3.

84 புகழேந்தியார் பிறந்த ஊர் எது?" பொன்விளைந்தகளத்தூர்

85 புகழேந்தியாரை ஆதரித்தவள்ளல் யார்? சந்திரன் சுவர்க்கி

86 சந்திரன் சுவர்க்கி எந்த நாட்டுச் சிற்றரசன்? மள்ளுவ நாட்டு முரணைநகர்

87 புகழேந்தியார் சந்திரன் சுவர்க்கியைத்தன் நூலில்எத்தனை இடங்களில் பாராட்டியுள்ளார்? 5 இடங்களில்

88 நைடதம் யாருடைய வரலாற்றைக் கூறுகின்றது? நளன் வரலாறு.

89 நைடதம் எனும் நூல் யாரால் இயற்றப்பட்டது? அதிவீரராமபாண்டியன்.

90 முதலில் தோன்றிய திருவிளையாடற் புராணம் எது" வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணம்

91 பரஞ்சோதிப் புலவர் -எந்த ஊரில் பிறந்தார்?

சோழநாட்டுத் திருமறைக காட்டில்

92. பரஞ்சோதியார் பாடிய நூல் எது? திருவிளையாடற்புராணம்

93. வில்லிபாரதத்தின் ஆசிரியர் யார்? வில்லிபுத்தூரார்

94. வில்லிபாரதத்தில் எத்தனை பருவங்கள் உள்ளன? 10 பருவங்கள்

95. வில்லிபுத்தூரார் பிறந்த ஊர் எது? திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூர்.

96. வில்லிபுத்தூராரைப் பாரதம் பாடும்படி வேண்டிக் கொண்டவர் யார்? வக்கபாகை வரபதி ஆட்கொண்டான்.

97. அருணகிரியார் பிறந்த ஊர் எது? திருவண்ணாமலை.

98. அருணகிரிக்கு அருள் புரிந்த இறைவன் யார்? முருகப் பெருமான்.

99. திருப்புகழ் நூலை இயற்றியவர் யார்? அருணகிரிநாதர்.

100. குமரகுருபரரின் பெற்றோர் யார்? சண்முகசிகாமணிக்கவிராயர், சிவகாம சுந்தரிஅம்மை.

101. குமரகுருபரருக்குப் பேசுந்திறன் திருச்செந்தூர் முருகன. அளித்தவர் யார்?

102. பேசும் திறன் பெற்றவுடன் குமரகுருபரர் இயற்றிய முதல் நூல் எது? சுந்தர் கலி வெண்பா.

103. கலைமகளின் அருளைப் பெற குமரகுருபரர் “பாடிய நூல் எது? சகலகலாவல்லி மாலை.

104. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் ஆசிரியர் யார்? குமரகுருபரர்

105. சரபேந்திர பூபாலக் குறவஞ்சியின் ஆசிரியர் யார்? கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்.

# அலகு 4

## மரபு கவிதை

### 20-ஆம் நூற்றாண்டில் மரபு கவிதை :

மரபு கவிதை ஓசைக்கு முதன்மை அளிப்பது அதனால் யாப்பிலக்கிணத்திற்குக் கட்டுப்பட்டதாகிறது. சீரிய சொற்கின் ஒழுங்கமைப்பாக மரபு கவிதை திகழும் யாப்பு அதன் உயிர், உவமை, உருவகம் முதலான அணிகளையும் எதுகை மோனை போன்ற தொடை அமைவுகளையும் கொண்டது. 20-ஆம் நூற்றாண்டில் தமிழ் அன்னை ஈன்றெடுத்த தமிழ்ப் புலவர்கள் பலர், அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களைப் பற்றி இவண் காண்போம்:

### பாரதியார் (1882-1921)

பாட்டுக்கொரு புலவன் பாரதி எட்டையபுரத்தில் சின்னச் சாமி அய்யர், இலக்குமி அம்மைக்கு மகவாய்த் தோன்றினார். பள்ளிப் படிப்பிற்குப் புள்ளிவைத்த இவர் காசி சென்று வடமொழி பயின்றார். எட்டையபுரம் அரசவைப் புலவர் ஆனார். ஆங்கிலக் கவிஞன் ஷெல்லியின் பால் அளவற்ற பற்றுக் கொண்டவர். நாட்டில் விடுதலைக் கனலை மூட்டினார். ஆங்கில அரசு சிறையிட முயன்றபோது புதுச்சேரிக்குச் சென்று வாழ்ந்தார். அங்கு அரவிந்தர், பாவேந்தர் பாரதிதாசன் போன் றோர் துணை கிடைத்தது. புதுவையிலிருந்து திரும்பியதும் ஆங்கில அரசு சிறையிட்டது. பின்னர் விடுதலை பெற்றுத் திருவல்லிக்கேணியில் வாழ்ந்தார். தன் 39-ஆம் அகவையில் இப் புதுமைப்புலவர் புகழுடம்பு எய்தினார்.

சில புலவர்கள், கலம்பகம் பார்த்தொரு கலம்பகத்தையும் அந்தாதி பார்த்தொரு அந்தாதியினையும், காவியம் பார்த்தொரு. காவியந்தன்னையும் இயற்றி சாற்றுக் கவி திரிந்து பெற்று ஒரு நூற்றாண்டில் ஒன்றிரண்டு பரப்பி வருவதே புலமை என்றிருந்தனர். அதனால் தமிழரின் உயிர் நிகர் தமிழ் நிலை தாழ்ந்தது. இன்பத் தமிழ் இருள் நிலை அடைந்தது' அந்நிலையில், தமிழகம் தமிழுக்குத் தகும் உயிர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவங்கிடக்கையில் இலகு பாரதிப் புலவன் தோன்றினான். நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப்போதும் சோராதிருத்தல் என்று வாழ்ந்து மக்களுக்காகக் கவிதை எழுதினான்.

”சுவை புதிது, பொருள் புதிது,

வளம் புதிது சொற்புதிது சோதிமிக்க

நவ கவிதை, எந்நாளும் அழியாத மா கவிதை”

பாரதியின் கவிதை. வீர சுதந்திரம் வேண்டி நின்றான், விடுதலைப் புலவன் பாரதி. உணர்வொடுங்கி, ஊமையராய், செவிடர்களாய், குருடர்களாய் வாழ்ந்து பொழுதெல்லாம் சோற்றுக்கே போக்கி, நெஞ்செலும்பு கூடாகி நிலை குலைந்து நின்ற மானிடரை அஞ்சுதலை விட்டு அழைத்து வந்தான். பாரதி அச்சமும் அடிமையும் அடிமைச் சிறு மதியும் உச்சத்தில் கொண்டு அழுதவரை வீட்டளவும் கூட்டி வந்து வீரவேல் கொடுத்தான் பாரதி. விடுதலை வேண்டி,

"இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகுசிறைப்பட்டாலும்

பதந்திரு இரண்டும் மாறிப் பழிமிகுந் திழிவுற்றாலும்

விதந்தருகோடி இன்னல் விளைந்தெனை அழித்திட்டாலும்

சுதந்திர தேவி! நின்னைத் தொழுதிடல் மறக்கி லேனே"

என்று வீர முழக்கம் செய்கிறான். விடுதலைப் புலவனாக விளங்கிய பாரதி, குழந்தைக் கவிஞனாகவும் காணப்படுகிறான்.

சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைக்கும் பாவலன் அவன்: பாரதி பாடிய பாப்பா பாட்டும், புதிய ஆத்தி சூடியும் குழந்தைக்கேற்ற கொள்ளை இன்பம் குலவும் தமிழ்ப் பாடல்களாம். அதனால் தான், "பாப்பா பாட்டிலே நெஞ்சைப் பறி கொடுத்தேனடா" என்று பாடுகின்றார் கவிமணி. குழந்தை தரும் இன்பத்தை,

"இன்பக்கதைகளெல்லாம்-உன்னைப்போல் ஏடுகள் சொல்வதுண்டோ

அன்பு தருவதிலே-உனைநேர் ஆகுமோர் தெய்வமுண்டோ"

என்று பாடுகின்றான் பாரதி. "ஒரு பெரும்புலவன், இறந்த காலத் தளத்தின் மேல் நிகழ்காலக் கண்கொண்டு நாட்டின் எதிர் கால வாழ்வை உருவாக்குவான்" என்கிறார் டாக்டர் வ.சுப.மாணிக்கனார். அதற்கேற்ப, பாரதியின் புலமை, பழமை என்ற உரம் கொண்டு வளர்ந்து செழித்தவை. பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி, புதிய ஆத்தி சூடி, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, பாரத் தேவியின் திருத்தசாங்கம் பழமையின் மேல் செல்வங்கள். புது நினைவு பாய்ந்தெழுத்த செல்வங்கள்.

பதமையைப் போற்றிய பாவலன் பாரதி, சாதிப் படைத்தோர் மருந்தாகவும் விளங்கினான். ஆயிரம் சாதி வேறுபாடு கொண்டும் படைக்கோர் ஒருகுலத்துக்கொரு நீதி என்றிருந்த நிலை நீங்கப்பாடினான். கொஞ்சமோ பிரிவினைகள் ஒரு கோடி என்றால் பெரிதாமோ என்று மனம் நொந்து நைந்து பாடுகிறான். எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம் என்று முழங்குகிறான். பாரதி உலகமே போற்றும் மகாகவி,

”பாரதியார் உலககவி - அகத்தில் அன்பும்

பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்

ஒருருக் கொருநாட்டுக் குரிய தான

ஓட்டைச் சாண் நினைப்புடையர் அல்லர்”

என்று பாரதியின் சிறப்பைப் பாவேந்தர் பாரதிதாசன் பாடுகின்றார்.

**தேசிகவிநாயகம் பிள்ளை (1876-1954)**

கன்னியாகுமரி மாவட்டத்தில் புத்தேரியில் பிறந்தவர். இனிய தமிழில் எவரும் விளங்கப் பாடல் இயற்றும் பெற்றியர். குழந்தைக்கு ஏற்ற தமிழ்ப் பாவியற்றும் திறமிக்கவர். வெண்பா இயற்றுவதில் வல்லவர் இவர். போராட்டமும் பரபரப்பும் மிகுந்த காலத்தில் வாழ்ந்த போதிலும், அவருடைய வாழ்க்கையைப் போலவே அவருடைய கவிதைகளும் அமைதியும், இனிமையும், உடையனவாக விளங்குகின்றன.

இவர் இயற்றிய ”மலரும் மாலையும்” என்னும் நூல் எளிய தமிழில் அரிய கருத்துக்களைச் செறித்துப் பாடிய அருமைக் கவிதை இலக்கியமாகும்.

”தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு -அங்கே

துள்ளிக்குதிக்குது கன்றுக் குட்டி

அம்மா என்குது வெள்ளைப்பசு உடன்

அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி’

நாவால் நக்குது வெள்ளைப்பசு - பாலை

நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி’

முத்தங் கொடுக்குது வெள்ளைப்பசு -மடி

முட்டிக்குடிக்குது கன்றுக்குட்டி”

என்ற அழகிய எளிய, இனிய பாடலைப் பாடி மகிழ்ந்து இரசிக்காத தமிழ் நாட்டுக் குழந்தைகளுண்டோ? ஆங்கில அறிஞர் எட்வின் ஆர்னால்ட் எழுதிய “ஆசிய ஜோதி“ (Light of Asia) என்பதைத் தேசிக விநாயகம் பிள்ளை இனிய நடையில் தழுவி எழுதியுள்ளார். தழுவல் என்பதே தெரியாமல், அவை அவருடைய சொந்தப் படைப்புப் போலவே புதுமையும். சுவையும் கலந்து விளங்குகின்றன. பிறப்பில் உயர்வு தாழ்வில்லை என்று புத்தர் ஓர் ஏழைச்

”ஓடும் உதிரத்தில் வடிந்து இனிமை
ஒழுகும் கண்ணீரில் தேடிப் பார்த்தாலும்
சாதி தெரிவதுண்டோ அப்பா? எவர்
உடம்பினிலும்-சிவப்பே இயற்கைக்குணமப்பா!
பிறப்பினால் எவர்க்கும் - உலகில் பெருமை
வராதப்பா சிறப்பு வேண்டுமெனில்-நல்ல
செய்கை வேண்டுமப்பா”

**நாமக்கல் கவிஞர்**

நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையை இராஜாஜி அவர்கள், ”திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது, காந்தி தூவின விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது” என்று பாராட்டுகிறார். உரை நடையிலும், கவிதையிலும் ஏறக்குறைய முப்பது நூல்களை எழுதியுள்ளார்.

“அவனும் அவளும்“ என்பது நாமக்கல் கவிஞரின் காப்பியம். அதில் உள்ள செய்யுட்கள் எளிய நடையில் அமைந்தவை. “சங்கொலி“, தமிழ்த்தேர்“ என்னும் தொகுப்புகளும் அனைவராலும் பாராட்டப் பெற்றவை. “காந்தி அஞ்சலி“ எனும் தொகுப்பில் உள்ள பாடல்கள் அவருக்கு மிக்க புகழைத் தேடித் தந்தன. உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது,

“கத்தி இன்றி ரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர் காந்தி என்ற சாந்தமூர்த்தி
தேர்ந்துகாட்டும் செந்நெறி மாந்தருக்குள்
தீமைகுன்ற வாய்ந்த தெய்வமார்க்கமே”

என்ற உணர்ச்சி ததும்பும் பாடலைப் பாடி தமிழ் மக்களின் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றார். இப்பாடலைப் போல், பல பாடல்கள் இயற்றிக் காந்தியக் கவிஞராகப் பெயர் பெற்றவர் நாமக்கல் கவிஞர். இவர் பாடல்கள் பண்பாட்டின் அமைதியைக் கொண்டவை. புலவர் தணிகை உலகநாதன் இவர் கவிதைகளைத் திரட்டி வகைப்படுத்தி “நாமக்கல் கவிஞர் பாடல்கள்“ என்னும் தொகுதியாக வெளியிட்டுள்ளார்.

தமிழன் எப்படிப்பட்டவன், எத்தகைய பெருமை வாய்ந்தவன் என்று படம் பிடித்துக் காட்டும் இவருடைய பாடல் ஒன்றைக் காண்போம்.

"தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கோர் குணமுண்டு

அமிழ்தம் அவனுடைய மொழியாகும் அன்பே அவனுடைய வழியாகும்

மானம் பெரிதென உயிர் விடுவான் மற்றவர்க்காகத் துயர்ப்படுவான்

தானம் வாங்கிடக் கூசிடுவான் தருவதுமேல் எனப்பேசிடுவான்"

**பாரதிதாசன்**

20-ஆம் நூற்றாண்டில் பாரதியாருக்கு அடுத்தபடி புகழ்பெற்று விளங்கும் கவிஞர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் (1891-1961)- இயற் பெயர் கனக சுப்புரத்தினம். பாரதியாருடன் நெருங்கிப் பழகி அவருடைய அன்பையும் பாராட்டையும் பெற்று, அதனால் பாரதிதாசன் என்று புனைபெயர் வைத்துக்கொண்டார்.

பாவேந்தர் பாரதிதாசன் செந்தமிழ்த் தென்புதுவை தந்த பெறற்கரிய முத்து, தமிழ் நாட்டின் தனிப்பெரும் சொத்து அடிமையுற்ற தமிழக மக்கள் நலமுற்று வாழவும், நானிலத்தவர் மேனிலை எய்தவும் எழுச்சிமிக்க பாப்புனைந்தார்' பாடல்களில் புரட்சிக்கருத்துகளைப் புகுத்தினார்.

"அழகிய தமிழ்நடையாற்புதி யனவாய் ஆயிரம்கலை நூல்சேர்ப்போம்"

என்று பாவேந்தர் பாடியதோடு அமையாது படைத்தும் காட்டுகிறார். பாண்டியன் பரிசு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், அழகின் சிரிப்பு, எதிர்பாராத முத்தம், சேரதாண்டவம், தமிழியக்கம், காதல் நினைவுகள், குடும்ப விளக்கு, நல்ல தீர்ப்பு, இருண்ட வீடு, இசையமுது, காதலர் கடமையா, இளைஞர் இலக்கியம், இரணியன் அல்லது இணையற்ற வீரன், பாரதிதாசன் கவிதைகள் (மூன்று பகுதி) போன்ற அவர் தம் நூற்களே அவ்வுண்மைக்குச் சான்று பகர்கின்றன.

பல்வகைப் பாக்களும் பாடுந்திறன் கொண்டவர் இவர். அகவல், எண்சீர் விருத்தம், சிந்து, கண்ணி, ப∴றொடை வெண்பா, நொண்டிச் சிந்து,கும்மி முதலியவை அவற்றுள் சிலவகை.

இனிய இசை நயத்துடன் விளங்கும் அவருடைய கவிதைகளில் அவர் உணர்த்தும் கருத்துகளில் உணர்ச்சிப் புயல் வீசும்' அவர் கையாளும் சொற்கள், மக்களுக்கு நன்கு பழக்கமான எளிய சொற்களாயினும் அவற்றை அவர்

பயன்படுத்துகையில் நிகரற்ற வேகம் கொண்டு, நெஞ்சை ஊடுருவிச் செல்லும் கூரிய ஆயுதங்களாக மாறிவிடும்.

பாரதியின் கட்டளைக்கிணங்க, “எங்கெங்கு காணினும் சக்தியடா“ என்ற பதினாறு வரிகளுள்ள பாடலைப் பாடிய பாவேந்தர் செந்தமிழ்க் காவலர். உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு என்ற எண்ணம் கொண்டவர். 1938-இல் இந்தியை எதிர்த்துச் சிறை சென்றவர். இந்தி எதிர்ப்புப் படையின் போர்ப்பாட்டாக,

”இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் - நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே செந்தமிழ்க்குத் தீமை வந்த பின்னும் - இந்தத் தேகமிருந்தொருலாபமுண்டோ“

என்று வீரமுழக்கம் செய்தார் பாவேந்தர் ”தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும் அறிவுயரும் அறமும் ஓங்கும் இமயமலை போலுயர்ந்த ஒருநாடும் தன் மொழியில் தாழ்ந்தால் வீழும்” என்று தமிழ்போற்றத் தமிழரைத் தட்டி எழுப்புகின்றார். பாரதிதாசனார் மூடப் பழக்கத்தின் முடை நாற்றம் வீசுகின்ற காடுமணக் கவரும் கற்பூரப்பெட்டகம்.

“மூடப் பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம் ஓடுவதென்றோ”

என்று பாடிய புரட்சி வேந்தர்.“இருக்கும் நிலை மாற்றஒரு புரட்சிமனப் பான்மை ஏற்படுத்தல், பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்” என்று எழுத்தாளர் நெஞ்சிலே புரட்சிக் கனலை ஊட்டுகிறார். பொதுவுடைமை என்னும் புதுக் கொள்கையை வரவேற்கும் ஆர்வம் அவருடைய பாடல்களில் நிரம்பக் காணலாம்.

”புதியதோர் உலகம் செய்வோம்-கெட்ட

போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்”

என்று எழுச்சியுடன் பாடும் இவர், பாண்டியன் பரிசு என்ற காப்பியத்தில் வருங்கால உலகைக்கற்பனை செய்து பாடுகிறார்.

கருத்தூற்று மலை ஊற்றாய்ப் பெருக்கெடுத்து ஓடும் “சேர தாண்டவம்“ என்னும் இவருடைய நாடக நூல் கண்ணையும், கருத்தையும் கவரும் சொற்பேழையாகும். பாரதிதாசன் நாடகங்கள் கவிதை நடையில் அமைந்த சொல்லின் செல்வங்களாகும்.

பாரதிதாசனார் இயற்கையைப் பாடும்போது முன்னிக்கவிதை வெறி மூண்டு பாடுகின்றார். ”இயற்கை அனைத்தும் அழகே அந்த அழகு செந்தாமரை என்றும், நிலவென்றும், கதிரென்றும் சிரித்தது. காணும் பொருளிலெல்லாம் அழகைக் காணவும் கண்டவாறு தாமேயாகச் சொல்லோவியம் செய்யவும் திறம் பெறுதல் வேண்டும் தமிழர்கள்” என்று எழுதுகின்றார் பாவேந்தர்.

அவர் இசையுலகத்திற்காகப் பாடிய பாடல்களும் சில உள்ளன. இசையின் இனிமை ததும்பும் அந்தப் பாடல்கள்களில் குழைவும் உண்டு' கொந்தளிப்பும் உண்டு.

**வாணிதாசன்**

பாரதிதாசன் பரம்பரையினருள் வாணிதாசன் குறிப்பிடத் தக்கவர். "தமிழச்சி", கொடி முல்லை, ஆகிய சிறு காப்பியங் களையும், "தொடுவானம்", "எழிலோவியம்", குழந்தை இலக்கியம் ஆகிய கவிதை நூல்களையும் இயற்றியுள்ளார். ஆயினும், வாணிதாசன் கவிதைகள்" என்னும் தொகுப்பு பெரும்புகழ் பெற்றது. புதுவையில் வாழ்ந்த இவருடைய இயற்பெயர், "எதிராஜ்" என்பதாகும். பாரதிதாசனைப் போலவே சமுதாயச் சீர்திருத்தத்தில் ஈடுபாடு கொண்டவர். இல்லாமையில் உழலும் ஏழைமக்களின் நிலை கண்டு,

"இடுவெயில்போல் உழைக்கும் சேரி வாழ் ஏழை மக்கள்

கொடுவெயில் குளிர் மழைக்குக் குந்திடக்குடிசையுண்டோ?"

என்று மனம் வெதும்புகிறார். பிள்ளைக் கனியமுதை

"ஓடைப்புதுமலர்த்தாமரை நீ'

ஓளியன் தீட்டாதசித்திரம் நீ'

கோடைக்குளிர் தென்றல்'

கொத்து மலர் முல்லை'

கொஞ்சும் கிளிப்பிள்ளை நீ குழந்தாய்"

என்று பாடிக் கொஞ்சிக் களிக்கிறார் கவிஞர். சிரித்த நுணா, இரவு வரவில்லை, பாட்டுப் பிறக்குமடா, எழில் விருத்தம் போன்ற இவருடைய நூல்கள் அனைவராலும் பாராட்டப்பெறுகின்றன.

**சுரதா**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பின்பற்றிப் புதிய சமுதாய அமைப்புக்குத் தேவையான கருத்துகள் கொண்ட பாடல்களைப் பாடி வருபவர் கவிஞர் சுரதா. அவர் பாடல்களில் வரும் சிறந்த உவமைகளைச் சுவைத்தவர்கள் அவரை, "உவமைக் கவிஞர்" என்று பாராட்டுகின்றனர். தம் இயற்பெயரான இராசகோபால் என்பதை சுப்புரத்தின தாசன் என்று பாவேந்தர் பால் கொண்ட பற்றால் மாற்றிக் கொண்டவர். அதன் சுருக்கமே சுரதா என்பதாகும். 1921-ல் நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள

பழையனூரில் பிறந்த இவருடைய கவிதைகளில் புதுமை நிறைந்திருக்கும். பாரதிதாசனின் பாடலில் தடங்கல் இருக்காது. இதைச் சொல்லவரும் கவிஞர்,

”தடை நடையே அவர் எழுத்தில் இல்லை வாழைத்

தண்டுக்கா தடுக்கின்ற கணுக்கள் உண்டு”

என்று வினவுகிறார். பாண்டியனின் மீசையை ”படுத்திருக்கும் வினாக்குறிபோல் மீசை வைத்த பாண்டியர்கள்” என்று புதிய உவமையில் படம் பிடித்துக்காட்டுகிறார்.

ஆட்டனத்தியைத் தேடும் ஆதிமந்தியின் நிலையைக் கீழ்க்கண்டவாறு சொல்லோவியமாக்கிக் காட்டுகிறார். தன் “தேன்மழை“ என்னும் கவிதைக் தொகுதியில், ”ஓடிக்கொண்டேயிருந்த நதியை நோக்கி ஓடிக்கொண்டேயிருந்தாள் வாடிக் கொண்டே! வாடிக் கொண்டேயிருந்தாள்! சூறைக்காற்றின் வசப்பட்ட கப்பலைப் போல் ஆடிக்கொண்டேப ஆடிக் கொண்டேயிருந்தாள் அழகி, ஆற்றின் அடி நீரில் மறைந்தவனைத் தேடிக்கொண்டே! தேடிக்கொண்டேயிருந்தாள் ஆதிமந்தி சிந்தாத கண்ணீரைச் சிந்திக்கொண்டே!

**முடியரசன்**

பாரதிதாசன் பரம்பரையில் தோன்றிய மற்றொரு மாபெரும் கலிஞர் முடியரசன் அவர்கள். தமிழாசிரியராக மட்டுமின்றி கவியரங்கங்களிலும் பங்கு கொண்டு தமிழ்த்தாய்க்குத் தொண்டு செய்கின்றவர். இவருடைய கவிதைகள், “முடியரசன் கவிதைகள்“ என்னும் நூலாக லாக வெளிவந்துள்ளன. தமிழகத்தில், தமிழ்த் தெருவில் தமிழ் தானில்லை என்று பாரதிதாசன் ஏங்குவது போலவே இவரும்,

”மணவினையில் தமிழுண்டா? பயின்றார் தம்முள் வாய்ப்பேச்சில் தமிழுண்டா? மாண்ட பின்னர் பிணவினையில் தமிழுண்டா? ஆவணத்தில் பிழையோடு தமிழுண்டு’ கோயில் சென்றால் கண கணவென் றொலியுண்டு’ தமிழைக் கேட்கக் கடவுளரும் கூசிடுவார்’ அந்தோ! அந்தோ! அணுவளவும் மொழியுணர்ச்சியில்லா நாட்டில் ஆத்திகரே இறையுணர்ச்சி வளர்வதெங்கே?” என்றுமனம் வெதும்பிப்பாடுகிறார். முடியரசன் புலவர் மரபை ஒட்டிப் பாடல்களை இயற்றியுள்ளார். இலக்கணம் எதற்கு என்று வீம்புக்குப் பேசும் வாய்ச் சொல்வீணர்களுக்கு,

”வயலுக்குவரப்பொன்றும் வேண்டாம் என்றால்

வளக் கரைகள் ஆற்றுக்கு வேண்டாம்என்றால்

இயல்மொழிக்கு இலக்கணமும் வேண்டாம் பெண்ணே!

மொழியைக் காக்கும் வரம்பிலையேல்

எம்மொழியும் அழிந்து போகும்” என்று விடையளிக்கிறார்.

**புலவர் குழந்தை**

“இராவண காவியம்“ என்ற பெருங் காவியத்தை வழங்கியவர். சொல்லின் செல்வர், ரா.பி. சேதுப்பிள்ளை போன்ற பக்தி நெறியுள்ள சான்றோர்களாலும் பாராட்டப்பட்ட காவியம் இவருடைய இராவண காவியம் சுற்றோரின் இதயத்தைக் களிப்பில் ஆழ்த்தும் கம்ப நாடன் கவிதையைப் போல் இவருடைய கவிதைகளும் பேராற்றல் பெற்றவை. இராவண காவியம் தவிர, “காமஞ்சரி“ என்னும் கவிதை நாடகத்தையும், குழந்தைப் பாடல்கள்“ என்னும் கவிதைத் தொகுதியையும், “கொங்கு நாடு“ முதலான எழுதியுள்ளார். உரைநடை நூல்களையும் எழுதி உள்ளார்.

**கண்ணதாசன்**

நாடு நன்கு அறிந்த நல்லதொரு கவிஞர் இவர். முத்தையா என்பது இவருடைய இயற்பெயராகும். 1944-இல் ஏப்ரல்மாதத்தில் கவிதை உலகில் அடி எடுத்துவைத்தார். ஆயிரக் கணக்கான திரை இசைப் பாடல்கள் மட்டுமின்றி இலக்கிய மாய்ப் போற்றத்தக்க பல பாடல்களையும் இயற்றியு இயற்றியுள்ளார். அவருடைய கவிதைகள், “கண்ணதாசன் கவிதைகள்“ என்னும் பெயரில் 6 6 தொகுதிகளாக வெளி வந்துள்ளன. “ஆட்டனத்தி ஆதிமந்தி“ “மாங்கனி“ ஆகிய சிறு காப்பியங்களையும் எழுதியுள்ளார். வரகவி போல் திறமை படைத்த இவரை, ”தடுமாறு போதையிலும் கவிபாடு மேதையவன் என்று திருமதி. சௌந்திரா கைலாசம் பாராட்டுகிறார்.

”விரிக்காததோகைமயில்! வண்டு வந்து

மடக்காத வெள்ளைமலர்! நிலவு கண்டு

சிரிக்காத அல்லிமுகம்! செகத்தில் யாரும்

தீண்டாத இளமை நலம்! பருவஞானம்!”

என்று “மாங்கனி“ யில் மங்கையின் மாண்பை வருணிக்கிறார். இத்துணை எழில் நலம் வாய்ந்த மங்கை ஆடினால் எவ்வாறிருக்கும்? சுவியரசு கண்ணதாசனின் சுற்பனையைப் பாருங்கள்.

”தெந்தமித்தீம் என்றவளும் ஆடுகின்றாள் ‘

செத்தொழிந்தேன் என்று சிலர் வாடுகின்றார்’

தந்தனத்தான் என்றவளும் தாவுகின்றாள்’

‘தஞ்ச முற்றேன்“ என்று சிலர் மேவுகின்றார்.

கவியரசிடம் சொற்கள் அடிபணிந்து நிற்கின்றன. தாயின் கண்ணோட்டத்தில் சேயின் நிலை என்ன?

“மழை கூட ஒரு நாளில் தேனாகலாம்

மணல் கூடச் சில நாளில் பொன்னாகலாம்

ஆனாலும் அவையாவும் நீயாகுமா?

அம்மாவென் றழைக்கின்றசேயாகுமா?”

எதற்கும் அஞ்சா இவரின் நெஞ்சுரத்தை இவருடைய மற்றொரு பாடல் தெளிவுறுத்திக்காட்டுகின்றது.

”போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்

தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்’

ஏற்றதொரு கருத்தை என துள்ளம் என்றால்

எடுத்துரைப்பேன்! எவர் வரினும் நில்லேன் அஞ்சேன்”

என்று வரிகளில் கவிஞரின் இலட்சியக் குரல் உரத்து ஒலிக்கின்றது. இவருடைய பல திரை இசைப் பாடல்களில் சங்கச் செய்யுட்களின் சாயலைக் காணலாம். காதல் சுவையைக் களிப்போடு பாடிய கவிஞன் சோகச் சுவை பாடுவதிலும் இணையற்று விளங்குகிறார். உயர்ந்த தத்துவங்களை எளிய சொற்களில் அழுத்தமாக வெளிப்படுத்துகினன்ற ஆற்றல் கண்ணதாசனின் கரை புரண்டு ஓடுகிறது.

”எல்லாம் அவன் செயலே என்பதற்கு என்ன பொருள்

உன்னால் முடிந்ததெல்லாம்ஓரளவு என்று பொருள்

சும்மா இருப்பவன் சோம்பேறி

அவனிடம் சொர்க்கத்துக் கென்ன வேலை”

என்பன போன்று இனிய எளிய விளக்கங்களைக் கூறுவது கண்ணதாசன் பாடல்களுக்குரிய தனிச் சிறப்பு எனலாம். தமிழ்த் தாயின் தவப் புதல்வனாய்த் தோன்றிய கண்ணதாசன் 17.1981ல் அமரரானார்.

”கவிதை எனக்கொரு கைவாள் - மார்பில்

கவசம் எனக்கொரு வாய்மை

புவியில் தீமைகள் வீழ-நான்

போர் செய்யும்ஓர் படைவீரன்”

என்று முழங்கும் கே.சி.எஸ். அருணாசலம் அவர்கள் பொதுவுடமைத் தத்துவத்தில் பூத்த கவிஞர்.

சந்தம் நிறைந்த பாடல்கள் தமிழழகனுடைய படைப்புகள். அதனால் “சந்தக்கவிமணி“ எனும் பட்டமும் பெற்றுள்ளார். அவர் பெயரால் கவிதைத் தொகுப்பு ஒன்று உள்ளது. “கலைச் செல்வி“, அன்னையின் கூத்து, பிறைநிலா“ என்பன ஒலி நயம் மிகுந்தவை. சுருத்தாழமும், கவிதைச் சுவையும் நிறைந்த பாடல்களை எழுதியவர், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் “மாடா ஒழைச்சவன் வாழ்க்கையிலே-பசி வந்திடக்காரணம் என்ன மச்சான்? தேடிய செல்வங்கள் வேறே இடத்திலே சேர்வதினால் வரும் தொல்லையடி” என்ற எளிய இனிய அடிகளில் மிகச் சிறந்த சமதர்மக் கருத்து வெளிப்படுவதைக் காணுங்கள். கொத்தமங்கலம் சுப்புவின் பாடல்கள் தனி வகையானவை. நாட்டுப் பாடல்களின் மெட்டுகளைப் பின் பற்றி, நாட்டின் பெரிய நிகழ்ச்சிகளை எல்லாம் மிகச் சுவையாக, ரசனையுடன் பாடியவர் அவர் காந்தியடிகளின் வரலாற்றைக் “காந்தி மகான் கதை“ என்ற பெயரால் பாடி, அந்தப் பாடல்களை அவரே பல ஆண்டுகள் பல அமைப்புகளில் பல மேடைகளில் பாடிக் கேட்போரை மகிழ்வித்தார்.

குழந்தை இலக்கியத் துறையில் சிறப்பிடம் பெறுபவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அழ.வள்ளியப்பா, கவிஞர் பூவண்ணன், தணிகை உலகநாதன் போன்றோர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் கவிதை உணர்ச்சிச் செறிவும் கருத்தாழமும் நிறைத்ததாகும். ஈரோடு தமிழன்பன், அப்துல் ரகுமான் போன்றோர் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற கவிஞர்கள் ஆவர்.

**புதுக்கவிதை**

பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல. மாற்றம் என்பது வளர்ச்சியின் அடையாளம்’ நாளுக்கு நாள் வளர்ந்து வரும் கவிதைத்துறையும் புதுமைக் கண்ணோட் டத்திற்கு ஆட்பட்டது. சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் பரந்து விரியும் பாடுபொருளுக்கும் வடிகாலாக புதுக்கவிதைத் துறை தோன்றியது

இலகு கவிதை, கட்டிலடங்கா கவிதை, வசன கவிதை. உரைவீச்சு, மாடர்ன் பொயட்ரி, நியூ பொயட்ரி என்ற பல பெயர்களுடன் வலம் வரும் புதுக்கவிதையின் தோற்றத்தை யும், வளர்ச்சியையும் இவண் காணலாம்.

”சுவைபுதிது பொருள்புதிது வளம் புதிது

சொற்புதிது சோதிமிக்க நவகவிதை”

என்று பாரதி பாடியபடி, பாடுபொருள், வடிவம், பழைய மரபை மீறி எளிதாக மக்கள் மனதில் பதியும் தன்மை என அனைத்தும் புதிதாக அமைந்திருப்பதால் “புதுக்கவிதை“ என்ற பெயர். இவ்வகைக் கவிதைக்கு நிலையான புகழ் சேர்க்கின்றது. புதுக்கவிதை இயக்கத்தின் மூல மனிதராக நம் தமிழில் விளங்குகின்றனர். பாட்டுக்கொரு புலவன் பாரதியே யாகும். பாரதியாரின் உரைநடைக் கவிதைகள் அல்லது வசன கவிதைகளின் தோற்றமே புதுக்கவிதை இயக்கத்தின் வித்தாக விளங்குகின்றது.

பாரதி வாழ்ந்த காலத்தில் ஆங்கிலச் செல்வாக்கின் தாக்கம் தமிழில் விரைவாகவும், அழுத்தமாகவும் படியத் தொடங்கியது. “ஷெல்லிதாசன்“ என்ற புனை பெயர் மாற்றமும் பாரதியிடத்தில் நிகழ்ந்தது. ஆங்கில இலக்கியத்தின், “சானட்“ வடிவக் கவிதைகள், ஆங்கிலந்தாக்கத்தின் விளைவாகத் தமிழில் நுழைந்தன. பாரதியாரின், “சந்திரிகை“, “யான்“ என்ற கவிதைகள் “சானட்“ வகைக் கவிதைகளாகும்.

பாரதியின் அடியொற்றி, தரனும் “மின்னல் பூ“ என்ற தம் கவிதைத் தொகுதியில் “ருவாய்“ என்ற தலைப்பில் னைட் கவிதை ஒன்றினை எழுதினார். இவ்வகை சானட் கவிதை வந்த வேகத்திலே மறைந்தும் விட்டது. எனினும் இப்புதிய வடிவத்தைத் தமிழில் சோதித்துப் பார்த்த பெருமை, பாரதிக்கும், தூரனுக்குமே உரியது.

புதுக்கவிதை இயக்கம், வால்ட் விட்மன் என்ற அமெரிக்கக் கவிஞரால் ஆங்கில இலக்கியத்தில் தோற்றுவிக்கப்பட்டது. (டுநயளநள ழக பசயளள) புல்லின் இதழ்கள் என்ற அவரது கவிதை பலரின் கவனத்தை ஈர்த்தது. பலவித திறனாய்வு நெறிக்கு ஆட்படுத்தப்பட்ட இக் கவிதையின் வடிவமைப்பு புதுக்கவிதை உலகில் நிலையான இடத்தைப் பெற்றது . வால்ட் விட்மனின் கவிதை முயற்சிகள் எஸ்ரா பவுண்ட், டி. எஸ். எலியட் ஆகியோராலும் ஆங்கிலத்தில் கையாளப் பெற்றன. தொடக்க காலத்தில் எலியட்டின் கவிதைகளுக்கு எதிர்ப்பு இருந்தபோதிலும் பாழ்நிலம் (Wastcland) என்ற அவரது கவிதை நோபல் பரிசைப் பெற்றபோது “பெருங் கவிஞர்“ என்று மக்களால் பெரிதும் இவர் மதிக்கப்பட்டார்.

வால்ட் விட்மன், எஸ்ரா பவுண்ட், டி.எஸ். எலியட் ஆகியோர் தோற்றுவித்த இவ்வகை வசன கவிதை அல்லது கட்டுப்பாடற்ற கவிதை இயக்கம் பாரதியிடம்

செல்வாக்குப் பெற்று தமிழில் புதுக்கவிதைத் தோற்றத்திற்கு வழி வகுத்தது. பாரதி தோற்றுவித்த உரைநடைக் கவிதை எனும் அன்னை ஈன்றெடுத்த குழந்தையே "புதுக்கவிதை" என்ற பெயரில் நாளுக்கு நாள் நெடுநெடுவென வளர்ந்து வருகின்றது.

1912-ஆம் ஆண்டில் எஸ்ரா பவுண்ட் அவர்கள் டின்டன் என்பவருடன் இணைந்து கொள்கைகளை உருவாக்கினார். புதுக்கவிதைக்கென சில

1. எழுதும்பொருள் எதுவாயினும் நேர்முகமாய் அணுக வேண்டும்

2. கவிதையின் வெளிப்பாட்டுக்குப் பயன்படாத எந்த ஒரு சிறு சொல்லையும் சேர்க்கக் கூடாது.

3. சொற்றொடர்களில் இசை தழுவிய தொடர்ச்சி அமைய வேண்டும்.

இம் மூன்று கொள்கைகளுக்கு உட்பட்டு மேல் நாட்டில் மட்டுமின்றி தமிழிலும் புதுக்கவிதை பல்வேறு கிளைகளைப் பரப்பி வளர்ந்து வருகிறது. தமிழில் புதுக்கவிதை இயக்கத்தின் முன்னோடியாக இருந்து வழிகாட்டிய பாரதியின் காலம் முதல் இன்று வரையுள்ள புதுக்கவிதை வளரச்சியின் வரலாற்றில் (1) மணிக்கொடிப்பரம்பரை (1930-1945) (2) எழுத்து பரம்பரை (1950 - 1970) (3) வானம்பாடிப் பரம்பரை (1971க்குப் பிறகு) என்ற மூவகைப்பட்ட கவிஞர் குழுவினர் இடம் பெறுகின்றனர்.

**மணிக்கொடிப் பரம்பரை:**

ந. பிச்சமூர்த்தி, கு.ப.ராஜ கோபாலன், புதுமைப் பித்தன், வல்லிக்கண்ணன் ஆகியோர் இப்பரம்பரையில் முதல்வர்கள். பிறமொழி இலக்கியத் தாக்கமும், கருத்து வெளிப்பாட்டிற்கு, வேறு பட்ட யாப்பு வடிவம் காண வேண்டும் என்ற உந்துதலும் கொண்ட இவர்களின் புதுக்கவிதைகள், மணிக்கொடி, கலாமோகினி, கிராம ஊழியன், சிவாஜி மலர் ஆகியவற்றில் வெளியாயின. எனவே இவர்கள் மணிக்கொடிப் பரம்பரையினர் என்று அழைக்கப் படுகின்றனர்.

**எழுத்து பரம்பரை:**

புதுக்கவிதை வளர்ச்சி ஆபெரும் செலலப்பாவிற்கும் என்றும் நிரந்தரமான பெரும்பங்கு உண்டு. தோற்றத்தில் மட்டுமின்றி, பாடுபொருளிலும் புதுமை மாற்றம்காண விரும்பிய எழுத்து பரம்பரை யினரால், ஆங்கிலச் சொற்களும், சொற்றொடர்களும் புதுக் கவிதைகளில் இடம் பெறலாயின. பாலியல் தொடர்புப் பொருண்மைகள் உண்மைகளை உள்ளவாறே வெளிப் படுத்துதல் என்ற முறையில் பாடப்பட்டன. கனவுநிலை உணர்வுகள், நம்பிக்கை வறட்சி, சோர்வு வாதம் ஆகியவற்றைத் தாங்கிய

சொற்சித்திரங்கள் வரையப் பட்டன. “இக்கால கட்டம் புதுக்கவிதை உலகிற்கு ஒரு சோதனையான காலம்“ என்பர் திரு. கைலாசபதி அவர்கள்.

**வானம்பாடிப் பரம்பரை:**

”இறந்தகாலப் பிடிப்பும், நிகழ்காலச் சிந்தனையும், எதிர்காலக் கண்ணோட்டமும் பெற்றிருந்த வானம்பாடிக் கவிஞர்கள், ”உண்மையையும் உணர்ச்சியையுமே இரு சிறகுகளாகக் கொண்டு கவிதை வானில் சஞ்சரிக்க வந்த முற்போக்குக் கவிஞர்கள். சமுதாய அவலங்களைக் கண்டு, அறவழிச்சினம் கொண்டு தங்கள் உள்ளத்தில் உணர்ச்சிகட்கு கவிதைவடிவம் முயன்றவர்கள் இவ் வானம்பாடிக் கவிஞர்கள்” என்கிறார் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்.

காலத்திற்கேற்ப கோலம் போல, நாளுக்கு நாள் மாறிவரும் சமுதாய அமைப்பிற்கும், கனக்கும் ஏற்ப, கவிதைத் துறையிலும் மாறுதல் நிகழ்ந்ததன் உருவ அமைப்பைவிட, பாட்டிற்கு முதன்மையிடம் தருகின்ற புதுக்கவிதைகளின் தோற்றம். ”இலட்சிய வேலியையே இலக்க வேலியாகக் கொண்டு புள்ளிமான்கள் போல் துள்ளிஓடும் தன்மை கொண்டவை” என்ற கண்ணதாசனின் பாராட்டில், இலட்சியமே புதுக் கவிதைப் படைப்புக்கு அடிப்படைத் தேவை எனத் தெரிகிறது.

**இலக்கணம்:**

தொல்காப்பிய இலக்கணத்துக்குள் எந்த இலக்கிய வகையையும் அடக்கிக்காட்டுவது தம் மரபு. தொல்காப்பியர்,

”விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே”

என்று தொடர்நிலைச் செய்யுட்கு உரியனவாகக் கூறிய நூற்பாவின்படி, “விருந்து“ என்னும் இலக்கிய வகைக்குள் இன்றைய புதுக்கவிதைகள் அடங்குகின்றன. உள்ளத்து உணர்ச்சிகளையும், தாம் உணர்ந்த அனு பவங்களையும், உள்ளது உள்ளவாறே மொழிக்கருவியால் வடித்து எழுதப்படுவதே புதுக்கவிதை.

”உள்ளத் உள்ளது கவதை - இன்பம்

உருவெடுப்பது கவிதை தெள்ளத் தெளிந்த

தமிழில் உண்மை தெரிந்துரைப்பது கவிதை”

என்று கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை கவிதைக்குத் கூறிய இலக்கணம் பொருந்தும் இன்றைய புதுக்கவிதைக்கும் 1935 செப்டம்பர் தீபம் இதழில் சிவம் புதுக்கவிதையின் இலக்கணமாக

"தொடையடி பந்தம் தொலைத்த துறவி.

"தானாய்த் தவித்துத் தரைபிளந்து மணக்கும் கானகப் பூக்கள்"

"உள்ளத் தோட்டத்தில் உதிரிப் பூக்கள்"

""உண்மைத் தோட்டத்தின் மூன்றாம் பிறைகள்"

"புதிதெல்லாம் கவியாய்க் காணும் பொன்மனச் சித்தர்களின் புதுக்கவி மந்திரங்கள்"

என்று சிலவற்றை எழுதியுள்ளார். காலத்துக்கேற்ற புதிய அமைப்பு, மரபுக்குள் கட்டுப்படாமை, உணர்ச்சிகளை உள்ளவாறே வெளிப் படுத்தும் தன்மை, அப்பட்டமான உண்மைகளின் வெளிப் பாடு ஆகியவை புதுக்கவிதையின் இக்கவிதையில் கூறப்பட்டுள்ளன. மு. மேத்தா, ஊர்வலம் என்ற நூலில்

"இலக்கணச் செங்கோல்

யாப்புச் சிம்மாசனம்

எதுகைப் பல்லக்கு

மோனைத் தேர்கள்

தனி மொழிச் சேனை

பண்டித பவனி

இவை எதுவும் இல்லாத

கருத்துக்கள் தம்மைத்

தாமே ஆளக் கற்றுக் கொண்ட

புதிய மக்களாட்சி"

முறையே புதுக் கவிதை என்று புதுக்கவிதைக்குரிய இலக்கணத்தைத் தெளிவாகக் கூறுகிறார்.

புதுக் கவிதையின் இலக்கணமாக சக்திக்கனல் மேற்கண்டவாறு கூறுகிறார்.

1. இன்றைய சமுதாயம் வாழ்க்கைச் சிக்கலை அது எடுத்துக் காட்ட வேண்டும்.

2. வார்த்தைகளை, சிந்தனைகளை உடைத்துப் புது வனத்துடன் கையாள வேண்டும்.

3. சிடுக்கு சிடுக்காகக் காட்ட வேண்டும்' சிடுக்கில்லை என்று மூடி மறைக்கக் கூடாது.

க.நா. சுப்பிரமணியன் இன்றைய புதுக்கவிதையாளர்கள் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டிய அடிப்படை உண்மைகளை இவ்வாறு கூறுகின்றார்.

ஒவ்வொரு கவிஞனும் ஒரு குரலை முன்னிறுத்து கிறான். ஆழமாக உணர்ந்து அதை ஆழமாகவே உணர்த்தி விடுகிற கவிஞனின் திறன் வாழ்க்கையை நுட்பமாக அடையாளம் காட்டிவிடுகின்றது. கவிஞனின் குரல் மானிடக் குரலாக மனித வாழ்க்கையை உணர்கிற, உணர்த்துகிற குரலாக இருக்கின்றது. அதனடிப்படையில் புதுக்கவிதை உலகில் சிறப்பாகப் பேசப்படும் பலரது கவிதைகளைக் காணலாம்.

"எழுத்து களத்தில் விளைந்த கவிஞர்களுள் குறிப்பிடத் தக்கவர் வைதீஸ்வரன் அவர்கள். வாழ்க்கையின் அனைத்துப் பக்கங்களையும் புகைப்படச் சுருள் போல தேரடியாக வாசகர்களுக்குக் கொடுக்கிற அழகுணர்ச்சிக் கவிஞர்.

"அவன் வீட்டுச் சாக்கடையில் அடுத்தவீட்டு நாய் படுத்துப் புரளுவது ஒரு வழக்கமாச்சு உரிமையால் ஆனமட்டும் விரட்டிப் பார்த்தும் அது நகரவில்லை. ஒரு நாள் ஆளுயரத் தடியெடுத்து ஆத்திரத்தால் அடித்துவிட அதுவள்ளென வால்மடக்கிக் குதித்தோட அவன் வாய்குள்ளே சள்ளென சகதி விழுந்து தெறித்தது அவன் வீட்டுச் சகதி"

'உரிமை" என்ற அவரது கவிதை விளைவிக்கும் தாக்கமும், அனுபவமும். அக்கவிதையோடு நம்மையும் ஒன்ற வைக்கின. எழுபதுகளின் ஆரம்பத்தில் தங்கள் கவிதை வெளியீடுகள் மூலம் புதுக்கவிதைத் துறையில் தங்களை நிலை நிறுத்திக் கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அபி, அப்துல் ரகுமான், மீரா போன்றோர். "கனவுகள+ கற்பனைகள் = காகிதங்கள்" என்ற வசன கவிதைத் தொகுதியும் "ஊசிகள்" என்ற புதுக்கவிதைத் தொகுதியும் கவிஞர் மீராவிற்கு இலக்கிய உலகில் நிரந்தரமான இடத்தைத் தேடிக் கொடுத்தன. சமுதாயப் பிரச்சினைகளுக்கு எதார்த்த ரீதியான கலைவடிவம் கொடுக்கும் முயற்சியில் மீரா வெற்றி பெற்றார். "என்னைப் பொறுத்தவரை இலக்கிய உப்பரிகைகளில் உலாவுவதை விடச் சமுதாய நடைபாதைகளைச் செப்பனிடுவதையே முக்கியமாகக் கருதுகிறேன்" என்று சுய விமரிசனம் செய்யும் மீராவின் எண்ணங்கள், ஆசைகள், "ஊசிகளில்" வெளிப் படுகின்றன. இன்றைய வாழ்க்கையின் நடைமுறை அவலங்களை அங்கதத் தொனியுடன் மீரா கிண்டல் செய்வதை அவர் கவிதைகளில் காணலாம்.

""உனக்கும் எனக்கும் ஒரே ஊர் - வாசுதேவ நல்லூர் நீயும் நானும் ஒரே மதம் திரு நெல் வேலிச் சைவப் பிள்ளைமார் வகுப்புங்கூட..... உன்றன் தந்தையும் என்றன் தந்தையும் சொந்தக் காரர்கள் - மைத்துனன் மார்கள் எனவே செம்புலப் பெயல் நீர்போல அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே"

நம் சாதி அமைப்பை, சமுதாய அமைப்பைப் பற்றி விமரிசிக்கிறது இக்கவிதை. "யாயும் ஞாயும் யாராகியரோ" என்ற குறுந்தொகைப் பாடல் அன்பின் ஐந்திணையை உயர்வாகக் கூற, மீராவின் இக் கவிதையோ, அன்பு, காதல் போன்ற இயற்கை உணர்வுகளைப் பொருளாதாரக் காரணங்களுக்காகப் புறக்கணிக்கும் இளையோரைப் பற்றி அமைதியாக, ஆனால் ஆழமாக அங்கதச் சுவையுடன் எடுத்துரைக்கிறது.

வானம்பாடிக் கவிஞர் வரிசையில் தனக்கென ஓரிடத்தைப் பிடித்துக் கொண்டவர் கவிஞர் மு. மேத்தா அவர்கள். கூறும் கருத்தோ, முறையோ எதிலும் புதுமையைப் போற்றும் மேத்தா பல புதுக் கவிதை நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் ஒன்று கண்ணீர்ப் பூக்கள். இந்நூலில் பல கவிதைகள் சோக உணர்ச்சியைச் சுமையாகத் தாங்கி நிற்கின்றன. கண்ணீர்த் துளிகளையே கண்ணீர்ப் பூக்களாக மேத்தா வருணிக்கிறார்.

"உலகெங்கும் இதழ் இதழாக இந்தப் பூக்கள் உதிர்ந்து விழுவது யாருக்காக? அழகிய நிறமுமில்லாமல் மனமுமில்லாமல் பூத்த உடனே உதிர்ந்து போகிற இவற்றை யார் வாங்குவார்கள்?" இந்தக் கண்ணீர்த்துளிகளாகிய பூக்கள், "எங்கெல்லாம் மானுடம் காயப்படுகிறதோ அங்கெல்லாம் பூக்கும் சகோதர சோகங்களின் சர்வ தேசியப் பூக்கள் இவைதான்" என்று அவற்றின் இயல்பைப் பாடுகிறார். "தேசப்பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி"யில்

"உன்னுடைய படங்கள்

ஊர்வலம் போகின்றன

நீயேன் தலைகுனிந்தபடி

நடுத்தெருவில் நிற்கிறாய்"

என்ற வரிகளில் தலை குனிய வேண்டியவர்கள் ஊர்வலம் போவதைக் காணப் பொறுக்காமல் காந்தி தலைகுனிந்து நடுத்தெருவில் நிற்பதாகத் துக்கத்தோடு கூறுகிறார்.

"ஆபுத்திரனே! அமுத சுரபியைத்தான்

நீ தந்து சென்றாய் இப்போது... எங்கள்

கையில் இருப்பதோ பிச்சைப் பாத்திரம்"

என்று அங்கதச் சுவையில் நம்நாடு பிறநாடுகளிடம் கடன் கேட்கும் நிலைக்கு வருந்துகிறார். மரங்களை வருணிக்கையில் "மானுட ஆண்மைக்கு மண்கொடுத்த சீதனங்கள்" என்று பாடுவது மனதைக் கொள்ளை கொள்கின்றன.

ஏழைகளை எண்ணிப் பார்க்கும் இதயமுள்ளவனே கவிஞன். அந்த வகையில் தான் ஒரு சிறந்த கவிஞன் என்பதை,

"தொட்டி இலையையும் துடைத்துச் சாப்பிட இந்தத் தேசத்தின் தெரு இராஜாக்கள் ஒருவரோடு ஒருவர் கட்டிப் புரள்கிறபோது எதிர்கால இருட்டை எண்ணிப் பதைக்கிற - என் இதய வேதனைக்கு உவமைகள் ஏது."என்ற "வாழைமரத்தின் சபத" வரிகளால் நிரூபித்து விட்டார்.

**நா. காமராசன்:**

புதுக்கவிதை உலகில் உலாவரும் எண்ணற்ற கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் சூரிய காந்தி"யில் அறிமுகமாகி "கறுப்பு மலரில்" மணம் பரப்பிய நா. காமராசன் அவர்கள். புதுமைச் சிந்தனைகளும், புதிய சொற்கோலங்களும் கொண்ட இவரது கவிதைகள் இலக்கிய மிகுந்த வரவேற்பைப் பெற்றன. மரபுக் கவிதைகளை எழுதிக் குவித்த இவர் கரங்கள், புதுக்கவிதையிலும் தன் ஆற்றலைக் காட்டத் தவறவில்லை. அனைவராலும் ஒதுக்கப்பட்ட அனைவரையும் நான் பாடுகிறேன்" என்று பிற கவிஞர்கள் பார்க்க மறந்த, மறுத்த கோணங்களை இவர் பார்த்துப் பாடுகிறார். அலிகள், பிச்சைக்காரர்கள், ஊமை விலைமகளிர், கறுத்தம்மா, கறுப்பு மலர்கள், கிறுக்காச்சியின் விறகுகள், கல்லறை போன்ற பல வித்தியாசமான கவிதைகளைப் படைத்த ஒப்பற்ற கவிஞர் இவர். கவிஞரின் பார்வையில் இருந்து யாரும் எதுவும் தப்பவில்லை. குழந்தைகளை,

"இல்லறப் பள்ளியறை வெளியிடும் ஆண்டு மலர்கள்" என்றும்

"சிணுங்கி அழுது சிரித்து நவரசம் காட்டும் நவரத்தினப் பூக்கள்" என்றும் பாடுகிறார். அவர் கவிதையில் ரிக்ஷா ஒன்று தன் கதையைத் தானே கூறுகிறது . "போக்குவரத்தின் சவலைப்பிள்ளை, எட்டணா வாடகையில் இந்நாட்டு மன்னர்கள்" ஏறுகின்ற "ஓடும் சிம்மாசனம்" என்று ரி'ா தன் நிலையைப் பாடுகிறது.

மானுடம் பாடும் வானம்பாடி இயக்கத்தில் குறிப்பிடத்தக்கவர் ஈரோட்டைச் சேர்ந்த ந. செகதீசன் என்ற இயற்பெயர் கொண்ட ஈரோடு தமிழன்பன் அவர்கள். இவர் கவிதைகளில் பழமைப் போக்கு, புதுமைநோக்கு, பல புதிய சிந்தனைகள், உலகளாவிய பரந்த பார்வை போன்றவற்றைக் காணலாம். பதினைந்திற்கும் மேற்பட்ட கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.

**ஹைகூ (HAIKU)**

தமிழில் புதுக்கவிதை அலையைத் தொடர்ந்து "ஹைக" என்ற சப்பானியக் குறும்பா வடிவம் செல்வாக்குப் பெற்றுள்ளது. எளிமையான மூன்றடி வசீகரம், சின்னச்

சின்ன மின்தாக்குதல்கள், சொற்செட்டு படி அழகு ஆழமான உணர்ச்சிக் கொப்பளிப்புடன் பிரபஞ்சத்தின் முழு பரிமாணத்தையும் தன்னகத்தே பிரதிபலிப்பன, இந்த மின்மினிக் கவிதைகள் நெல்லை முத்து, தமிழில் ஹைக்கூ ”சீராக, எளிமையாக, சரளமாகக் கவிதை புனையும் கலையின் வெற்றி ஹைகூ” என்றும், ஹைகூ என்பது கவிதையன்று இலக்கியமு மன்று நுண்மையை - பருமையை, தனியினை பொதுவினை என்று இரு நிலை அமைவுகளை ஒருநிலைப்படுத்தும் கலவை ஆக்சுவேலை ஹைகூ என்றும் முனைவர் தி. லீலாவதி ஹைகூவிற்கு விளக்கம் அளிட்டார். ”உலகக் கவிதை வடிவங்களிலேயே எனக்கு மிகவும் பிடித்தது ஹைகூதான்” என அப்துல்ரகுமான் அறைவார்.

பாரத பௌத்த சிந்தனையில் அரும்பிச் சீனத்துப் பண்பாட்டில் போதாகிச் சப்பானிய அழகு பார்வையில் மலர்ந்து மணம் வீசுவது ஹைகூ என்பர் (நெல்லை சு.முத்து ஹைகூவின் பதினேழு அசை, மூன்றடி என்னும் புறவடில் அமைவு ஒதுக்கி வைத்துவிட்டு நோக்கும்போது எஞ்சுவது ““சென்“ பௌத்த களை மதக் கோட்பாடு மட்டுமே. “சென்“ எனும் சொல்லுக்குச் சப்பான் மொழியில் “தியானம்“ என்பது பொருள். “சென்“ என்பது அறிவு சாராத நிலையாகும். இந்நெறியில் அமைந்த ஹைகூக் கவிதைகளும் அறிவுசாரா நிலையில் இயற்றப்படுபலை என்பர்.

(புதிர்போட்டு விடையவிழ்க்கும் ஒருவகை இலக்கிய விடுகதை சப்பாள் மொழியில் “ரெங்கா“ (Renka) எனப் பெயர் பெறும் அம்மானை போல இதுவும் ஒரு போட்டிக்கவிதை விளையாட்டு ஐந்து வரிகளுள் முதல் மூன்றில் ஒருவர் கவிதொடுக்க, அடுத்தவர் இரண்டு வரிகளில் எதிர்ப்பாட்டுக்கட்டுவது இந்த ரெங்காவின் சிறப்புக்கூறு. இந்தப்பொழுது போக்குப் பாடல்கள் மூன்று வரிகளாய்ச் சுருங்கியதுடன் சென் புத்தமதக் கொள்கை வெளியீட்டிற்குரிய புது உத்தியுமாயிற்று. அதுவே ஹோக்கு (Hokku) அல்லது இன்றைய ஹைகூ (Haiku) ஆயிற்று (நெல்லை சு.முத்து சப்பானிய அரண்மனைவாசிகளின் சொல்லலங்கார விளையாட்டி லிருந்து தோன்றிய ஹைகூக் கவிதை, பாஷோ (1644-1694), புசான் (1716 1783) இஸ்ஸா (1763 - 1827), ஷிகி (1867 - 1902) ஆகியோரால் உயர் நிலை எய்தியது. இந்நால்வரையும் ஹைகூவின் மூலவர் என்பர்.

“கண நேரம் ஒளிர்கிறாய்

மறுகணமே இருள்கிறாய்

சக மின்மினியே” (சினே - ஜோ)

என விடுகதைபோலவும், வினா - விடை போலவும் முதலில் ஹைகூக்கள் தோன்றின. ஹைகூவின் புறவடிவம், உள்ளுருவக் கோட்பாடு ஆகிய வற்றின் அடிப்படையில்

நோக்கினால் தமிழ்ச் சித்தர்களுக்கும், ஹைகூவைத் தோற்றுவித்த சென் துறவிகளுக்குமிடையே கருத்து ஒற்றுமை மிக்கிருத்தல் புலப்படும்.

ஹைகூ என்பது, கட்டற்றகவிதை அல்லது புதுக்கவிதை அன்று. சப்பான் மொழியில் அது மரபுகவிதை. ஹைகூக்கவிதையில் மூன்றடிகள் மட்டுமே இடம்பெறும். முதலடியில் ஐந்துஅசைகளும் இரண்டாமடியில் ஏழு அசைகளும், மூன்றாமடியில் ஐந்து அசைகளும் அமைந்திருக்கும். முதலிரண்டு அடிகளின் முத்தாய்ப்பாக மூன்றாவது அடி பளிச்சென்று நெஞ்சில் தைக்கும்படியாகத் தெறிப்புடன் விளங்கும். “முதலடியானது சாட்டையைக் கையில் எடுக்கும் அமைதியுடனும், இரண்டாவது அடி அதை ஓங்கும் நிதானத்துடனும், மூன்றாவதடி சுழற்றி வீசிய அடிக்கனத்துடனும் தெறிப்பாக அமையவேண்டும் (நெல்லை சு. முத்து) சென் - ஹைகூப் படைப்பாக்கத்தில் தனிமை (Solitude), தானறுந்த நிலை (Selflessness), முரண்கள் (Contrudictions), பேச்சற்ற மௌனம் (Wordlessness) போன்ற மனநிலைகள் முதன்மைப்படுத்தப்படும்.உணர்ச்சிக் குறியீடுகளை ஹைகூக் கவிஞர்கள் சொற்களால் வெளிப் படுத்தாமல் நிறுத்தக்குறியீடுகளால் வெளிப்படுத்துவர். இவை “கிரெஜி“ எனப்படும். அவற்றுள் யா, கான, கெரி ஆகிய மூன்றினையும் சிறப்பாகக் குறிப்பிடுவர்.

“அத்தனையும் தின்றுவிட்டேன்

ஆ... வயிற்றுவலி

திருடிய ஆப்பிள்கள்” (ஷிகி)

“விளக்குகளே

வந்து பாருங்கள்

நான் பிடித்த திருடன் அட,

என் மூத்தமகன்” (ஸோகன்)

“எனக்கு வயசாகக் கூடாது

சே... கேட்டீர்களா, அதோ பு

துவருட மணியோசை” (ஜோகுன்)

இக்கவிதைகளில் இடம்பெறும் ஆ, அட, சே ஆகிய ஒலிக்குறிப்புக்கள் மூன்றும் முறையே யா, கான, கெரி எனும் அடையாள நிறுத்தக் குறியீடு களாகும். இந்த ஹைகூக்களின் உயிர் இவற்றில் ஊடாடுகின்றது. (நெல்லை சு. முத்து)

தமிழ் ஐங்குறு நூற்றுப்பாடல்போல, ஹைகூவிலும் ஒருபொருள் மேல் பத்துப்பாடல்களை முன்பின்னாக அடுக்கிப்பாடும் முறை உண்டு. இத்தகைய ஹைகூத் தொடராக்கங்களைப் பாடுவதில் “ஷிகி“ கை தேர்ந் தவர், ஹைகூவில் நேரடியாக உவமை இடம் பெறுவதில்லை

ஹைகூக் கவிதை உலகம் முழுதும் செல்வாக்குப் பெறத்தொடங்கியதும் தமிழகத்திலும் அறிமுகமானது. ஹைகூவை மின்பா, துளிப்பா, மின்மினிக் கவிதைகள், சிந்தர், நறுக்கவிதைகள், வாமனக் கவிதைகள் எனத்தமிழில் பலவாறு பெயர் சூட்டிப் போற்றுவர்.

வால்ட்விட்மனின் கருத்துச் செறிவான வசன கவிதைகளை ஏற்றுத் தமிழில் சோதனை முயற்சிகளைச் செய்து பார்த்த மகாகவி பாரதியார். ஹைகூக் கவிதைகளையும் தமிழில் அறிமுகப்படுத்தினார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் “மாடர்ன் லிவ்யு“ என்ற கல்கத்தாப் பத்திரிகை யில் உயோநே நோகுச்சி எனும் சப்பானியர் எழுதிய கடிதத்தின் அடிப் படையில் பாரதியார் எழுதிய “ஜப்பானியக்கவிதை “ எனும் கட்டுரையே ஹைகூவின் முதலாவது தமிழ் அறிமுகம். (சுதேச மித்திரன், 16.10.1916) இங்கிலிஷ் கவிதையைக் காட்டிலும் ஜப்பானியக் கவிதை சிறந்தது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் ஜப்பானியக் கவிதையின் விசேஷத்தன்மை என நோகுச்சி கூறுகிறார் என்றும், சப்பானிய ஹைகூ போன்றதே நம் திருக்குறள் என்றும் பாரதியார் கூறுகிறார். பாரதிக்குப்பின் பல ஆண்டுகள் தமிழில் யாரும் ஹைகூ பற்றிச் சிந்திக்கவில்லை.

1966 சனவரி மாதக் கணையாழி இதழில் சுஜாதாவின் மொழி பெயர்ப்பு ஹைகூக்கள் சில வெளிவந்தன.ஆற்றலுடையது. எனவே இன்றைய உலகத்தாரிடையே உரைநடை செல்வாக்குப் பெற்று வருகிறது. இன்று வெளிவரும் நூல்களுள் பெரும் பாலன உரைநடை நூல்களே.

**நாடக வரலாறு**

(மனம் மனம் மொழி மெய்களால் மாந்தன் இயங்குகிறான்.மனத்தின் வெளிப்பாடு இயலாகவும், மொழியின் இனிமை இசையாகவும், மெய்யின் அழகியற் செயற்பாடு நாடகமாகவும் மலரும். ஆதலின், மனம் மொழி மெய்களோடு தொடர்புடைய தமிழ் முத்தமிழ் ஆயிற்று. தமிழ் தவிர ஏனைய உலக மொழிகள் இசைமொழி, நாடகமொழி எனும் இருபாகு பாடுகளை மொழி இலக்கணமாகக் கருதி நோக்கவில்லை. தமிழ் அந்தவகையில் தனித்தன்மையுடையதாக விளங்குகிறது. ”தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னன் பொருப்பன்” என்ற அடியால் பரிபாடல் தான் முதலில் முத்தமிழ் பற்றி மொழிகிறது. தொடர்ந்து,

‘முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்“ (அப்பர்)

”இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழென வகைப்படச் சாற்றினர் மதியுணர்ந் தோரே“ (பிங்கலம்)

““முத்தும் முத்தமிழுந் தந்து முற்றலால்” (கம்பர்)

”சங்கத் தமிழ் மூன்றும் தா (பிற்கால ஔவை)

என முத்தமிழ் குறித்து மொழிந்துள்ளனர். நாடு+அகம் = நாடகம். நாடுதலாவது விரும்புதல்’ அகமாவது மனம். எனவே நாடகமாவது மனத்தினால் விரும்பப்படுவது அல்லது மனத்தைக் கவர்வது என்று பொருள்படும். பிற கலைகளைக் காட்டிலும், காண்பாரைப் பெரிதும் கவர்வது நாடகக்கலையாதலின்“ அது பெருவிருப்பிற்குரிய தாயிற்று. எனவே நாடகம், “கலைகளின் அரசி“ எனப் போற்றப்படுகிறது.விளையாட்டுணர்வின் விளைவே நாடகம் என்பர். அதனாலேயே ஆங்கிலத்தில் நாடகத்தையும் விளையாட்டையும் குறிப்பிட Play என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. தமிழில் கூட ஆடுதல் என்பது விளை யாட்டையும் நாடகத்தின் ஒரு கூறாள ஆட்டத்தையும் ஒருங்கே குறித்தது. கிரேக்க எகிப்தியத் தெய்வங்களின் விழாக்களிலிருந்துதான் நாடகம் பிறந்தது என்பர் மேனாட்டார். தமிழிலும் அவ்வாறே வழிபாட்டிலிருந்து நாடகம் தோன்றியிருக்கலாம். (பழனி அரங்கசாமி, தமிழ்நாடகம் தோற்றமும் வளர்ச்சியும், பரத சாத்திரத்துள் வரும் “நாட்டியதர்மி“ எனும் சொல்லின் தமிழ்ப் பெயர்ப்பே நாடகம் என்பார். வையாபுரிப்பிள்ளை. நாடகம் என்னும் துறையே வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்று இயம்பு வாரும் உளர் நாடகம் என்ற சொல்லைப் பரத சாத்திரத்திற்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் கையாள்வதாலும், சங்கப் பாக்கள் அனைத்தும் ஒருவர் கூற்றாகவோ பலர் கூற்றாகவோ நாடக முறையில் அமைந்திருத்தலாலும் நாடகத் துறை தமிழுக்குப் புதிதன்று, நாடகம் என்ற சொல்லும் தமிழ்ச் சொல்லே. அச்சொல் தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்றிருக்க வேண்டும் என்பார் பாவாணர் தொல்காப்பியர்,

“நாடக வழக்கும் உலகியல் வழக்கும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்”

எனும் நூற்பா அடிகளில் நாடகம் பற்றி நவில்கிறார் நாடகவழக்கு என்பதற்கு இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டது என்று உரையாசிரியர் பொருள் கூறுகிறார். எனினும் நாடகவழக்கு என்பதற்கு உரையாடல் வழக்கு எனவும் பொருள் கொள்ளலாம். உறழ்கலியும், பரிபாடலும் ஒன்றிற்கு மேற்பட்ட மாந்தரின் உரையாடல்களாய் அமைந்து நாடகத் தன்மை எய்திஉள்ளன. வின்செஸ்டர், நாடகத் தன்னுணர்ச்சிப்பாட்டு. (Dramatic Lyric), நாடகக்கதைப் பாட்டு (Dramatic Story), நாடகத் தனி மொழிப்பாட்டு (Dramatic Monologue) என நாடகப் பாட்டுக்களை

மூன்றாகப் பகுப்பர். இவற்றிற்கு முறையே புறநானூறு மற்றும் ஆற்றுப்படைப் பாட்டுக்களையும், உடையாடலாக அமைந்த கலித்தொகை மற்றும் பரிபாடற் செய்யுட்களையும் எஞ்சிய அகநானூறு முதலிய அகபொருட் பாடல் களையும் சான்றாகக் காட்டலாம். சிலப்பதிகாரம் ஒரு முத்தமிழ்க் காப்பியம். வரியும் குரவையும் கூத்து வகைகள், வரிக்கூத்து தனியொருவர் ஆடும் நடனம், குரவைக்கூத்து பல்லோர் சேர்ந்து ஆடும் நாடகக்கூத்து, கண்ணன், பலராமன் நப்பின்னை, யசோதை ஆகியோராக வேடம் கொண்ட பெண்கள் சேர்ந்து ஆடி நடிப்பதாகச் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை கூறுகிறது. மற்றும் நாடக அரங்கு அமைப்பது பற்றியும் சிலம்பு விரிவாகக் கூறுகிறது. அன்றைய அரங்குகளில் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என மூவகைத் திரைகள் பயன்படுத்தப்பட்டன. இத்தகு திரைவசதி 15ஆம் நூற்றாண்டைய ஆங்கில மேடைகளில் கூட இல்லை. முற்காலத் தமிழகத்தில் நாடகமும் நாடக இலக்கண நூல்களும் பல்கிப்பெருகி இருந்திருக்க வேண்டும். ஆய்ச்சியர் குரவையில் (சிலம்பு) வாலசரிதை நாடகம் குறிப்பிடப்படுகிறது. சேர நாட்டில் சாக்கைக்கூத்தர் என்பார் இருந்தனர். சிலப்பதிகாரம் கூறும் கொட்டி சேதமே இன்றைய கேரளத்தின் கதகளி நடனம் என்பார். மு. இராகவையங்கார். சிலப்பதி கார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், பரதம், அகத்தியம், கூத்தநூல், முறுவல், சயந்தம், செயிற்றியம், குணநூல், பஞ்சமரபு, பரதசேனா பதியம், மதிவாணனார் நாடகத் தமிழ் நூல் ஆகிய நாடக இலக்கணங் களைக் குறிப்பிட்டு அவையெல்லாம் இறந்து போயின என்பார்.

மரப்பாவை, ஆடிப்பாவை போன்ற பாவைக் கூத்துக்கள் நிகழ்ந் தமையை முறையே குறளும், குறுந்தொகையும் மொழிகின்றன. கூத்தாட்டு அவைக்களம் எனத்தம் காலத்தில் கூத்துப்பார்க்கக் கூடியிருப்போர் பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

பண்டைய நாடகங்கள் வேத்தியல், பொதுவியல் எனும் இரு பிரிவினவாக இருந்தன, வேத்தியல் உயர்நிலையினர்க்கும் பொதுவியல் கீழ்நிலை மக்கட்கும் உரியனவாக இருந்தன. இவ்விருவகைக் கூத்தினில் வேத்தியல் என்பது இன்று நாடகமாகவும், பொதுவியல் தெருக்கூத்தாக வும் மாறிவிட்டன என்பர்.) மற்றும் முன்னர் ஆடல், கதை நடிப்பு ஆகிய இரண்டுமே கூத்து அல்லது நாடகம் எனக் குறிக்கப்பெற்றன. பின்பு அது நாட்டியம், நாடகம் என இரண்டாகப் பிரிந்து விட்டது. சங்க காலத்தில் கூத்தரும், விறலியரும் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தமையை அக்காலப் பாடல்கள் கூறுகின்றன. எனவே நாடகமரபு தமிழ்க்குப் புதிதன்று.

சமண புத்த சமயங்கள் இருண்டகாலத்தில் கலைகளுக்கு எதிராகச் செயல்பட்டன. காமத்தை மிகுவிப்பன கலைகள் என்ற கருத்தைப் பரப்பியதோடு, அவற்றை விரட்டவும் செய்தன. ஆகையால், இருண்ட காலத்தில் நாடகத்தமிழ் ஒளியிழந்தது. முன்னிருந்த நூல்களும் பேணாது அழியவிடப்பட்டன. பின்பு

பல்லவர்காலத்தில் இசைக்கலைக்கு ஆழ்வார் களும் நாயன்மார்களும் புத்துயிர் ஊட்டினர். எனினும் நாடகத்திற்குப் போதிய ஊக்கம் தரப்படவில்லை. இக்காலத்தில் கூட மகேந்திர வர்ம பல்லவன் மத்தவிலாசப் பிரகசனம்" என்ற வடமொழி நாடகநூலை இயற்றினான் எனவே அக்கலையும் ஓரளவு அப்போது புரக்கப் பட்டிருக்க வேண்டும் நடன மங்கையர், நாடகத் திரைகள், நாடக அரங்கேற்றம் பற்றிய குறிப்புக்கள் சீவக சிந்தாமணியில் உள. இன்னிசைக் கூத்து. வரலாற்றுக் கூத்து என இருபிரிவுகள் அக்காலத்தில் இருந்தன. (பழனி அரங்கசாமி.ப. 14)

சோழர்காலத்தில் இராசராச சோழனின் வெற்றியைச் சிறப்பிக் கும் ராஜராஜேஸ்வர விஜயம்" என்னும் நாடகம் இராசராசன் காலத் தில் நிகழ்த்தப் பெற்றது.(986-1017), பந்தனை நல்லூர்க் கோயிற் கல்வெட்டு, அந்நாடகம் நடந்தது பற்றியும், "ராசராச நாடகப்பிரியன்" என்று நடித்த வர்க்கு வழங்கப்பட்ட பட்டம் குறித்தும் மொழியும். குலோத்துங்க சோழன் நாடகம் பற்றியும் கல்வெட்டில் செய்தி உண்டு 1118இல் கமலாலயப்பட்டர் பூம்புலியூர் நாடகம் நடித்து இறையிலி நிலம் பெற்றமையைத் தென்னார்க்காட்டுக் கல்வெட்டுக் கூறும்.

14ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இசுலாமியர் படையெடுப்பால் மீண்டும் கலைகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டது. கோயில்கள் தகர்க்கப் பட்டமையே அதற்குக் காரணம் 17ஆம் நூற்றாண்டின் இறுதி யிலிருந்தே மீண்டும் தமிழ் நாடகங்கள் புத்துயிர் பெறத் தொடங்கின. குமரகுருபரர் இயற்றிய மீனாட்சியம்மை குறம், திரிகூடராசப்பகவிராயரின் குற்றாலக் குறவஞ்சி, திருவாரூர்ப் பள்ளு, முக்கூடல் பள்ளு போன்ற நாடகங்கள் அப்போது தோன்றியவை. 17ஆம் நூற்றாண் டின் நாடகங்கள் பலவற்றில் முறையான கதையோ வளமோ பெரும் பாலும் இல்லை எளலாம். இவற்றைச் சார்பு நாடகங்கள் என்பர். இவற்றுள் பள்ளு 53' குறவஞ்சி 65: நொண்டி நாடகங்கள் 15. 18ஆம் நூற்றாண்டிலும், 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தமிழில் இசை நாடக்கள் பல தோன்றின. அவற்றுள் இராம நாடகக் கீர்த்தனை, (1717), தந்தனார் சரித்திரக் கீர்த்தனை ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

1870இன் பின் தமிழ் நாடகத்தில் மாற்றம் ஏற்பட்டது. இதற்குச் சரபோஜி மன்னனும் மராட்டியத்திலிருந்து வந்த மராத்தி, பார்சி நாடகக் கம்பெனிகளும் காரணம். தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னன் சரபோஜி, ராஜேசுவர நாடகத்தை நிறுத்திவிட்டுத் தன் மெய்க்கீர்த்தியை விளக்கும் சரபோஜி நாடகத்தை நடிக்கச் செய்தான் என்பார், மயிலை சீனி.வேங்கடசாமி. பாட்டாகவும் இசையாகவும் உரைநடையின்றி இருந்து வந்த நாடகங்கள், பெருமளவு உரைநடை, சிறிதளவு பாடல் எனும் நிலைக்கு மாறின. குறவஞ்சி, பள்ளு, புராண கீர்த்தனை, இதிகாச நாடகம் என்ற நிலையும் மாறத் தொடங்கியது. இக்கால நாடகங்களில் புதுமை புரிந்தோர், காசி விசுவநாத முதலியார்,

திண்டி வனம் ராமசாமி ராஜு, பெங்க;ர் அப்பாவுப் பிள்ளை, தஞ்சை நவாப் கோவிந்தசாமி ராவ். கும்பகோணம் நடேச தீட்சிதர் போன்றோர்.

**காசி விசுவநாதமுதலியார்**

இவர் சென்னை சைதாப்பேட்டையைச் சேர்ந்தவர். இவர் இயற்றிய "டம்பாச்சாரி நாடகம்" தான் முதன்முதலில் மேடையில் நடிக்கப்பெற்ற சமூகநாடகம் (1867). அவர் தம் பிற நாடகங்கள் தாசில்தார் நாடகம் (1868) பிரஹ்ம சமாஜ நாடகம் (1871)

**திண்டிவனம் ராமசாமி ராஜா**

இவர் படைத்த பிரதாப சந்திர விலாசம் (1882) முழுவதும் உரை நடையிலமைந்த முதல்நாடகம்.

**அப்பாவுப்பிள்ளை**

இவர் படைத்தவை : சித்திராங்கிவிலாசம் (1886), நன்னெறி சத்திய பாஷா அரிச்சந்திர விலாசம் (1890), நூதன புகழேந்தி சபா 193),சோழ விலாசம், இந்திர சபா, பத்மினி சபா முதலியன இவர் நாடகங்களிலேயே முதன்முதலில் இந்துஸ்தானி மெட்டுக்கள் தமிழ்ப் பாடல்களில் ஊடுருவின.

**நவாப் கோவிந்தசாமி ராவ்**

தஞ்சாவூர் மனமோகன நாடகக் கம்பெனியின் உரிமையாளர், இவர் இன்று நாம் காணும் மேடை அமைப்புக்குக் கட்டுப்படும் நாடகத்தை முதலில் அமைத்தவர் இவரே. ஆதலால், தமிழ் நாடகத்தின் தாத்தா என அழைக்கப்படுகிறார். இவர் படைத்தவை அபிமன்யு வதம், கர்ணவதம், சிறுத்தொண்டர் புராணம், சீதா கல்யாணம், சித்ராங்கி விலாசம் முதலியன, ஒட்ட நாடகம், கார்காத்த நாடகம் ஆகிய சாதிபற்றியனவும் சித்ராங்கதவிலாசம், மதுரைவீரன் விலாசம் போன்ற நாடோடித் தன்மை யனவும், சோழவிலாசம், தேசிங்கு ராச விலாசம் போன்ற வரலாற்று நாடகங்களும் கண்டி நாடகம் ரங்கூன் சண்டை போன்றவும் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய நாடகங்கள்.

**தவத்திரு சங்கரதாஸ் நாடகங்கள்**

இவர் தூத்துக்குடியைச் சேர்ந்தவர். நடிகராய் இருந்துபிள் நாடக ஆசிரியரானார். சினிமாவின் கதை எழுதிய அறந்தை நாராயணன், "முறைப்படுத்தப்பட்ட தமிழ்நாடகவரலாறு சங்கரதாசு சுவாமிகளுடன் தொடங்குகிறது" என்பார். இருபதாம் நூற்றாண்டில் நாடகச்சுவை நசிவடையாமல் காத்தவர் இவர் படைத்தவை: அபிமன்யு சுந்தரி, அல்லி அர்ஜீனா, இலங்காதகனம், கோவலன், நல்லதங்காள், பிரகலாதன், சதி அநுசூயா, சத்தியவான் சாவித்திரி, சதிசுலோசனா முதலிய 40 நாடகங்கள். இவர்

மனிதனைப் பாடுவ தில்லை எனும் கொள்கையினர். இவர்தம் புலமைகருதி யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கத்தார் வலம்புரிச் சங்கம் ஒன்றைப் பரிசாக வழங்கினர்.

**பேராசிரியர் சுந்தரம் பிள்ளை**

இவர் திருவனந்தபுரம் பல்கலைக்கழகத் தத்துவப் பேராசிரியர். ஆங்கிலத்தில் லிட்டன்பிரபு இயற்றிய ரகசிய வழி எனும் கதைப் பாட லைத் தழுவி, “மனோன்மணியம்“ எனும் தழுவல் நாடகத்தைப் படைத் தார் (1891). படிக்கும் நாடகம் தமிழில் இல்லை என்ற குறை இவரால் போக்கப்பட்டது. பெரிதும் ஆசிரியப்பாவால் அமைந்தது, மனோன்மணியம். மேலை நாடகப் போக்கில் அமைந்த இந்நாடகத்திற்கு நிகராக இதுவரை இன்னொரு நாடகம் தோன்றவில்லை. இவரைச் சிறப்பிக்கும் பொருட்டு நெல்லைப் பல்கலைக்கழகத்திற்கு இவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**பரிதிமாற்கலைஞர்**

நாடகம் படைத்தல், நடித்தல், நாடக இலக்கணம் இயற்றல் ஆகிய முக்கோணங்களில் நாடகத்தொண்டு ஆற்றினார். கிறித்துவக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராய்ப் பணி ஆற்றியவர். இவர் இயற்றிய நாடக இலக்கண நூல் “நாடகஇயல்“ (1897). படைத்தவை: ரூபாவதி, கலாவதி மான விஜயம், சூர்ப்பனகை. என்ற வடமொழி நாடக நூலைத் தமிழில் தந்தார். “நாடகவியல்“ என்ற நாடக இலக்கணத்தைப் புதிதாகப் படைத்தார். ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் வல்லவர் இவர். சூரிய நாராயண சாஸ்திரி என்ற தம் பெயர் வடமொழியில் இருப்பது பொறாது, அதனை மொழிபெயர்த்துப் பரிதிமாற்கலைஞன் என வைத்துக் கொண்டார். இதனால் இவர்தம் தனித் தமிழ்ப் பற்று விளங்கும். இவர் மாணவர் பலராம ஐயர், “தசரதன் தவறு“ எனும் நாடகம் புனைந்தார்.

**பம்மல் சம்பந்த முதலியார்**

(சென்லை சென்னையைச் சேர்ந்தவர். இவருக்கு ஆங்கில அரசு ராவ்பகதூர் பட்டமும், இந்திய அரசு பத்மபூஷன் விருதும் வழங்கின. சுகுண விலாச சபை எனும் அமைச்சூர் நாடக மன்றத்தை 1891இல் நிறுவினார். இவர் தமிழ் நாடகத்தின் தந்தை என அழைக்கப்படுவார். இவரைத் தமிழ்ச் சேக்சுப்பியர் என்றும் அழைப்பர். முதலில் காளிதாசர், சேக்சுபியர் போன் றோரின் நாடகங்களைத் தழுவி நாடகம் இயற்றினார். பின் சதி சுலோசனா, யயாதி போன்ற புராண நாடகங்களையும், புத்த அவதார வரலாறு, சபாபதி எள்ளல், குறமகள், விஜயரங்கம் போன்ற நாடகங்களையும் எழுதினார். இவர் எழுதிய நாடகங்கள் 93. கள்வர் தலைவன் என்ற இவரது நாடகமே தமிழின் முதல் துன்பியல் நாடகம் இவர்தம் நாடகங்கள் இன்பியல், துன்பியல், கேளிக்கை, அங்கதம், நையாண்டி, புராணிகம், வரலாறு, மொழி பெயர்ப்பு, தழுவல் எனப் பலதரப்பட்டவை.

**நாடக அரசி பாலாமணி அம்மையார்**

நாடகப் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்தவர். முதன்முதலில் கும்பகோணத்தில் ஏறத்தாழ எழுபது பெண்களைக் கொண்டு நாடகக் கம்பெனி நடத்தினார். பெட்ரோமாக்ஸ் இவர் நாடகங்களில்தான் அறிமுகமானது மனோகரா, தாரரச சாங்கம் போன்ற நாடகங்கள் இவர் கம்பெனியால் நடத்தப்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் மிகச் செல்வாக்கோடு இவர் நாடகக் கம்பெனி விளங்கியது.

**நவாப் ராஜமாணிக்கம்**

ஊர் கந்தர்வகோட்டை. 1933இல் மதுரை தேவி பால விநோத சங்கீத சபை தோற்றுவித்தார்.60க்கும் மேற்பட்ட நாடகங்களை நடத்தினார். நாடகக் கேசரி, நாடகக் கலாநிதி, நாடகக் கலையரசு போன்ற பட்டங் களைப் பெற்றுள்ளார். படைத்தவை' சம்பூர்ண ராமாயணம், கிருஷ்ணலீலா. ஞான சௌந்தரி, பிரேம குமாரி, பக்தப் பிரகலாதா முதலிய 66 நாடகங்கள்.

**நேஷனல் தியேட்டர்ஸ் (ஆர்.எஸ்.மனோகர்)**

முதலில் இன்ப உலகம், உலகம் சிரிக்கிறது என்ற சமூக நாடகங்களை நடத்தினர். சாணக்கிய சபதம், வேங்கைமார்பன், காடக முத்தரையன் மாலிக்காபூர், சுக்ராச்சாரியார் போன்றவை குறிப்பிடத்தக்க நாடகங்கள்.

**கன்னையா நாயுடு:**

தசாவதாரம், வள்ளி திருமணம், ஆண்டாள் போன்ற இவர் நாடகங்கள் மிகவும் செல்வாக்குப் பெற்றவை.

**எம்.ஆர்.ராதா**

பெரியார் இயக்கத்தினர். சீர்த்திருத்த நாடகங்களையும் கொள்கை பரப்பு நாடகங்களையும் நடத்தினார். தம் நாடக மன்றத்தின் சார்பாக ரத்தக் கண்ணீர், தூக்குமேடை, விமலா அல்லது விதவையின் கண்ணீர் ஆகிய கலைஞரின் படைப்புக்கள் இவரால் செல்வாக்குப் பெற்றன. பேப்பர் நியூஸ், பம்பாய் மெயில், லட்சுமி காந்தன் போன்ற நாடகங்களை நடத்தினார். நடிகவேள் என்ற பட்டம் பெற்றார். விசுவநாத தாஸ், எஸ். ஜி. கிட்டப்பா. மதுரை பாஸ்கரதாஸ் போன்றோர் தேசிய விடுதலை நாடகங்களில் நடித்தனர்.

சிவாஜி கே.பாலச்சந்தர், பி.எஸ். ராமையா, தூரள், அண்ணா, கலைஞர், சோ.எஸ்.டி. சுந்தரம், டி.கே.எஸ் சகோதரர்கள் அரு. ராமநாதன், நாரண துரைக்

கண்ணர், தா.ஏ. ஞானமூர்த்தி போன்ற பலரும் இத்துறைக்குப் பெருமை சேர்த்தவர் ஆவர்.

நாடகத்துறை வளர்ச்சிக்குத் தனிப்பட்டவர்கள் செய்த தொண் டின் காரணமாகப் பன்முகமாக நாடகத்துறை வளர்ந்தது. அவை புராண நாட கங்கள், சமூகச் சீர்த்திருத்த நாடகங்கள், இலக்கிய நாடகங்கள் வரலாற்று நாடகங்கள் அரசியல் நாடகங்கள் அங்கத நாடகங்கள் முதலியன.

**புராண பக்தி நாடகங்கள்**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இம்மாதிரியான நாடகங்களே நடத்தப்பெற்றன. பிரகலாதன், துருவன், நந்தனார், சிறுத் தொண்டர்,ராமதாஸ், ஐயப்பன், தசாவதாரம் போன்றவை பக்திக்காகவே பார்க்கப்பட்டன.

**சமூக - சீர்த்திருத்த நாடகங்கள்**

பம்மல் சம்பந்த முதலியாரின் பொன் விலங்கு (1910) தமிழின் முதல் சமூக நாடகம், தா.ஏ. ஞானமூர்த்தியின் பொன்மலர், அரு. ராமநாதனின் வானவில், கு.சா. கிருஷ்ணமூர்த்தியின் அந்தமான் கைதி, ப.நீலகண்டனின் முள்ளில் ரோஜா, திருவாரூர் தங்கராஜின் ரத்தக்கண்ணீர், அண்ணாவின் வேலைக்காரி, கலைஞரின் நச்சுக் கோப்பை, ஏ.என். பெருமாளின் பால்மதி, தா.வே. வீராசாமியின் பொன்குஞ்சு, அழகப்பனின் முத்துச் சிற்பி, காவிரிநாடனின் அக்கினி சாட்சி முதலியன இவ்வகையைச் சேர்ந்தவை.

**இலக்கிய நாடகங்கள்**

(பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியம், கரந்தைக் கவியரசின் மணிமேகலை, சிலப்பதிகாரம், பாரதிதாசனின் பிசிராந்தையார். சேரதாண்டவம், தூரனின் ஆதிஅத்தி, பழநியின் அனிச்ச அடி, நடராச பிள்ளையின் புகழேந்தி, மறைமலை அடிகளின் அம்பிகா பதி-அமராவதி, நாரண துரைக்கண்ணனின் வழித் துணைவன், கி.ஆ.பெ. விசுவநாதனின் தமிழ்செல்வம், கு. ராஜவேலுவின் அணை கடந்த வெள்ளம், கொண்டல் எஸ். மகாதேவனின் தெள்ளாற்று நந்தி, அ.ச. ஞானசம்பந்தனின் தெள்ளாறு எறிந்த நந்தி முதலியன.மேலும் பரிமாற்கலைஞரின் மான விஜயம், அரங்கசாமியின் கனகை, அம்பாலி, இரா. குமாரவேலனின் பொன்னி முதலியன கவிதை நாடகங்களாய் உள்ளன ஆனந்தம் பிள்ளையின் “இந்திரஜித்“ ஒரு புதுக்கவிதை நாடகம்

**வரலாற்று நாடகங்கள்**

வரலாற்று நாடகங்கள் நடந்தவைகளையும் உணர்ந்தவைகளையும் கூறும் அண்ணாவின் சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம், கலைஞரின் மணிமகுடம்,

அரு.ராமநாதனின், ராஜராஜ சோழன், சக்தி கிருஷ்ண சாமியின் வீர பாண்டிய கட்டபொம்மன், மதுரை திருமாறனின் வேங்கை மார்பன், காடகமுத்தரையன், எஸ்பி. மணியின் முடிந்த கோயில், தாமரைக் கண்ணனின் சாணக்கிய சாம்ராஜ்யம், தமிழ் வாணனின் புலித்தேவன், ப.நெடுமாறனின் தென்பாண்டிவீரன் போன்றவை வரலாற்று நாடகங்கள்.

**அரசியல் நாடகங்கள்**

கோபாலாச்சாரின் ஸ்ரீ ஆர்யசபா“ என்பது முதல் அரசியல் நாடகம் (1894). சாமி நாத சர்மாவின் பாணபுரத்துவீரன். எஸ்.டி. சுந்தரத்தின் வீரசுதந்திரம் முதலியவை இவ்வகையின

**அங்கத நாடகங்கள்**

சம்பந்த முதலியாரின் சபாபதி நாடகங்களும், சோ. டாக்டர் கோரா, நாடோடி. கோமதி, சுவாமிநாதன் போன்றோரின் நாடகங்களும் இவ்வகையின. இன்னும் துப்பறிதல், நகைச்சுவை, மனவியல் போன்ற பலதுறை நாடகங்களும் தமிழில் தோன்றியுள்ளன. மொழிபெயர்ப்பு நாடகங்களுக்கும் குறைவில்லை.

**ஓரங்க நாடகங்கள்**

நாட்டிய நாடகங்கள் போன்றவையும் தனித் தனியே கல்விக் கூடங்களிலும் பிற அரங்குகளிலும் நடைபெற்று வரு கின்றன. முதன்முதலில் தமிழில் ஓரங்க நாடகம் எழுதியோர், சாமிநாத சர்மா, சீனிவாசராகவன், மு.வரதராசனார் ஆகியோர். இக்காலத்தில் சுகி சுப்பிரமணியம், பூர்ணம் விசுவநாதன், குப. ராசகோபாலன், பிச்சமூர்த்தி ஆகியோர் ஓரங்க நாடகம் எழுதுவோர் ஆவர். அண்மைக்காலத்தில் நிஜ நாடகங்கள் என்ற புதிய இயக்கம் தோன்றியுள்ளது. 1930ஆம் ஆண்டு திரைப்படம் அறிமுகம் ஆவதற்கு முன்னும் பின்னும் இருந்த நாடகக்குழுக்களும், 1950 ஆம் ஆண்டிற்குப் பின் தோன்றிய பயில்முறை நாடகக் குழுக்களும், இன்றும் தொடர்ந்து நிலவும் சபாக்களும் நாடகச் செல்வாக்கினை மிகச் செய்தன.

**நாடகக்குழுக்கள்**

சமரச சன்மார்க்க நாடக சபை - சங்கரதாஸ் சுவாமிகள், சுகுண விலாச சபை பம்மல் சம்பந்த முதலியார். பாலமனோகர.சபா - சதாவதாளம் கிருஷ்ணசாமிப் பாவலர், ஸ்ரீகிருஷ்ணவிநோதசபா - சி. கன்னையா, நவாப்ராச மாணிக்கம் நாடகக்குழு, டி.கே.எஸ் சகோதரர்களின் நாடகக்குழு என் எஸ்கே நாடகக்குழு, பாலாமணி அம்மையார் நாடகக்குழு.பயில்முறை நாடகக்குழுக்கள்

யுனைடெட் அமெச்சூர் நாடகக்குழு - (ஒய்.ஜி. பார்த்தசாரதி),ராகினி க்ரியேஷன்ஸ் - (கே. பாலசந்தர்), கலாநிலையம் - (பூர்ணம் விசுவநாதன்). சாந்திநிகேதன் - (டி.எஸ். சேசாத்திரி), ஐ.என். எதியேட் டர்ஸ் - (வி.எஸ். சுவாமிநாதன்), ஸ்டேஜ் ∴பிரண்ட்ஸ் - (கோமல் சுவாமிநாதன்), விஸ்வ சாந்தி - (விசு), கோபிதியோட்டர் - (வி. கோபால கிருஷ்ணன்), விவேகா ∴பைன்ஆர்ட்ஸ் - (என். எஸ். நடரான்), என்எனஸ்ஸென் தியோட்டர்ஸ் - (காத்தாடி இராமமூர்த்தி), நாடகப் பிரியா - (எஸ்.வி. சேகர்), விஷ்ணுப் பிரியா - (கோவை இராசேந்திரன்), ஸ்டேஜ் இமேஜ் -(லியோபிரபு)

**சபாக்கள்**:

மன்றம், அகாடெமி, சபா, கிளப் போன்ற பலபெயர்களில் சபாக்கள் தோன்றின. தொடக்கத்தில் இசை, மற்றும் நடன நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தன. நாடகங்களின் மீது சபாக்களின் பார்வை பட்டபின் தான். நூற்றுக்கணக்கான சபாக்களும், மிகுந்த எண்ணிக்கையில் நாடகங்களும் உருவாயின.

மைலாப்பூர் ∴பைன்ஆர்ட்ஸ் கிளப், கார்த்திக் ∴பைன் ஆர்ட்ஸ், பார்த்தசாரதி சுவாமிசபா, அண்ணா ஆர்ட்ஸ், பிரபாத் கல்சுரல் அகாடெமி, இளங்கோ கலைமன்றம், கந்தன் ஆர்ட்ஸ் அகாடெமி, கலாரஞ்சனி கோல்டன் ஆர்ட்ஸ் அகாடெமி, சிந்தாதிரிப் பேட்டை ∴பைன் ஆர்ட்ஸ், செந்தில் ∴பைன் ஆர்ட்ஸ், மாதவிகலைமன்றம். பூத் பாரடைஸ்,ரசிக ரஞ்சனி சபா, கலாப்பிரியா, அன்னை கலை மன்றம், செனாய் நகர் ஆர்ட்ஸ் அகாடெமி போன்ற சபாக்கள் குறிப்பிடத்தக்கவை.

திரைப்படங்களேயன்றி வார மாத இதழ் நாடகங்களும் மக்கள் தொடர்பு ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றால் வழங்கப்படும் நாடகங்களும் பல்கிப் பெருகுவதால்,இன்றைய சூழல் நாடக வளர்ச்சிக்குப் பெரும் வாய்ப்பு நல்குவதாக உள்ளது.

**(உ) தமிழ்ப் புதினம் - தோற்றமும் வளர்ச்சியும்**

உரைநடையில் எழுதப்பட்ட நெடுங்கதையை ஆங்கிலேயர் நாவல் (Novel) என்பர். நாவெல்லஸ் (Novellus) என்ற இலத்தீன் சொல்லின் சிதைந்த உருவமே நாவல் என்பது. தமிழரும் முதலில் இதனை நாவல் என்றே அழைத்தனர். பின், வடமொழிப் பெயரால் நவீனம் என்றனர். இப்போது “புதினம்“ என்பர் ஸ அச்சுப் பொறிகளின் பெருக்கத்தால் ஏற்பட்ட உரைநடையின் பெருக்கம், கவிதைக் கதைகளை உருமாற்றி உரைநடை வடிவம் கொள்ளவைத்தது. இக் கதைவடிவத்தோடு செவிவழியாகக் கூறிவந்த பேச்சுமொழியாலான மக்கள் கதைகளும் ஒன்றியமையால் ஏற்பட்ட புதிய வடிவமே புதினம் என்பது. சிறுகதையைத் தனிப்பாடல் எனின், காப்பியத்தைப் புதினம் எனல் வேண்டும். பாட்டு, உரைநடை என்ற வடிவ வேறுபாடுகளுக்கப்பால், காப்பியமும்

புதினமும், கதைக்கரு, கட்டமைப்பு, மாந்தர் படைப்பு, வருணனை ஆகியவற்றால் ஒன்றி நிற்கும். பலருடைய வாழ்வில் நிகழ்வனவற்றை ஒருவருடைய வாழ்க்கையில் நிகழ்வனவாகப் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தும் ஒருமுகப் படுத்தியும் புதினக்கதையினை உருவக்குவர்: தெரிந்த வாழ்க்கைப் பகுதி களையும் இடங்களையும் பற்றியே ஒருவர் தம் புதினத்தில் படைத்துக் காட்ட வேண்டும் என்பார். மு.வ. அவ்வாறு படைக்கப்படுவதால், நாவல் என்பது சமகால வரலாறாகிறது. நாம் வாழும் காலச் சமூகச் சூழலின் உண்மையான முழுமையான வெளிப்பாடே புதினம் என்பார். ஜியார்ஜ் மூர் வாழ்க்கை நிகழ்ச்சிகளே புதினமாக உருக்கொள்வதால், சில நேரங் களில் ஒருவருடைய வாழ்க்கை வரலாற்று நூல் அவருடைய புதினப் படைப்பை விடச் சிறந்ததாகி விடல் உண்டு. அவ்வகையில் நாமக்கல் கவிஞரின் மலைக்கள்ளன் என்ற புதினத்தை விட அவர்தம் வாழ்க்கை வரலாற்று நூலான என் சரித்திரம் சிறப்பாக உருப்பெற்றுள்ளது.

”புதினங்கள் இனிப்புகள், தரமான இலக்கியப் பசி கொண்ட எல்லோரும் அவற்றை விரும்புகின்றனர்” என்பார், வில்லியம் தாக்கரே ”சிறுகதையே புதினத்தின் முதல் வளர்ச்சி நிலை” என்றும், அதிலிருந்தே புதினம் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும் ஹட்சன் கருதுகிறார்.)

”மகிழ்வூட்டலை முதற்கருவாகவும் அ∴துடன் நன்னெறியூட்டலை முதற்கருத்தாகவும் கொண்டதே சிறந்த நாவல்” என்பது அ. மாதவையா வின் கூற்று.சிறுகதையை நீட்டி எழுதினால் புதினமாகிவிடும் என்பது தவறு கதைக்கட்டமைப்பிலும், நடையிலும் இரண்டும் வேறுபட்டவை. இராஜாஜி. சிறுகதை தென்னை மரமென்றால் நாவல் ஆலமரம் என்றும், சிறுகதை சாளரம் என்றால், நாவல் முழு மாளிகை என்றும் குறிப்பிடுவார். சிறுகதை ஒன்றிலிருந்து தொடங்கி ஒருமுகமாகவே முடிவது புதினம் பன்முகமாகத் தொடங்கி ஒருமுகமாகமுடிவது, சுவையான நிகழ்ச்சி, கதைமாந்தர்கள், வாழ்க்கை நுகர்வுகள், சமுதாயப் போக்குகள் போன்ற பன்முகங்களைக் கொண்டமையும் புதினம்.)

புதினத்தின் தாயகம் இத்தாலி இத்தாலியைச் சேர்ந்த பொக் காசியோ (1313-1375) எழுதிய ”டெகாமொன்” என்ற தன்கதையே புதினத்தின் முன்னோடி டான்குவிக்சாட் (1547-1616) படைத்த செர்வான்டிஸ் என்ற புதினம் உலகப்புகழ் பெற்றது, சிலர், சப்பான் மொழியில் ரேசாக்கி சீமாட்டி படைத்த கெஞ்சிகதையை உலகின் முதற் புதினம் என்பர். )1740இல் ஆங்கிலத்தில் முதற்புதினம் பிறந்தது. 1740இல் ரிச்சர்ட்சன் எழுதிய “பாமெல்லா“ என்பதே ஆங்கிலத்தின் முதல் புதினம், எனவே ரிச்சர்ட்சன் ஆங்கில நாவலின் தந்தை என அழைக்கப்படுகிறார். முதல் இந்திய நாவல் வங்காள மொழியில் 1865இல் பங்கிம் சந்திர சட்டர்ஜி எழுதிய “துர்கேச நந்தினி“. இரண்டாவது இந்திய

நாவல், 1879இல் தமிழில் முன்சீப் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம். இது தமிழின் முதற் புதினம். இரண்டாவது தமிழ்ப் புதினம் இலங்கையைச் சேர்ந்த சித்தி வெவ்வை மறைக்காயர் முகம்மது காசிம் படைத்த அசன் பேயுடைய கதை, தமிழ்நாட்டில் தோன்றிய இரண்டாவது தமிழ்ப்புதினம் 1896இல் வெளிவந்த பி.ஆர். ராஜம் ஐயரின் கமலாம்பாள் சரித்திரம். இந்நாவலே, நாவலமைப்பை முழுமையாகப் பெற்ற முதல் நாவல் என்பர். சிலர் 1894இல் பண்டித ச.ம. நடேச்சாஸ்திரி எழுதிய "தனவான்" என்ற புதினமே இரண்டாவது புதினம் என்பர். முன்சீப் வேதநாயகம் பிள்ளையின் இரண்டாவது புதினமான சுகுணசுந்தரி சரித்திரம் 1887இல் வெளிவந்தது.

மூன்றுகால கட்டங்கள் தமிழ்மொழியின் புதின வரலாற்றை மூன்று காலகட்டங்களாகப் பகுப்பர்.

**முதற்காலகட்டம் (1879 - 1910)**

வேதநாயகம் பிள்ளை, பண்டித எஸ்.எம். நடேச்சாஸ்திரி, பி.ஆர். ராஜமையர், சு.வை குருசாமி சர்மா, அ. மாதவையா.

**இரண்டாம் காலக்கட்டம் (1910 - 1940)**

வடுவூர் கே. துரைசமி ஐயங்கார். ஆரணிகுப்புசாமி முதலியார். ஜே.ஆர். ரங்கராஜ் எஸ்.ஜி ராமானுஜலுநாயுடு, வை.மு. கோதை நாயகி முதலியோர் டாக்டர் ஆஷர், எழில் முதல்வன் போன்றோர் இக்கால கட்டத்தை நாவலின் "இருண்டகாலம்" என்பர், சிட்டி, சிவபாத சுந்தரம் போன்றோர் இதனை மறுத்து, "மாமக்கதைகள் பெருகியமை கொண்டு இம்முடிவு கொள்ளத் தேவையில்லை" என்பர்.

**மூன்றாம் காலகட்டம் (1940 முதல் இதுவரை)**

இக்காலகட்டம் கல்கியிலிருந்து தொடங்குகிறது. கல்கி, மு.வ. அகிலன், நா. பார்த்தசாரதி, ல'மி, ஜெயகாந்தன், க.நா. சுப்பிரமணியம், மாயாவி. எம்.வி. வெங்கட்ராம், குராஜவேலு, ஆர்.வி. அகிலன், கலைஞர் கருணாநிதி. கோ.வி. மணிசேகரன், ரா.கி. ரங்கராஜன், விக்கிரமன், இந்திராபார்த்தசாரதி, சுந்தர ராமசாமி. மகரிஷி. மறைமலை யடிகள், ஜெயகாந்தன், கு. சின்னப்பபாரதி, சுஜாதா, ராஜேஸ்குமார், நீல. பத்மநாபன், பாலகுமாரன். குமுதினி, ல'மி அநுத்தமா, ராஜம் கிருஷ்ணன், விமலாரமணி, வாஸந்தி, சிவசங்கரி, இந்துமதி, அனுராதா ரமணன் முதலியோர்.

**தொடக்க காலப் புதின ஆசிரியர்கள்**

**வேதநாயகம் பிள்ளை (1826-1889)**

தமிழ்நாவலின் தந்தை என அழைக்கப்படுவார். இவர் புதின முன்னோடியாகவும், உரைநடையின் தொடக்கமுயற்சியாளராகவும் கவிஞராகவும் விளங்கினார்.தமிழின் முதற் புதினமான பிரதாப முதலியார் சரித்திரம் (1879), சுகுண சுந்தரிகதை ஆகிய இருபுதினங்களைப் படைத்தவர் இவர். பிரதாபமுதலியார் சரித்திரம் நீதிக்கருத்துக்களும் நகைக் சுவைப் பகுதிகளும் நிறைந்தது. தானேகதை சொல்லும் பாணியில் அமைந்தது. இதில் இடம்பெறும் பிரதாபமுதலியாரும், ஞானாம்பாளும் மறக்க முடியாத கதைமாந்தர்கள், “சுகுணசுந்தரி“ என்ற புதினமும் கற்பனை வளம்மிக்கது, அமைப்புநலம் சான்றது.

**பண்டித எஸ்.எம். நடேசசாஸ்திரி (1859-1906)**

திருச்சி மாவட்டத்தைச் சார்ந்தவர், பெற்றோர் மகாலிங்க அய் யர், அகிலாண்டேசுவரி. ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மூன்று மொழி களிலும் நூல்கள் இயற்றியுள்ளார். 1894இல் தானவன், 1900இல் தீனதயாளு, 1903இல் மதிகெட்ட மனைவி ஆகிய புதினங்களை எழுதினார், இவை மட்டுமின்றித் திக்கற்ற இருகுழந்தைகள், மாமி கொலுவிருக்கை, தலையணை மந்திரோபதேசம் போன்றவற்றையும் படைத்துள்ளார். ”நமது தீனதயாளு தான் தமிழில் முதல்நாவல்“ என்று கூறிப் பெருமை யுற்றார். இவர் இவ்வாறு கூறக்காரணம் இவருடைய புதினத்திற்குமுன் தோன்றியவை “சரிதம்“, சரித்திரம் எனமுடியும் தலைப்புக்கள் கொண் டவை. இவர் அத்தகைய சொற்களைப் பயன்படுத்தாமையால், தம்முடைய வற்றையே புதினம் எனக் கருதினாராதல் வேண்டும்.

இவர் ஒரு மேற்கோட்பாட்டிற்குப் பின்தான் அத்தியாயம் தொடங்கு வார். வடசொற்களை மிகுதியாகப் பயன்படுத்தி உள்ளார். இவரை மர்மக் கதை முன்னோடி எனலாம், ரெயினால்டு, தாக்கரே ஆகியோர் புதினங் களின் தாக்கம் இவர் புதினங்களில் காணப்படும்.

**பி.ஆர்.ராஜம் ஐயர் (1872-1898)**

இவர், ”பிரபுத்த பாரத” என்னும் ஆங்கில வேதாந்த இதழின் ஆசிரியராய் இருந்தார். இவர் எழுதிய கமலாம்பாள் சரித்திரம் தமிழின் இரண்டாவது புதினம் என்பர். இது 1896இல் வெளிவந்தது, புதினக் கட்டமைப்பை முழுமையாகப் பெற்றது. அப்புதினத்தில் இடம் பெறும் கமலாம்பாளை மறந்தாலும், தமிழாசிரியரையும். வம்பு வளர்க்கும் குப்பம்மாளையும் மறத்தல் இயலாது. இளைஞர் காதல், இல்லற மோதல்,

கிராமியவாழ்வு போன்றவற்றை அடிப்படை நிகழ்வுகளாக இப்புதினம் கொண்டுள்ளது. இது விவேக சிந்தாமணி யில் தொடர்கதையாகவந்தது. இந்தப் புதினத்தின் முழுப்பெயர் ”ஆபத்துக் கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்.” தொடர்கதையாக வந்த முதற் புதினம் இது.

**சு.வை. குருசாமி சர்மா**

ஊர் திருச்சி. இவரது புதினம் பிரேமகலாவத்யம், கால வரிசைப் படி தமிழின் மூன்றாவது புதினம் இது. பிராமண குடும்பச்சூழலில் பின்னப் பட்டது இக்கதை. இதற்கும் ராஜம் ஐயரின் கமலாம்பாம்பாள் சரித்திரத் திற்கும் நிறைய ஒற்றுமைகள் உள்ளன. இப்புதினம் நாட்டுப்புற ஆடல் பாடல்களைப்பதிவு செய்வதாக உள்ளது. கற்பனை மிகுந்த கதையாயினும் இலக்கிய வளம் போதுமானதாக இல்லை.

**அ.மாதவையா (1872-1925)**

ஊர் நெல்லைப் பெருங்களம். பெற்றோர் அனந்த நாராயணன். முத்துலட்சுமி, “பஞ்சாமிர்தம்“ என்ற மாத இதழ் நடத்தி வந்தார். “கோண கோபாலன்“ என்றபுனைபெயரில் கவிதை, கதை, கட்டுரை முதலியன எழுதியுள்ளார். இவர் எழுத்துக்கள் ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் உள.

**இயற்றியவை**:

பத்மாவதி சரித்திரம் (1898) விஜயமார்த்தாண்டம் (1903) முத்து மீனாட்சி, பாரிஸ்டர் பஞ்சநாதம் ஆகிய புதினங்கள். ருசிகர குட்டிக்கதைகள் (சிறுகதை) பாலராமாயணம், த‘ண சரித்திரவீரர் முதலியனவும் (கதைகள்) மேலும் மொழிபெயர்ப்பு மற்றும் கவிதை நூல்களும் படைத்தார். இவருடைய எழுத்துக்களில் கம்பரும், திருவள்ளுவரும் ஊடுருவி நிற்பர். தாழ்ந்த வகுப்பினர், பெண்கள் ஆகியோரின் பாதிப்பை எதிர்க்கும் சீர்திருத்த நோக்கம் கொண்டவர், மாதவையா. இவரது பத்மாவதி சரித்திரம் சிறந்த சமூகப்புதினம். பழைய தலைமுறையும் புதிய தலைமுறையும் மோதுதல் பற்றி இப்புதினம் குறிப்பிடுகிறது. இதன்முதற்பாகம் 1898லும், இரண்டாம் பாகம் 1899லும் வெளிவந்தன.இவரது விஜயமார்த்தாண்டம் நாட்டுக் கோட்டைச் செட்டிமார் மறவர் ஆகியோர் பற்றியது. மீனாட்சி, ஒருபுரட்சிப்புதினம். கதைக்கருவிலும் கட்டமைப்பிலும் புரட்சி செய்தவர், மாதவையா இவரைக் கைலாசபதி “தமிழ்நாட்டின் தாக்கரே“ எனப் பாராட்டுவார

**1.தொடக்க காலப் புதினம்**

உட்பட எல்லாக்கால கட்டப் புதினங்களையும் பண்பு நலன் அடிப்படையிலானபுதினம், நிகழ்வு அடிப்படையிலான புதினம் என இருவகையாகப்

பகுப்பர். சிலர், விளக்கமுறைப் புதினம் எனவும், நாடகப் புதினம் எனவும் மேலும் இருவகையாகப் பகுப்பர் எனினும் புதினங்களை உள்ளடக்கம் மற்றும் சார்பு அடிப்படையில் பகுத்தலையே பெரும்பாலோர் வேண்டுவர். அப்பகுப்புக்களாவன: துப்பறியும் புதினங்கள், சமூகப் புதினங்கள், வரலாற்றுப் புதினங்கள், மொழிபெயர்ப்புப் புதினங்கள், தழுவற் புதினங்கள் இவற்றோடு ஆன்மிகம், வட்டாரம், வர்க்கம், பாலுணர்வு, அறிவியல் போன்றவற்றின் அடிப்படையிலான பகுப்புக்களும் சேர்த்துக் கொள்ளப்படும்.

**2.துப்பறியும் புதினங்கள்**

இவ்வகைப் புதினங்களை மர்ம நாவல்கள் என்றும் கூறுவர் புதினவளர்ச்சியின் இரண்டாம் காலகட்டத்தில் (1910 -400 இவ் வகைப் புதினங்கள் - மிகுதியாகத் தோன்றின அக்காலத்தில் பிற துறைப் புதினங்கள் மிகவும் குறைவாகவே வெளிவந்தன.

ஆவலைத் தூண்டலும் எதிப்பார்ப்பினையும் பரபரப்பினையும் தோற்றுவித்தலும் இவ்வகைப் புதினங்களின் போக்காக அமையும். இவ்வகைப் புதினங்கள் பெரும்பாலும் மேனாட்டுப் புதினங்களின் தழுவல்களாகவே உள்ளன

ஏர்ல் ஸ்டேன்லி கார்டனர், இவான் பிளமிங், ஜேம்ஸ், அகத் தாகிறிஸ்டி, ஹட்லிசேஸ் ஆகியோரையே தமிழ்த் துப்பறியும் புதினங்கள் நம்பியுள்ளன. இதன் காரணமாகத் தரமான துப்பறியும் புதினம் தமிழில் தோன்றவில்லை. ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஜே. ஆர். ரங்கராஜூ, கோதைநாயகி அம்மாள் ஆகியோர் தொடக்ககாலத் துப்பறியும் புதினங்களை எழுதியவர்கள், பிற்காலத்தில் சிரஞ்சீவி, தேவன், ரங்கூன், த.ம. பொன்னுசாமிப் பிள்ளை, தமிழ் வாணன், பி.டி. சாமி, மேதாவி, சுஜாதா, ராஜேஸ் குமார், பட்டுக் கோட்டைப் பிரபாகர், தேவிபாலா, சுபா முதலியோர் துப்பறியும் புதினம் எழுதியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

**ஆரணி குப்புசாமி முதலியார் (1867-1925)**

வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். - ஆனந்த போதினி இதழில் தொடர்ந்து புதினங்களை வெளியிட்டார். இவருடைய புதினங்கள் பெரும் பாலும் ஆங்கிலப் புதினங்களைத் தழுவியவை. களமும், சூழலும் கதைமாந்தரும் தமிழ் நாட்டை ஒட்டி அமைந் திருக்கும். இவர் எழுதிய புதினங்கள் ஏறத்தாழ 75. அவற்றுட் சில: இரத்தினபுரி ரகசியம் (9 பாகம்), தபால் கொள்ளைக் காரர், பவளத்தீவு, மஞ்சள் அறையின் மர்மம், மதனாம்பாள், மதன பூஷனம், மதனகாந்தி, தேவசுந்தரி, ஆனந்தசிங் முதலியன. இவரது முதல் புதினம் லீலா.வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார் (1880 -1942)

ஊர் மன்னார்குடி, தந்தை கிருஷ்ண ஐயங்கார் மனோரஞ்சனி என்ற மாத இதழ் நடத்தினார். இவர் படைப்புக்கள் மேனகா, கும்பகோணம் வக்கில், பாலாமணி அல்லது பாக்தாத் திருடன், மதன கல்யாணி, மாயாவிநோதப்பரதேசி,) சௌந்தர கோசிலம், பூரணச் சந்திரோதயம் முதலியன, கிரேஸ் செல்வராஜ், இவருடைய புதினத்தை ஆய்ந்து முனைவர்ப் பட்டம் பெற்றுள்ளார்.

**ஜே.ஆர்.ரங்கராஜீ (1875-1956)**

ஊர் பாளையங்கோட்டை. படைத்த புதினங்கள் இராஜாம்பாள், மோகன சுந்தரம், சந்திரகாந்தா, ஆனந்த கிருஷ்ணன், இராஜேந்திரன், ஜெயரங்கன், வரதராஜம், விஜயராகவன் ஆகிய எட்டு. இவற்றிட சில திரைப்படமாக்கப்பட்டன. இவர் துப்பறியும் கோவிந்தனைத் தம் புதினங்களில் உலவ விட்டு மக்கள் மனத்தில் இடம்பிடித்தார்.

**கோதைநாயகி அம்மாள் (1901-1960)**

ஊர் நெல்லை திருக்கோயூர். முதலில் மனோரஞ்சனி இதழில் தம் புதினங்களை வெளியிட்டார். ஜெகன் மோகினி என்ற இதழைத் தாமே நடத்தினார். படைத்தவை: வைதேகி, பத்மசுந்தரன், விரவசந்தா, மகிழ்ச்சி உதயம், கிழக்கு வெளுத்தது, ரூபாமந்திர், புனிதபவனம், தைரிய லட்சுமி முதலிய 115 புதினங்கள். இவற்றுட்பல சமூகச் சீர்திருத்தப் புதினங்கள்.

**தேவன்**

இயற்பெயர் ஆர். மகாதேவன், தஞ்சைமாவட்டம். படைத் தவை (12). ஜஸ்டிஸ் ஜகந்நாதன், மைதிலி, கல்யாணி, ஸ்ரீமான் சுதர் சனம், துப்பறியும் சாம்பு, கோமதியின் காதலன், லட்சுமி கடா'ம் முதலியவை. இவர் 1000க்கும் மேல் சிறுகதை எழுதியுள்ளார்.

**தமிழ்வாணன் (1922-1977)**

இயற்பெயர் ராமநாதன்' ஊர் தேவகோட்டை பெற்றோர் இலக்கு மணன் செட்டியார், பிட்சம்மை. இவர் கல்கண்டு இதழ் ஆசிரியர். 130 புதினங்கள் படைத்துள்ளார். இவற்றுள் பெரும்பாலானவை துப்பறியும் புதினங்கள், சமூகப் புதினங்கள் 7. சிறுகதைத் தொகுதி 2. இவரது துப்பறியும் புதினங்களை ஆய்ந்து சுநந்தாதேவி முனைவர்ப் பட்டம் பெற்றுள்ளார்.

கரு நாகம், கருகிய கடிதம், மஞ்சள் தலையணை, ஆயிரம் கண்கள், கதவுதிறந்தது, கை தெரிந்தது, காலடி ஓசை, மீனழகி, நடு விரல் முதலிய 76 துப்பறியும் புதினங்கள் படைத்துள்ளார். தாமே துப்பறிவதாக 6 புதினங்கள் எழுதியுள்ளார்.

**சுஜாதா**

இயற்பெயர் ரங்கராஜன், அறிவியலிலும் பொறியியலிலும் வல்லவர். ஜேம்ஸ்ஹாட்லி சேஸ் அவர்களின் நடையும் போக்கும் உடையவை இவர்தம் புதினங்கள் கணேஷ் என்னும் வழக்கறிஞரைத் துப்பறிபவராகப் பலபுதினங்களில் உலாவிடுகிறார், கணேஷின் துணைவர் வசந்த், நகைச் சுவை தரும் இளைய கதைமாந்தர் கொலையுதிர் காலம், அனிதா இளம் மனைவி, காயத்திரி ஆகியன கணேஷ் படைப்போடு வெளி வந்தவை.

கணேஷ் பாத்திரம் இல்லாத புதினங்கள், கரையெல்லாம் சண்பகப்பூ, கனவுத் தொழிற்சாலை, பிரிவோம் சந்திப்போம், வசந்த் வசந்த் மூன்று நிமிடம் அறிவியற் கருத்துக்களை அடியொற்றிய துப்பறியும் புதினங்கள் கற்றவர்க்குக் களிப்பும், அறிவியல் அறிவும் ஊட்டுபவை.

**ராஜேஸ்குமார்**

ஊர் கோவை, முதற்புதினம் நந்தினி 400 வோல்ட். பொதுவாக இவர் புதினங்களில் ஆங்கிலக் கலப்புமிகுதி எதிர்பாராத திருப்புமுனைகள் இடம் பெற்றிருக்கும். இவர் புதினங்களில் பாலுணர்வுக் கூறுகள் மிகுந்திருக்கும். படைத்தவை: ஓடும் வரை ஓடு, கண்ணுக்குள் எத்தனை கள்ளமடி, ஒரு ஜனவரியின் ஞாயிற்றுக்கிழமை, ஏழாவது டெஸ்ட் டியூப், டிசம்பர் இரவுகள், ஓர் அழகான விபரீதம், நீந்தத் தெரியாத மீன்கள் முதலிய 100க்கும் மேற்பட்ட புதினங்கள்.

**3.சமூகப் புதினங்கள்**

அன்றாட மக்கள் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டவை சமூகப்புதினங்கள். சமுதாயச் சிக்கல், பிரச்சாரம், சீர்திருத்தம் என்னும் போக்குகளில் இவ்வகைப் புதினங்கள் இயலும், சமூகக் குறைகளைச் சுட்டிக் களைதலை முதன்மை நோக்கமாகக் கொண்டவை பிரச்சாரம் அல்லது சீர்திருத்தப் புதினங்கள். சமூக நாவல்களில் பெரும்பாலானவை பொழுதுபோக்கு நோக்கினவாகவும் வெற்று நிகழ்ச்சிக்கோவையுடைய வாகவும் உள. தமிழ் முதல் நாவல்கள் பலவும் சமூகப்புதினங்களாகவே உள்ளன. இவ்வகை நாவல்கள் தமிழில் பரந்து விரிந்து காணப்படுகின்றன.)

**4சமூகப் புதின ஆசிரியர்கள்**

நாரணதுரைக்கண்ணன், வ.ரா, விந்தன், வேங்கடரமணி, ரகுநாதன், கல்கி, கொத்தமங்கலம் சுப்பு, ஜெயகாந்தன், கோவி மணிசேகரன், நா.பார்த்தசாரதி, மு.வ. பி.எம்.கண்ணன், அநுத்தமா, இந்துமதி, ராஜம் கிருஷ்ணன், ல'மி, சிவசங்கரி, அனுராதா

ரமணன், கே.எஸ். வேங்கட ரமணி,கு. ராஜவேலு, பு பாதங்கதுரை, நீல. பத்மநாபன் முதலியோர்.

**நாரண துரைக்கண்ணன்**

இவரது முதற் புதினம் நான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன் என்பது. வேலைக்காரி, வேடதாரி, இவ்வுலகைத்திரும்பப் பாரேன். காதலனா காதகனா, தாசி ரமணி, உயிரோவியம்.

**கே.எஸ்.வேங்கடரமணி**

காந்தீயம், விடுதலை உணர்வு இவர்புதினங்களில் மிக்கிருக் கும். இவரைத் தென்னாட்டுத்தாகூர் என்பர். படைத்தபுதினங்கள் தேசபக்தன் சுந்தன், முருகன் ஓர் உழவன். இவற்றுள் தேசபக்தன் சுந்தன் முதல் முழுமைத் தேசிய இயக்கப் புதினம் ஆகும்.

**கல்கி**

இவர் வரலாற்று நாவல்களோடு சமுதாயப் புதினங்களையும் எழுதி யுள்ளார். சாதிக்கொடுமை, விதவையின் வேதனை, பொருந்தா மணத்தின் போக்கு விடுதலைப் போராட்டவேட்கை போன்ற கருத்துக் களின் அடிப்படையில் இவர்தம் சமூகப் புதினங்கள் அமைந்துள்ளன. தியாகபூமி கள்வனின் காதலி, வீணைபவானி, மகுடபதி சோலை மலை இளவரசி, சுதந்திரம், அமரதாரா, அலை ஓசை முதலியன இவர் தம் சமூகச் சீர்திருத்தப் புதினங்கள். தியாகபூமி திரைப்படமாக்கப்பட்டது. அப்படம் ஆங்கிலேய ரால் தடை செய்யப்பட்டுப் பிள் தடை விலக்கப்பட்டது (கல்கிபற்றிப் பிறசெய்திகள் “வரலாற்றுப் புதினம்“ தலைப்பில்)

**அகிலன்**

பிறந்த ஆண்டு 1922 ஊர் புதுக்கோட்டை மாவட்டம் பெங்க;ர். பெற்றோர் வைத்தியலிங்கம்பிள்ளை, அமிர்தம் அம்மாள்

**படைத்தவை**

பெண், நெஞ்சின் அலைகள், எங்கேபோகிறோம் பாவை விளக்கு, புதுமை வெள்ளம், துணைவி, நெஞ்சின் அலைகள், பொன்மலர், பால்மரக் காட்டினிலே போன்ற சமூக நாவல்கள். வெற்றித் திருநகர், கயல்விழி, வேங்கையின் மைந்தன், சித்திரப் பாவை முதலிய வரலாற்று நாவல்கள். இவரது பெண் புதினம் நாராயணசாமி ஐயர் நாவல் போட்டியிலும், “நெஞ்சின் அலைகள்“ தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசுப் போட்டியிலும் பரிசு பெற்றவை. வேங்கையின் மைந்தன் சாகித்திய அகாடமிப் பரிசும்,

சித்திரப் பாவை ஞானபீடப் பரிசும் பெற்றன. எங்கே போகிறோம் என்பது அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளைப் பரிசு பெற்றது. இவர் நடை தெளிந்த நீரோட்டம் போன்றது. “கதைப் படைப்பிலும் பாத்திரப் படைப்பிலும் இலட்சியப் படைப்பிலும் தம் தனித் தன்மையை அகிலன் பெற்றுள்ளார்“ என்பார் தெ.பொ.மீ.

**கோவி. மணிசேகரன்**

1980இல் இவரது யாகசாலை என்ற புதினம் அண்ணாமலை அரசர் பரிசு பெற்றது.

**கு.ராஜவேலு**

சொல்லாட்சி, உவமை நலன் கருத்துவளம் பொதுளியன இவர் நாவல்கள், அவை: காதல் தூங்குகிறது, மகிழம்பூ, இளவேனில், வானவீதி

**ஜெயகாந்தன்**

சிறுகதை மன்னன் ஜெயகாந்தன், பாரிசுக்குப் போ, ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், கங்கை எங்கே போகிறாள் ஆகிய சமூகப் புதினங்களையும் படைத்துள்ளார்.

**மு.வரதராசன்**

மாறுபட்ட போக்கும் தமிழ்மணமும் விஞ்சுமாறு புதினம் பல படைத்தார். அனைத்தும் சமூகப் படைப்புக்களே. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றிய மு.வ. அவர்கள், பண்பாளர், திறனாய்வாளர், மொழி ஆய்வாளர், சிறந்த எழுத்தாளர். அறக்கருத்துக்களை மிகுதியாகக் கொண்டவை இவர் புதினங்கள். திருக்குறள் மற்றும் சங்கநூற்கருத்துக்கள் இவர் படைப்பில் மிகுந் திருக்கும். இலக்கியம் படிக்கும் உணர்வைத் தூண்டும். இவர்தம் எழுத்துக் களைப் பின்பற்றித் தமிழாசிரியர் பலர் படைப்புத் துறையில் இறங்கினர். இவரது முதற் புதினம் செந்தாமரை, லோகோபகாரி இதழில் வெளிவந்தது.

பாவை, நெஞ்சில் ஒரு முள். கயமை, அகல்விளக்கு, கள்ளோ காவியமோ, பெற்றமனம், மலர்விழி, அல்லி, செந்தாமரை, கயமை, அந்தநாள், கரித்துண்டு, வாடாமலர் முதலியவை (15) இவர் படைத் தவை. தளித்தமிழ்ப் பெயர்களாக இவர்தம் புதினப் பெயர்கள் அமைந் துள. கதை மாந்தர்கள் பெரும்பாலும் அவ்வண்ணமே பெயர் பெறுவர்.

இவரது அகல் விளக்கு சாகித்திய அகாதமி விருதுபெற்றது. ”வரதராசனின் நாவல்களிலே பாத்திரங்கள் எலும்பும் தசையும் கொண்டு ஆக்கப்படுவன அல்ல. மனித இனத்தின் பிரநிதியாகவே அவர்கள் உள்ளனர்,” என்பார். க. கைலாசபதி

மு.வ வின் நாவல்கள் கருத்தமைவு நாவல்கள் என்பார், எழில் முதல்வன். ”தமிழ் நாட்டுப் பெர்னாட்ஷா” என இவரைத் தெ.பொ.மீ பாராட்டுவார். நா.பார்த்தசாரதி படைத்தவை 1. குறிஞ்சிமலர் (இதில் பூரணி முழுமையான சிறந்த படைப்பு) 2. சமுதாய வீதி (சாகித்திய அகாதமிப் பரிசு பெற்றது) 3. துளசி மாடம் அண்ணாமலை அரசர் பரிசு) 4. பொன்விலங்கு

**பாலகுமாரன்**

1981இல் மெர்க்குரிப் பூக்கள் இலக்கியச் சிந்தனைப் பரிசு பெற்றது. இவரது இரும்புக் குதிரைகள்“ 1985இல் அண்ணாமலை அரசர் பரிசு பெற்றது.

**அனுத்தமா**

குடும்பச் சிக்கல்கள் இவர் புதினங்களில் முதன்மைபெறும். படைத் தவை: ஒரே வார்த்தை, கேட்ட வரம், ஜெயந்திரபுரத்திருவிழா, மணல்வீடு.

**ராஜம் கிருஷ்ணன்**

“தமிழ் நாட்டின் ஜேன் ஆஸ்டின்“ என்று போற்றப்படுபவர். இவரது படைப்புக்களில் புதுமை மிகுதி. குறிஞ்சித்தேன் என்ற இவரது புதினம் நீலகிரிப் பழங்குடி மக்கள் பற்றியது. அம்மலை மக்களின் பழக்க வழக்கங் களும் புதுமையும் பழமையும் போட்டி போட்டுக் கொள்ளுதலும் இப்புதினத்தில் சித்தரிக்கப்படுகின்றன.

**பிற புதினங்கள்**

மலர்கள், மலையருவி, அமுதமாகி வருக, முள்ளும் மலருகிறது, வளைக்கரம். அண்மையில் சாகித்திய அகாதமி விருது பெற்றார்.

**லட்சுமி**

இயற்பெயர் திரிபுர சுந்தரி இவர்தம் புதினங்கள் சில திரைப் படமாகி யுள்ளன. பெண்மனம், காஞ்சனையின் கனவு, நாயக்கர் மக்கள், அத்தை, சூரிய காந்தம், மிதிலா விலாஸ், ஸ்ரீமதி மைதிலி போன்ற பல புதினங்களைப் படைத்துள்ளார்.

**சிவசங்கரி**

திரிவேணி சங்கமம், நண்டு, 47 நாட்கள், ஒரு மனிதனின் கதை, பாலங்கள் நதியின் வேகத்தோடு போன்ற சமூக நாவல்கள்.

அநுராதா ரமணன், கோதைநாயகி, ராஜரத்தினம். இந்துமதி, வசுமதி ராமசாமி.குயிலி ராஜேசுவரி, கோமகள், குமுதினி, போன்ற பலரும் சிறந்த பெண் புதின ஆசிரியர்களாய் உள்ளனர்.

**4.வரலாற்றுப் புதினங்கள்**

வரலாற்றைக் வரலாற்றைக் - குறிப்பாகத் தமிழ் நாட்டு வரலாற்றை அடிப் படையாகக் கொண்டு தமிழில் வரலாற்றுப் புதினங்கள் தோன்றி யுள்ளன. வரலாற்றுப் புதின ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் கல்கி, சாண்டில்யன், ஜெகசிற்பியன். ஈ. பாலகிருஷ்ண நாயுடு, சரவணமுத்துப் பிள்ளை, வ. வேணுகோபாலன், சி. ராஜேந்திரன் ஸ்ரீ வேணுகோபாலன், அரு.ராமநாதன், தாமரை மணாளன், மு. மேத்தா, கோவி மணிசேகரன், விக்கிரமன், பூவண்ணன், சுஜாதா,ஆர்.வி,சோமு, நா. பார்த்தசாரதி.

**சரவணமுத்துப் பிள்ளை**

இவர் படைத்த “மோகனாங்கி“, தமிழின் முதல் வரலாற்று நூல் என்னும் பெருமைக்குரியது.

**கல்கி**

வரலாற்றுப் புதினத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.புதினப் படைப்பில் சர் வால்டர்ஸ்காட் போன்றவர். முதன்முதலில் இவர் படைத்த வரலாற்றுப் புதினம் பார்த்திபன் கனவு. பிறவருமாறு: சிவகாமியின் சபதம்’ பல்லவர் காலக்கதை நிகழ்ச்சி கொண் டது. சிவகாமி: “சிறந்த கற்பனைப் பாத்திரம்“ எனினும் வரலாற்று மாந்தர் போன்ற தோற்றம் கொண்டுள்ளது. 2.பொன்னியின் செல்வன்: கல்கிப் பத்திரிகையில் பல ஆண்டுகள் தொடர்கதையாய் வந்தது. நந்தினி பாத்திரம் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது. இப்புதினம் இராசராச சோழன் பற்றியது.

**ஈ.பாலகிருஷ்ண நாயுடு**

இவரது “டணாய்க்கன் கோட்டை“ என்ற புதினம் திப்புசுல் தானின் இறுதி, கோட்டை அழிவு ஆகியனபற்றிக் கூறும். அரு.ராமனாதன் - வீரபாண்டியன் மனைவி, அசோகன் காதலி சாண்டில்யன் - இவரது புதினக்கதை மிக நீண்டிருக்கும். சாண்டில்யன் கதை போல நீண்டமலை“ எனச் சுரதா இவர்தம் புதின நீட்சியை உவமையாக்கி உள்ளார். இவர் புதினங்களில் அத்தியாயங்களின் முதல் தொடர் மிக நீண்டு சுழன்று சுழன்று அமைந்திருக்கும், குமுதத்தில் இவரது புதினங்கள் பல தொடர்கதை யாக வந்தன. அவை கன்னிமாடம், மன்னன் மகள், யவனராணி, கடல் புறா, ஜலதீபம் என்பன பிற மலை வாசல், ஜீவபூமி, ராஜமுத்திரை முதலியன. ராபர்ட்கிளைவ் பற்றிய ராஜபேரிகை என்ற நாவல் வங்க மாநிலப் பரிசு பெற்றது.

**ஜெகசிற்பியன்**

படைத்தவை: மகரயாழ், மங்கை, பத்தினிக் கோட்டம், நாயகி நற்சோணை, ஆலவாய் அழகன், திருச்சிற்றம்பலம், இவற்றுள் திருச்சிற்றம் பலம் ஆனந்த விகடன் நாவல் பரிசுப் போட்டியில் முதலிடம் பெற்றது.

வ. வேணுகோபால் : மருதியின் காதல்

சி.ராஜேந்திரன் ரவிகுலதிலகன் அகிலன்

இவரது வேங்கையின் மைந்தன் சாகித்திய அகாதமி பரிசு பெற்றது. கயல்விழி, வெற்றித் திருநகர் ஆகியன இவர்தம் பிறவரலாற்றுப் புதினங்கள்.

ஸ்ரீ வேணுகோபாலன் - திருவரங்கன் உலா, சுவர்ணமுகி

தாமரை மணாளன் - அந்தப்புரம்

மு.மேத்தா - சோழநிலா

கோவி. மணிசேகரன்

**படைப்பு**: செம்பியன் செல்வி (கலிங்கத்துப் பரணியை அடி ஒற்றியது) முதலில் முளைத்த முகம் (களப்பிரர் காலம்) பொற்காலப் பூம்பாவை (விசய நகர நகர ஆட்சிக்காலம்) பொன்வேய்ந்த பெருமாள், ராஜசிம்மன் காதலி, சந்திரோதயம், தட்சண பயங்கரம், சேரன் குலக் கொடி, சுமித்திரை, சஞ்சி அபரஞ்சி, குடவாயிற் கோட்டம், தென்றல் காற்று அசோகன், செஞ்சி (ரசியவரலாறு), காஞ்சிக் கதிரவன், ரத்த ஞாயிறு, அஜாதசத்துரு விக்கிரமன்

படைப்பு: உதயச்சந்திரன், நந்தி புரத்து நாயகி, காஞ்சி சுந்தரி

**கலைஞர் கருணாநிதி**

படைத்தவை: ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச் சிங்கம், புயல், புதையல், வெள்ளிக்கிழமை, சுருளிமலை, ஒருமரம் பூத்தது, வான்கோழி. பூவண்ணன் - காந்த;ர்ச் சாலை, கொல்லிமலைச் செல்வி

சுஜாதா - ஒரே ரத்தம் சோமு- கடல் கண்ட கனவு, வெண்ணிலவுப் பெண்ணரசி

நா.பார்த்தசாரதி - பாண்டி மாதேவி, மணிபல்லவம். மாயாவி -மதுராந்தகியின் காதல் சி.நா.கோபாலன் - மாலவல்லியின் தியாகம் அண்மைக் காலத்தில் எழுச்சி பெற்றுத் திகழும் புதின ஆசிரியர்கள் வருமாறு:

கி. ராஜநாராயணன் (கோபல்லபுரம், கோபல்ல புரத்து மக்கள், சுந்தர ராமசாமி யுளிய மரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள், குழந்தைகள் பெண்கள் ஆண்கள்), வண்ண நிலவன் (கடல்புரத்தில், கம்பாநதி, ரெயினீஸ் ஐயர் தெரு), சி.ஆர். ரவீந்திரன் (ஈரம் கசிந்த நிலம், காக்கைப் பொன், காலம், மஞ்சுவெளி), அசோகமித்திரன் (கரைந்த நிழல்கள், ஒற்றன். பதினெட்டாவது அட்சக்கோடு, தண்ணீர்), சா.கந்தசாமி (சாயாவனம், அவன் ஆனது, சூர்ய வம்சம், விசாரணை கமிஷன்), சூர்யகாந்தன் (மானாவாரி மனிதர்கள்), ஜெமோகன் (ரப்பர், விஷ்ணுபுரம், பின்தொடரும் நிழலின் குரல், கன்னியாகுமரி), இமையம் (கோவேறுக் கழுதைகள், ஆறுமுகம்), பெருமாள் முருகன் (ஏறுவெயில், நிழல்முற்றம், கூளமாதாரி), சிவகாமி (பழையன கழிதலும், ஆனந்தாயி, குறுக்குவெட்டு), பாமா (கருக்கு. சங்கதி). கு. சின்னப்பபாரதி (தாகம், சங்கம், சர்க்கரை, தலைமுறை மாற்றம், பவளாயி), அறிவழகன் (கழிசடை), பூமணி (பிறகு, நைவேத்யம், வரப்புகள்), யூமா வாசுகி (ரத்த உறவு) ஸ்ரீதர கணேசன் (உப்பு வயல், சந்தி, வாங்கல்), சாரு நிவேதிதா (எக்ஸிஸ்டென்சியலிசமும் பேன்ஸி பனியனும், ஸீரோ டிகிரி), பிரேம் ரமேஷ் (சொல் என்றொரு சொல்), அழகிய பெரியவன் (தகப்பன் கொடி . சுப்ரபாரதிமணியன் (மற்றும் சிலர், சாயத்திரை), கண்மணி குணசேகரன் (அஞ்சலை), தங்கர்பச்சான் (ஒன்பது ரூபாய் நோட்டு)

### 5. மொழி பெயர்ப்புப் புதினங்கள்

காண்டேகரின் மராட்டி நாவலைக் கா.ஸ்ரீ.ஸ்ரீ அவர்களும், தாகூரின் வங்காளப் புதினங்களை த.நா. சேதுபதியும், அடலிபாபி ராஜுவின் நாராயண ராவ் என்ற தெலுங்கு நாவலை எம். எஸ். கமலாவும், வங்காளம் இந்தி குஜராத்தி நாவல்கள் பலவற்றைத் துளசி ஜெயராமன், சரஸ்வதி ஆகியோரும், இந்தி நாவல்கள் சிலவற்றை வீழி நாதனும் தமிழில் மொழி பெயர்த்துள்ளனர். கா.ஸ்ரீ.ஸ்ரீயின் எரி நட்சத்திரம், திருமணம், சுகம் எங்கே. கிரௌஞ்ச வதம் ஆகியன சிறந்த மொழி பெயர்ப்பு நாவல்கள் ஆம். ஒரியா மொழிக் கதையைத் தமிழில் மொழி பெயர்த்ததற்காகத் தமிழ்நாடன் சாகித்திய அகாதமி விருது பெற்றுள்ளார் (1999). உலகப்புகழ் பெற்ற புதினங்கள் பலவும் தமிழில் பெயர்க்கப் பட்டுள்ளன. அவை வருமாறு. (1. மாக்சிம் கார்க்கி - “தாய்“ 2. டால்ஸ்டாய் - “போரும் அமைதியும்“ 5 ஹெமிங்வே -கடலும் கிழவனும் 4. பேர்ல்பக் - நல்ல நிலம் 5. எமிலி ஜோலா நாநா 6. குஸ்தாவ் பிளாபர்ட் - மேடம் பவாரி 7.உஹ்யூகோ - ஏழைபடும்பாடு 8. வால்டர்ஸ்காட் - ஐவ ன்ஹோ 9. பங்கிம் சந்திரர், சரத்சந்திரர் ஆகியோரின் வங்க நாவல்கள். 10 மாஸ்தி வேங்கடேச ஐயங்கார் - கள்ளட நாவல் ”சுப்பண்ணா” 11. தகழி சிவசங்கரம் பிள்ளை - செம்மீன் (மலையாளம்)

**6.தழுவல் நாவல்கள்**

இவ்வகைப் புதினங்கள் தமிழில் போதிய சிறப்புப் பெறவில்லை. இவற்றுள் கதைமட்டும் பிற நாட்டுக்கதை, பிறவாய இடம், சூழல், மாந்தர் போன்றவை நமக்குரியவாக விளங்கும்

ஆரணி குப்புசாமி முதலியார் முதலில் ரெயினால்ட்ஸ் (சுநல- ழெடனள) நாவல்கட்குத் தமிழுருவம் கொடுத்தார். வடுவூர் துரைசாமி ஐயங்காரின் மேனகா, திகம்பர சாமியார் அல்லது கும்பகோணம் வக்கீல் ஆகியவையும் இத்தகையன. டால்ஸ்டாயின் அன்னாகரி னாவைத் தழுவி, நாரண துரைக்கண்ணன் சீமாட்டி கார்த்தியை உருவாக்கினார். இதே போல டிக்கன்ஸின் புதினம் எஸ். எஸ். மாரி சாமியால் "அனாதை ஆனந்தன்" ஆக மாறியது. ரெயினால்ட்சின் புதினத்தைத் தழுவி மறைமலை அடிகளார் குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி என்ற புதினத்தை எழுதினார்.

தழுவற்புதினம் எழுதுவோருள் பெரும்பாலோர், மூல ஆசிரி யரின் பெயர் முதலியன குறிப்பிடாமல் சொந்தப் புதினம் போல எழுதி வருகின்றனர். இதனால் அவரது முன்மை (முசபைபையெட) புலனாவதில்லை

**7.தொடர்கதை நாவல்கள்**

தமிழில் உள்ள புதினங்கள் பல புதினங்கள் ஆகமாட்டா: தொடர் கதைகளே என ஆய்வாளர் கருதுகின்றனர். வார மாத இதழ்களில் தொடர் கதைகளாக வரவேண்டும் என்பதற்காகவே இவ்வகைப் புதினங்கள் வடித்தெடுக்கப்படுகின்றன.) அவ்வல் இதழின் தொடர்கதைப் பகுதியின் இறுதியில் எதிர்பார்ப்பும் பரபரப்பும் ஏற்படும்படி இவற்றைத் திட்டமிட்டு அமைப்பர்.இதற்காகச் சில நிகழ்ச்சிகள் வலியப் புகுத்தப்படும். கதையை இணைத்து ஒரே நூலாக நோக்குங்கால், அதில் வெற்றெனத் தொடுத்தலும், வேண்டாதன இடம்பெறலும் கற்பனைச் சிறுமையும் அற்பமுயற்சிகளும் புலனாகும். இவை புதினத்தின் ஒருமையை, ஒருமைப்பாட்டை, செம்மாந்த நிலையைச் சிறுமைப்படுத்திச் சீரழிக்கும். 1925 முதல் இத்தகைய தொடர்கதைகள் தமிழில் பெருமளவில் வந்த வண்ணம் உள்ளன சாண்டில்யன், கோ.வி. மணிசேகரன், புஷ்பா தங்கதுரை, சுஜாதா, ல்‘மி, சிவசங்கரி, அனுராதா ரமணன், இந்து மதி, வாஸந்தி ஆகியோரின் தொடர்கதைகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை

**8. வட்டார நாவல்கள்**

(இன்று தோன்றும் வட்டாரப் புதினங்கள் அவ்வந்நில ஒழுகலாறுகளையும், பழக்கவழக்கங்களையும், பேச்சு வழக்குகளையும் பெற்றுத் திகழும்.இவ்வகையில் இவை சங்ககாலக் கலித்தொகையையும் பரிபாடலையும் ஒத்து விளங்குகின்றன.) நற்றிணையும்,

குறுந்தொகையும், அகநானூறும் புறநானூறும் போன்றவை செவ்வியல் இலக்கியங்கள். அவற்றிடை நில வண்ணனைகள் இருக்கலாம் ஆனால் அனைத்தும் ஒரு வகையான செம்மாந்த நடை கொண்டவை. கலித்தொகையும் பரிபாடலும் அத்தகைய செவ்வியற் றகவிலிருந்து விடுபட்டு, மக்கள் பேச்சுமொழியும், குறுகிய நம்பிக்கை களும், பழக்க வழக்கங்களும் கொண்டு வட்டார - அல்லது நிலவியல்பு களோடு பொதுமையற்றுத் தனித்த பண்புகளோடு விளங்கும். அதனால் தான் கொல்லேறு தழுவல், கைக்கிளை பெருந்திணை ஆகிய கொச்சைச் செயல்களையும் மேற்கொள்ளல் போன்ற உயர் காதல் நெறிக்கு மாறு பட்ட கூறுகள் கலியிலும் பரியிலும் காணப்படுகின்றன. சங்க இலக்கியங் களில் காணப்படும் இத்தகைய வேறுபாட்டு நிலைகளே பொதுப்புதினங் கட்கும் வட்டாரப் புதினங்கட்கும் இடையமைந்த வேறுபாடுகள்.

1.900 எண்பதுகளில் இளந்தமிழ் எழுத்தாளர்கள் வட்டார நாவல்களை உருவாக்கினர், சூரிய காந்தன், ஜெயமோகன், தோப்பில் முகம்மது மீரான். சி.ஆர். ரவீந்திரன், வே. சபாநாயகம், பெருமாள் முருகன், நாஞ்சில் நாடன், மோகன், மேலாண்மைப்பொன்னுசாமி, பூமணி, பாவண்ணன், மா. நடராஜன் செ. யோகநாதன் ஆகியோர் 1990களில் வட்டார நாவல் படைத்தோர்.

**ஆர்.சண்முகசுந்தரம்**

இவர் வட்டார நாவல்களின் முன்னோடி. நாகம்மாள், அறுவடை சட்டிசுட்டது, பூவும்பஞ்சும், தனிவழி, மூன்று அழைப்பு. மனநிழல் போன்றவை இவர்தம் படைப்புகளாகும்.

**சூரிய காந்தன்**

இவரது இரண்டாவது புதினம் மானாவரி மனிதர்கள் 1989இல் அகிலன் நினைவு நாவல் பரிசுப்போட்டியில் பரிசு பெற்றது. இலக்கியச் சிந்தனைப் பரிசும் பெற்றுள்ளது. இது பற்றி ராஜம் கிருஷ்ணன், ”மனிதாபிமான யதார்த்த வெளிப்பாடாக, சிறந்த படைப்பாக வந்துள்ளது““என்றார்.

**ஜெயமோகன்**

இவரது முதல் புதினம் “ரப்பர்,“ நாஞ்சில் நாட்டு வட்டார நாவல், இதுவும் அகிலன் நினைவுப் பரிசுபெற்றது. இவரது “விஷ்ணுபுரம்“ நாவல் ரப்பரினும் சிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது.

**தோப்பில் முகம்மதுமீரான்**

இவரது ஊர் குமரிமாவட்டம் வனங்காடு வட்டம் தேங்காய்ப் பட்டினம் (கடற்கரைக்கிராமம்) இவரது முதல் நாவலான ஒரு கட லோரக் கிராமத்தின் கதை“, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன் றத்தின் பரிசு பெற்றது. இவரது துறைமுகம், இலக்கியச் சிந்தனையின் பரிசு பெற்றது. சாய்வு நாற்காலி என்னும் புதினம் சாகித்திய அகாதமி விருது பெற்றது. இவர் வட்டாரத்தமிழோடு மலையாளம் உருது ஆகியவற் றையும் பெருமளவு கலந்து எழுதியுள்ளார்.

**வே.சபாநாயகம்**

இவரது தென்னார்க்காடு வட்டார நாவலான “ஒருநதி ஓடிக் கொண் டிருக்கிறது“ என்பது ரங்கம்மாள் நினைவுப் பரிசு பெற்றுள்ளது. இ∴து அண்மைக்காலத்தின் பத்துச் சிறந்த நாவல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

தமிழ்ப் புதினங்களின் தோற்றமும் வளர்ச்சியும் உரைநடையை வளர்த்ததோடு, மேலும் விரிவடையச் செய்தன. கருத்துப் பரிமாற்றத்திற்குரிய சிறந்த சாதனமாக உரைநடை இன்று எல்லாத் துறைகளிலும் மேலோங்கி இருப்பதற்குப் புதினம், சிறுகதை போன்ற புனை கதைகளின் அளப்பரிய வளர்ச்சி ஓர் இன்றியமையாத காரணம் ஆகும்.

**பெருமாள் முருகன்**

இவரது ஏறுவெயில் என்ற புதினத்தின் கதை சேலம் மேட்டுப் பகுதியில் நிகழ்வதாக அமைந்துள்ளது. கொங்குக்கிராமிய மண் வாசனை யைக் காணலாம். குடியிருப்பு நிலத்தை அரசு ஆணைப்படி இழந்து பல இன்னல்களுக்கு ஆளாவதைப் பற்றிப் பள்ளி மாணவன் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டுள்ளது.

பிறப்பு 15.10.1966. ஊர்: திருச்செங்கோடு அருகில் கூட்டப்பள்ளி. பெற்றோர்: பெருமாள், பெருமாயி, புனைபெயர் இளமுருகு. இவர் தயாரித்த கொங்கு வட்டாரச் சொல்லகராதி (2000) தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது. சிறுகதைக்காகக் கதா பரிசு (2000) பெற்றார். புதினங்கள்: ஏறுவெயில் (1991) நிழல்முற்றம் (1993) கூளமாதாரி (2000), சிறுகதை : திருச்செங்கோடு (1994) நீர்விளையாட்டு (2000). கவிதை : நிகழ் உறவு (1992) கோமுகி நதிக்கரைக் கூழாங்கல் (2000) ஆய்வு: ஆர். சண்முக சுந்தரத்தின் படைப்பாளுமை (2000) நாஞ்சில் நாடன் மிதவை. தலைகீழ் விகிதங்கள், சதுரங்கக் குதிரை ஆகியவை இவர் புதினங்கள்.

**மோகன்**

இவரது சின்னச்சின்ன முற்றங்கள் (1996) நாடார் குடும்ப வாழ்க்கை பற்றியது. ம.நடராசன், மேலாண்மைப் பொன்னுசாமி, பூமணி, பாவண்ணன், செ.லோகநாதன் ஆகியோர் 90களில் வட்டாரப் புதினங்கள் எழுதியுள்ளனர். வர்க்க நாவல்கள், தலித் நாவல்கள், கூட்டு நாவல்கள், குட்டி நாவல்கள் என்ற நாவற் பிரிவுகளையும் மேற்கொள்வதுண்டு.

**9. கூட்டுநாவல்கள்**

மேலை மேலை நாடுகளில் இருவர் சேர்ந்து ஒரு நாவலை எழுது வதுண்டு. குமுதம் இதழின் தூண்டுதலால் சிவசங்கரியும் இந்துமதியும் சேர்ந்து இரண்டுபேர் என்ற நாவலை எழுதினர் )கவிதா, நித்யா மூர்த்தி ஆகியோரால் நானும் நீயும் என்ற நாவல் படைக்கப்பட்டது. பன்னிருவரைக் கொண்டு ஒரு நாவலைப் படைக்கும் முயற்சியில் சாவி இதழ் ஈடுபட்டது ஜெயகாந்தனே குட்டி நாவலுக்கு வழிகாட்டி. அவர் முதன்முதலில், “ஜெய ஜெய சங்கர“ என்ற குறுநாவலை ஒரு ருபாய் விலையில் வெளி யிட்டார். அஃது ஒரு லட்சம் படிகளுக்கு மேல் விற்றது.

தொடர்ந்து கண்ணதாசன் நாவல்கள் இவ்வாறு வந்தன. பின் பத்திரிகைகள் சில தொடர்ந்து மாதம் ஒருமுறை ஒருநாவல் என வெளி யிட்டன. பத்திரிகைகளில் “ராணிமுத்து“ தான் நாவற்சுருக்கம் முதலில் வெளி யிட்டுப் பின், குறுநாவலாக முழுநாவலைப் படைத்து வெளியிட்டது. குட்டி நாவல்களாகிய இவை 100 பக்கங்களை உடையவாக விளங்கின. பின் மாலைமதி, மோனா, மணியன் மாத இதழ், ராணி முத்து, கதைக்கதிர், மெட்டி, குங்குமச்சிமிழ் போன்ற பத்திரிகைகளும் மாதம் ஒரு நாவல் வெளியிட்டன.

**10. குட்டிநாவல்கள்**

குட்டி நாவல்களுள் சுஜாதாவின் “விபரீதக்கோட்பாடு“ மகரிஷியின் “புவனா ஒரு கேள்விக்குறி“ அனுராதா ரமணனின் சந்திய காலத்துச் சலனங்கள் சிவசங்கரியின் ஒரு சிங்கம் முயலாகிறது), ராஜேந்திர குமாரின் “வணக்கத்துக்குரிய காதலியே வாலியின் “அது அதில் இல்லை“ கோமகளின் “சுநாதங்கள்“ ஆகியவை சிறப்பானவையாகக் கருதப்படுகின்றன.

**சிறுகதை**

உரைநடையின் செல்வாக்குக் காரணமாக ஆராய்ச்சி, வரலாறு விளக்க உரைகள், போன்றவை கிளைபரப்பி வளர்ந்தாற் போலவே, உரைநடை இலக்கியங்களும் கவிதைகளுக்கு மாற்றாகக் கிளம்பின. அவை கட்டுரை இலக்கியம்,

சிறுகதை, புதினம் ஆகியவை. இவற்றுள் கட்டுரை இலக்கியம் தமிழில் போதுமான வளர்ச்சி பெறவில்லை. சிறுகதையும் புதினமும் மேம்பட்ட நிலையை எய்தியுள்ளன. பண்பு, குறுநிகழ்ச்சி, அனுபவம், சிக்கல், வெற்றி போன்ற ஏதாவதொரு (மனித வாழ்வின்) சிறுபகுதியைக் கருவாகக் கொண்டு இயல்வதுதான் சிறுகதை நிகழ்வு, பண்பு, சூழல் ஆகியவற்றுள் ஏதாவ தொன்றின் பின்னணியில் தான் உலகக் கதைகள் அனைத்தும் இயங்குகின்றன என்பார், ஆர்.எல். ஸ்டீவன்சன்.) அது, உள்ளார்ந்த தன்னியக்கமும் (Spontaneity) கண் முன் நேரே நடப்பது போன்ற உணர்வுத் தூண்டலும் (Immediacy) கொண்டது. எண்ண ஒருமை, உச்சகட்டம், முதல் தொடர்ச்சி முடிவு அமைப்பு ஆகிய மூன்றனை யும் அது தன்பால் கொண்டிருக்கும் என்பார், புருக் ஸ்வாரன். அரை மணி முதல் 2 மணிக்குள் படித்து முடிக்கக் கூடியது சிறுகதை என்பார். எட்கார் ஆலன்போ. (சுருங்கச் சொல்லலும் சுருக்கெனச் சொல்லலும் இதன் உத்திகள் எனவே நீண்ட வருணனைக்கும், நிகழ்ச்சி மற்றும் பண்பு விளக்கத்திற்கும் இங்கே இடமில்லை. "குதிரைப் பந்தயம் போலத் தொடக்கமும் முடிவும் சுவைமிக்கனவாக இருத்தல் வேண்டும். என்பார், செட்ஜ்விக். "நீங்கள் பார்க்கிற பழகுகிற, உங்களையும் மற்றவர்களையும் பாதிக்கின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியுமே சிறுகதை தாம்" என்பார், வாசவன் (வண்ணத்தமிழ் வாசல்கள்).

சிறுகதை என்றவுடனே பெரிய கதையாக விளங்கும் புதினத்தின் சுருக்கம் என எண்ணிவிடல் கூடாது. புதினம், புளிய மரமென்றால், சிறுகதை தென்னை மரம் என்பார், இராசாசி. சிறுகதை ஒருமுகமான கதையைத் தொடக்கத்திலிருந்தே கொண்டிருக்கும். புதினம் பன்முகமாகக் கிளைத்து வளர்ந்து இறுதியில் ஒருமுகமாக முடிவது. புதினத்தில் சொல் வளமும், வருணனை அழகும், கதை மாந்தர் பண்பு நலன்களும் சிறப்புற்று அமையும், சொற்சிக்கனமும் பயனில் சொல் பெய்யாமையும், பட்டுக் கத்தரித்தாற் போல் நறுக்கெனச் சின்மொழி யால் கிளத்தலும் சிறுகதைக் குரியன. எனினும் சிறுகதையில் எடுத்த நிகழ்வு முழுமை பெறுமாறு அமைதல் வேண்டும். கதை பற்றிய குறிப்பு, தொல்காப்பியத்திலேயே காணப்படுகிறது.

"பொருள்மர பில்லாப் பொய்ம் மொழி"

எனக் குறிப்பிடுவார் தொல்காப்பியர் உரைநடை வகைகளுள் ஒன்றாக அவரால் சுட்டப்படும் இக்கதையில், இன்றைய சிறுகதையின் வளர்ச்சி முகம் இருந்திருக்க முடியாது. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களில், தேவந்தி கதை, ஆதிரை கதை, பத்தினிப் பெண்டிர் கதை, ஆபுத்திரன் கதை எனக்கிளைக் கதைகள் பல அளவில் சிறியவையாகக் காணப்படுகின்றன. சீவக சிந்தாமணியின் ஒவ் வொரு இலம்பகமும் ஒரு சிறிய கதையின் அமைப்பைப் பெறும், பெரியபுராணம் சிறிய கதைகள் பலவற்றின் தொகுப்பாக விளங்குகின்றது. இவையெல்லாம் கவிதை

வடிவிலான கதைகள், எனவே இன்றைய சிறுகதையோடு வடிவாலும் உத்தியாலும் அமைப்பாலும் அவை வேறுபட்டவை என்றாலும் கதை கூறும் முறைமை தமிழர்க்குப் புதியதில்லை. ஏதோ, ஒரு வடிவத்தில் - அன்றைய செவிலித் தாயரின் நொடியில் தொடங்கி இன்றைய சிறுகதைகள் வரை எல்லாக் காலத்திலும் வெவ்வேறு கோலத்தோடும் வடிவோடும் கதை கூறல் இருந்து கொண்டு தான் இருக்கிறது. எளிலும் தனித்த வடிவமாக உணர்ச்சியை நறுக்குத் தெறித்தாற் போல் ஊட்ட வல்லதாக விளங்குவது இக்காலச் சிறுகதையே ஆம்.

உலகின் முதல் சிறுகதை அமெரிக்காவில் தோன்றியது. அது. வாசிங்டன் இர்விங் எழுதிய ரிப் வேன் விங்கிள் (Rip Van wimble) என்பது. உலகின் முதல் சிறுகதைத் தொகுப்பு, 1819இல் முதல் உலகச் சிறு கதையையும் சேர்த்து வெளியிடப்பட்ட தி ஸ்கெட்ச் புக் (The Sketch Book) என்பது. உருசியாவில் 1932இல் முதல் சிறுகதை தோன்றியது. படிப்படியாக வளர்ந்த சிறுகதை செகாவில் என்பவர் படைப்பால் தரம்மிக்கு உயர்ந்தது. சிறுகதைப் படைப்புக்காக நோபல் பரிசு பெற்ற இவரைச், "சிறுகதை உலகின் தந்தை " எனப் போற்றுவர். இந்தியாவில் வாங்காள மொழியிலேயே முதற் சிறுகதைகள் உருவாயின, இரவீந்திரநாத் தாகூரும், பங்கிம் சந்திரரும் சிறுகதைகளை உருவாக்கிப் பேணி வளர்த்தனர்.

தமிழில் தோன்றிய மதன காமராசன் கதை, விக்கிரமாதித்தன் கதை முதலிய தொடக்க உரைநடைக் கதைகளை நிகழ்ச்சித் தொகுப்புக்களாகவே கொள்ளல் வேண்டும். தாண்டவ முதலியார் எழுதிய பஞ்ச தந்திரக் கதைகள், வீரமா முனிவரின் பரமார்த்த குருகதை, அஷ்டாவதானம் வீராசாமிச் செட்டியாரின் விநோத ரச மஞ்சரி, செல்வக் கேசவராய முதலியாரின் அபிநயக்கதைகள் போன்றவை கதைத்தன்மை பெற்றிருப்பினும், பத்தாம் பசலித்தனமான - தேவையைக் காட்டிலும் தேவையில்லாத செய்திகளையும். சொற்களையும் கொண்டவைகளாக விளங்கின. எனவே இவற்றைச் சிறுகதைகள் என ஏற்றல் இயலாது. இந்நிலையில் வ.வே.சு. ஐயர் எழுதிய குளத்தங்கரை அரசமரம் என்ற கதை, சிறுகதைக்குரிய சிறப்பியல்பு களோடு வெளிவந்து, தமிழின் முதற் சிறுகதை என்ற தகுதியினைப் பெற்றது. வ.வே.சு. ஐயர் (1881-1925)

இக்காலச் சிறுகதை இலக்கணத்திற்கேற்ப முதல் முதலில் கதை வடித்திட்டவர், இவரே, "குளத்தங்கரை அரசமரம் சொன்னகதை" என்ற தலைப்பிலான தமிழின் முதற் சிறுகதை, அரசமரமே கதை கூறுவது போலவும், கதை வாழ்வின் இடையிலிருந்து தொடங்குவது போலவும் அமைந்துள்ளது 1927இல் வெளிவந்த மங்கையர்க் கரசியின் காதல்"" என்ற இவரது சிறுகதைத் தொகுப்பு எட்டுக் கதைகளையுடையது. இது தான் தமிழின் முதற்சிறுகதைத் தொகுப்பு இதற்கு "மங்கையர்க்கரசியின் காதல் முதலான கதைகள்"

என நீண்ட பெயரிட்டிருந்தார். ஒவ்வொரு கதை முன்பும் விஷய சூசிகை எனும் பெயரில் முன்கதைச் சுருக்கம் எழுதி யிருந்தார் பின்வந்தோர் இத்தகைய முன்கதைச் சுருக்கம் எழுதுவதில்லை. (உலகப் புகழ்பெற்ற காதல் ஓவியங்களான அனார்கலி, லைலா மஜ்னு ஆகிய கதைகளைத் தமிழில் முதன்முதலிற் கூறியவர் இவர். மேலைக் கதைகளின் தாக்கமே, வ.வே.சு ஐயரை உருவாக்கியது எனலாம். இவரைத் "தமிழ்ச் சிறுகதையின் தந்தை" எனப் பாராட்டுவர்.

**பாரதியார் (1882-1921)**

பாரதியார் சிறுகதைத் துறையையும் விடவில்லை இவர்தம் கதைகள் நிகழ்வுக் கோவைகளாக நின்று விடுகின்றன. கதைக்கொத்து, நவதந்திரக் கதைகள் - தொகுதிகள் ஆறில் ஒருபங்கு, பூலோக ரம்பை, திண்டிம சாஸ்திரி, ஸ்வர்ண குமாரி ஆகிய கதைகள் குறிப்பிடத்தக்கவை. மாடர்ன் ரிவியூவில் வந்த தாகூர் கதைகளை (1) மொழி பெயர்த்துள்ளார்.

**கு.ப.ராசகோபாலன் (1910 - 1944)**

ஊர் கும்பகோணம். மணிக்கொடி, மறுமலர்ச்சி, சுதந்திரச் சங்கு ஆகிய இதழ்களில் இவர்கதைகள் வெளிவந்தன. கிராம ஊழியன் ஆசிரியர், இவர் கதைகள் கணவன், மனைவி உறவில் ஏற்படும் வாழ்க்கைச் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டவை. கற்பனையுணர்வும், மனத் தத்துவ நாட்டமும் இவர்கதைகளில் பளிச்சிடும். விடியுமா, திரை போன்ற கதைகள் சிறந்தன. புனர் ஜன்மம், சிறிது வெளிச்சம், கனகாம்பரம் எனும் சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இவரால் வெளியிடப்பட்ட வரலாற்றுச் சிறுகதைத் தொகுதி, "காணாமலே காதல்" என்பது.

**ந.பிச்சமூர்த்தி**

மணிக்கொடி யுகத்தைச் சார்ந்தவர். ஜம்பரும் வேஷ்டியும் (47) மோகினி (51) பிச்சமூர்த்தியின் கதைகள் (60) மாங்காய்த்தலை (61) பதினெட்டாம் பெருக்கு (64) என 5 தொகுதிகளை வெளியிட்டார். 1935 இல் கலைமகள் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றார். முன் படைப்புக்களில் கலைத்திறமும் பின்படைப்பில் தத்துவமும் மேலோங்கி இருந்தன. கவிதைநடையால் வாசகரைக் கட்டிப்போடுவதில் வல்லவர் இவர்.

**கல்கி (ரா. கிரு ணமூர்த்தி) (1899-1954)**

இவர் முதலில் நுழைந்தது சிறுகதைத்துறை, பின் புதினத்துறை, துறை ஆனந்தவிகடனின் ஆசிரியராக முதலில் பணியாற்றிய இவர் பின் "கல்கி" இதழைத் தாமே தொடங்கி நடத்தினார் மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு போன்ற குறிக்கோள்களைத் தம் கதையில் புகுத்தினார். சாரதையின் தந்திரம் முதற்சிறுகதை, இவர்தம் சிறந்த படைப்புக்கள் காதறாக் கள்ளன், மயில்விழிமான், கேதாரியின் தாயார்,

திருடன்மகன் திருடன், ஒற்றை ரோஜா, வீணைபவாளி, கணையாழியின் கனவு போன்றவை.காரிருளில் ஒரு மின்னல், அலையின் கண்ணீர், மாடத் தேவன் சுனை, மயிலைக் காளை, ஸ்வப்பன யோகம் போன்றவற்றையும் எழுதியுள்ளார்.

**புதுமைப்பித்தன் (1906-1948)**

ஊர் நெல்லை வள்ளுவர்பேட்டை. தந்தை சொக்கலிங்கம் பிள்ளை. இயற்பெயர் சொ. விருத்தாசலம். சிறுகதை மன்னன், சிறுகதைச் செல்வர். தமிழ்நாட்டின் மாப்பஸான் எனப் போற்றப்படுவர். இவர்தம் கதைகளில் கேலியும் கிண்டலும் மிகுந்திருக்கும், அந்தரங்கங்களையும் அப்பட்டமாகப் படம்பிடித்துக் காட்டும் பான்மையின இவர் கதைகள், புதிய வடிவங் களையும், நுண்ணிய உத்திகளையும், தனித்த புரட்சி நடையினையும் மேற்கொண்டவர் புதுமைப்பித்தன், திருநெல்வேலி வட்டார வழக்கைப் பெரிதும் ஊடுருவச் செய்துள்ளார்) மணிக்கொடி யுகத்தைச் சார்ந்தவர்.

200க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். கபாடபுரம். புதிய ஒளி, சித்தி, ஆண்மை அன்று இரவு, புதுமைப்பித்தன் சிறு கதைகள் ஆகியன இவர்கதைத் தொகுதிகள் உலகத்துச் சிறுகதை கள், தெய்வம் கொடுத்தவரம் என்பன மொழிபெயர்ப்புக் கதைத் தொகுதிகள்.

கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் என்பது மிகச் சிறந்த சிறுகதை யாகப் போற்றப்படும். கயிற்றரவு, சாப விமோசனம், அன்று இரவு, ஆண்மை, பொன்னகரம், காஞ்சனை, கல்யாணி, அகல்யை போன்றவை இவர் தம் சிறப்புக்குரிய சிறுகதைகள்.

இவர் நடப்பியலையும் நனவோட்ட உத்தியையும் முதல்முதலில் தமிழ்ச்சிறுகதைகளில் புகுத்தினார்.பேச்சுத் தமிழை முதலில் பயன்படுத்தி யவர். தமிழ் இலக்கிய மரபுக்கும் சிறுகதைக்கும் பாலம் அமைத்தார். பழைய புராணக் கதைகட்குப் புதுப்பொலிவு ஊட்டினார். புதுமைப்பித்தன் நடை எனப் போற்றுமாறு புதியதொரு நடை யைப் பின்பற்றினார். காவியத்துக்குக் கம்பன், கவிதைக்குப் பாரதி எனில் சிறுகதைக்குப் புதுமைப்பித்தன் என ஜெயகாந்தன் இவரைப் பாராட்டுகிறார். மௌனி (எஸ்.மணி) (1907-1985)

ஊர் தஞ்சை மாவட்டச் செம்மங்குடி, மணிக்கொடியுகத்தினர். இவரது சிறுகதைத் தொகுப்பு அழியாச்சுடர். எழுதிய கதைகள் 24 மட்டுமே. குறைந்த கதைகள் எழுதியிருப்பினும் சிறுகதை உலகில் சிறப்பிற்குரியவர். மணக்கோலம், சாவில்பிறந்த சிருஷ்டி, காதல் அலைமாறுதல், பிரபஞ்ச கானம், அழியாச்சுடர், மனத்தேர் போன்றவை குறிப்பிடத் தக்கவை.

"தமிழ் மரபுக்கும் போக்குக்கும் புதிதாகவும், சிறப்பாகவும் வழி வகுத்தவர் ஒருவரைச் சொல்ல வேண்டுமென்றால், மௌனி என்ற புனை பெயரில் எழுதி வருபவரைத்தான் குறிப்பிட வேண்டும். அவரைத் தமிழ்ச் சிறுகதையின் திருமூலர் என்று சொல்ல வேண்டும்" என்று புதுமைப் பித்தன் இவரைப் பாராட்டுவார். பி.எஸ் ராமையா மணிக்கொடி, தினமணிக்கதிர், ஆகியவற்றில் இவர் கதைகள் வந்துள்ளன.

**ராஜாஜி**

சிறுகதையில் தத்துவம் புகுத்தினார். ராஜாஜியின் குட்டிக்கதை கள் இவரது கதைத்தொகுப்பு, தேவானை, முகுந்தன் பறையனான கதை போன்றவை குறிப்பிடத்தக்கவை இந்திய விடுதலைக்கு முன் வந்த சிறுகதைகளை விடப் பின்னர்த் தோன்றிய சிறுகதைகள் மிகப்பல உலகச் சிறுகதைகளோடு போட்டி போடும் அளவுக்கு உயர்ந்த தரமான கதைகளும் வெளிவந்த வண்ணம் உள்ளன.

**கு.அழகிரிசாமி (1923-1970)**

நெல்லை மாவட்டம்' இயற்பெயர் செல்லையா. தமிழ்மணி (1946), சக்தி (1947-52) நேசன் (53-57) நவசக்தி (1960-65) ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராகவும், ஆசிரியராகவும் பணியாற்றினார். தொகுதிகள்: சிரிக்கவில்லை. தவப்பயன், காலகண்டி, தெய்வம் பிறந்தது. இரு சகோதரர்கள், கற்பக விருட்சம், அழகிரிசாமி கதைகள், வரப்பிரசாதம், அன்பளிப்பு ஆகியவை. அன்பளிப்பு சாகித்திய அகாடமி விருது பெற்றது. காளிவரம், மூன்று பிள்ளைகள், பல நாட்டுச் சிறுகதைகள் போன்ற சிறுவர் கதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார்.)

**சி.சு. செல்லப்பா**

மணிக்கொடி எழுத்தாளர். எழுத்து இதழாசிரியர். சரசாவின் பொம்மை, மலைமேடு, அறுபது, சத்தியாக்கிரகி, வெள்ளை என்பன இவர்தம் சிறுகதைத் தொகுதிகள்.

**வல்லிக்கண்ணன்**

500 சிறுகதைகட்குமேல் எழுதியுள்ளார். முதற்கதை சந்திர காந்தக்கல். கதைத் தொகுதிகள் கல்யாணி முதலிய கதைகள், நாட்டியக் காரி, வல்லிக்கண்ணன் கதைகள், ஆண் சிங்கம், வாழவிரும்பியவன் என்பன. டால்ஸ்டாய் கதைகளையும், கார்க்கியின் கதைகளையும் தமிழில் தந்துள்ளார். புதினங்கள் பல இயற்றி உள்ளார். ஆண் சிங்கம், கவிதை வாழ்வு, தத்துவதரிசனம், பெரியமனுஷி ஆகிய கதைகள் குறிப்பிடத்தக்கவை.

**சிதம்பர ரகுநாதன்**

சேற்றிலே மலர்ந்த செந்தாமரை, ‘ண நேரம், ரகுநாதன் கதைகள், நிலவிலே பேசுவோம் போன்றன இவர்தம் சிறுகதைத் தொகுதிகள்.

**சி.இராஜ நாராயணன்**

கதவு, கண்ணிமை, வேட்டி, அப்பாபிள்ளை அம்மாபிள்ளை, தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள், கிராமியக் கதைகள், தாத்தா சொன்ன கதைகள், கரிசல் கதைகள் ஆகியன இவர்தம் சிறுகதைத் தொகுதிகள்.

**கி.வா.ஜகந்நாதன்**

கலைஞன் தியாகம், அறுந்த தந்தி ஆகியன இவர்தம் சிறுகதைத் தொகுதிகள். பவளமல்லிகை நல்ல படைப்பு.

**மு.வ.**

இவரது சிறுகதைத் தொகுதி. விடுதலையா? என்பது. குறட்டை ஒலி சிறப்பான கதை.

**அகிலன்**

நிலவினிலே என்பது இவரது சிறுகதைத் தொகுதி. இதயச் சிறையில், குறத்தி, குழந்தை சிரித்தது போன்றவை சிறந்த படைப்புக்கள்.

**ஜெயகாந்தன்**

விடுதலைக்கு முன் புதுமைப்பித்தன் என்றால் விடுதலைக்குப் பின் ஜெயகாந்தன் எனுமளவிற்குச் சிறுகதைச் சாதனை புரிந்தவர். மாப்பஸான் போலப் புதுமைப் படைப்புக்களை மேற்கொண்டவர். இவர் தம் சிறுகதைத் தொகுதிகள் உதயம், ஒரு பிடி சோறு, இனிப்பும் கரிப்பும், சுமைதாங்கி, புதியவார்ப்புகள், குருபீடம் ஆகியவை. தேவன் வருவான் என்ற தொகுதி குழந்தைகள் பற்றியது. பிரம்மோபதேசம், டிரெடில் போன்றவை மிகச் சிறந்த கதைகள். சினிமாவுக்குப்போன சித்தாள் மிகப்பரபரப்பை ஏற்படுத்திய சிறுகதை. விரக்தி, தாலாட்டு, இரவில், திரிசங்கு சொர்க்கம், உண்ணாவிரதம், யாருக் காக அழுதான் என்பவையும் சிறப்புடையவை.

சேரிமக்களின் நடப்பு வாழ்க்கையைச் சித்தரித்தார். சமுதாய அவலங் களை வெளிக் கொணர்ந்தார். ஜெயகாந்தன் பாணி என்ற புதிய வகை நடைக்குச் சொந்தக்காரர். இவர் சிந்தனைச் சிற்பி: அநுபவக் கலைஞர்.

**கோவி மணிசேகரன்**

600க்கு மேற்பட்ட வரலாற்றுக் கதைகள் இவருடையவை, சரித்திரக் கதைக் களஞ்சியம், காளையார் கோயில் ரதம், உயிரும் ஒளியும் ஆகியன இவர்தம் சிறுகதைத் தொகுதிகள்.

**தி.ஜானகிராமன்**

சிவப்புரி, கொட்டு மேளம் ஆகியன இவர்தம் கதைத் தொகுதிகள். பஞ்சத்து ஆண்டி, ரசிகரும் ரசிகைகளும், தேவர் குதிரை, கோபுர விளக்கு. சிலிர்ப்பு ஆசியவை மிகச் சிறந்த கதைகள். இவரது சக்திவைத்தியம் தொகுதி, 1979 சாதித்திய அகாடமிவிருது பெற்றது. தஞ்சை மாவட்டப் பேச்சும், நையாண்டியும் இவர் கதைகளின் தனித்தன்மைகள்.

**லா.சா. ராமாமிருதம்**

இவர் கதைகளில் மறைபொருள் இருக்கும். தத்துவம் பயிலும். ஆழமான கதைகள். இவரது கதைத் தொகுதி “இதழ்கள்“

**ஜெகசிற்பியன்**

நரிக்குறத்தி, நொண்டிப் பிள்ளையார் போன்ற சுவையான சிறுகதைகள் இவருடையவை. ஒரு பாரத புத்திரன் 1986இல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது.

**சு.சமுத்திரம்**

ஊர் நெல்லை மாவட்டம் திப்பாணம் பட்டி, 1975இல் இவரது முதல் கதை, ”அங்கே கல்யாணம் இங்கே கலாட்டா” ஆனந்த விகடனில் வெளி வந்தது. குற்றம் பார்க்கில் (அங்கதக் கதைகள்), உறவுக்கு அப்பால், ஒரு சத்தியத்தின் அழுகை, காகித உறவு போன்றவை இவர்தம் சிறுகதைத் தொகுதிகள்

இவர்களே அன்றி தி.ஜ. ரங்கநாதன், துமிலன், தி.நா. சுப்பிரமணியன், சிட்டி.இ. சந்திர சேகரன், கரிச்சான் குஞ்சு, என்.ஆர். தாசன், எழில் முதல்வன், வ.ரா., சோமு, விந்தன், ஆர்.வி. நா. பார்த்த சாரதி,டி.கே.சீனி வாசன், மாயாவி, சுந்தர ராமசாமி, சுப்ரபாரதி மணியன், போன்றவர்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள். பெண் சிறுகதை ஆசிரியர்களில் குறிப் பிடத்தக்கவர்கள் அநுத்தமா, லஷ்மி (திரிபுரசுந்தரி) வேங்கட லஷ்மி, வசுமதி ராமசாமி, ராஜம் கிருஷ்ணன், ஆர். சூடாமணி, வாஸந்தி முதலியோர்.

**நடப்புக் காலச் சிறுகதை முன்னோடிகளுள் குறிப்பிடத்தக்கவர்கள்:**

கி.ராஜநாரயணன் (கதவு வேட்டி கரிசல் கதைகள் கன்னிமை. கொத்தைப் பருத்தி, அப்பா பிள்ளை அம்மா பிள்ளை), சுந்தர ராமசாமி (பள்ளம், அக்கரைச் சீமையில், பிரசாதம், பல்லக்குத் தூக்கிகள், மேல் பார்வை), வண்ணதாசன் (விளிம்பில் வேரில் பழுத்தது, சமவெளி, கலைக்க முடியாத ஒப்பனைகள் கனவுநீச்சல்), கந்தர்வன் (சாசனம், கொம்பன்). கோணங்கி மதினிமார்கதை பொம்மைகள் உடைபடும் நகரம், கொல்லனின் ஆறு பெண்கள், உப்புக் காற்றில் மறையும் சிறுத்தை), பூமணி (உரிமைத் தாகம், மாற்றம், வயிறு, பொறுப்பு, பெட்டை), பொன்னீலன் (காமம் செப்பாது. நித்தியமானது), பாவண்ணன் (அடுக்குமாளிகை, வெளியேற்றம், நேற்று வாழ்ந்தவர்கள்),"

வண்ண நிலவன், அஸ்வகோஷ், அம்பை, ஆர். சூடாமணி, ச.தமிழ்ச் செல்வன், எஸ். ராமகிருஷ்ணன், ஜெயமோகன், சுப்ர பாரதிமணியன். பெருமாள்முருகன், ஜீ.முருகன், அழகிய பெரியவன், கண்மணி குண சேகரன், க.சீ.சிவக்குமார், பாப்லோ அறிவுக்குயில், விழி பா. இதயவேந்தன்.

இக்காலத்தில் சிறுகதைகள் வரம்பின்றிப் பெருகி வருகின்றன. பத்திரிகைகளில் மட்டும் ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ 5000 சிறுகதைகள் வெளிப்படுகின்றன சென்னையிலுள்ள "இலக்கியச் சிந்தனை" அமைப்பு. 1970 முதல் ஒவ்வொரு மாதமும் பத்திரிகைக் கதைகளில் ஒரு சிறந்த சிறுகதையைத் தேர்ந்தெடுப்பதுடன், ஆண்டு முழுதுக்குமான சிறந்த கதையைத் தேர்ந்தெடுத்துப் பாராட்டும் பரிசும் வழங்குகிறது. அக்கதைகள், ஆண்டுச் சிறப்புக் கதையின் தலைப்பில் தொகுதியாகவும் வெளியிடப் படுகின்றன மும்தாஜ் யாசினின் பசி 1979லும், திருப்பூர்க் கிருஷ்ணனின் சின்னம்மினி 1980லும், இரா. இரவிசங்கரின் அண்ணா சாலையில் ஓர் இந்தியன் 1996லும் சிறந்த கதைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி நடத்துகிறது. ஆனந்தவிகடன் வெள்ளி விழாச் சிறுகதைப் போட்டியில் அநுராதா ராமணனின் "சிறை" என்ற கதைக்கு 10000ரூ பரிசு வழங்கப்பட்டது. ஒரு பக்கக் கதைகள் என்றும் இவை அழைக்கப் பெறும் இன்லேண்ட் லெடர் கதை என ஆந்திராவில் இதனைக் குறிப்பிடுவர். அரைப் பக்கக் கதைகள் கூட வெளிவருகின்றன. இக் கதைகள் கலைத்தன்மை குறைந்து, துணுக்குகள் போல உள்ளன. பசி என்ற புனைபெயருடைய பேரா. பரமசிவம் ஒரு பக்கக்கதைகள் பற்றி ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார். சோமு ஜெகசிற்பியன், மணிசேகரன் போன்றோர் தமிழ் நாடு அரசு பரிசு பெற்றவர்கள்.

**தொகுப்புரை :**

செய்யுள் உரைநடை அமைப்பிற்கு தமிழ் இலக்கியங்கள் மாறியது. 20 ஆம் நூற்றாண்டில் தமிழ் மரபுக்கவிதை, பாரதியாரில் தோன்றி புதுக்கவிதை எழுதாளர்களின் படைப்பு வரையில் அமைந்திருத்தது. வானம்பாடி, எழுத்து, மணிக்கொடி முதலான இதழ்கள் புதுக்கவிதை வளர்ச்சிக்கு வித்திட்டன. ஹைக்கூ கவிதை வடிவம் தோன்றியது. பம்மல் சம்பந்த முதலியாரிலிருந்து தமிழின் நாடக இலக்கியம் வளர்ச்சியுற்றது. நாவல், சிறுகதை ஆகிய உரைநடை வடிவ இலக்கியங்கள் தோன்றின

**பயிற்சி வினாக்கள் :**

1.பாரதியின் தந்தை, தாய் பெயர்கள் யாவை? சின்னச்சாமி அய்யர், இலக்குமி அம்மையார்

2 பாரதியின் முப்பெரும் பாடல்கள் யாவை?“

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம்.

3 மலரும் மாலையும்என்னும் நூல்யாரால் எழுதப்பட்டது. ? கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையால்.

4 “ஆசியஜோதி“யின் மூலநூல் எது“ அதன் ஆசிரியர் யார்? டுபைாவ ழக யுளயை, எட்வின் ஆர்னால்டு

5. நாஞ்சில் நாட்டு மருமக்கட்தாய முறையைக் கண்டித்து கவிமணியால் எழுதப்பட்ட இலக்கியம் யாது? மருமக்கள் வழி மாண்பியம்

6 மங்கையராகப் பிறப்பதற்கே என்ன செய்ய வேண்டும் என்று கவிமணி கூறுகிறார்?

மாதவம் செய்திட வேண்டும்

7. நாமக்கல் கவிஞரின் இயற்பெயர் என்ன? வெ. இராமலிங்கம்பிள்ளை

8 நாமக்கல்லார் காட்டுகின்றயுத்தம் எப்படிப்பட்டது? “கத்தியின்றி ரத்தமின்றி நடக்கும் அகிம்சை யுத்தம்“

9. பாரதிதாசன் வாழ்ந்தகாலம் எது“ 10. 1891-1964

10.பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?கனகசுப்புரத்தினம்

11. பாரதிதாசன் பாரதியாருக்குமுன் பாடிய முதல் பாடல் எது?எங்கெங்குக் காணினும் சக்தியடா

12. பாரதிதாசனின் புகழ்பெற்ற காவியங்கள் சிலவற்றைக் கூறுக பாண்டியன் பரிசு, சஞ்சீவிபர்வதத்தின் சாரல், அழகின் சிரிப்பு, எதிர்பாராத முத்தம், குடும்ப விளக்கு, இருண்ட வீடு

13. வாணிதாசனின் இயற்பெயர் என்ன? எதிராஜ்

14 சுரதா-பெயர்க்காரணம் விளக்கு சுப்புரத்தின தாசன் என்பதின் சுருக்கமே "சுரதா"வாகும்.

15. சுரதாவின் இயற்பெயர் என்ன ? இராசகோபால்

16. சுரதாவின் பிறந்தஊர் எது? தாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள பழையனூர்

17. உவமைக்கவிஞர் யார்? சுரதா

18. இராவணக்காவியம் யார் எழுதியது? புலவர் குழந்தை எழுதியது

19. கண்ணதாசனின் இயற்பெயர் என்ன? முத்தையா

20 அர்த்தமுள்ள இந்துமதம்" -யாரால் எழுதப்பட்டது? கவியரசு கண்ணதாசனால் எழுதப்பட்டது.

21. காந்தி மகான் கதையைப் பாடலாக எழுதி, மேடையில் பாடியவர் யார்? கொத்தமங்கலம் சுப்பு

# அலகு 5

**உரைநடை**

பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியம் 3500 ஆண்டுகளுக்கு முன்னரேயே உரைநடை தமிழில் வழங்கியமையை உறுதிப்படுத்தும். உரைநடையின் வகைகள் நான்கினைத் தொல்காப்பியர்,

“பாட்டிடை வைத்த குறிப்பினானும் பாவின் றெழுந்த கிளவியானும்

பொருள் மரபு இல்லாப் பொய்ம்மொழியானும் பொருளொடு புணர்ந்த

நகைமொழி யானும் என்று உரைவகை நடையே நான்கென மொழிப”

எனத் தெளிவுபடுத்துவார். உரையும் பாட்டும் விரவி வரும் இலக்கிய வகைமையினையும் அவர் குறிப்பிட்டு உள்ளார். தொன்மை தானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே பேச்சு வழக்கோடு தொடர்புடைய உரைநடையினைக் “கட்டுரை வன்மை“ என்று தொல்காப்பியர் சுட்டுவார். அவர் காலத்து உரை நடை இத்தகையது எனக் கூறப் பதிவுச் சான்று எதுவும் இல்லை. தகையது எனக் கூறப்பல் வகாரச் று எய்யுளோ, தனி உரைநடையோ காணப்படவில்லை. தகடூர் யாத்திரை என்ற நூல் உரைவிரவிய பாடலைக் கொண்ட சங்கக் கால நூல் என்பர்.) அதன் ஒருசில பாக்கள் மேற்கோள் களாகக் காணப்படுகின்றனவன்றி உரைப்பகுதி எதுவும் கிடைக்கவில்லை. சங்கப் பாக்களின்கீழ்க் காணப்படும் குறிப்புரைகளும், துறைகளும் பழந்தமிழ் உரைநடையைக் காட்டுகின்றன. எனினும் அவை மிகச் சிறிய அளவிலேயே உள்ளன. மற்றும் அவை சங்க மருவிய காலத்தில் எழுதப் பட்டவையாகலின் சங்ககாலத்தது எனக் கொள்ளற்கில்லை. சங்ககாலத்தைச் சார்ந்த கல்வெட்டுக்களால் ஓரளவு அக்காலத்திய உரைநடைப் பண்பு களைக் காண இயலும். ஆனால் பேச்சுத் தமிழில் உள்ள அக்கல்வெட்டுக்கள் வழுவும் பிழை பாடும் மிக்கனவாக உள்ளன. பாமரத்தனமான அவற்றை உயரிய உரைநடைப்பகுதியாக ஏற்றற்கில்லை. பேச்சு மொழியை ஆயவேண்டு மானால் மட்டுமே கல்வெட்டுமொழி உதவ முடியும்.

சங்கம் மருவியகால இலக்கியமான சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக உள்ளது. அங்குக் காணப்படும் உரைகள், உரைப்பாட்டு மடை, உரைபெறு கட்டுரை, கட்டுரை எனப் பல குறியீடு களோடு விளங்குகின்றன.) பல உரைப்பகுதிகள் பாட்டுப் போலவே உள்ளன. தொடக்கத்தில் அமைந்த உரைபெறு கட்டுரையில் உரைநடைத்தன்மை ஓரளவு விஞ்சியுள்ளது. உரைப்பாட்டு, கட்டுரை ஆகிய இரண்டும் வெவ்வேறானதாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். அவற்றுள் ஒன்றுஉரைச்செய்யுள்

அல்லது உரைவீச்சாகவும் ஏனையது உரைநடையாகவும் கொள்ளத் தக்கன. எனினும் தனித்த - செய்யுள் கலவாத உரைநடை, சிலம்பில் குறைவே.

உரை நூல் வரிசையில் முதலில் தோன்றியதாகக் கருதப்பெறும் இறையனார் களவியலுரை மிக விளக்கமாக அமைந்துள்ளது. இவ்வுரை கடைச்சங்க கால இறுதியில் உரைக்கப்பட்டு 14 தலைமுறை-கள் கழித்துக். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ஏட்டில் எழுதப்பட்டது என்பர். இவ்வுரையில் சிறிதும் பெரிதுமான தொடர்கள் அமைந்துள்ளன. சொற்பொருள் விளக்கம், வருணனை போன்ற சிறப்புக் கூறுகளை இந்நூல் கொண்டுளது. இதன் போக்கு, தனித்த உரைநடையாக இல்லாமல் உரைச்செய்யுளாக - உரை வீச்சாகக் காணப்படுகிறது.

"யாங்ஙனம் நிற்குமோ வெனின், சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து" இறையனார் களவியலுரை

கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து உரை நூல்கள் தமிழில் பல்கிப் பெருகின தொல்காப்பிய உரையாசிரியர்களாவார் இளம்பூரணர், தெய்வச் சிலையார், கல்லாடனார், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர். நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டிற்கும், சீவக சிந்தாமணிக்கும் கூட உரை இயற்றியுள்ளார்). சிலப்பதிகாரத்தின் சீரிய உரையாக அடியார்க்கு நல்லாருரையும், திருக்குறளின் உற்ற உரையாகப் பரிமேலழகர் உரையும் விளங்குகின்றன. வினாவும் விடையுமாகத் தர்க்கரீதியில் எழுதப்பட்ட உரைகள் பெரும்பாலும் நீண்ட தொடர்களைப் பெற்றுள்ளன. கற்றவர்க்கு மட்டுமே புரியக் கூடியவை இவை.

"புறக்காழன எனவே, அவ்வழி வெளிறென்பது அறியப்படும். அவை பனையும் தெங்கும் கமுகும் முதலாயின புல்லெனப்படும்' இருப்பையும் புளியும் ஆச்சாவும் மரமெனப்படும்" - பேராசிரியர் உரை.

உரையாசிரியர்களின் நடை சற்றுக்கடுமையானதாக இருப்பினும், உரைநடையை நன்கு வளர்த்து விட்டவர்கள் அவர்கள். செறிவும் காரண காரியப் பொருத்தமும் விளக்கமும் சான்றவையாக அவ்வுரைகள் உள்ளன. பல்லவர்காலத்து உரைநடையை அறிய உதவுவன பக்தி இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் இக்காலத்தில் சரிக்குச்சரி வடமொழிச் சொற்களும் தமிழ்ச் சொற்களும் கலந்த மணிப்பிரவாள நடை தோன்றியது. ஸ்ரீபுராணம் எழுதிய மண்டல புருடர்தாம் இத் தகையதொரு நடையைத் தோற்றுவித்தவர், சமண சமய நூலான கத்திய சிந்தாமணியும் மணிப்பிரவாள நடையிலானதே. சமணர்களால் தோற்றுவிக்கப்பட்ட இந்நடை, சோழர் காலத்தில், வைணவ

உரையாசிரியர்களால் பெரிதும் வளர்க்கப்பட்டது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் உரையாசிரியர்களான பெரியவாச்சாள் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, அண்ணங்கராச்சாரியார் போன்றோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

**மணிப்பிரவாள நடை** விலகத் தொடங்கிய நேரத்தில் மேலை நாட்டினரின் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. கிறித்துவ சமயக் குருமார்கள் பலர் தமிழ் நாட்டு மக்களோடு கலந்து வாழ்ந்தனர். தமிழர் களிடையே தம் மதத்தைப் பரப்ப வேண்டுமெனில், தமிழ் மொழியில் செய்திகளைத் தர வேண்டுமென எண்ணினர். கவிதையில் சமயக் கருத்துக்களைச் சொல் வதைக் காட்டிலும் உரைநடையில் கூறலே தக்கது எனக் கண்டு செயல் பட்டனர். அச்சுப் பொறியினை அறிமுகப்படுத்தியதோடு, எண்ணிறந்த உரைநடை நூல்கள் தமிழில் தோன்றவும் வழி வகுத்தனர். நீண்டநெடிய தொடர்களை விடுத்துச் சிறிய, எளிய தொடர்களைக் கையாண்டனர். தமிழ் மொழியும் தன் இறுக்கமான போக்கை விட்டு, நெகிழ்ந்து கொடுத்தது. இதன் காரணமாக உரைநடை நூல்கள் பல பெருகின. உண்மையிலேயே உரைநடை பெருகுவதற்கு அச்சுப் பொறியே காரணம் வீரமாமுனிவர் தமிழ் வரிவடி வத்தை எளிமையாக்கி ஒழுங்குபடுத்தியமையும்) இடத்திற்கேற்ற நிறுத்தற் குறிகளை இடம்பெறச் செய்தமையும் உரைநடை விரைந்து வளரக் காரண மாயின. இதனால் வீரமாமுனிவரைத் தமிழ் உரைநடையின் தந்தை என்பர்.

இராபர்ட்டி நொபிலி, ஜி.யு. போப், வீரமாமுனிவர் முதலிய மேலை நாட்டினரும், இராமலிங்க அடிகளார், சிவஞானமுனிவர் போன்ற தமிழ் நாட்டு அறிஞர்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடையை நன்கு வளர்த்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலச் சொற்கள் பெரிய அளவில் தமிழில் ஊடுருவத் தலைப்பட்டன. ஏற்கெனவே வடமொழித் தாக்கத்தால் வாட்டமுற்றிருந்த தமிழ், ஆங்கிலக் கலப்பையும் தாங்க முடி யாமல் தத்தளித்தது. தமிழ் எனும் ஒளி இருண்டு போகாமல் காக்கும் பொருட்டுத் தமிழின்பால் இயல்பாக ஈடுபாடு கொண்டிருக்கும் இயற்கை. மறைமலையடிகளைத் தோற்றுவித்தது. எஞ்சியிருந்த மணிப்பிரவாளத்தின் மாயை அகலவும், ஆங்கிலக் கலப்பாம் பேய் ஓடவும் செய்த தனித்தமிழ் இயக்கம் கண்ட தகையாளர் மறைமறையடிகள். எம்மொழிக் கலப்பும் எம்மொழிக்குத் தேவையில்லை என்ற இறுமாறுப்புக்குரியராயினர், தமிழர். அவரைத் தொடர்ந்து தேவநேயப் பாவாணர், பெருஞ்சித்திரனார், தமிழ்க் குடிமகள், இரா. இளவரசு போன்ற தனித்தமிழ் இயக்கத்தைக் கட்டிக் காக்கும் தகையாளர் பெருகினர்) இன்று ஒருசொல் கூடக் கலப்பின்றி எழுதவும் பேசவும் வல்ல பலர் நம்மிடையே வாழ்கின்றனர். எனினும் இன்றும் கூடச் சிலர் கையாளும் தமிழில் வடமொழி ஒலிகளாக ஜ. ஸ.ஷ.கூடி,ஹ என்பன வடுக்களாகக் காணப்படுகின்றன. மேலை நாட்டார்களான

தத்துவபோதகர், வீரமாமுனிவர், சீகன்பால்கு, எல்லீசர், கால்டுவெல், இரேனியல், வின்சுலோ, போப் போன்றோர் ஆங்காங்கே அச்சுக்கூடம் ஏற்படுத்தியும் அருந்தமிழ் உரைநடையில் கிறித்தவக் கருத்துக்களைப் பரப்பியும், அகராதி, மொழி ஆராய்ச்சி, மொழிபெயர்ப்பு போன்ற நூல்களை ஆக்கியும் தமிழ் வளர உதவினர். இவர்களோடு சேர்ந்து அல்லது இவர்கட்குப் போட்டியாக - இந்து மதத்தைச் சேர்ந்தவர்களும் பல உரைநடை நூல்களைப் படைத்தனர். சிவஞானமுனிவர், இராமலிங்க அடிகளார், மறைமலை அடிகளார். விபுலானந்த அடிகளார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்.

சமயத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் உரைநடை இலக்கியங்களான சிறுகதை, புதினம் போன்றவை மேலைத்தாக்கத்தால் உருவாகி வளர்ந்தன. அதன் காரணமாக உரைநடை இலக்கியங்கள், கவிதை இலக்கியங்களை விடவும் மிகுதியான செல்வாக்குப் பெறத் தலைப்பட்டன.

அம்பலக்காட்டில் 1577இல் வெளியான கிருஸ்துவோபதேசம் என்ற நூலே தமிழில் அச்சான முதல் நூல் என்பர். இதுவே இந்தியாவில் அச்சிடப்பட்ட முதல் அச்சுநூலும் கூட. பேச்சுத்தமிழும் பழமொழிகளும் கலந்து எழுதப்பட்ட தத்துவ போதக சாமியின் உரைநடையே இக்கால நடையின் சாயலில் எழுதப்பட்டது. இவர்தம் நூல்கள் ஞான உபதேச காண்டம், ஞான தீபிகை, உபதேசசல்லாபம் முதலியவை. வீரமாமுனிவர் வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதகமறுத்தல், ஞானம் உணர்த்தல், திருச்சபைக்கணிதம், பரமார்த்த குருகதை, வாமன் கதை ஆகிய உரைநடை நூல்களை இயற்றினார். இவை தத்துவ போதக சாமியின் நடையை விடப் பண்பட்ட நடையில் அமைந்தன. 1716இல் சீகன் பால்கு தமிழ் - இலத்தீன் ஒப்பிலக்கண ஆய்வு என்ற நூலைப் பதிப்பித்தார்.

ஜி.யூ. போப் எழுதிய இங்கிலாந்து தேச சரித்திரம், கால்டு வெல் இயற்றிய தாமரைத் தடாகம், ஞானஸ்நானம், எல்லிஸ்துரை எழுதிய வீரமாமுனிவர் வரலாறு போன்றவையும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறந்த உரைநடை நூல்களாக வெளிவந்தவை.

தமிழைத்தாய் மொழியாகக் கொண்டவர்களான சிவஞான முனிவர், ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர், மறைமலை அடிகள், திரு.வி.க., கோபால கிருஷ்ண மாச்சாரியார், பண்டித மணி கதிரேசஞ்செட்டியார், கா.சு. பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, மு.வரதராசனார், தேவநேயப் பாவாணர், தெ.பொ.மீ. போன்ற பலரும் தமிழ் உரைநடைவளர்ச்சிக்காகப் பாடுபட்டுள்ளனர்.

**ஆறுமுக நாவலர்**

ஊர் யாழ்ப்பாணத்து நல்லூர். சைவவேளாள மரபினர். யாழ்ப் பாணம், சிதம்பரம் ஆகிய இடங்களில் தமிழ்க்கல்லூரிகள் நிறுவித் தமிழ் வளர்த்தார். சைவ வினா - விடை, சைவசமய நெறி உரை, திருமுருகாற்றுப் படை உரை, திருவிளையாடற் புராண வசனம், பெரிய புராணவசனம், பாரதம், கந்தபுராண வசனங்கள், சிவஞான போதச் சுருக்கம் போன்ற உரைநடை நூல்களை இயற்றினார். திரு வாவடுதுறை ஆதினம் இவருக்கு “நாவலர்“ எனப்பட்டம் வழுங்கியது. இவரது நடை இலக்கணப் பிழையற்ற தூய நடை ”வசன நடை கைவந்த வல்லாளர்” எனப் பரிதிமாற்கலைஞர் இவரைப் பாராட்டுவார். இவர் தமிழ்க் காவலர் என்றும் தற்காலத் தமிழ் உரை நடையின் தந்தை என்றும் போற்றப்படுவார். “வைதாலும் வழுவின்றி வைவார்“ எனச் சி.வை. தாமோதரம் பிள்ளை இவரைப் பாராட்டுவார்.இராமலிங்க அடிகளார். இவர் அருட்பா எழுதியதோடு சிறந்த உரைநடை நூல்களான மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருணிய ஒழுக்கம், உண்மை நெறி போன்ற உரைநடை நூல்களையும் தோற்றுவித்தார். இவரது உரைநடை நீண்ட தொடர்களைக் கொண்டது.

**சி.வை.தாமோதரம் பிள்ளை**

ஊர் யாழ்ப்பாணம் சிறுபட்டி. 1832இல் பிறப்பு, தந்தை வைரநாதப் பிள்ளை. இவர் பதிப்பித்த நூல்களாவன தொல்காப்பியம், நச்சினார்க்கினியர் சேனாவரையர் உரைகள், இறையனார் களவியல் உரை. வீரசோழியம் இலக்கண விளக்க உரை எனும் உரை நூல்கள், கலித்தொகை, சூளாமணி, தணிகைப்புராணம் போன்ற இலக்கியங் களின் உரைகள்.

**உ.வே.சாமிநாதையர் (1855- 1942)**

ஊர் உத்தமதானபுரம்’ தந்தை வேங்கட சுப்பையர், “தமிழ்த் தாத்தா“ என அழைக்கப்படும்) இவர் பெரும்பாலான பழந்தமிழ் நூல்களை அச்சிலேற்றியுள்ளார். மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித் திரம், புதியதும் பழையதும், கண்டதும் கேட்டதும், நினைவு மஞ்சரி போன்ற உரைநடை நூல்களை எழுதியுள்ளார். மாநிலக்கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றிய இவர் “என் சரித்திரம்“ என்னும் தமது வாழ்க்கை வரலாறு கூறும் நூலையும் வெளியிட்டுள்ளார். இவர்க்கு ஆங்கில அரசினர் ”மகா மகோபாத்தியாய என்னும் பட்டம் வழங்கினார். இவரைப் பாரதியார். குடந்தை நகர்க் கலைஞர் கோவே பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும் காலமெல்லாம் புலவர்வாயில் துதியறிவாய் எனப் பாராட்டினார்.

**வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்**

ஊர் திருவல்லிக்கேணி' ”உரையாசிரியச் சுக்கரவர்த்தி” எனப் பாராட்டப் பெறுபவர். தமிழ்ப் பேரகராதிக் குழுவில் 20 ஆண்டுகள் பணி யாற்றினார். பத்துப்பாட்டு, திருக்குறள், தண்டியலங்காரம், லில்லிபுத்தூரார் பாரதம்,கம்பராமாயணம் போன்ற நூல்கட்கு உரை எழுதியுள்ளார்.

**பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் (1881-1953)**

அண்ணாமலைப் பல்கலைத் தமிழ்ப்பேராசிரியர்: மிருச்ச கடிகம் என்ற வடமொழி நூலை ”மண்ணியல்” சிறுதேர் என்ற பெயரில் தமிழில் பெயர்த்து வெளியிட்டார். சுக்ரநீதி, உதயண சரித்திரம்,சுலோசனை. கௌடலியம் என்பனவும் இவர்தம் மொழி பெயர்ப்பு நூல்கள். திருவாசகத்தின் நீத்தல் விண்ணப்பம், திருச்சதகம் ஆகிய நூல்கட்கு உரைவரைந்தார். இவரது சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் ““உரைநடைக் கோவை” என்ற தலைப்பில் இருதொகுதிகளாக வெளிவந்துள்ளன. பண்டிதமணி, மகா மகோபாத்தியாய எனும் பட்டங்களைப் பெற்றுள்ளார். இவரது உரைநடையைக் கடுமையான பண்டித நடை என்பர்.

**கா.சுப்பிரமணிய பிள்ளை (1884-1945)**

தமிழ் நாட்டில் முதல் பட்டம் பெற்றவர். சட்ட நிபுணர், அண்ணாமலைப் பல்கலைத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். சைவக்குரவர் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியப் பொருளதிகாரம் அல்லது பழந்தமிழர் நாகரிகம் ஆகிய இவர்தம் உரைநடை நூல்கள் சிறப்புக்குரியவை.

**ந.மு.வேங்கடசாமி நாட்டார் (1884-1944)**

அகத்தியர், கபிலர், நக்கீரர் பற்றி அரிய நூல்களை வெளியிட்டுள்ளார். திருவிளையாடற் புராணம், சிலம்பு, மேகலை, அகநானூறு ஆகிய வற்றிற்குச் சீரிய உரைகள் வரைந்துள்ளார்.

**எஸ்.வையாபுரிப்பிள்ளை (1888-1956)**

இவர் தலைமையில் சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் ∴பேரகராதி (Tamil Lexicon) வெளியிட்டது. தமிழ்ச்சுடர் மணிகள், தமிழர் பண்பாடு, இலக்கியச் சிந்தனைகள், காவியகாலம், இலக்கிய உதயம் போன்ற தமிழ் உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

**மறைமலை அடிகள் (1883-1950)**

ஊர் நாகையை அடுத்த காடம்பாடி. தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வல்லவர். சுவாமி வேதாசாலம் என்ற தம் ச பெயரை மறைமலை அடிகள் எனத்தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டார். சீ தாம் நடத்திய ஞானசாகரம் என்ற இதழின் தலைப்பை அறிவுக் கடல் என மாற்றினார். வடமொழியும், ஆங்கிலமும் தமிழில் கலப்பினை ஏற்படுத்தியமையைப் பொறாது, அக்கலப்பினை எதிர்ப்பதற்கென்றே தனித்தமிழ் இயக்கம் கண்ட தகையாளர் மறைமலை அடிகளார்) இவர் சங்க இலக்கியங்களை மக்களிடையே பரப்பியதோடு,மேனாட்டுத் திறனாய்வு முறைகளையும் தமிழில் புகுத்தினார். ”மறைமலை ஒரு பெரும் அறிவுச்சுடர்’ தமிழ் நிலவு““ எனத் திரு.வி.க. இவரைப் பாராட்டியுள்ளார்.

**இவர் இயற்றிய நூல்கள்:**

முல்லைப் பாட்டு ஆராய்ச்சி, பட்டினப் பாலை ஆராய்ச்சி, குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி, திருக்குறள் ஆராய்ச்சி, சிவஞான போத ஆராய்ச்சி,மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், தமிழர்மதம், திருவாசக விரிவுரை, சாகுந்தலம் (மொழிபெயர்ப்பு நூல்), சிறுவர்க்கான செந்தமிழ் என்னும் தலைப்பில் பாடநூல்கள் நாகநாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள் என்னும் புதினங்களையும், திருவொற்றியூர் முருகர் மும்மணிக்கோவை, சோம சுந்தரக்காஞ்சியாக்கம் போன்ற கவிதை இலக்கியங்களையும் ஆக்கி யுள்ளார். கட்டுரை எழுதும் முறையை இவரது அறிவுக்கொத்து எனும் நூலில் விளக்குகிறார். இவர் எழுதிய ஆங்கில நூல் The Ancient and modern Poets. இவர் நடத்திய ஆங்கில இதழ் The ocean of wisdom.

**திரு.வி. கலியாண சுந்தரனார் (1883-1953)**

ஊர் திருவாரூர், பெற்றோர் விருத்தாசல முதலியார், சின்னம்மை, ஆசிரியர் யாழ்ப்பாணம் கதிரை வேற் பிள்ளை: வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.இவர் நடத்திய இதழ்கள் தேசபக்தன், நவசக்தி. இயற்றிய நூல்கள் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, முருகன் அல்லது அழகு, சைவத்திறவு, தமிழ்த்தென்றல் (சொற் பொழிவுகள்), தமிழ்ச் சோலை (பத்திரிகைத் தலையங்கங்கள்) மேடைத் தமிழ் (மேடைப் பேச்சுக்கள்), அருள்வேட்டல் (செய்யுள் நூல்).

இவரது உரைநடை சின்னஞ்சிறு தொடர்கள், வினா விடை வியங்கோள், வியப்புத் தொடர்கள், அடுக்குத் தொடர்கள், புதுச் சொல் லாக்கம்,உவமை, உருவகம் போன்றவற்றைக் கொண்டு தனித்தன்மையும் எளிமையும் சான்று விளங்கும். புதிய

உரைநடையின் தந்தை என்றும் தமிழ் மேடைப் பேச்சின் தந்தை என்றும் இவர் போற்றப் பெறுகிறார்.

**வ.சுப. மாணிக்கம்**

பிறந்த ஆண்டு 1917. ஊர் மேலைச்சிவபுரி. மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பணி ஆற்றியவர். நூல்கள் : வள்ளுவம், தமிழ்க் காதல், தொல்காப்பியப் புதுமை, கொடை விளக்கு, எந்தச் சிலம்பு, சிந்தனைக்களங்கள், இலக்கிய விளக்கம், ஒப்பியல் நோக்கு, நெல்லிக்கனி (நாடகம்) முதலிய 15 நூல்கள்.

**தமிழண்ணல்**

இயற்பெயர் இராம: பெரியகருப்பன். மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். நூல்கள் குழந்தைகள் இலக்கியம் (பாடல்), ஒப்பிலக்கிய அறிமுகம், சங்க இலக்கிய ஒப்பீடு, புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, அறிவியல் அறிமுகம் முதலியன.

**மயிலைசீனி வேங்கடசாமி (1900-1980)**

ஊர் மயிலாப்பூர்' தொடக்கப்பள்ளி ஆசிரியர்பணி. நூல்கள் : இறையனார் களவியல் ஆராய்ச்சி, அஞ்சிறைத் தும்பி, மறைந்து போன தமிழ் நூல்கள், புத்த ஜாதகக் கதைகள், பௌத்தக் கதைகள், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், கிருத்தவமும் தமிழும், தமிழர் வளர்த்த அழகு கலைகள், சமயம் வளர்த்த தமிழ் முதலியன.

**நா.வானமாமலை**

ஊர் நாங்குனேரி. ஆராய்ச்சி காலாண்டு இதழ் நடத்தினார். தமிழர் நாட்டுப் பாடல்கள், கட்ட பொம்மன் கதைப்பாடல்,தமிழர் வரலாறும் பண்பாடும். இயற்கைச் செல்வங்கள், விண்யுகம், ரப்பரின் கலியுகம்.

**ரா.பி.சேதுப்பிள்ளை (1896-1961)**

சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர். சொல்லின் செல்வர் என அழைக்கப்பட்டார்.) 25 நூல்கள் எழுதிய இவர், தமிழின்பம் என்ற நூலுக்காகச் சாகித்திய அகாடமி விருது பெற்றார்.

**நூல்கள்:** செந்தமிழும் கொடுந்தமிழும், திருவள்ளுவர் நூல் நயம், சிலப்பதிகார நூல்நயம், வீரமாநகர், தமிழ்விருந்து, கால்டுவேலர், தமிழ் நாட்டு நவமணிகள் முதலியவை. D. Litt பட்டம் பெற்றார்.

**ஔவை துரைசாமிப் பிள்ளை (1902-1981)**

ஊர் திண்டிவனம் : இவர் நூலாசிரியராகவும், உரையாசிரிய ராகவும் விளங்கினார்.கல்லூரிப் பேராசிரியர். நூல்கள் : மருள் நீக்கியார் (நாடகம்), சிலப்பதிகார மணிமேகலை, சேர மன்னர் வரலாறு, வரலாற்றுக் காட்சிகள், நந்தா விளக்கு, மத்த விலாசம் (மொழிபெயர்ப்பு) முதலியன. உரைகள் : யாசோதர காவியம், புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, நற்றிணை, சிவஞான போதம், திருவருட்பா முதலிய பல நூல்களுக்கு உரைவழங்கினார்.

**மா. இராசமாணிக்கனார் (1907-1967)**

ஊர் தஞ்சாவூர் : சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பணியாற்றியுள்ளார். நூல்கள்: மொகஞ்சதரோ, பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, தமிழக ஆட்சிக்கலைகள் வரலாறு, தமிழர் நாகரிகமும் பண்பாடும், தமிழர் திருமணத்தில் தாலி, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, கம்பர்யார், திருவள்ளுவர் காலம் முதலிய நூறுக்கும் மேற்பட்ட நூல்கள்.

**சி.இலக்குவனார் (1910-1973)**

நாகர் கோயில் இந்துக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியவர். தனித்தமிழ் நெறியாளர். 1965இல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டார். அதனால் பதவி பறிக்கப் பட்டது. பின் சென்னை மாநிலக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரானார். நூல்கள் : தமிழ்கற்பிக்கும் முறை, பழந்தமிழ், தொல்காப் பியம் ஆராய்ச்சி விளக்கம், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்.

**தா.ஏ. ஞானமூர்த்தி**

1911இல் பிறந்தார். குன்றக்குடி அடிகளார் “நூலறிவு புலவர்“ எனும் பட்டம் வழங்கினார். நூல்கள் : சிந்தாமணிச் செல்வம், அடிசிற்கினியாள், அவல வீரர்கள், சமணம் முதலியன அகில இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவர்.

**அ.ச. ஞானசம்பந்தன்**

பிறந்த ஆண்டு 1916, மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். நூல்கள் : இலக்கியக் கலை, இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும், அரசியர்மூவர், அகம், புறம், மகளிர் வளர்த்த தமிழ், கம்பன் புதிய பார்வை, தெள்ளாறு

எறிந்த் நந்தி முதலியன. 2000ஆம் ஆண்டில் குறள் பீடத்தின் பாராட்டும் பரிசும் பெற்றுள்ளார்.

**க.வெள்ளை வாரணர்**

ஊர் திருநாகேச்சுரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பணியாற்றினார். நூல்கள் : சங்ககாலத் தமிழ் மக்கள், பன்னிரு திருமுறை ஆராய்ச்சி, தொல்காப்பிய உரைவளம் முதலியன.

**பொற்கோ**

பிறந்த நாள் 09.06.1941. ஊர் திருச்சி மாவட்டம் இரும்புலிக் குறிச்சி. மொழியியல் துறையில் முனைவர்ப் பட்டம் பெற்றவர். தமிழ் மட்டுமின்றித் தெலுங்கு, வங்காளம், மலையாளம், சப்பான் ஆகிய மொழிகளிலும் புலமை உடையவர் அமெரிக்கா, பிரிட்டன், சப்பாள், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு மொழியாராய்ச்சி தொடர்பாகச் சென்று வந்திருக்கிறார். 1970-72இல் இலண்டன் பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராயிருந்த இவர், 24, 06.1999 முதல் 23.06.2002 வரை சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பணியாற்றினார். இவர் மேற்பார்வையின் கீழ் 30 பேர் பி.எச்.டி பட்டமும் ஏறத்தாழ 100 பேர் எம்..ஃ.பில் பட்டமும் பெற்றுள்ளனர்.

மொழியியல், தமிழ் இலக்கணம், ஒப்பிலக்கணம் தமிழ் இலக்கியக் கொள்கைகள், ஒப்பிலக்கியம், பாவியல் ஆகிய துறைகளில் வல்லுநர், பல ஆண்டுகளாகப் புலமை இதழின் பதிப்பாசிரியராக இருந்து வருகிறார்.

செந்தமிழ், மாற்றிலக்கணம், இலக்கண உலகில் புதிய பார்வை, நீங்களும் பிழையின்றி எழுதலாம், பொற்கோவின் கவிதைகள் முதலிய முப்பதிற்கும் மேற்பட்ட நூல்களையும், நூற்றுக்கணக்கான மொழியாய்வுக் கட்டுரைகளையும் படைத்துள்ளார்.

தமிழ் மொழி ஒப்பிலக்கணம், இலக்கியம், பண்பாடு ஆகியவை பற்றிய இவரது ஆங்கிலக் கட்டுரைத் தொகுப்பு (வுயஅடை ளுவரனநைள) 2001இல் வெளிவர உள்ளது.

**ம.ரா.போ.குருசாமி**

கோவை பூ.சா.கோ. கலைக் கல்லூரித் தமிழ்த் துறைத்தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். படைத்த நூல்கள்: 1. தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள், சங்ககாலம், சங்ககாலத்திற்கு முன், சிலப்பதிகாரச் செய்தி, முதற் காப்பியச் சிந்தனை, இராமாயணச் சிந்தனை, திரு.வி.க.. மாதவி முதலிய ஆராய்ச்சி நூல்கள். 2 மண்ணிலும் விண்ணிலும், அசாமிய இலக்கிய வரலாறு, தூயர் பிரான்சிஸ் அசிசி - மகாத்மா காந்தி

ஒப்பீட்டாய்வு முதலிய மொழி பெயர்ப்பு நூல்கள் முப்பதிற்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

**இ. சுந்தரமூர்த்தி**

2001ஆம் ஆண்டுக்குரிய திருவள்ளுவர் விருது தமிழக அரசால் இவருக்கு வழங்கப்பட்டது. தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தராய்ப் பதவி ஏற்றுள்ளார். திருக்குறள் யாப்பமைதியும் பாடவேறுபாடும், திருக்குறள் நடையியல், பாரதி நடையியல், நடையியல் அறிமுகம் முதலிய ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

**பல்துறை வளர்ச்சி**

**ஊடகங்களும் தமிழும்**

மொழியைத் தோற்றுவித்துக் கொண்டமை, மாந்த அறிவு வளர்ச்சி யின் முதற்படி தொடக்கத்தில் உணர்ச்சி ஒலிநிலையில் இருந்த மொழி. காலப்போக்கில் எழுத்தொலித் தொகுதிகளாக உருப் பெற்றது. பின் ஒலி எழுத்துக்களின் அடையாளமாக, வரிவடிவ எழுத்து தோன்றியது. இதனால் உயரிய இலக்கணங்களும் விழுமிய இலக்கியங்களும் மலரத் தொடங்கின. கல்லிலும் ஓலையிலும் செப்பேட்டிலும் அரிதின் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள், காகிதமும், அச்சுப்பொறியும் கண்டுபிடித்தபின் இலகு எளிமை எனும் நிலைக்கு மாறின. இதன் காரணமாக எளிய மக்களும் தேவையான நூல்களைப் படிக்கும் வாய்ப்புப் பெற்றனர். எட்டாக் கனி யாக இருந்த ஏட்டுக்கல்வியை யாவரும் எளிதின் நுகரும் அமுதமாக மாற்றியது அச்சுப்பொறி எதையும் மனனம் செய்து வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை மாறியது. அதனால் பாட்டின் இடத்தை உரைநடை பிடித்துக் கொண்டது.எண்ணிறந்த உரைநடை நூல்களும் இதழ்களும் பல்கிப் பெருகின இதழ்களேயன்றி வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற ஊடகங்களும் இன்றைய கருத்துப் பரிமாற்றத்திற்குப் பெரிதும் உதவுகின்றன. அறிவியல் வளர்ச்சியால் மக்கள் தொடர்பு ஊடகங்களும் பலப்பல வகையினவாகத் தோன்றிப் பயன்பட்டு வருகின்றன.

**1 இதழ்கள்**

உலக மொழிகளின் வரிவடிங்கள், சித்திர எழுத்து, ஆப்பு வடிவ மழுத்து எனப் பல வகை எழுத்து, வட்டெழுத்து, கண்ணெழுத்து, கோலெழுத்து களில் உருவாயின. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கல்லில் செதுக்க உளியும் ஓலைச்சுவடியில் பொறிக்க எழுத்தாணியும் பயன்படுத்தப்பட்டன. மைதொட்டு எழுதும் முறை, சிலப்பதிகாரக் காலத்திலேயே நடைமுறைக்கு வந்துவிட்டது. அன் அன்றே தாழை மடலில் செம்பஞ்சுக் குழம்பினைத் தொட்டுத்தொட்டுப் பித்திகை அரும்பால் மாதவி கோவலனுக்குக் காதல்

கடிதம் எழுதியிருக்கிறாள். இருப்பினும் பொதுமக்களுக்குரிய அறிவிப்புப் பலகைகளாக விளங்கியவை கல்வெட்டுக்களே.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் செர்மனியில் பிறந்த ஜான் கூடன் பர்க் அச்சுப்பொறியைக் கண்டுபிடித்தார் அச்சேறிய முதல் உலக நூல் பைபிள். 1554இல் போர்ச்சுக்கல்லில் தூத்துக்குடி வட்டாரப் பாதிரிமார்கள் லூசே தமிழ் வினா -விடை என்ற நூலை ரோமன் எழுத்துமுறையில் வெளியிட்டனர்.

கி.பி. 1578இல் ஜென் ரிக்ஸ் பாதிரியாரால் "டாக்டரினா கிறிஸ்டம்" (தம்பிரான் வணக்கம் என்ற முதல் தமிழ் நூல் வெளியிடப்பட்டது. இந்நூல்தான் இந்தியாவில் முதல்முதலில் தோன்றிய அச்சுநூல், நூல் களேயன்றி இதழ்கள் பல தோன்றவும் அச்சுப்பொறி வழிவகுத்தது.

ஒருவர் தனி ஒருவருக்கோ, பலருக்கோ தனிப்பட்ட முறையில் எழுது வதைக் கடிதம் என்பர். பலர்க்கும் பொதுவான அறிவிப்பாக ஒருவரோ குழுவோ வெளியிடுவதையே "இதழ்" என்கின்றோம். 1609ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட உலக ரெஜிஸ்டர் (லண்டன் டைம்ஸ்) என்ற தினசரியே முதல் உலக இதழ் உலகின் தொடக்கக் கால இதழ்கள், கெஜட் என்ற பின்னொட்டைப் பெற்றுப் பீகிங்கெஜட், இலண்டன் கெஜட், பெங்கால் கெஜட், மதராஸ் கெஜட், சிலோன் கெஜட் எனப் பெயர் கொண்டிருந்தன.

இந்தியாவின் முதல் இதழான வங்காள கெஜட் 29.01.1750இல் கல்கத்தாவில் தொடங்கப்பெற்றது. அது ஜேம்ஸ் அகஸ்டஸ் இக்கே என்னும் ஆங்கிலேயரால் வெளியிடப்பட்டது. கி.பி. 1802இல் இலங்கை யில் "சிலோன் கெஜட்" என்னும் இதழ், தமிழ் சிங்களம் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் வெளிவந்தது.)

12.08.1783இல் சென்னை கூரியர் (Madras Courier) என்ற சென்னை மாகாண முதற்செய்தித்தாள் ஆங்கிலத்தில் வெளிவந்தது. 1878இல் ஜி. சுப்பிர மணிய ஐயரால் இந்து (The Hindu) எனும் முதல் ஆங்கில வார இதழ் தொடங்கப் பெற்றது. காலப் போக்கில் அது ஆங்கில நாளிதழாக மாறியது.தமிழ்இதழ்களின் வரலாற்றை மூன்று காலக்கட்டங்களாகப் பிரிக்கலாம்.

1. தொடக்கக்கால இதழ்கள் (1830-1900)

2 இருபதாம் நூற்றாண்டின் முதல்பாதியில் தோன்றியவை அல்லது விடுதலைப் போராட்ட கால இதழ்கள்.

3. விடுதலைக்குப் பின்னைய இதழ்கள்

"தமிழ் இதழ்கள் முதலில் மாத இதழாகவும் மாத இருமுறை, மாதமும் முறை இதழ்களாகவும் வார இதழாகவும், நாளிதழாகவும் தோன்றியுள்ளன." தமிழ் இதழியல் வரலாறு, மா.சு.சம்பந்தம், பக். 28-29) தமிழ் இதழியல் உலகில், தொடக்கத்தில் பலதுறை அறிவு மிக்கவர்கள் ஆசிரியர்களாக இருந்தனர். அடுத்து, தமிழ் மரபு அறிந்தவர்கள் ஆசிரியர் களாயினர். பின்னர் அரசியல் செல்வாக்குள்ளவர் ஆசிரியர்களாக அமர்ந் தனர் அதன் பின்னர் அரசியல் அறிவு மிக்கவர்களும், மொழியறிவும் உலகியல் அறிவும் நிரம்பியவர்களும் ஆசிரியர்களாக வந்தனர்.

1830இல் தமிழின் முதல் இதழ், "தமிழ் மாகஸின்" (The Tamil Magazin) எனும் பெயரோடு வெளிவந்தது. இது சென்னையிலிருந்த கிறித்தவ சமயப் பரப்புக் கழகத்தால் (The Madras Christian Tract Society) தொடங்கப்பெற்ற மாத இதழ், கிறித்தவப் பாதிரிமார்களே தமிழிதழ்களை முதலில் தொடங்கி நடத்தினர். பின் கிறித்தவ இதழ்களுக்குப் போட்டி யாகக் "கிரஸெண்ட்" (The Gescent) என்ற தமிழிதழ் 1844இல் இலட்சுமி நரசிம்மலு செட்டி என்பவரால் தொடங்கப்பட்டது.

முதலில் வெளியான தமிழ் மாத இருமுறை இதழ் உதய தாரகை (1841). முதல் மாதமும்முறை இதழ் லோகோபகாரி (1895), முதல் வார இதழ் தினவர்த்தமானி (1851). முதல் காலாண்டு இதழ் "ஜந்து வர்த்தமான சாரம்" (1900). முதல் அரையாண்டு இதழ் தமிழ் விவசாய சஞ்சிகை (1938). முதல் ஆண்டு இதழ் அறிவுச்சுடர் (1941).

1882இல் முதல் தமிழ் அரசியல் வார இருமுறை இதழாகத் தொடங்கப் பட்ட சுதேச மித்திரன், காலப் போக்கில் நாளிதழாக மாறியது. சுதேச மித்திரனே தமிழில் தோன்றிய முதல் நாளிதழ். ஆனால் மா.சு சம்பந்தன் தமிழின் முதல் தமிழ் நாளிதழாகத் தியாகநாடு (1880) என்னும் இதழையும், இரண்டாவது இதழாக இலங்கைத் தினவர்த்தமாளியையும் (1886) மூன்றாவதாகச் சுதேச மித்திரனையும் சுட்டுகிறார். சி. சுப்பிரமணிய பாரதியார் சுதேசமித்திரனின் துணையாசிரியராகப் பணியாற்றினார்.

1841இல் யாழ்ப்பாணத்தில் தோன்றிய உதய தாரகை என்ற மாத இதழே, இலங்கையின் முதல் தமிழ் இதழ் இது தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்தது. 1855இல் தினவர்த்தமானி எனும் முதல் வார இதழ் சென்னையில் தோன்றியது 1845இல் உரைகல் (Touch Stone) என்னும் கிறித்தவ சமயக் சுத்தோலிக்கப் பிரிவின் முதல் இதழ் கொழும்புவில் தோற்றுவிக்கப் பட்டது. 1835இல் பாலியர் நேசன் என்னும் முதல் சிறுவர் இதழ் யாழ்ப் பாணத்தில் தொடங்கப்பட்டது.

1873இல் புதினாலங்காரி என்னும் முதல் இசுலாமிய இதழ் வெளி வந்தது. 1877இல் இலங்கை நேசன் எனும் முதல் சைவ சமய இதழ் திரு. செ. சின்னத்தம்பியால் வெளியிடப்பட்டது.

1886இல் இலங்கைத் தினவர்த்தமானி எனும் முதல் நாளேடு திரு. ரி.எஸ். இராஜீப் பிள்ளையால் இலங்கையில் தொடங்கப்பட்டது. தமிழகத்தில் தோன்றிய முதல் வைதீக இதழ் தத்துவ போதினி (1864). முதல் சைவ சமய இதழ் ஞானமித்திரன் (1891). முதல் வைணவ இதழ் திராவிட பாகவதன் (1914). முதல் சன்மார்க்க இதழ் சன்மார்க்கப் போதினி (1888). முதல் சமண சமய இதழ் தருமசீலன் (1918). முதல் கடவுள் மறுப்பு இயக்க நாளேடு, விடுதலை (1925) (இது உலகின் முதல் கடவுள் மறுப்பு இதழ்).

காலமுறை இதழ்ப்பகுப்பு (இதழ்களைக் கால அளவு அடிப்படையில் நாளிதழ், வார இதழ். பிறை இதழ் (மாத இருமுறை இதழ் மாத இதழ், பருவ இதழ் (காலாண்டு, அரையாண்டு) ஆண்டிதழ் எனப் பகுக்கலாம்

முதலில் தோற்றுவிக்கப்பட்ட நாளிதழ்களுள் தியாக நாடு, சுதேச பரிபாலினி, சுதேசமித்திரன், திராவிடன், தமிழ்நேசன், தமிழ் முரசு, வீரகேசரி, தமிழ்நாடு, தினமணி ஆகியவை பல ஆண்டுக் காலம் தொடர்ந்து நடத்தப் பெற்றவை. இவற்றுள் சுதேசமித்திரன் நூற்றாண்டு விழாவை எட்டியது.

மாத இதழ்களில் பொன்விழாவைக் கண்டவை: செந்தமிழ், தமிழ்ப் பொழில், செந்தமிழ்ச் செல்வி, இராமகிருஷ்ண விஜயம், ஈழகேசரி, கலைமகள், அமுத சுரபி, கலைக்கதிர் போன்றவை. தொடக்கக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தவை: தினவர்த்த மானி, ஜன விநோதினி, லோகோபகாரி, மகாராணி, ஆனந்த போதினி, தமிழ்நாடு, தேசபக்தன், திராவிடன், இந்தியா, நவசக்தி, குடியரசு, காந்தி.காவேரி முதலியன.

பிற்காலத்தில் சிறப்புப் பெற்றவை: சுதேச மித்திரன், தமிழ் நேசன். வீரகேசரி, தமிழ்முரசு, தினமணி, தினமலர், முரசொலி, தினகரன், அண்ணா முதலியவை.

மாத இதழ்களில் சிறப்புடையவை: செந்தமிழ், தமிழ்ப்பொழில் செந்தமிழ்ச் செல்வி, கலைமகள், அமுத சுரபி போன்றவை.வார இதழ்களில் புகழ் பெற்றவை: ஆனந்த விகடன், கல்கி, குமுதம், குங்குமம், சாவி, இதயம் பேசுகிறது. தாய் போன்றவை. விகடன் பொள்விழாக் கொண்டாடியுளது.

பொருள் வகை இதழ்ப்பகுப்பு இலக்கிய இதழ்கள், பொழுதுபோக்கு இதழ்கள், அரசியல் இதழ்கள். சிறுவர் இதழ்கள், மகளிர் இதழ்கள் ஆகியனவேயன்றிச் சோதிடம், அறிவியல், மருத்துவம், கல்வி, வாணிபம், விளையாட்டு, சமயம், திரைப் படம், புலனாய்வு முதலிய துறைசார்ந்த இதழ்களும் பொருளடிப்படை யில் பிரிந்து நிற்கும் இதழ்களாகக் கருதத்தக்கன.

**இலக்கிய இதழ்கள்**

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், ஆக்கத்திற்கும் பெரிதும் பயன்படக் கூடியவை இலக்கிய இதழ்கள் எனப்படும். பொழுதுபோக்கு இதழ்களிலும் இலக்கியத்தின் தாக்கம் பரவலாகக் காணப்படும். இலக்கியம், இலக்கிய விமரிசனம் போன்ற துறைகளின் வளர்ச்சிக்குச் சனரஞ்சக இதழ்களை விடச் சிற்றிதழ்களே பெரிதும் பாடுபட்டு வருகின்றன. (கசடதபற. வானம்பாடி, எழுத்து, வல்லினம் முதலியன)

**இதழ்வழிக் கவிதை வளர்ச்சி**

மரபு கவிதைகளாலான தனி இதழ்களைப் பாரதிதாசன் முதலியோர் நடத்தினர் . அவற்றுள், கவிதை, முல்லைச்சரம், குயில் (பாரதிதாசன்) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இதழ்களில் மரபு கவிதைகளைக் காட்டிலும் புதுக்கவிதைகளே பெரிதும் செல்வாக்குப் பெற்றுள்ளன. புதுக்கவிதையின் தோற்றமே இதழ் களிலிருந்துதான் தொடங்குகிறது.

**இதழ்களும் சிறுகதைகளும்**

தமிழ்ச் சிறுகதைகளின் தோற்றத்திற்கு அடிகோலியவை இதழ்களே பாரதியாரின் சிறுகதைகள், சிறுகதைக்குரிய முழுமையினை எய்தாத நிலையில் இதழ்களில் வெளிவந்தன மாதவையா சிறுகதைகள் "பஞ்சா மிர்தம் என்னும் அவரது பத்திரிகையில் வெளியிடப்பட்டன. இக்கதை களையும் முழுமை பெற்ற சிறுகதைகள் எனக் கூறார். சிறுகதையின் தந்தை என்று அழைக்கப்பெறும் வ.வே.சு. ஐயர் தேசபக்தன் என்ற இதழின் ஆசிரியர். சிறுகதை பற்றிய இவரது கட்டுரை (1918) சரஸ்வதி இதழில் 10.10.58ஆம் நாளன்று வெளி யிடப்பட்டுளது.

முதலாம் உலகப்போரின் பின் சாதி ஒழிப்பின் அவசியம், இந்திய ஒற்றுமை, தொழிற்சங்க அவசியம் தொழிலாளர் ஒற்றுமை, கதர் அணிய வேண்டிய அவசியம் கள்ளுக்கடைமறியல் முதலியவை பற்றிய செய்திகளைப் பத்திரிகைகள் எழுதத் தொடங்கின. காந்தியின் இக்கொள்கைகளைத் தமிழகத்தில் பரப்புதற்குக் கவிதைகளைப் போலச் சிறுகதைகளும் பயன்பட்டன. தமிழில் இப்பணியைச் செய்த பத்திரிகைகளாவன: வரத் ராஜிலு நாயுடுவின் தமிழ்நாடு, திருவிக வின் தேசபக்தன், நவசக்தி, டி எஸ் சொக்கலிங்கத்தின் காந்தி, சங்கு, கணேசளின் சுதந்திரச் சங்கு. சீனிவாசனின் மணிக்கொடி வாசனின் ஆனந்த விகடன் முதலியனவும், ஹனுமாள், பாரததேவி, பாரதமணி, ஆனந்தபோதினி, சுதேசமித்திரன். கலைமகள் முதலியளவும் ஆம். தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் இதுவே முக்கியமான காலக்கட்டம்.

சிறுகதையின் அகல வளர்ச்சிக்குக் காரணமானவர், சுல்கி' ஆழ வளர்ச்சிக்குக் காரணமானவர்கள் மணிக்கொடிக் குழுவினர். இவ் இரு குழுவினரையும் ஒட்டியே சிறுகதை தமிழில் வளர்ந்துள்ளது. (கா. சிவத்தம்பி தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் ப.32) காந்தி, சுதந்திரச் சங்கு போன்ற பத்திரிகைகளில் சிறுகதைகள் இடம் பெற்றன வெளினும், அவை இலக்கியச் சோதனையைத் தம் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகக் கொள்ளவில்லை. மணிக்கொடியே இக்குறிக் கோளுடன் தோன்றிய முதல் இதழ், பி.எஸ். ராமையா, ந. பிச்சமூர்த்தி, பொகோ சுந்தராஜன், புதுமைப்பித்தன் போன்றோர் தொடக்கக் கால மணிக் கொடியிலும் குப ராஜகோபாலன், சி.சு. செல்லப்பா, இளங்கோவன், சிதம்பர சுப்பிரமணியன், பி.எம். கண்ணன், மௌளி போன்றோர் இரண்டாவது காலக்கட்ட மணிக்கொடியிலும் தம் சிறுகதைகளை வெளியிட்டுள்ளனர்.

விடுதலை பெற்ற தமிழகத்தில் முதலில் பொழுதுபோக்கு நோக்க முடைய - குறிக்கோளற்ற இதழ்கள் தோன்றின. குமுதம், குங்குமம் முதலிய பத்திரிகைகள் இத்தகையன. திராவிட இயக்கத்தினர் திரைப் படத்தில் தம் கொள்கைகளை வெளிப்படுத்தினர். ஆனால் சிறுகதைகளில் அவ்வளவாக ஊக்கம் காட்டவில்லை.

விந்தன். அகிலன் போன்றோர் பத்திரிகைகள் மூலமாகவும் சிறுகதைத் தொகுதிகள் மூலமாகவும் நல்ல தரமுடைய சிறுகதை களை வெளியிட்டனர். கல்கி, ஆனந்தவிகடன் போன்ற பத்திரிகைகள் சிறுகதை விமரிசனங்களை வெளியிடத் தொடங்கியதால் சிறுகதையின் தரம் மீண்டும் உயர்ந்தது. இந்நிலையில், ஜானகிராமன் லா.ச ராமாமிருதம் போன்றோரின் தரம் மிக்க கதைகள் தோன்றின.

1958இற்குப் பின் முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்குத் தொ.மு.சி. ரகுநாதன் நடத்திய சாந்தி, விஜய பாஸ்கரன் நடத்திய சரசுவதி, பொது வுடைமைக் கட்சி நடத்தி வரும் தாமரை போன்ற இதழ்கள் காரணமாயின. இவ்விதழ்களில் எழுதிய செயகாந்தன், சுந்தர ராமசாமி, வையவன் முதலியோர் வரலாற்றுச் சிறப்புடைய புதிய பரம்பரையினராகத் திகழ் கின்றனர். இன்றும் தொடர்ந்து சிறுகதைகளையும், அவை பற்றிய விமர்சனங் களையும் சிற்றிதழ்களும், பேரிதழ்களும் வெளியிட்டு வருகின்றன.

இவ்வரலாற்றை நோக்கும் போது, சிறுகதைத் தொகுதிகளை விட இதழ்களே சிறுகதையின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படை யாய் விளங்குதல் புலப்படும்.

**இதழ்களும் புதினங்களும்**

முதற் புதினமான பிரதாப முதலியார் சரித்திரம் தனி நூலாக வெளிவந்தது. எனினும் இரண்டாம் புதினமான கமலாம்பாள் சரித்திரம் (பி.ஆர் ராஜம் ஐயர்) விவேக சிந்தாமணி எனும் இதழில் தொடர்கதையாக வெளிவந்தது. அன்றிலிருந்து இன்று வரை

இலக்கியப் பொழுதுபோக்குப் பத்திரிகைகளில் தொடர்ந்து புதினங்கள் தொடர்கதைகளாக வெளியிடப் பட்டு வருகின்றன.

தொடர்கதைகள் அலுப்புத்தட்டவே, தனித்தனி நாவல்கள் மாத இதழ்களாக வெளிவரத் தொடங்கின. இவை குட்டி நாவல்களாகவும் இரு நாவல்களாகவும் விளங்கின (பார்க்க: கூட்டு நாவல்கள், குட்டி நாவல்கள் சிறுகதை, புதுக்கவிதை ஆகியவற்றின் வளர்ச்சிக்கேயன்றிப் புதின வளர்ச்சிக்கும் இதழ்கள் பெரிதும் உதவியமை தெளிவு.

துணுக்குகள், விளம்பரங்கள் போன்ற புதிய இலக்கியத் தடங்களை யும் இதழ்கள் உருவாக்கின. துணுக்குகள் பொது அறிவு, நகைச்சுவை உணர்வு போன்றவற்றை வளர்த்தன. விளம்பரங்கள் அழுத்தமான கவர்ச்சி கரமான நடை உருவாக்கம் அமைய வழிகாட்டின.

புலமை, வைகை, தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி முதலிய ஆராய்ச்சி இதழ்கள் இலக்கிய - இலக்கண ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவன.

**வானொலி**

மார்க்கோணி வானொலியைக் கண்டுபிடித்தபின் முதலாம் வானொலி நிலையம் பிர்ஸ்பர்க் எனும் அமெரிக்க நகரில் 1920ஆம் ஆண்டு உரு வாக்கப்பட்டது. இன்று உலகில் பி.பி.சி (டீ.டீ.ஊ) அமெரிக்க வானொலி நிலையம் போன்ற தரம்மிக்க வானொலி நிலையங்கள் தோன்றி 24 மணி நேரமும் பணியாற்றுகின்றன. இந்தியாவில் மட்டும் 150க்கும் மேலான வானொலி நிலையங்கள் உள்ளன.

வானொலி பெரிதும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. தமிழகத்தில் சென்னை, மதுரை, திருச்சி, கோவை. திருநெல்வேலி போன்ற இடங்களில் வானொலி நிலையங்கள் உள்ளன. தமிழ்ச்சேவை, வண்ணமணி மாலை. இசை நிகழ்ச்சி புதினப்பக்கம் போன்ற தொடர் நிகழ்ச்சிகள் நாள்தோறும் தமிழ்ப் பணிக்காக மேற் கொள்ளப்படுகின்றன.

பாமரரும் பயன்படுத்திக் கொள்ளும் மலிவான சாதனமாக வானொலி திகழ்கிறது. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் வானொலி என்னும் ஒலி ஊடகம் செவிப்புல நுகர்வினை அடிப்படையாகக் கொண்டது) முற்காலத்தில் அரங்கேற்றுதல் கற்றுக் கொடுத்தல், ஒப்பு வித்தல், போன்றவை செவிப்புலன் வழியே கருத்துப்பரப்பலை மேற் கொண்டிருந்தன. அவ்விடத்தை வானொலியும் ஒலி நாடாவும் இன்று பிடித்துக் கொண்டன.நேரத்தை அடிப்படையாகக் கொண்டு வானொலி நிகழ்ச்சிகள் பகுக்கப்படும் கல்வி, மருத்துவம் வேளாண்மை போன்ற துறை சார்ந்த அறிவு வளர்ச்சிக்குப்

பாடுபடுவதோடு பாடல், நாடகம், கதை கூறல் முதலிய இலக்கியக் கலை வளர்ச்சிக்கும் வனொலி பெரிதும் பயன்படுகிறது.

பட்டிமன்றங்கள், சொற்பொழிவுகள், நாட்டுப்புறப் பாடல்கள், பக்திப் பாடல்கள், இசைப்பாடல்கள், புதுக்கவிதைகள் போன்ற சுவையான பகுதி களும் வானொலியில் இடம்பெற்று வருகின்றன. சிறந்த அறிஞர்களையும் படைப்பாளிகளையும் பேட்டி கண்டு ஊக்குவிக்கின்றனர்.

**தொலைக்காட்சி**

1837இல் தொலைவரி (தந்தி) சாமுவேல் மோர்சு என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. தொலைக்காட்சியின் தந்தை என்று அழைக்கப்படும் விலாடிமிர் ஜொரிகள்" ஒளி அலைகளை மின் அலைகளாக மாற்றினார். ஜே.எல். போர்டு 1924இல் தொலைக்காட்சிப் பிம்பத்தைக் கண்டு பிடித்தார்.

1929இல் பி.பி.சி. முதன்முதலில் தொலைக்காட்சியை ஒளி பரப்பத் தொடங்கியது. 1954இல் வண்ணத் தொலைக்காட்சி நிலையம் அமைக்கப் பட்டது.

இந்தியாவில் 15.9.1959இல் புதுடில்லியில் தொலைக்காட்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டது 15.8.1975இல் தமிழகத்தில் தொலைக்காட்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. முதலில் இந்தி நிகழ்ச்சிகள் மிகுந்திருந்தன. தமிழகத்தில் சன், ஜெயா, விஜய், ராஜ். கே போன்ற தனியார் தொலைக் காட்சி நிலையங்கள் தோன்றியபின் செல்வாக்குச் சரிவதைக் கண்ட அரசு தொலைக்காட்சி நிறுவனம் தானும் இந்தி ஆதிக்க உணர்வை விடுத்துத் தமிழில் முழுதும் ஒளிபரப்ப முற்பட்டது.

கட்புலன் மற்றும் செவிப்புலன் நுகர்ச்சிக்குப் பயன்படுதலால். தொலைக்காட்சி, திரைப்படம் போலவே ஆற்றல் மிக்க ஊடகமாக மாறியது. தமிழ்ச்சொற்பொழிவுகள், பட்டிமன்றம், கலை நிகழ்ச்சிகள். வழக்காடு மன்றங்கள், நாடகங்கள், திரைப்படம், பேட்டி காணுதல், தொடர் நாடகங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சி நிறுவனங்கள் அமைத்துக் காட்டுகின்றன. சங்க இலக்கியம் முதல் இன்றைய புதுக்கவிதை வரை எல்லா வகையான இலக்கியங்களையும் எளிமையான அறிந்து கொள்ளுமாறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்படுகின்றன. சித்தி, அண்ணாமலை போன்ற தொடர் நாடகங்கள் சின்னத்திரையில் செல்வாக்குப் பெற்றவை.

**திரைப்படம்**

நாடக வளர்ச்சியின் உச்ச நிலையே திரைப்படம் 1895இல் லூமியர் சகோதரர்கள் பேசாப்படத்தைத் திரையில் காட்டினர். 1927இல் அது பேசும் திரைப்படமாக மாறியது.41913இல் பம்பாயில் ராஜா அரிச்சந்திரா என்ற பேசாப்படம்

முதன் முதலாகக் காட்டப்பட்டது. 1931இல் ஆலம் ஆரா எனும் பேசும் படத்தைப் பம்பாயைச் சார்ந்த தாதாசாகிப் தாகே என்பவர் உருவாக்கினார். தமிழில் 1917இல் நடராச முதலியார் கீசகவதம் என்ற பேசாப்படத்தை வெளியிட் டார். பேசும்படமாக 1933இல் சீதாக்கல்யாணம், வள்ளி போன்றவை வெளிவந்தன. தமிழ்த்திரைப் படங்களைப் பக்திப்படம், வரலாற்றுப்படம், சமூகப் படம் என முப்பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம். பக்திப்படம்: திருவிளையாடல், ஆதிபராசக்தி, வள்ளி திருமணம். பக்தகுசேலா முதலியன.

வரலாற்றுப்படம்: வீரபாண்டிய கட்டப் பொம்மன், இராசராச சோழன், மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் முதலியன

**சமூகப்படம்**: பராசக்தி, பாசமலர் முதலியன பழமொழிகள், வட்டார வழக்குகள், விடுகதைகள் போன்றவை திரை உரையாடல்களில் மிகுந்துள்ளன.

திரைப்படத் தோற்றத்தால் மேடை நாடகங்களும், தெருக்கூத்துக் களும் தம் செல்வாக்கை இழந்தன. திரைப்பட நடிகர்களான எம்ஜிஆர். செயலலிதா. ரஜினி போன்றோர் அரசியலில் செல்வாக்குப் பெறத் திரைப் படமே காரணம், தமிழ்நாடு திரைக்கு அடிமையாகி விட்டமையை இதனால் உணரலாம். இப்போது தொலைக்காட்சி, திரையின் செல்வாக்கை மட்டுப்படுத்தி வருகிறது.

திரைப்படப் பாடல்கள், “மெல்லிசை“ என்ற புதியவகை இசைப் பாடல்களை உருவாக்கியுள்ளன. சாத்திரிய இசையான கருநாடக சங்கீதத் திற்கும், பாமரனின் இசையான நாட்டுப்புறப் பாடல்களுக்கும் இடை நிகர்த்த ஒருவகை நடையை இவை பின்பற்றுகின்றன.

கதை வசனங்கள் பேச்சு மொழியில் அமைதலால் அவ்வவ் வட்டார வழக்காறுகள் திரையில் பேணப்படுகின்றன. வீரபாண்டிய கட்டப் பொம்மன், பராசக்தி, இராசராசசோழன், திருவிளையாடல் போன்ற திரைப் படங்களில் அடுக்கு மொழிகளோடு கூடிய செவ்வியல் உரைமுழக்கம் நிலவுகின்றன. இவற்றின் உரையாடல்கள் உயர்தரம் சான்றவை. நாவல்கள் பல திரைக்கதைகளாக உருவாக்கப்பட்டன. (காட்டு: பெற்ற மனம்)

நாடகத்துறை வளர்ச்சிக்கேயன்றி இயல், இசை ஆகிய பிற துறை களிலும் தமிழ் செம்மாந்து நிற்கத் திரைப்படம் காரணமாயிற்று.

**நாட்டுப்புற இலக்கியம்**

நாகரிக மக்களின் மரபுவழிப் படைப்புக்களும், நாகரிகமுறாத பழங்குடி மக்களின் மரபு வழிப்படைப்புக்களும் நாட்டுப்புற இலக்கியங்கள் ஆம் என்பார், மரியாவீச் (Standard Dicshnary of Folklore) நாட்டுப்புறப் பாடல்கள் பற்றி ஆறு அழகப்பன் (நாட்டுப்புறப் பாடல்கள்) கூறுவதாவது.நாட்டுப்புறப் பாடல்கள் என்பவை பெரும்பாலும் எழுத்தறி வில்லாத நாட்டுப்புறத்து மக்களிடையே தொன்றுதொட்டு வழங்குபலை லை. செவி வழியாகவே தலைமுறைதோறும் அவை நீடித்து வந்துள்ளன. எழுத்து வடிவில் யாரும் அதனை எழுதி வைத்திருக்கவில்லை. இயற்கை யோடு இயைந்த வாழ்க்கை நடத்தும் மக்களின் உள்ளக் கிளர்ச்சிகளை வெளியிடும் தன்மை வாய்ந்தவை. அவை மக்களின் பாடல்கள், அந்தந்தப் பகுதி மண்ணுடன் வளர்ந்து வளம் பெற்றவை.

மேற்கூறப்பட்டவை நாட்டுப்புறப் பாடல்கட்கேயன்றி எல்லா வகை நாட்டுப்புற இலக்கியங்கட்கும் உரிய பொதுவான பண்புகளாகும். நாட்டுப்புற இலக்கியங்கட்கு ஆசிரியர்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால் பெயர் தெரியாது. எக்காலத்தைச் சேர்ந்தவை என்றும் உறுதி யாகக் கூறமுடியாது. ஏட்டிலக்கியங்கட்கு இவையே முன்னோடி இவை பயன் கருதி நிகழ்த்தப்பெறுவன அல்ல.

நாட்டுப்புறவியலின் பகுதிகள் 3. அவை இலக்கியம், கலை நிகழ்ச்சி, கைவினைப் பகுதி என்பன. இவற்றுள் நாட்டுப்புற இலக்கியமானது பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் என ஐந்து வகைப்படும்.

**நாட்டுப்புறப் பாடல்கள்**

நாட்டுப்புறப் பாடல்கள் இசையைக் கட்டாயம் பெற்றிருக்கும். தாளம். ஓசை ஆகியவற்றைப் பெற்றிருந்தாலும் இலக்கண வரம்பிற்குள் அடங்காது. இசைக்காக, வந்த சொற்களே திரும்பத் திரும்ப வரும். (இதனை இலக்கண நூலார் மடக்கணி என்பர்). மோனை, இயைபு, மடக்கு ஆகியவை இடம் பெறாத நாட்டுப்புறப்பாடல்களே இல்லை எனலாம். எளிமையான புரியும் படியான சொற்கள் மட்டுமே இவ்வகைப் பாடல்களில் இடம் பெறும். மரபு தொடரைப் பயன்படுத்துதல். குறிப்பாக உணர்த்துதல், கருத்து மற்றும் உணர்ச்சிகளைச் செயலாகக் காட்டுதல்,குறையுடைய செய்திகளைக் கொண்டிருத்தல் போன்ற பண்புகளை இப்பாடல்கள் இயல்பாகப் பெற்றிருக்கும். பேச்சு நடையினைப் பின்பற்றி ஒழுகும்.

இயற்கையோடு இணைந்து வாழ்க்கை நடத்தும் பாமர மக்களின் பாட்டுக்களாகிய நாட்டுப்புறப் பாடல்களில் உண்மைச் செய்திகளே இடம் பெறும். வட்டாரத் தன்மை மிகுந்திருக்கும். நாட்டுப்புறத் தெய்வங்களுக்குச் சிறப்பிடம் தரப்படும். நடைமுறை வாழ்க்கையை எதிரொலிப்பதால், ஒரு நாட்டு மக்களின் நாகரிகம் பண்பாடு

பழக்க வழக்கம் வரலாறு. நடப்பு போன்றவற்றை அறிய உதவும். வாழ்க்கையின் சாதாரண சம்பவங்களான பிறப்பு, குழந்தைப்பருவ நிகழ்ச்சிகள், விளையாட்டுகள், காதல். பொருந்தாமணம், குடும்ப விவகாரங்கள், கிராமத்தொழில்கள், பஞ்சம். கிராமத் தேவைகள் முதலியவை இவற்றின் நுவல் பொருள்கள்.

உள்ளதை உள்ளபடி கூறி யாவரும் புரிந்து கொள்ளும் தெளிவுடை யனவாகவும், பண்பாடு வரலாறு ஆகியவற்றை வெளிப்படுத்துவனவாகவும் வாழ்க்கையின் பல்வேறு சூழல்களில் சூழல்களுக்கேற்பப் பாடப்படு வனவாகவும், இயற்றியவர் யார் என்று அறிய முடியாதனவாகவும் வாய்மொழியாக வழிமுறை வழிமுறையாகக் குழந்தை முதல் பெரியவர் வரை பாடப்படுவனவாகவும் இருக்கும்.

ஏற்றப்பாட்டு, வள்ளைப்பாட்டு, கண்ணள் பாட்டு, நடவுப்பாட்டு, தாலாட்டுப்பாட்டு, ஒப்பாரிப்பாட்டு, பரிகாசப்பாட்டு, கும்மிப்பாட்டு விடுகதைப்பாட்டு, ஏசற்பாட்டு, வேல் பாட்டு. இசைப்பாட்டு என்பன போன்ற பலபெயர்களில் நாட்டுப்புறப்பாடல்கள் பாடப்பெறும்

நாட்டுப்புறப்பாடல்களின் வகைகளாவன: குழந்தைப்பாடல்கள். உணர்ச்சிப் பாடல்கள், தொழிற் பாடல்கள், சடங்கு மற்றும் பக்திப் பாடல்கள், பொழுதுபோக்கு கேலி மற்றும் கொண்டாட்டப் பாடல்கள், கதைப்பாடல்கள் என்பவை. எல்லாப் பாடல்களுமே பேச்சு நடையில் அமைவதால் செப்பலோசை தரும் வெண்டளைகளைச் சிறப்பாகப் பெற்று நடக்கும்.

**1 குழந்தைப் பாடல்கள்**

இவை குழந்தைகள் பாடுபவை (விளையாட்டுப்பாடல்), குழந்தை களுக்காகப் பாடப்படுபவை (தாலாட்டு, வேடிக்கைப் பாடல்) என இரு வகைப்படும். குழந்தைப் பாடல்கள் மிகவும் எளிமையான சொற்களில் சிறுசிறு தொடர்களால் புனையப்பட்டிருக்கும். இவை பெரும்பாலும் உறவு முறைகள், செல்வச் சிறப்பு, பண்புநலன் போன்றவற்றை வெளிப்படுத்து வனவாக அமையும்.

**(அ) தாலாட்டுப் பாடல்கள்**

தாலாட்டுப்பாடல்களில் கதைப் பாடல்கள் மட்டும் நீண்ட பாடல் களாய் அமையும், பிற தாலாட்டுப் பாடல்கள் சிறியவையாய் இருக்கும். கதைத் தாலாட்டு பெரும்பாலும் புராணக்கதைகளை அடியொற்றி அமையும். பாமர மக்களின் வாழ்க்கையில் புராணத்தின் தாக்கம் மிக்கிருத்தலை இது காட்டும். தாலாட்டுப் பாடல் பற்றித் தொல்காப்பியர்.

“குழவி மருங்கினும் கிழவதாகும்” என்ற நூற்பாவில் குறிப்பிடுகிறார். தால் என்பதற்கு நாக்கு என்பது பொருள். நாக்கினை நீட்டிக் குழைத்து ஆட்டி ஒலி எழுப்புவதால் தாலாட்டு என்ற பெயர் ஏற்பட்டது.

தாலாட்டு, தாலேலோ, ராராட்டு, ஓலாட்டு. போராட்டு, தொட்டில் பாட்டு எனப் பல பெயர்களால் தாலாட்டைக் குறிப்பர். குழந்தைக் கண்ணனைப் பற்றிய பெரியாழ்வாரின் தாலாட்டும். குழந்தை இராமனைப் பற்றிய குலசேகராழ்வாரின் தாலாட்டும் நமக்குக் கிடைக்கும் முதல் தாலாட்டுப் பாடல்கள். தாலே தாலேலோ என்ற தொடர் ஒவ்வொரு பாட்டிலும் முடிவுத் தொடராக இடம்பெறலைக் காணலாம். பிள்ளைத் தமிழ் என்ற சிற்றிலக்கிய வகையினைப் பாடியோர் தாலப் பருவம் என்ற ஒரு தனிப் பருவத்தை அமைத்துப் பத்துப்பாடல்களில் தாலாட்டுப் பாட்டு அமைத்துள்ளனர். இலக்கியத்தரம் வாய்ந்தவையாதலின், இவற்றை எளிய பாமர மக்களின் நாட்டுப்புறப் பாடல்களாகக் கொள்ளல் கூடாது.

சந்தம், ஓசைநலன் ஆகியவற்றைப் பெற்று நிற்கும் தாலாட்டுப் பாடல்கள், ஓராட்டு ஈராட்டு என்று ஓசையடிப்படையில் பாகுபாடு செய்யப்படல் உண்டு தாலாட்டுப் பாடல்களின் இசையை நீலாம்பரி இராகம் என்று கர்நாடக சங்கீதத்தார் குறிப்பிடுவர். மாரியம்மனைக் குழந்தை யாகப் பாவித்து மாரியம்மன் தாலாட்டுப் பாடும் வழக்கமும் உண்டு. பாண்டிப் படிமுத்து - கண்ணேநீ பஞ்சவர்கள் ஆண்டமுத்து ஆயிரம் முத்தினிலே ஆராய்ந்து எடுத்து முத்து தொண்ணூறு முத்தினிலே - கண்ணே நீ துழாவி எடுத்த முத்து (பெருமைப் படுத்திப் பாடுவது)

பாட்டி அடித்தாளோ பால்வாக்கும் சங்காலே அத்தை அடித்தாளோ அரளிப்பூச் செண்டாலே -(அழுவதற்குக் காரணம் வினவியது.)

ஆரும் அடிக்க வில்லை அன்னியரும் தீண்டவில்லை. தானே அழுகின்றான் தாயார் மடிதேடி ஆரும் அடிக்கவில்லை ஐவிரலும் தீண்டவில்லை அவனா அழுகின்றான் ஆத்தாள் மடிதேடி ஆரும் அடிக்கவில்லை ஐவிரலும் தீண்டவில்லை தானா அழுகின்றான் தம்பிதுணை வேணுமென்று அவனா அழுகின்றான் ஆத்தாள் மடிதேடி - (தாய் - குழந்தை உறவு) (அடுத்த குழந்தைக்கு ஆசைப்படும் தாயின் மனம் குறிப்பாக வெளிப்படல்)

”வெள்ளிச் சங்கால் ஊட்டினால் வித்தை குறையு மின்னு பொன்னுச் சங்கால் ஊட்டினால் புத்தி குறையு மின்னு நடுக்கடலில் மூழ்கி நாடனூர்ச் சங்கெடுக்க திருப்பாற் கடல்மூழ்கித் திருமாலின் சங்கெடுக்க சட்டென் றெழுந்து சென்று விட்டார் உன்மாமன்” (தாய் தன் அண்ணனின் அன்பைச் சுட்டியது)

காரார் குழலாளைக் கடிக்க வந்த கட்டெறும்பு காலுக்குப் பீலிகட்டிக் கைக்கு வெள்ளிக் காப்புமிட்டு நெற்றிக்குச் சிட்டிகட்டி நிற்குதந்தக் கட்டெறும்பு - (கட்டெறும்பு பற்றிக் கூறிக் குழந்தையை அச்சுறுத்தி அமைதிப்படுத்தல்)

**(ஆ) விளையாட்டுப்பாட்டு**

நிலா நிலா வாவா நில்லாமல் ஓடிவா

மலைமேலே ஏறிவா மல்லிகைப்பூக் கொண்டுவா

ஈடுகுடு விளையாட்டுப் பாடல்கள் இக்காலத்தில் மறைந்துவிட்டன.

**2.உணர்ச்சிப் பாடல்கள்**

காதல், புலம்பல் போன்ற பொருள்களில் அமையும் பாடல்கள் உணர்ச்சி மிகுதி உடையவை யாகையால் அவற்றை உணர்ச்சிப் பாடல்களாகக் கொள்வர். இவ்வகைப் பாடல்களில் கற்பனை, உயர்வு நவிற்சி ஆகியவை மிகுந்திருக்கும். குறிப்பாகக் காதலர் பாடும் பாடல்களில் பொருளாழமும் ஓசை நயமும் நையாண்டியும் மிக்கிருக்கும்.

**(ஆ) காதற்பாடல்கள்**

பெரும்பாலான காதற்பாடல்கள் பண்டைய அகப்பொருள் மரபின் பொருளை அடியொற்றி அமைந்துள்ளன. எனினும் திணைகளைச் சார்ந்து முதல், கரு, உரி எனக் குறிப்பிட்டுக்கூறும்படியான பொருளமைதி இவ்வகைப் பாடல்களில் காணப்படவில்லை. ஆனால் அகப்பொருள் துறைக்குள் அடங்கும் பாடல்கள் மிகுதி. ஒருதலைக் காமமாகிய கைக்கிளை, பொருந்தாக் காமமாகிய பெருந்திணை ஆகியவற்றைப் பின்பற்றிச் செவ்வியல் இலக்கியப் பாக்கள் பெரும்பாலும் படைக்கப் பெறுவதில்லை. பிற்காலத்தில் தோன்றிய விறலிவிடுதூது, கூளப்ப நாயக்கன் காதல் போன்றவை அத்தகையனவெளினும், அவை அறிஞர்களால் போற்றப்படவில்லை. இத்தகைய விலக்கு. நாட்டுப்புறப் பாடல்களில் இல்லை. தங்கு தடையற்ற - கட்டுப்பாடற்ற போக்கு நாட்டுப் புறப்பாடல் களின் இயற்பாய் உள்ளது. கூடா ஒழுக்கம் பற்றியும், மாறுபட்ட வயதும் ஏற்றத் தாழ்வுள்ள கல்வி அறிவும் கொண்ட காதலர்கள் பற்றியும் பாடப்பட்ட பாடல்கள் நாட்டுப்புறவியலில் விரவிக் காணப்படு கின்றன. இழிவான கொச்சைச் சொற்களும் இழி வழக்காறுகளும் கூட இவற்றில் நிலவுகின்றன.

“தண்ணிக் குடமெடுத்து தனிவழியே போறபெண்ணே

தண்ணிக் குடத்தினுள்ளே தழும்புதடி

என் மனசு” என்பது ஆண்பாற் கைக்கிளைப் பாடல்.

“வாழைப் பழமே - என்ற(ன்), வலதுகையில் சக்கரையே

ஏலம் கிராம்பே உன்னை, என்ன சொல்லிக் கூப்பிடட்டும”

என்பது “பேர் வினாதல்“ என்னும் அகத்துறையைச் சார்ந்த பாடல்.

“குறுக்கால் பிளந்த கோவப் பழமொன்றை

நறுக்கென்று கடித்துண்ண நான்கனவு கண்டேனே”

என்ற பாடல் தலைவன் “கனவொடு மயங்கல்“ என்னும் அகப் பொருள் மெய்ப்பாட்டிற்கு உரியது. பொட்டுக் கரைய பிறைநெற்றி நீர் துளிக்க கட்டுந் துகில் கலைய கழுத்து வடம்புரள மார்பு பதைப்பதென்ன மலர்க்கண்கள் சிவப்பதென்ன இப்பாடல், தலைவியை ஐயுற்ற நற்றாய் அல்லது செவிலித்தாய் அவளை வினவுவதாக அமைந்துள்ளது.

ஆல மரமுறங்க அடிமரத்துக் கிளியுறங்க

உன்மடியில் நானுறங்க உலகம் பொறுக்கலையே

என்பது ஊர்ப்பெண்டிர் கூறும் அலரினை அஞ்சிய காதலி காதலனிடம் கூறுவது. அலரச்சம்)

“பட்டம்போல் நெற்றி பவளம் போல் வாயழகி

முத்துப் போல் பல்லழகி முன்போகக் கண்டீரோ!”

என்பது உடன்போக்கு மேற்கொண்ட தலைவியைத் தேடிச் செல்லும் தாய் கண்டோரை வினவுவதான துறையைச் சார்ந்தது. மரபு உலமைகள் நாட்டுப்புறப் பாடல்களில் மிக்குக் காணப்பாடற்கு இப்பாடல் எடுத்துக்காட்டு

“சோளன் விதைக்கக் குள்ளே சொல்லிற்றுப் போனது போல்

சோளன் பயிராச்சே - மச்சாள் நீ சொன்னகதை பொய்யாச்சே”

என்பது கற்புக் காலப்பிரிவில் பிரிந்துபோன கணவன், சொன்ன நாளில் திரும்பாமை குறித்துப் புலம்பும் பாடல் (நெய்தலுக்குரிய உரிப்பொருள்!

சோளச்சோறு தின்ன மாட்டேன் சொன்னபடி கேட்க மாட்டேன் நரைச்ச கிழவன் கிட்டே நானிருந்து வாழ மாட்டேன் என்பது, கிழவனை இரண்டாம் தாரமாக மணந்து

கொண்ட குமரிப் பெண்ணின் குமுறல் அகப்பொருள் இலக்கணப்படி இது இளமை தீர் திறம் என்னும் துறையிலமைந்த பெருந்திணைப் பாடல். இங்குச் சோளச்சோறு திள்ள மாட்டேன் என்பது உள்ளுறையாகிக் கிழவளிடம் பெறும் சுகத்தை எள்ளி நகையாடியது.

அரிசிகுத்தி மடியில்வைத்து ஆவரம்பூப் பொட்டு வச்சி சொருகுகொண்டை ண்டை வெள்ளையம்மா - நீ சோறுகொண்டு வாரதெப்போ

என்பதில் சோறு கொண்டு வருதல் என்பது குறியீடு எனக்கு நீ மனைவி யாதல் எப்போது என்று காதலன் குறிப்பாய்க் கேட்பதாக அமைந்தது.

புல்லு அறுக்கையிலே புளியம்பூவும் கொண்டு போனேன் புளியம்பூ வாட தட்டி - நான், புல்லறுக்க மறந்து விட்டேன்.

என்பதில் “புளியம்பூ“ என்பது குறியீடாகக் காதலனைக் குறித்தது. இங்கு வாடை, காதலைக் குறிக்கும்.

**(ஆ) ஒப்பாரி**

உற்றார் உறவினர் இறந்த போது. செயலற்ற நிலையில் புலம்பி அழும் பாடல்களைக் கையறுநிலை எனும் புறத்திணைத் துறைக்குரிய தாகத் தொல்காப்பியர் கருதினார்.கழிந்தோர் தேஎத்து அழிபடர் உறீஇ ஒழிந்தோர் புலம்பிய கையறுநிலை என்பது அவரது நூற்பா. இக்காலத்தில் அதனை “ஒப்பாரி“ என்பர். அதியமான் இறந்த போது ஔவையார் பாடிய

“சிறிய கள் பெறினே எமக்கீயு மன்னே“

எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல், செவ்வியல் இலக்கியத்தில் வரும் கையறுநிலைப்பாடல். கோவலன் கொலையுண்டமை அறிந்த கண்ணகி புலம்பல் சிலப்பதிகாரக் காப்பியத்திலும், உதயகுமாரன் கொல்லப்பட்டமைக்காக மணிமேகலை, இராசமாதேவி ஆகியோர் புலம்புதல் மணிமேகலைக் காப்பியத்திலும் இடம் பெற்றுள்ளன. தசரதனின் இறப்புச் செய்தி கேட்ட இராமன் புலம்பல், மகனை இழந்த சந்திரமதி புலம்பல், அபிமன்யுவை இழந்த அருச்சுனன் புலம்பல் போன்ற காப்பியப் புலம்பல்கள் அவலச் சுவையை மிகுவிப்பவை. இச்செவ்வியல் இலக்கியங்கட்கு வழிகாட்டியாக விளங்கியவை நாட்டுப்புறக்கையறுநிலைப் பாடல்களே எனில் மிகையன்று.

”செங்கல்லு கட்டிடங்கோ செதராது மின்று இருந்தோம் செங்கல்லு கட்டிடங்கோ செதர மழை பேஞ்ச தென்ன” (குழந்தையைப் பறிகொடுத்த தாய்)

”கட்டெறும்பு மொய்க்க மொய்க்க காலிரண்டும் தொங்கத் தொங்க கருப்புக் குதிரை மேலேறி - நீங்க, கைலாசம் போனீங்க“ -(கணவளை இழந்த மனைவி)

”எட்டுக் கட்டுப் புஸ்தகங்கோ எழுதரது ராமகவி - எங்கண்ணா எழுதி வெளியில் வந்தா எட்டு மணியடிக்கும்” - (அண்ணளை இழந்த தங்கை)

ஒப்பாரிப் பாடல் அடிகள் வெண்டளைகளைப் பெரிதும் பெற்றிருக்கும். நெடுஞ்சீர் வண்ணம் பெற்று நடக்கும். இவைகளில் ஏகாரமும், ஓகாரமும் அவலச் சுவையை மிகுத்துக்காட்டும்.

**3. தொழிற்பாடல்கள்**

வள்ளைப்பாட்டு, ஏற்றப்பாட்டு, நடவுப்பாட்டு போன்றவை தொழிற் பாடல்களாய் உள்ளன. வேலை செய்தலால் ஏற்படும் களைப்பு தெரியாம் லிருப்பதற்காக இவ்வகைப் பாடல்கள் பாடப்படுகின்றன. இவ்வகைப் பாடல்களில் ஆழமான பொருளுணர்ச்சி அமைந்து விடுதலும் உண்டு.

”மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே - (ஏற்றப்பாட்டு)

”காடு வெட்டி கல்பொறுக்கி கம்பு சோளம் தினை விதச்சு மேடு வெட்டி முள்பொறுக்கி முத்துச் சோளம் தினை விதச்சு வெள்ளையானை உழுதுவர வேடர்மக்கள் தினை விதைக்க” - (நடவுப்பாடல்)

**4.சடங்கு மற்றும் பக்திப்பாடல்கள்**

திருமண நிகழ்ச்சிகளில் பாடப்படும் வாழ்த்துப்பாடல், நலுங்குப் பாடல் போன்றவை சடங்குப்பாடலுக்கு எடுத்துக்காட்டு, கிராம தேவதைகளைக் குறித்த வழிபாட்டுப் பாடல்களை நாட்டுப்புறப் பக்திப்பாடல்கள் எனலாம்.

“காட்டு ஒன்றாம் கரகமடி தாயே - அது

ஓடிவரும் பொன்கரகம்”

கருப்பண்ண சுவாமி (திருமால்), குருநாதசுவாமி (முருகன்) மழுவராயன் (சிவன்) ஆகிய நாட்டுப்புறக் கடவுளரின் வழிபாடுகள் பண்டைய தமிழ் வழிபாட்டினை நினைவூட்டுவன. அங்குச் சாமி அழைக்கவும். பேய்பிசாசுகளை விரட்டவும் பாடப்படும் பாடல்கள் மிகுந்த ஓசை நலம் சான்றவையாய் உள்ளன.5.பொழுதுபோக்கு மற்றும் கொண்டாட்டப்பாடல்கள் கும்மிப்பாட்டு, கோலாட்டப்பாட்டு, பரிகாசப்பாட்டு, ஏசல்பாட்டு போன்றவை இவற்றில் அடங்கும். காட்டு:

"கொஞ்சும் கிளிமொழிக் கோதையரேகளி கூர்ந்து கும்மி அடியுங்கடி"

**6.கதைப்பாடல்கள்**:

தெருக்கூத்து, கழைக்கூத்து. கணியாள் கூத்து, பாவைக்கூத்து. பொம்மலாட்டம் போன்ற கூத்து வகைகளுக்குரிய பாடல்களும், அல்லியர சாணி மாலை, பவளக்கொடி மாலை, ஏணி ஏற்றம் முதலிய அம்மானைப் பாடல்களும், தேசிங்குராசன்கதை, இராமப்பையன் அம்மானை, ஐவகை ராசர்க்கள் கதை, மதுரை வீரன் கதை, முத்துப் பாட்டன் கதை, கட்டப் பொம்மன் கதை போன்ற வரலாற்றுக்கதைப் பாடல்களும், சித்தையன் கொலைச் சிந்து, மம்மட்டியான் கொலைச் சிந்து முதலிய கொலைச் சிந்துப் பாடல்களும் கதைப் பாடல்களுக்குரியன. காத்தவராயன் கதை. அண்ணன்மார் சுவாமிகதை, சுடலைமாடன் கதை போன்றவை சிறு தெய்வ வழிபாட்டுக் கதைப் பாடல்கள் ஆம்.)

பெண்வேடத்தில் அல்லி ராணியைச் சந்தித்துப் பேசும் அருச்சுனன், கதை சொல்வதாகக் கூறித் தன்பெருமைகளைத்தானே பாராட்டி மொழியும் காட்சி இதோ!

"ஆனால் அழகுமன்னன் அல்லியர்க்குக் கதையுரைப்பான் குருகுல வங்கிசமாம் குந்திமக்கள் ஐந்து பேராம் பாண்டுராசன் பெற்றெடுத்த பஞ்சவர்கள் ஐவருண்டு தருமருக்கு நேரிளையான் தாக்குடைய வீமராசன் வீமனுக்கு நேரிளையான் வில்வாங்கும் அருச்சுனன் காண் மீசை முறுக்கழகன் விழியினிலே கறுப்பழகன் நாவுதனில் நட்சத்திரம் நயனவிழிப் பார்வையினன் முத்துப்போல் பல்லழகன் முதுகினிலே மச்சரேகை முன்னிலும் பின்னழகன் மோககன்னி மணவாளன் பின்னிலும் முன்னழகன் பெண்களுக்கு மணவாளன் அருச்சனனைப்போல அழகுடையார் யாருமில்லை" - அல்லியரசாணி மாலை.

இக்கதைப் பாடல்கள், முழுதும் ஒரே வகையானி யாப்பைக் கொண்டு நடக்கும் வாய்மொழியில் பரம்பரை பரப்பரையாகப் பெரும்பாலும் மனனம் செய்து வைத்துக் கொண்டு பாடப்பெறும், எளிய சொற்றேர்வு, தற்சார் பற்ற பொருண்மை போன்ற நடையமைதிகளைப் பெற்று விளங்கும்.

நாட்டுப்புறக்கதைப் பாடல்களேயன்றி நாட்டுப்புற உரைநடைக் கதை களும் நாட்டுப்புறவியற்குரியன. பாட்டிகதை, மதன காமராசன் கதை. விக்கிரமாதித்தன் கதை, பஞ்சபாண்டவர் வனவாசம் போன்றவற்றை. இன்றும் குக்கிராமங்களில் உள்ள பாமர மக்கள் படித்தும் கேட்டும் இன்புறுகின்றனர்.

விடுகதை, பழமொழி போன்றவைகளும் நாட்டுப்புற இலக்கியங் களாகக் கருதத்தக்களவ,

**பழமொழி**

பழமொழியைத் தொல்காப்பியர் முதுசொல், முதுமொழி என்று குறிப்பிட்டுள்ளார். பழமொழி பாமர மக்களின் உலகியல் அறிவை மேம்படுத்த உதவுகின்றன.

““ஆடிப்பட்டம் தேடிவிதை”

”மின்னுவதெல்லாம் பொள்ளல்ல”

”வால் நீண்ட கரிக்குருவி வலமிருந்து இடம் போனால்

கால்நடையாய்ப் போனவர்கள் கனக தண்டி ஏறிடுவார்.”- (சகுளம்)

**விடுகதை**

விடுகதையைத் தொல்காப்பியர் பிசி என்று குறிப்பிடுவார். இது பாமர மக்களின் அறிவுக் கூர்மையை வளர்க்கப் பயன்படுகிறது.

விடுகதைக்கு எடுத்துக்காட்டு

“பதைக்கிறாள் குதிக்கிறாள்

பக்குவமாகிறாள் பந்திக்குப் போகிறாள் - அவள் யார்?” (சோறு)

தெருக்கூத்து, ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை போன்ற நாட்டுப் புறக்கலைகளிலும் அவ்வவற்றிற்குரிய பாடல்கள் பாடப் பெறும். காட்டு:

“பால் காவடி வந்திருக்கு பழனி ஆண்டவன் சந்நிதிக்கு“ -காவடிப்பாட்டு

**அறிவியற்றமிழ்**

இதுவரை இயல் இசை நாடகம் என்னும் முப்பரிமாணம் கொண் டிருந்த தமிழ், இன்று மேலும் வளர்ச்சிபெற்று, அறிவியற்றமிழ் என்னும் மற்றொரு கூறினையும் ஏற்று நாற்பரிமாணம் கொண்டதாய் நடைபோடு கிறது. இதனால் முத்தமிழ் நாற்றமிழ் ஆயிற்று.

கணிதம், புள்ளியியல், இயற்பியல், வேதியியல் போன்ற பல்வேறு அறிவியற்றுறைகளிலும், பொறியியல், மருத்துவம், சட்டம், வேளாண்மை போன்ற தொழில்நுட்பத் துறைகளிலும் தோன்றிய நூல்கள், இதழ்கள், ஆய்வுக் கட்டுரைகள், அறிவியற்கலைச் சொல்லாக்கம் போன்ற பலவும் அறிவியற்றமிழில் அடங்கும். இவற்றோடு கணினித் தமிழ், இணையத்தமிழ் ஆகியவற்றையும் இணைத்துக் கூறும்போதுதான். அறிவியற்றமிழ் முழுமை எய்தும்.

**நூல்கள்**

19ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே தமிழில் அறிவியல் நூல்கள் வெளிவரத் தலைப்பட்டன. அக்காலத்தில் அறிவியலைத் தமிழ்வழி பயிலும் சூழல் உருவாயினமை தான், அறிவியற்றமிழ் நூல்கள் தோன்ற அடிப்படைக் காரணம் ஆயிற்று இரேனியஸ் பாதிரியாரின் பூமி சாஸ்திரம் (1832), இலங்கையில் வெளியிடப்பட்ட பாலகணிதம் (1849), டாக்டர் கரோல் எழுதிய இயற்கணிதம் (1855) முதலியவை, தொடக்கத்தில் தோன்றிய தமிழ் அறிவியல் நூல்களுள் தலைசிறந்தவை.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் வாழ்ந்த சாமுவேல் கிரீன் மருத்துவ நூல்கள் பலவற்றை வெளியிட்டார். இக்காலத்துத் தோன்றிய மருத்துவ நூல்களுள் குறிப்பிடத்தக்கவை அங்காதி பாத சுகரண வாத உற்பாவனநூல், மனுஷ அங்காதிபாதம் வைத்தியாகரம், இரண வைத்தியம், நூற்றொகை விளக்கம் (பேரா. சுந்தரம்பிள்ளை முதலியவை. 1884இல் கிரீன் எழுதிய கந்த பதார்த்த சாரம், வைத்தியம் ஆகியவை தமிழில் முதலில் வெளிவந்த மொழிபெயர்ப்பு மருத்துவ நூல்கள் ஆம்.

1909இல் வெளிவந்த அலோபதி மருத்துவச் சுருக்கமும், 1924இல் பிலிப் எல். நெல்சன் எழுதி வெளியிட்ட ”புதிய ஆரோக்கியமும் நீடித்த ஆயுளும்” என்னும் மொழிபெயர்ப்பு நூலும், 1977இல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்ட உடலியங்கியல் என்னும் நூலும், 1980இல் தமிழ்ப்பல்கலைக்கழகம் வெளியிட்ட அறுவை மருத்துவம் (சு.நரேந்திரன்), டாக்டர் நடராசனின் நோய் அறிதல், இருதய நோய்கள், தொற்று நோய்கள், பால் உணர்வு மருத்துவம் ஆகிய நூல்களும், சாமி எழுதிய புகையும் புற்று நோயும், மருத்துவர் கதிரேசன் எழுதிய மாரடைப்பு நோய் ஆகிய நூல்களும் மருத்துவத் தமிழின் மைல் கற்களாக விளங்குகின்றன.

மருத்துவ நூல்களேயன்றி வேறுபல அறிவியற்றுறை நூல்களும், தமிழில் வெளிவந்துள்ளன. 1974இல் கு. கண்ணப்பன் வெளியிட்ட மண்ணியல், இல. கந்தசாமி வெளியிட்ட வேளாண் மொழியியல் ஆகிய வேளாண் துறை சார்ந்த நூல்களும். சு. கந்தசாமி வெளியிட்ட பற்ற வைப்பு என்ற தொழிற்றுறை அறிவியல் நூலும் குறிப்பிடத்தக்க முன்னோடி நூல்கள் ஆகும்.

மருத்துவம். பொறியியற் பட்டப்படிப்புக்களைத் தமிழில் நடத்து வதற்குப் போதுமான பாடநூல்களைத் தமிழ்ப்பல்கலைக்கழகம் உருவாக்கி யுள்ளது. அரசுகலைக் கல்லூரிகளில் தமிழ் வழியிலும் அறிவியல் பட்ட வகுப்புக்கள் நடைபெறுவதால், அவ்வத்துறை சார்ந்த அறிவியற்றமிழ் நூல்களைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமும், தனியார் நிறுவனங்களும் படைத்துத் தந்துள்ளன.

**இதழ்கள்**

கருத்தரங்க மலர்களிலும், இதழ்களிலும் அறிவியல் சார்ந்த கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. தனியாக அறிவியலுக்கென்றே தனிப் பட்ட இதழ்கள் அவ்வப்போது தொடங்கப் பெற்றுள்ளன.

முதல் மருத்துவ இதழான அகத்திய வர்த்தமாணி 1870இல் தொடங்கப் பெற்றது. தொடர்ந்து சுகாதார போதினி. ஆரோக்கிய வழி (1901, டி.ஏ.சாமி நாதையர், சுகஜீவினி, ஆயுர்வேத பாஸ்கரன், சித்தவைத்தியம்,மருத்துவம் (1928) விஞ்ஞான பாஸ்கரன் (1929), வைத்தியக் களஞ்சியம் (1929) ஆரோக்கிய சிந்தாமணி (1930), வைத்தியக் கலாநிதி, மூலிகைமணி, ஹெல்த் முதலிய மருத்துவ இதழ்கள் காலப்போக்கில் அடுத்தடுத்துத் தொடங்கப் பெற்றன.

கலைக்கதிர், விஞ்ஞாளச் சுடர், வளரும் வேளாண்மை, கால் நடைச் கதிர் போன்ற மருத்துவம் சாராப் பிறதுறை அறிவியல் நூல்களும் பெருமளவில் தலையெடுத்தன. அனைத்து நாட்டுக் கல்வி சமூகவியல் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) தமிழில் கூரியர் என்ற அறிவியல் இதழைத் தொடர்ந்து நடத்தி வந்தது.

**கலைச் சொல்லாக்கம்**

அறிவியற் கலைச்சொல்லாக்கப்பணி 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் முறையாக நடைபெறத் தொடங்கியது. 19ஆம் நூற் றாண்டில் அறிவியற்கலைச் சொற்கள் பெரும்பாலும் ஆங்கிலமாகவோ. பெயர்க்கப்பட்ட வடமொழிச் சொற்களாகவோ இருந்தன. காலப்போக்கில் தனித் தமிழ்க் கலைச் சொற்கள் செல்வாக்குப் பெறத்தொடங்கின.

1916இல் தமிழ் சாஸ்திர பரி பாஷை சங்கம் நடத்திய இதழ், கலைச் சொல்லாக்கப் பணியை மேற்கொண்டது. 1930இல் சென்னை மாகாண அரசு தமிழில் சட்டச்சொல் அகராதி வெளியிட்டது. 1931இல் டி.வி. சாம்பசிவம்பிள்ளை அறிவியற் கலைச்சொல் அகராதி வெளியிட்டார். 1941இல் நகர நாட்டாண்மைக்கழக ஆட்சிமுறைச் சொல்லகராதியைச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது. 1947இல் சென்னை மாகாண அரசு பல்வேறு பாடங்களுக்குரிய கலைச்சொல் அகராதிகளை வெளியிட்டது.

**இணையத்தமிழ்**

மின்கணிப்பொறி 1946 இல் வடிவமைக்கப்பட்டது. 1975இல் தனி மாந்தர் கணிப்பொறி (Personal Computer) கண்டுபிடிக்கப்பட்டது. 1969இல் அமெரிக்கப் பாதுகாப்புத் துறையினர் ARPANET என்னும் வலையமைப்பை அறிமுகப்படுத்தினர்.

1990இல் உலக அளவிலான இணையம் (INTERNET) தோன்றியது. 1990ஆம் ஆண்டில் இணைய வலையமைப்பில் முதன்முறையாக www எனப்படும் உலகு தழுவிய இணையத்தளம் (WORLD WIDE WEB). டிம் பர்னர்ஸ் லீ (Tim Berners-Lee) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. தொடக்கத்தில் மின் அஞ்சல் அனுப்புவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்ட இணையம், பின்னர் மின்வணிகம், மின் பொழுது போக்கு, மின்விளையாட்டு, மின் நூலகம், இணையவழிக் கல்வி போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்குப் பயன்படத் தொடங்கியது.

கணிப்பொறியின் செயற்பாட்டு மென்பொருட்கள் ஆங்கிலத்தை கொண்டு வடிவமைக்கப்பட்டவை பிரெஞ்சு, செருமணி, சப்பான், சீனட ஆகிய நாட்டினர் தற்போது தங்கள் மொழிகளை இணையத்தில் இட பெறச்செய்துள்ளனர். அறுபதிற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி வாழு தமிழர்களும் இணையத்தின் வழியாகச் செய்திகளைத் தமிழில் பரிமாறிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தங்கள் பாரம்பரியத்தைக் காத்துக் கொள்ளவும், தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு, கலை ஆகியவற்றைத் தொடர்ந்து கற்றுத் தெளியவும், தமிழ் இணையத் தளங் களை ஏற்படுத்த முனைந்தனர்.

கணிப்பொறி தமிழில் கொடுக்கப்படும் கட்டளைகளை அறிந்து செயல்பட வேண்டுமானால், தமிழ் எழுத்துக்களுக்கும் குறியீடுகள் அமைத்துக் கணிப்பொறியில் இடவேண்டும்.

கடந்த 20 ஆண்டுகளில் பலவகையான தமிழ்க் குறியீடுகளையும் விசைப் பலகைகளையும் தோற்றுவித்துள்ளனர். தமிழ் ஒரு மொழியே ஆயினும், பல்வேறு வடிவங்கள் பெற்று இணையத்தில் வலம் வந்தது.

அமெரிக்காவின் பெர்க்ளி பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் “தமிழ் லேசர்“ என்னும் குறியீட்டு முறை யையும், அமெரிக்கத் தமிழரான மருத்துவர் பெரியண்ணன் குப்புசாமி “அணங்கு“ என்னும் குறியீட்டு முறையையும், கனடாத் தமிழ் ஆர்வலர் விஜயகுமார் ”சரஸ்வதி” என்னும் குறியீட்டு முறையையும் வடிவமைத்து வழங்கினார். இக்குறியீட்டு முறைகளில் தமிழ்த் தட்டச்சு பயன்படுத்தப்பட்டது.

இந்நிலையில், தமிழ்த் தட்டச்சினைப் பயன்படுத்தி னுமுளு இயக்க மென் பொருட் சூழலில் செயலாற்றவல்ல பாரதி என்னும் முதற் சொற்செயலி இயற்றப்பட்டுச் சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் பயன்படுத்தப்பட்டது.

தமிழ்த்தட்டச்சு விசைப்பலகையின் உள்ளீட்டுத்திறனை மேம் படுத்தும் முகமாகச் சிங்கப்பூரைச் சார்ந்த முனைவர் நா.கோவிந்தசாமி என்பவர் ”கணியன்” என்னும் விசைப் பலகையை வடிவமைத்தார். பின், ஒலியியல் விசைப்பலகை வரிசையில், மயிலை எனும்

விசைப் பலகை யைச் சுவிட்சர்லாந்தைச் சார்ந்த கே. கல்யாண சுந்தரமும், ஐளேஹஊசுஜீவு என்பதை ஊனுயுஊ நிறுவனமும், IE என்பதை முனைவர் நா. கோவிந்த சாமியும், யாழன் என்பதை அமெரிக்கத் தமிழ் ஆர்வலர் இராமலிங்கம் சண்முகலிங்கமும் வடிவமைத்தனர். ASCII விரிவுக் குறியீட்டைத் தழுவி அமெரிக்கத் தமிழ் ஆர்வலர் வு. கோவிந்த ராசுவின் "பல்லாடம்," இந்திய ஊனுயுஊ நிறுவனத்தின் ISCII (1988), ISFOC, பொறியாளர் முத்துநெடுமாறன் குழுவினரின் TSCII (1989) போன்ற குறியீட்டு முறைகள் தோன்றின. இதே காலகட்டத்தில் உலக அமைப்பாகிய UNICODE குழுமத்தின் முயற்சியால் 16 பிட்டு நீளமுள்ள பன்மொழிக் குறியீட்டு முறை தோன்றியது.

1980களின் தொடக்கத்தில் உருவாக்கப்பட்ட பாரதி எனும் சொற் செயலியைத் தொடர்ந்து, வீனஸ், ஆதமி.ஃ ஆதவின்.ஃ திரு (கே. சீனிவாசன், கனடா), முரசு அஞ்சல் (முத்துநெடுமாறன்), துணைவன் (இரவீந்திரன்பால். மலேசியா), நளினம் (சிவ குருநாத சின்னையா, மலேசியா), கம்பன் முனைவர் வாசுதேவன், ஆஸ்திரேலியா) முதலான தமிழ்ச்சொற்செயலிகள் தோன்றின. இவை வெவ்வேறு குறியீட்டு முறைகளைக் கொண்டிருந்தன

**அருஞ்சொற் பொருள்:**

படி - வைணவ உரை முறை

மணிபிரவாள நடை- தமிழ், வடமொழி கலந்த உரை

WWW - World Wide Web

Internet - இணையம்

**தொகுப்புரை:**

தமிழ் மொழியின் உரைநடை அமைப்பை வளர்ச்சிப் பெற செய்தவர்கள் உரையாசிரியர் - கள் ஆவர். இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் போன்றோர் இலக்கண இலக்கியங்களுக்கு உரைவகுத்தனர். இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்களும் இணையங்களும் தமிழ்ப்பணி ஆற்றின. அறிவியல் தமிழ் வளர்ச்சிப் பெற்று மொழிப்பெயர்ப்பு, ஒப்பிலக்கியம், திறனாய்வு போன்ற பல்துறை வளர்ச்சிப்பெற்று தமிழ் மொழி சிறப்புறுகின்றது.

பயிற்சி வினாக்கள் :

1. சிறுகதையின் தந்தை என அழைக்கப்படுபவர்
   வா. வே. சு. ஐயர்
2. நாடகத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்
   பம்மல் சம்பந்த முதலியார்

3. வானொலி கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு 1920
4. வானொலி தந்தை என அழைக்கப்படுபவர் மார்க்கோனி
5. நாடகம் விளக்கு
6. சிறுகதை விளக்கு
7. ஊடகங்கள் ஆற்றிய தமிழ்ப்பணி கட்டுரை
8. நாட்டுப்புறவியல் குறித்து விளக்கு

**பார்வை நூல்கள் :**


வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் பாக்கிய மேரி
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-டீ, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ,
அம்பத்தூர் சென்னை - 600 098
பதிப்பு -2013

தமிழ் இலக்கிய வரலாறு - மு.வரதராசன்
சாகித்திய அகாடமி,
தலைமை அலுவலகம்,
இரவீந்திர பவன், 35, பெரோஸ்கோ சாலை,
புது தில்லி - 110 001

தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் கி. இராசா
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்,
41-டீ, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098
பதிப்பு ஆண்டு - 2016

தமிழகச் சமுதாய பண்பாட்டுக் கலை வரலாறு - முனைவர் கு. சேதுராமன்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41 - டீ, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர்
சென்னை 600 098
பதிப்பு ஆண்டு - 2017